# தமிழரசு


விலை ரூ.10

செய்தி–மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

அக்டோபர் 2006












JL
V211m,N70TA
P06
228657.



# தமிழரசு

செய்தி – மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2006
மலர் : 38 இதழ் :4

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

நூலறிவுடன் இயற்கையான மதி நுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும் ? முடியாது.

**– கலைஞர்**
திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

முல்லைப் பெரியாறு அணை குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை – 2

உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் – 20

வேலைவாய்ப்பற்ற இளைஞர்க்கு அரசின் உதவித்தொகை – அரசு ஆணை – 31

அண்ணல் காந்தியடிகள் வாழ்வில்.... – 36

மரங்களின் கதை – சிறுகதை – 38

செய்தி சொல்லும் சித்திரங்கள் – 54

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – அரசு ஆணை – 65

**முதலாம் பக்க அட்டை**

அண்ணல் காந்தியடிகளின் 138 ஆவது பிறந்த நாள் விழா (2.10.2006)

**இரண்டாம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனியார் அறக்கட்டளை சார்பாக ஏழு இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். (15.10.2006)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : சி.கோசலராமன், இ.ஆ.ப, இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

# எந்தவொரு நதிநீர்ப் பிரச்சினையிலும் தமிழகம் அண்டை மாநிலங்களுடன் சுமுகமான அணுகுமுறையையே கடைபிடித்துள்ளது

228657

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே!

நண்பர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.

எனது அழைப்பினையேற்று இங்கே வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டத்தை அதன் முழு கொள்ளளவான 152 அடிக்கு மீண்டும் உயர்த்துவது குறித்த பிரச்சினை – தமிழகத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது.

தற்பொழுது உச்ச நீதி மன்றத்தின் கருத்துக்கேற்ப நம்முடன் பேச்சுவார்த்தை நடத்திட மாண்புமிகு கேரள முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தினை கேட்டு அறிந்து கொள்ள இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

பெரியாறு அணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணையாகும். ஆசிய கண்டத்தில் முதன்முதலாக ஒரு ஆற்றுப்படுகையில் ஓடும் நீரை பயனுள்ள வகையில் மற்றொரு ஆற்றுப்படுகைக்கு திருப்புவதற்காக கட்டப்பட்ட அணையாகும் பெரியாறு அணை. இந்த அணை கர்னல் திரு. ஜே. பென்னி குயிக் என்னும் ஆங்கிலேய பொறியாளரால் வடிவமைக்கப்பட்டு பல இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையே 1895ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது. இச்சீரிய திட்டத்தைச் செயல்படுத்தியதற்காக கர்னல் திரு. ஜே. பென்னிகுயிக் அவர்களைப் போற்றிடும் வகையில் மதுரை பொதுப்பணித்துறை வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையினை அமைத்து 15.6.2000 அன்று நான் திறந்து வைத்ததை இங்கே நினைவு கூர்கிறேன்.

திருவாங்கூர் அரசருக்கும், அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் இடையே 29.10.1886–இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பெரியாறு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1979 – ஆம் ஆண்டில் கேரள அரசு, பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்களை எழுப்பியது. மத்திய நீர்வள குழுமம் இந்த அணையினை 23.11.1979 அன்று ஆய்வு செய்து; அவசரகால, இடைக்கால, நீண்டகால நடவடிக்கைகள் என்ற மூன்று விதமான வலுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டால்; அணை ஒரு புது அணையினை ஒத்து செயல்படும் என பரிந்துரைத்ததின் பேரில் தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவசரகாலப் பணிகள் மற்றும் இடைக்காலப் பணிகளை செய்து முடிக்கும் பொருட்டு அணையின் நீர் மட்டம் அதன் முழு நீர்மட்ட அளவான 152 அடியிலிருந்து தற்காலிகமாக 136 அடியாக குறைக்கப்பட்டது. அதனையொட்டி தமிழக அரசு வரைபடங்களையும், திட்ட விவரங்களையும் மத்திய நீர்வளக் குழுமத்திற்கும் கேரள அரசிற்கும் அனுப்பி அவர்களின் ஒப்புதலைப் பெற்றுத்தான், அவசர காலப் பணிகள் மற்றும் இடைக்காலப் பணிகளைத் தொடங்கியது. இப்பணிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர், அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என மத்திய நீர்வள குழுமம் 29.4.1980லேயே பரிந்துரைத்தது.

பின்னர், மத்திய நீர்வள குழுமம் சிற்றணையை (பேபி டேம்) பலப்படுத்துதல் மற்றும் கைப்பிடிச் சுவர் இரண்டு அடி உயர்த்துவது போன்ற சில கூடுதலான பணிகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்தது. ஆனால், கேரள அரசு ஒத்துழைப்பு தராததால் இப்பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படாமல் உள்ளன. அணையைப் பலப்படுத்தும் பணிகள் முடிந்த நிலையிலும், பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியிலேயே வைக்கப்பட வேண்டும் என்று கேரள அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இதுகுறித்து கேரளா மற்றும் தமிழகத்திற்கிடையே பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்த போதிலும், எந்த விதமான ஒருமித்த கருத்தும் எட்டப்படவில்லை.

திருவனந்தபுரத்தில் 13.8.1998 அன்று அமைச்சர்கள் அளவிலான கலந்துரையாடல் கூட்டத்தில் – இரு மாநிலங்களும் தொழில்நுட்பக் குழுக்களை அமைப்பதென்றும்; அவை முல்லை பெரியாறு அணையைப் பார்வையிட்டு விவாதித்து அறிக்கைகளை அளிப்பது என்றும்;

அவற்றின் அடிப்படையில் முதலமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படலாமென்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாடு தொழில்நுட்பக் குழு தன் அறிக்கையை நவம்பர் 1998–இல் அளித்தது. ஆனால் கேரள அரசு, தொழில்நுட்ப அறிக்கை தருவதில் பெரும் சுணக்கம் காட்டி, காலம் தாழ்த்தி வந்தது. இறுதியில், 28.1.2000 அன்றுதான் தொழில் நுட்ப அறிக்கைகள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

இதற்கிடையே, கேரள உயர் நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் ஒரு சில தனி நபர்கள் ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். கேரளாவைச் சார்ந்த முல்லை பெரியாறு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழு என்ற அமைப்பு, பெரியாறு அணையில் 136 அடிக்குமேல் நீரைத் தேக்கிவைக்க அனுமதி அளிக்கக்கூடாது எனக் கோரி ஒரு ரிட் மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. கேரளா மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த ரிட் மனுக்களை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி – தமிழ்நாடு அரசு டிசம்பர் 1998–இல் மனுக்களை தாக்கல் செய்தது.

**பெரியாறு அணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணையாகும். ஆசிய கண்டத்தில் முதன்முதலாக ஒரு ஆற்றுப்படுகையில் ஓடும் நீரை பயனுள்ள வகையில் மற்றொரு ஆற்றுப்படுகைக்கு திருப்புவதற்காக கட்டப்பட்ட அணையாகும் பெரியாறு அணை.**

இதற்கிடையில், தமிழகத்தின் நலனை கருத்தில் கொண்டு அன்றைய கேரள முதலமைச்சர் திரு. ஈ.கே. நாயனார் அவர்களுடன் திருவனந்தபுரத்தில் 5.4.2000 அன்று நான் பேச்சுவார்த்தை மேற்கொண்டேன். அப்போது தமிழக அரசின் நிலையை எடுத்துரைத்த போதிலும், முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து, மேலும் மேலும் பல ஆதாரமற்ற அச்சங்களை எழுப்பி நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்துவதற்கு உடன்பாடு இல்லை என்று கேரள அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டதால், இந்த பேச்சுவார்த்தையிலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகை செய்யுமாறு 28.4.2000 அன்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. இதனடிப்படையில், புதுடில்லியில் 19.5.2000 அன்று மத்திய நீர் வள ஆதார அமைச்சர் கூட்டிய கூட்டத்தில் நானும், தமிழக அமைச்சர்களும் கலந்து கொண்டு தமிழ்நாட்டின் நிலையை விரிவாக எடுத்துரைத்தோம். இந்தக் கூட்டத்திலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே, மத்திய அரசின் நீர் வள ஆதார அமைச்சர், ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, அந்தக் குழு மார்ச் 2001–இல் மத்திய அரசுக்கு அளித்த அறிக்கையில் முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டத்தை தற்போதுள்ள 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடி வரை உயர்த்தலாம் என்றும், சிற்றணையை (Baby Dam) பலப்படுத்தும் பணி முடிந்த பின்னர் முழு நீர் மட்ட அளவான 152 அடிக்கு உயர்த்துவது பற்றி ஆய்வு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் 27.2.2006 அன்று தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. இத்தீர்ப்பில் அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்த உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியதுடன், அணையைப் பலப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளலாம் எனவும்,



இப்பணிகளை மேற்கொள்வதற்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிப்பதோடு தமிழக அரசிற்கு கேரள அதிகாரிகள் எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தது.

(We Permit State of Tamil Nadu to carry out further strengthening measures as suggested by CWC and hope that State of Kerala would cooperate in the matter. The State of Kerala and its officers are restrained from causing any obstruction... The Writ petition and the connected matters are disposed of by permitting the water level of the Mullaiperiyar Dam being raised to 142 ft.)

இந்தத் தீர்ப்பை எதிர்த்து 3.4.2006 அன்று கேரள அரசு தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவினை 27.7.2006–இல் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கேரள அரசு, ஏற்கெனவே இயற்றியுள்ள "கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள பாதுகாப்பு சட்டம் 2003" –க்கு (Kerala Irrigation and Water Conservation Act, 2003) 2006 மார்ச் மாதத்தில் செய்த சட்டத் திருத்தத்தில் பெரியாறு அணையின் உச்சக்கட்ட நீர் மட்டம் 136 அடி என்று உண்மைக்குப் புறம்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "கேரள அணைகள் பாதுகாப்புக்குழு" என்ற அமைப்பை நியமிப்பதற்கும், கேரளாவிலுள்ள எந்த அணையை வேண்டுமானாலும் பார்வையிடவும், எந்த அணையின் நீர் மட்டத்தைக் குறைக்கவும், பாதுகாப்பு குறித்து ஆலோசனைகளை வழங்கவும், அணையின் இயக்கத்தையே நிறுத்துவதற்கும் (Decommissioning of Dam) இந்த குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத் திருத்தத்தினை எதிர்த்து – கடந்த ஆட்சியில் – உச்சநீதிமன்றத்தில் 31.3.2006–இல் தொடரப்பட்ட சிவில் வழக்கில் (Civil Suit O.S.3/2006) பின்வரும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன :–

அ. கேரள நீர்ப்பாசன மற்றும் நீர்வள பாதுகாப்பு சட்டம் 2003இல் திருத்தங்களைச் செய்து கேரள அரசு மார்ச் 2006–இல் சட்டப்பேரவையில் இயற்றிய திருத்தச் சட்டம்; முல்லை பெரியாறு அணையைப் பொறுத்தமட்டில் அரசியல் சாசனத்திற்குப் புறம்பானது என்று உத்தரவிட வேண்டும்.

ஆ. 2006–இல் கேரள அரசு ஏற்படுத்திய திருத்தங்களின் அடிப்படையில் தமிழ்நாடு முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 142 அடிக்கு உயர்த்துவதற்கும், அணையினை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுவதற்கும், கேரளா எந்தவித இடையூறையும் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையாணையைப் (Permanent Injunction) பிறப்பிக்க வேண்டும்.

முன்பிருந்ததைப் போல பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 152 அடியாக இருந்தால் அணையின் நிகர கொள்ளளவு 10.57 டி.எம்.சி.யாக இருக்கும். அது தற்போது 136 அடியாகக் குறைக்கப்பட்டதால் அணையின் கொள்ளளவு 6.12 டி.எம்.சி. ஆகக் குறைந்துள்ளது. அணையின் நீர்மட்டம் 142 அடி என உயர்த்தப்படுமானால் அணையின் கொள்ளளவு 7.67 டி.எம்.சி.யாக இருக்கும். அதாவது, 6 அடி உயர்த்தினால் 1.55 டி.எம்.சி. தண்ணீர்தான் கூடுதலாகச் சேமித்து வைக்க முடியும். ஆனால், பெரியாறு அணைக்குக் கீழேயுள்ள கேரள மாநிலத்தின் இடுக்கி அணையின் மொத்த கொள்ளளவு 70 டி.எம்.சி. தண்ணீர் ஆகும். பெரியாறு அணையின் தண்ணீர் கொள்ளளவோடு இடுக்கி அணையின் தண்ணீர் கொள்ளளவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெரியாறு அணை மிகமிகச் சிறிய அணைதான் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளலாம்.

இருப்பினும் பெரியாறு அணையின் பாதுகாப்பைக் கருதி, பேபி டேம் பலப்படுத்திட மத்திய நீர் வள குழுமம் பரிந்துரைத்தது. அணையின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று ஓங்கிக் குரல் கொடுக்கும் கேரளா பேபி டேம் பலப்படுத்தும் பணிக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமல்லவா? மாறாக,

தடைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு கேரள முதலமைச்சர் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் 31.8.2006 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமரைச் சந்தித்து ஒரு கோரிக்கை மனுவை அளித்துள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்கள். நான் அறிந்த வகையில் அந்த மனுவில் முல்லை பெரியாறு அணை குறித்து தவறான தகவல்களே கொடுக்கப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கு 25.9.2006 அன்று விசாரணைக்கு வந்த போது, இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டு, இரண்டு மாநில அரசுகளும் தனியாகவோ அல்லது மத்திய அரசின் தலையீட்டுடனோ, முடியுமானால் இப்பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை மேற்கொள்ளுமாறும், இவ்வழக்கை நவம்பர் 2006–இல் மீண்டும் விசாரணைக்காக பட்டியலிடுமாறும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு உச்ச நீதிமன்ற கருத்தின் அடிப்படையில் கேரள முதல்வர் பேச்சுவார்த்தைக்காக 3.10.2006 அன்று எனக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எந்த ஒரு நதிநீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் தமிழகம் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுடன் சுமுகமான அணுகுமுறையையே இதுவரை கடைபிடித்து வந்துள்ளது. பெரியாறு அணைப் பிரச்சினை காரணமாக சுமார் 27 ஆண்டுகாலமாக பல இழப்புகளை நாம் சந்தித்து வருகிறோம். நம்மை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த அன்னியரான ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே – வறட்சிக்குள்ளாகும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை வறட்சியின் கோரப் பிடியிலிருந்து மீட்டு அம் மாவட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கிப் பாதுகாப்பு தரப்பட்டிருந்தது. ஆனால், நம்மை நாமே ஆண்டு கொண்டிருக்கும் சுதந்திரத் திருநாட்டில் – தென் மாவட்ட மக்களுக்கு ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட வாழ்வாதாரம் – மறுக்கப்பட்டு வருவதுதான் வரலாற்றுச் சோகமாகும். ஒருபுறம் பிரச்சினைகளை ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பிக் கொண்டு, மறுபுறம் பேச்சு வார்த்தை நடத்துவது என்பது உரிய பயனைத் தரக் கூடியதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முல்லை பெரியாறு அணை குறித்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் வரும் நவம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள விருப்பதால், இப்பிரச்சினை பற்றி நாம் அனைவரும் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் முடிவு செய்யலாம். எனவே, தங்கள் கருத்துக்களை சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், உச்ச நீதிமன்ற கருத்தின் தொடர்ச்சியாக கேரள முதலமைச்சர் விடுத்துள்ள அழைப்பினை ஏற்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தமிழகத்தின் நிலையை எடுத்துரைக்கலாமா என்பது பற்றியும், அல்லது இப்பிரச்சினை குறித்து விவாதிக்க மத்திய அரசை அணுகலாமா என்பது பற்றியும், அல்லது நாம் 27 ஆண்டுக் காலமாக எவ்வளவு இடையூறுகளையும் இழப்புகளையும் சந்தித்து வருகிறோம் என்பதை உச்சநீதிமன்றத்திலேயே விளக்கி 27.2.2006 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவினை நடைமுறைப்படுத்த ஆணையிட வேண்டுமென்று கோரலாமா என்பது பற்றியும், அனைத்து அரசியல் கட்சிகளின் மேலான கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

வணக்கம்.

★

(23.10.2006 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் முல்லை பெரியாறு அணை குறித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை)



# ரூ.3,900 கோடி மதிப்பில் ஏரிகள் புனரமைப்புப் பணிகள்

**திரு. துரைமுருகன்**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்



### ❖ நதிகள் இணைப்பு

மத்திய அரசின் தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) தீபகற்ப நதிகளான மகாநதி – கோதாவரி– கிருஷ்ணா – பெண்ணாறு – காவிரி – வைகை– குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி ஆய்வு செய்து, இந்தத் திட்டம் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் எனக் கூறியுள்ளது.

இந்த மகத்தான திட்டத்திற்கு, விரைந்து செயல் வடிவம் தந்திட வேண்டும் என்பதற்காக முதல் முறையாகவும், முதல் முயற்சியாகவும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையில், ஒரிசா, ஆந்திரா மற்றும் சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளார் என்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இத்திட்டத்தின் மதிப்பீடு தோராயமாக ரூ.3,900 கோடியாக அமையும். இதனை 7 ஆண்டுகளில் செயல்படுத்த உத்தேசித்து 2006–2007ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டம் துவங்கப்படும்.

### ❖ காவிரி டெல்டாவில் கட்டுமானங்களைப் புனரமைத்தல்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூரர் மாவட்டங்களில் காவிரி டெல்டாவில் உள்ள கட்டுமானங்களை சீரமைத்துப் புனரமைப்பதற்கென ரூ. 400 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளைப் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இப்பணிகளை மேற்கொள்ள மேலும் ரூ. 30 கோடி ஒதுக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

### நீர்ப்பாசன ஏரிகளைப் புனரமைத்தல்

தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 பாசன ஏரிகள் உள்ளன. இவற்றில் 10,540 ஏரிகள் பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. எஞ்சியுள்ள 28,662 ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன.

தற்போது, மத்திய அரசு, நபார்டு வங்கி மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரத்துடன் 936 மானாவாரி ஏரிகளில் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள மீதமுள்ள ஏரிகளையும், ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ள சுமார் 8,600 பாசன ஏரிகளையும் உலக வங்கி நிதி ஆதாரம் மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் தூர்வாரி முழுமையாகப் புனரமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

### ❖ காவிரிப் படுகையில் நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணி

கடந்த ஆண்டு பெய்த பலத்த மழையின் காரணமாக காவிரி, கொள்ளிடம் மற்றும் அதன் உபநதிகளில் வெள்ளம் ஏற்பட்டு கரைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகளை நிரந்தரமாக சரிசெய்யவும், கரைகளை உயர்த்தி பலப்படுத்தவும் ரூ. 450 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

### ❖ சென்னை மற்றும் புறநகர் பகுதியில் உள்ள ஏரிகளைப் பராமரித்தல்

சென்னை மாநகரைச் சுற்றி அமைந்துள்ள 18 ஏரிகளை சீர்செய்து, நல்ல முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் தனித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. ஏரிகள் செப்பனிடும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

### ❖ காவிரி டெல்டா மாவட்டங்களில் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர் அகற்றுதல்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாக ரூ. 10 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டாப் பகுதியில் தூர்வாரும் பணி செய்யப்பட்டது. தொடர்ந்து இந்த ஆண்டு பாசனம் முடிவுற்றவுடன் ஆறுகள் கால்வாய்களை தூர்வார ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள்.

★

## ஊரகத் தொழில்துறை அமைச்சர் பதவியேற்பு



ஆளுநர் மாளிகையில் 29.10.2006 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| திரு. **பொங்கலூர் நா. பழனிசாமி**<br>மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் | : | ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய துறைகளை கவனிப்பார். |

### அமைச்சர்களின் துறைகள் மாற்றம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி பின்வரும் அமைச்சர்களின் துறைகள் மாற்றப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு :–

| | | |
|---|---|---|
| திரு. **ஆற்காடு நா. வீராசாமி**<br>மாண்புமிகு மின்துறை அமைச்சர் | : | மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு ஆகியவற்றோடு கூடுதல் பொறுப்பாக பணியாளர் நலன் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை |
| திரு. **வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**<br>மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் | : | வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை, விதைச்சான்றுத்துறை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், கரும்புத்தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு ஆகியவற்றோடு கூடுதல் பொறுப்பாக தரிசுநில மேம்பாடு |



## மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி

### இடைத்தேர்தல் முடிவு

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்கு 11.10.2006 அன்று நடைபெற்ற இடைத்தேர்தலில் திரு. எஸ். கவுஸ்பாட்சா (தி.மு.க.) வெற்றி பெற்றார்.

### வாக்குகள் விவரம்

| | | |
|---|---|---|
| **எஸ்.கவுஸ்பாட்சா (தி.மு.க.)** | – | 50,994 |
| வி.வி.ராஜன் செல்லப்பா(அ.இ.அ.தி.மு.க) | – | 19,909 |
| எம்.ஆர்.பன்னீர்செல்வம் (தே.மு.தி.க.) | – | 17,394 |
| எம்.முருகேசன் (சுயே) | – | 801 |
| சிவ.அன்பானந்தம் (சுயே) | – | 396 |
| வி.எஸ்.மணி (சுயே) | – | 296 |
| எம்.பிரபு (சுயே) | – | 225 |
| ஏ. பொன்ராமன் (சுயே) | – | 215 |
| கே.கணேசன் (சுயே) | – | 125 |
| ப.விஜயராஜன் (சுயே) | – | 112 |
| எம்.ஓச்சாத்தேவன் (சுயே) | – | 93 |
| எம்.பாண்டி (சுயே) | – | 84 |
| நாகூர்மீரான் பீர்முகமது (சுயே) | – | 60 |
| ஏ. சீனிவாசன் (சுயே) | – | 37 |
| எஸ்.பால்பாண்டி (சுயே) | – | 35 |
| இ.சையது முகைதீன் (சுயே) | – | 33 |
| எஸ்.டி.கல்யாணசுந்தரம் (சுயே) | – | 31 |
| கே.பத்மராஜன் (சுயே) | – | 30 |
| சையது முனவர் உசேன் (சுயே) | – | 27 |

### ஐசக் நியூட்டன்

*பூமிக்கு புவிஈர்ப்பு சக்தி உண்டு என்ற உண்மையைக் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1642–இல் பிறந்தார். சிறுவயதிலேயே பாடம் படிப்பதைவிட, புதிய புதிய கருவிகளை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டிருந்தார்.*

*தானியங்களை அரைக்கக் கூடிய காற்றாலை, கடிகாரம் ஆகியவற்றைப் பள்ளி மாணவனாக இருந்தபோது உருவாக்கினார்.*

*1661–இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து பின்னர் கணித மேதையாக உருவானார்.*

*1696–இல் அதே பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.*

*வானியல் பற்றிய ஆராய்ச்சியில் சூரியன், கோள்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் இயக்கங்கள் பற்றி பல உண்மைகளைக் கண்டறிந்தார்.*

*மரத்தில் இருந்து விழுகின்ற பழம், மேலே போகாமல் தரைக்கு வருவது ஏன் என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பூமிக்கு "புவிஈர்ப்புச் சக்தி" உண்டு எனக் கண்டறிந்தார்.* ✶

# 2,230 புதிய பேருந்துகள் இயக்க நடவடிக்கை



திரு. கே.என்.நேரு
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

* போக்குவரத்துக் கழகங்களுக்கு 1,000 புதிய பேருந்துகள் இயக்க அரசு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 1,000 புதிய பேருந்துகள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று இயக்கப்படும். மேலும், நிலுவையிலுள்ள 230 புதிய பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 2,230 புதிய பேருந்துகள் இந்த ஆண்டு இயக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
* சில தனியார் பேருந்துகள் நீதிமன்றம் மூலமாக வழித்தட மாற்றம் பெற்று இயக்கி வருகின்ற காரணத்தால், பேருந்து வசதியற்ற அவ்வழித் தடங்களில், தேவைக்கேற்ப அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக பேருந்து வசதிகள் செய்து தரப்படும்.
* ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எங்கும் நிற்காமல் துரிதமாகப் பயணிகள் செல்லும் வகையில் "Yellow Line" எனப் பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக் கூடிய "Blue Line" என்ற பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படும்.
* சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் உள்ள விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு பயணிகளுக்கு சிறப்பான வசதிகள் செய்து தரப்படும். மேலும், கணினி மூலம் முன்பதிவு (On Line Reservation) வசதி தமிழகத்தின் முக்கிய நகரங்களில் செய்து தரப்படும்.
* விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தற்பொழுது இயக்கப்படும் 900 பேருந்துகள் 1,000 பேருந்துகளாக அதிகரிக்கப்படும். மேலும், அதிநவீன மிதவை சொகுசுப் பேருந்துகளும் (Ultra Deluxe Air Suspension Bus) இயக்கப்படும்.
* திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, கூடுதலாக புதிய மண்டலம் ஒன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தின் கீழ் துவக்கப்படும்.
* பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகளை விரிவாக மாற்றியமைத்து அதன்படி 5,000 ஆட்டோ ரிக்ஷா அனுமதிகளை மானியத் தொகையுடன் வேலையில்லாத ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு ஓட்டுநர் மற்றும் உரிமையாளராக இயக்குவதற்காக வழங்கப்படுவதுடன் 5,000 புதிய அனுமதிச் சீட்டுகளை மானியத் தொகையின்றி பொதுப் பிரிவின் கீழ்வரும் பிற விண்ணப்பதாரர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
* பள்ளிகளுக்கு மாணவர்களை அழைத்து வரும் வாகனங்களான ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள், வேன்கள் ஆகிய வாகனங்களில் ஏற்றி வரும் மாணவர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்தவும், அவ்வாகனங்களுக்கு தக்க போக்குவரத்து நெறிமுறைகளை ஏற்படுத்தவும், அவ்வாகன ஓட்டிகள் சாலை விதிகளை முறையாகக் கடைபிடிக்கவும், பள்ளி, கல்லூரிப் பேருந்துகள் அனைத்திற்கும் ஷெல் ஒயிட் நிற ஒதுக்கீடு செய்து, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள நெறிமுறைகளின்படி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* பெரும் விபத்துகளைத் தடுக்க அனைத்து வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையத்தில் கருப்பு வண்ணம் பூசுதல் கட்டாயமாக்கப்படும்.
* ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்கள் ஆகிய வாகனங்களுக்கு நீல நிற வர்ணம் பூசப்பட வேண்டும் என்பதையும் அவ்வாகனங்களில் "NOT FOR HIRE" (வாடகைக்கு அல்ல) எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கப்படும்.
* வாகனங்களின் பதிவெண் தகடுகளை மாற்றியமைத்தல் / திருத்துதல் போன்றவற்றைத் தவிர்க்கும் முறை பற்றி மைய அரசின் நெறிமுறைகளின்படி ஆய்வு நடத்திய பின், தேசிய பாதுகாப்பு நலனைக் காக்கும் வண்ணம் புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கும், ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வரும் வழக்கினை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்து, மைய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு முறைகளைக் கருத்தில் கொண்டு உயர்பாதுகாப்பு பதிவெண்பலகை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு புதிய விரிவான திட்டம் மேற்கொள்ளப்படும். ✶





# வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி



திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

- 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 புதிய விடுதிகள் இந்த ஆண்டே துவங்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- 2 கோடி ரூபாய் செலவில் 2,000 இளைஞர்களுக்கு டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் பயிற்சி அளிக்கப்படும்.
- வேலைவாய்ப்புப் பயிற்சிகளுக்கு கழக அரசு நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 42 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சி 13,290 வேலையற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும்.
- 85 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 நபர்கள் பயன்பெறும் வகையில் 5,000 சலவைப்பெட்டிகள் இந்த ஆண்டு வழங்கப்படும்.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) மூலமாக 1,000 நபர்களுக்கு ரூபாய் 3,000 கடனாகவும், அரசு மானியமாக ஒரு நபருக்கு ரூபாய் 2,000மும் ஆக மொத்தம் ரூபாய் 5,000 செலவில் நடமாடும் சலவையகம் வழங்கப்படும். இதற்கு கழக அரசு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## பதிவுத்துறை

## விவசாயிகள், சிறுதொழில் முனைவோர்களுக்கு உரிமை மற்றும் ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத்தீர்வை விலக்கு

- ஒரு குடும்பத்தில் குடும்ப உறுப்பினராக இருப்பினும், சகோதர, சகோதரிகளுக்கிடையே பதிவு செய்யப்படும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான சொத்து பரிமாற்றங்களாகக் கருதப்படுவதில்லை.
- இந்நிலையை மாற்றி இனிவரும் காலங்களில் சகோதர, சகோதரிகளுக்கிடையே சொத்துப் பரிமாற்றம் செய்து, பதிவு செய்யப்படும் விடுதலை (Release) மற்றும் ஏற்பாடு (Settlement) ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களிடையிலான சொத்துப் பரிமாற்றமாகவே கருதப்படும் என்பதையும், இந்த அவைக்கு தெரிவிப்பதிலே கழக அரசு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.
- விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் பயனடையும் விதமாக உரிமை ஆவண, ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு வழங்கப்படும். மேற்கூறிய முத்திரைத் தீர்வை விலக்களிப்பை 22.7.2006 முதல் நடைமுறைப் படுத்தி, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் உரிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ❑



# இளைஞர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி

திரு. என்.சுரேஷ் ராஜன்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

- **கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை பகுதியைச் சுற்றி கூடுதல் வசதிகள் :**

  கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை, அய்யன் திருவள்ளுவர் எழுதிய உலகப் பொது மறையான திருக்குறள் சாராம்சங்களைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது. இச்சிலை முக்கடல்களும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. மேலும், திருக்குறளின் முக்கியக் கொள்கைகளான அறம், பொருள், இன்பம் போன்றவற்றை விவரமாக விளக்கியுள்ளது. இச்சிலை கடல் நடுவில் உள்ள சிறிய பாறையில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. சிலையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.39 இலட்சம் நிதிஒதுக்கப்படும்.

- **தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாடு :**

  கழுகுமலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.48.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை முழுமையாக முடிக்க ரூ.13 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

- ஏலகிரி மலையினை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஏலகிரி மலை மேம்பாட்டிற்கு ரூ.100.60 இலட்சம் இந்த ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

- படித்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு சுற்றுலாப் பகுதிகளில் வழிகாட்டிகளாக ஈடுபடுத்தப்படுவார்கள்.

- சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை, ஏலகிரி, பழவேற்காடு போன்ற இடங்கள் மேம்படுத்தப்படும்.

- சுற்றுலாப் பயணிகள் சொகுசு வசதிகள் நிறைந்த "ஓல்வோ" பேருந்துகளையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் "ஓல்வோ" பேருந்துகள் வாங்கப்படும்.

- சுகாதார சுற்றுலாவினை (Health Tourism) மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- குழந்தைகள் சுற்றுலாவினை ஊக்குவிக்க (Children Tourism) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்புப் பயணத் திட்டங்களைத் தொடங்கும்.

- சுற்றுலா வளர்ச்சி கருதி, புதிய சுற்றுலாத் தலங்களில் மக்களைக் கவரும் விதத்தில் தொடங்கப்படும் ஓட்டல், பொழுதுபோக்குப் பூங்கா, படகுத்துறை போன்ற சுற்றுலாத் திட்டங்களுக்கு (Tourism Projects) மொத்த முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். மானியத் தொகை உச்ச பட்சமாக ஒரு கோடி ரூபாய் வரை அளிக்கப்படும். முதல் ஐந்தாண்டு காலத்திற்கு செலுத்தும் விற்பனை வரிக்கு மென்கடன் அளிக்கவும், அந்தக் கடனை அடுத்த ஐந்தாண்டுகளில் 0.1 வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும். ✱





# செய்தித்துறையின் சீர்மிகு திட்டங்கள்



திரு. பரிதி இளம்வழுதி
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

- பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத் தொகை ரூ.3,000 லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

- பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ. 4,000 ஆக உயர்த்தப்படுவதால், பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500 லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், இதை சீராக்கும் பொருட்டு, ஏற்கெனவே 500 ரூபாய் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுபவர்களுக்கும் ரூ.2,000 வழங்கப்படும்.

- பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்திவிட்ட பத்திரிகையாளருடைய குடும்ப நிதி வழங்குவதற்காக இருக்கின்ற நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு, அந்தக் குடும்பத்தினர் பயன்பெறுமளவுக்கு விதிமுறைகள் மாற்றப்படும்.

- கலைப்படங்களுக்கு மானியம் வழங்க வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தளர்த்தப்படும்.

- தேசிய, சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

- குழந்தைகள் திரைப்பட விழா 1.8.2006 முதல் 9.8.2006 முடிய (சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர) சென்னை, கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் ஆண்டுதோறும் சென்னையிலும் அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் குழந்தைகள் திரைப்பட விழா நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

- பத்திரிகையாளர்கள் நலனில் எப்போதும் அக்கறை செலுத்திடும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியிலே இருக்கும் காலக்கட்டத்தில் இறந்து விடுவார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஒன்றரை இலட்சம் ரூபாய் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஒரு இலட்சம் ரூபாய் என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார் களேயானால் ஐம்பதாயிரம் ரூபாய் என்றும் குடும்ப நிதிஉதவி வழங்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக 20 ஆண்டு காலம் பணிபுரியாத காரணத்தினால் இந்த உதவித் தொகையைப் பெற வாய்ப்பில்லாமல் இருந்த பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் குடும்ப உதவிநிதி கிடைத்திடும். ◆

# சென்னை, மதுரை மற்றும் கோவையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்



**திரு. சுப.தங்கவேலன்**
மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்

✶ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் இந்த நிதியாண்டில் (2006–2007) தமிழகம் முழுவதும் ரூபாய் 166 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,062 மனைகள், வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

✶ வாரியத்திற்குச் சொந்தமான வணிகமனைகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வணிக வளாகங்கள் கட்டப்படும்.

✶ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு முற்றிலும் பழுதடைந்த வீடுகளை இடித்துவிட்டு புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமென அறிவித்ததற்கிணங்க சென்னை நகரில் நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அகற்றி, அவ்விடங்களில் 7,320 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூபாய் 128.10 கோடி செலவில் அமைக்கப்படும். மேலும், வடசென்னையில் வியாசர்பாடி, பி.எஸ்.மூர்த்திநகர் மற்றும் தென்சென்னையில் குப்பைமேடு திட்டப் பகுதியில் உள்ள மிகவும் பழுதடைந்த 606 குடியிருப்புகள் அகற்றப்பட்டு ரூபாய் 8.95 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மீண்டும் அமைக்கப்படும்.

✶ சென்னையில் சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் குடும்பங்களுக்கு 18,174 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூபாய் 300.91 கோடி செலவில் கட்டப்படும். வடசென்னையில் திருவொற்றியூர், தென் சென்னையில் ஏற்கெனவே குறிப்பிட்டபடி நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

✶ சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களை குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த ஜவகர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் 1 இலட்சத்து 11 ஆயிரத்து 151 குடியிருப்புகள் ரூபாய் 1,856.23 கோடி செலவிலும், மதுரை மாநகரில் 60,257 குடியிருப்புகள் ரூபாய் 1006.26 கோடி செலவிலும், கோவை மாநகரில் 12,730 குடியிருப்புகள் ரூபாய் 281.60 கோடி செலவிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் 2007–இல் தொடங்கப்படும்.

✶ ✶ ✶







# புதுப்பொலிவுடன் வருமுன் காப்போம் திட்டம் செயல்படுத்தப்படும்

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

✶ கடந்த 2005–06ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,652.04 கோடி ரூபாய் ஆகும். நடப்பு 2006–07ஆம் ஆண்டில் ரூ.1,951.28 கோடி நிதி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ரூபாய் 299.24 கோடி நிதியை இத்துறைக்கு உயர்த்திக் கொடுத்துள்ளார் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ நடப்பு நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும். மற்ற மாவட்டங்களிலும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் படிப்படியாக தொடங்கப்படும்.

✶ மைய அரசின் உதவியுடன் ரூ.120 கோடி செலவில் சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, புதுதில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்திற்கு இணையாக, தரம் உயர்த்தப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ இந்திய பொது சுகாதார அறக்கட்டளையின் கீழ் குறுகிய மற்றும் நீண்ட காலப்பயிற்சி, வருடத்திற்கு 10,000 பேர்களுக்கு அளிக்கவும், சர்வதேச அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் ரூ.100 கோடி நிதியில் சென்னைக்கருகில் சர்வதேச தரம் வாய்ந்த பொது சுகாதாரக் கல்வி நிறுவனத்தை தமிழக அரசு, மத்திய அரசு உதவியுடன் அமைக்கும். இதற்காக 50 ஏக்கர் நிலம் தமிழக அரசால் உடனடியாக வழங்கப்படும்.

✶ மதுரை அரசு இராசாசி மருத்துவமனையை மேன்மைமிகு மையமாக மாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக நடப்பாண்டில் ரூ.15 கோடி செலவில் 300 படுக்கை வசதிகள் ஏற்படுத்தி தரம் உயர்த்தப்படும். இதற்கு தேவையான 2 ஏக்கர் நிலத்தை மதுரை மாநகராட்சி தர முன்வந்துள்ளது.

✶ கட்டடப் பணிகள் முடிந்தவுடன் மேம்படுத்தப்படுகிற அனைத்து மருத்துவ மனைகளுக்கும் நவீன மருத்துவக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.102 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் வாங்கித்தரப்படும்.

✶ இந்த அரசு மருந்து தயாரிப்புத் தொழிலை ஊக்குவிக்கும் விதமாகவும், மறைந்த மாமேதை மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்களின் திட்டப்படியும் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 40 முதல் 50 பெரிய மற்றும் சிறிய மருந்து தயாரிப்பு நிறுவனங்களும், 8 முதல் 10 வரை துணை நிறுவனங்களும் தொழில் தொடங்க ஏதுவாக 250 ஏக்கர் பரப்பளவில் ஒரு பார்மா பார்க் அமையப்பெற உள்ளது. இதனால் 2,800 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 6,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். சுமார் 500 கோடி ரூபாய் அளவில் உற்பத்தி மருந்தை ஏற்றுமதி செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✶ தமிழக முதல்வரின் பேறுகால நிதிஉதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவு உண்ணவும், பிரசவ காலத்தில் வருமான இழப்பை ஈடுசெய்யவும் கருவுற்ற 7ஆவது மாதத்திலிருந்து, ஆறு மாத காலத்திற்கு மாதம் ரூ.1,000 வீதம் ஒவ்வொரு ஏழை



மழை நீர் சூழ்ந்தது. இந்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமது துறையின் உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், சென்னை மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

நடைபெற்று வருகிற நிவாரணப் பணிகள் மற்றும் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் ஆகியன குறித்து விரிவான கலந்தாய்வு நடத்திய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலாவதாக வியாசர்பாடி – கணேசபுரம் ரெயில்வே பாலப் பகுதிக்குச் சென்றார்.

சென்னை மாநகரில் இடைவிடாத பெய்த மழை காரணமாக பாலம் அமைந்துள்ள பகுதி எங்கும் முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கி நின்றது. தேங்கிய தண்ணீரை அதிக திறன்கொண்ட மோட்டார்களைக் கொண்டு வெளியேற்றும் பணியில் மாநகராட்சி நிருவாகம் ஈடுபட்டிருந்தது.

பணியினை விரைந்து முடிக்க கேட்டுக் கொண்ட மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், ஆலோசனைகளையும் அப்போது வழங்கினார்.

பின்னர் ஓட்டேரி நல்லா கால்வாயினைப் பார்வையிட்டார். மிகையான தண்ணீர் அக்கால்வாய் மூலம் வெளியேற்றப்படுகிற விவரம் கேட்டறிந்தார். பின்னர் அங்கிருந்து பெரம்பூர், ஜமாலியா பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார்.

அருந்ததிபாளையத்தில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் – மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த மழை வெள்ள முகாமிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்றார். முகாமில் தங்கியிருந்தவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

"அப்பகுதியில் இயல்பு வாழ்க்கை விரைந்து திரும்பிட விரைவான நடவடிக்கை மேற்கொள்வீர்!" என மாநகராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டார்.

அங்கிருந்து பின்னர் ஆயிரம் விளக்குப் பகுதி 116–ஆவது வட்டத்திற்கு வருகை தந்தார். அங்கு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொட்டுகிற மழையில் நனைந்தபடியே சாமியர்ஸ் சாலையில் பெருகி ஓடிய மழை நீரை வடிக்க காலையிலிருந்தே மாநகராட்சி மேற்கொண்டு





வரும் நிவாரண நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

பின்னர் அங்கிருந்து கோட்டூர்புரம் சென்றார். வழியில் கொட்டுகிற மழையில், கோட்டூர் மேம்பாலத்தில் நின்று, அடையாற்றின் வெள்ள ஓட்டத்தினையும், அதன் ஓரங்களை பலப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 31.10.2006 அன்று, சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளச்சேரி பகுதிகளை ஏ.ஜீ.எஸ். காலனி, இராம் நகர், சீனிவாச நகர் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு பொது மக்களின் குறைகளை கேட்டறிந்தார். மேலும் அப்பகுதிக்கு உடனடியாக மழைநீர் வடிகால் அமைக்குமாறு உத்தரவிட்டார். அதன் பின்னர்



அதனைத் தொடர்ந்து பின்னர் வேளச்சேரி மேம்பாலம் சென்று அங்கிருந்து அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை பார்வையிட்டார்.

அப்பகுதி தாழ்வான பகுதி என்பதும் கடந்த காலத்தில் மழை வெள்ளத்தின் போது அப்பகுதி பெருமளவு பாதிக்கப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

வேளச்சேரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் சூழும் மழை வெள்ளத்தை வடிக்க மாநகராட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஆணையர் எடுத்துரைத்தார்.

டான்ஸி நகர், இந்திரா நகர், உதயம் நகர் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு அங்குள்ள எம்.ஆர்.டி.எஸ். பணிகளின் அருகாமையில் மண்குவியல்களை அகற்றி மழைநீர் வடிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கோடம்பாக்கம் பராங்குஸம் பகுதிகளில் மோட்டார் பம்பு மூலம் மழைநீர் அகற்றப்படுவதை பார்வையிட்டு துரிதப்படுத்தினார். அதன் பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், "சென்னையில் பல இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டவும், கால்வாய்கள் பொதுப் பணித்துறை மூலம் தூர்வாரவும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மழை அளவு குறைந்துள்ளதாலும், தமிழக அரசு மேற்கொண்டுள்ள துரித நடவடிக்கையினாலும் அதிக அளவில் மழைநீர் தேங்காமல் வடிந்துள்ளதை சாலைகளில் காணலாம். மேலும் வேளச்சேரி பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை அகற்ற, எம்.ஆர்.டி.எஸ். பணியை மேற்கொள்ளும் இரயில்வே துறையுடன் கலந்து பேசி மண் குவியல்களை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மழைநீர் வடிகால்கள் தேவையான பகுதிகளுக்கு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். புதிய மன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து குழு மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு, இனி வருங்காலங்களில் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். சென்னை மாநகராட்சி மூலம் 4.50 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

கொட்டுகிற மழை! முழங்கால் அளவிற்கு தண்ணீர் என்றும்பாராமல் சென்னை மாநகர மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற மனித நேய உணர்வோடு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட உடனடி நிவாரணப் பணியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்கப்பட்டது. தமிழக அரசு, மக்கள் நல அரசு என்பதற்கு இந்த உடனடி நடவடிக்கை மகத்தானதோர் எடுத்துக்காட்டாகும்.

☐ ☐ ☐

கர்ப்பிணிப் பெண்ணிற்கும் ரூ.6,000 வழங்கப்படும். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* பிரசவகால அவசரத் தேவைக்கான வசதிகள் எளிதில் கிடைக்கும் வண்ணம் நடப்பாண்டில் மேலும் 32 மருத்துவமனைகள் 24 மணி நேர தீவிர பிரசவ சேவை மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். இம்மையங்களுக்குத் தேவையான வசதிகள் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் செய்யப்படும்.

* அரைமணிநேரப் பயணத்தில் எந்தவொரு கிராமத்திலிருந்தும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பெறும் வகையில் பேறுகால மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப் படும். இந்த மையங்களில் ஆங்கில முறை சிகிச்சையுடன், இந்தியப் பாரம்பரிய சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவமுறை மருந்துகளைப் பயன்படுத்தி பேறுகால சிக்கல்களைக் குறைக்கும் முறையும் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த வசதிகளை அனைத்துப் பகுதி மக்களும் எளிதில் பெறுவதற்கேற்ற வகையில் ஆரம்ப கட்டமாக 385 மையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.54.97 கோடி உட் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நவீன உபகரணங்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* ஒவ்வொரு கிராமத்திலும் மாதம் ஒரு முகாம் தொடர்ந்து நடத்தப்படும். இந்த ஆண்டு 885 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தத் திட்டம் மக்கள் பங்கேற்புடன் ரூ.12.13 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

* தற்போது வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் புதுப்பொலிவுடன் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக நடப்பாண்டிலும் அடுத்த ஆண்டிலும் ரூ.18.3 கோடி செலவில் 9,000 முகாம்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடத்தப்பட உள்ளது. ஒரு மாவட்டத்தில் வாரத்தில் சராசரியாக மூன்று மருத்துவ முகாம்கள் வீதம் 24 மாதங்களில் மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு சுமார் 300 முகாம்கள் வீதம் நடத்தப்படும். இந்தத் திட்டம் ஒரு நிரந்தர திட்டமாக தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

* தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் பரீட்சார்த்த முறையில் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள 11 அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்படுகிறது. இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுவதால் நடப்பு ஆண்டில் 270 அரசு மருத்துவமனைகளுக்கும் விரிவு படுத்தப்படும். இதற்காக 5 ஆண்டுகளுக்கு ரூ.32.71 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக மருந்துகள் வழங்குவதற்காக தற்போது ரூ.170 கோடி ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 33.25 கோடி அதிகமாகும்.

* * *

## உயிரியல் உலகம்

1) மனிதர்களுக்கு தூக்க வியாதியை ஏற்படுத்தும் உயிரி எது?

*டிரிப்பன்னோசோமா கேம்பின்ஸ்*

2) வைரஸ்களில் காணப்படும் மரபுப் பொருள் எது?

*DNA மற்றும் RNA*

3) குடல்வாலில் ஏற்படும் நோய் என்ன?

*அப்பன்டிசைட்டிஸ்*

4) பிளேக்நோயை ஏற்படுத்தும் உயிரி எது?

*பாஸ்டுரெல்லா பெஸ்டிஸ்*

5) முதல் முதுகு முள்ளெலும்பின் பெயர் என்ன?

*அட்லஸ்*

6) பாக்டீரியாக்களைத் தாக்கும் வைரஸ்களுக்கு என்ன பெயர்?

பேக்டீரியோபேஸ்.





# சென்னையில் மழை பாதித்த பகுதிகளில் உடனடி நிவாரணம்

சென்னை மாநகரில் மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை 28.10.2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். கொட்டும் மழையிலும்—தண்ணீர் தேங்கிய பகுதிகளுக்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

சாலைகளில் தேங்கி உள்ள தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு.டி.ஆர். பாலு, திரு. தயாநிதிமாறன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.விஜயகுமார்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்றனர்.

சென்னை மாநகரில் இடைவிடாது பெய்த மழை காரணமாக தாழ்வான பகுதிகளில்



③

தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. இத்தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:–

| கட்சி | எண்ணிக்கை |
|---|---|
| தி.மு.க. | 31 |
| அ.இ.அ.தி.மு.க | 8 |
| காங்கிரஸ் | 6 |
| பா.ம.க. | 1 |
| இ.கம்யூ | 1 |
| சுயேட்சை | 2 |
| மொத்தம் | 49 |

### பேரூராட்சிகள்

மொத்தமுள்ள 561 பேரூராட்சிகளில் உள்ள 8,807 வார்டுகளில் 8,780 வார்டுகளுக்கு தேர்தல் முடிவுற்றது. மீதமுள்ள 27 வார்டுகளில் 26 வார்டுகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் தேர்தல் நடைபெறவில்லை. ஈரோடு மாவட்டம், கொடுமுடி பேரூராட்சியில், வார்டு எண். 9–ல் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் மரணம் அடைந்ததால் இவ்வார்டிற்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மொத்தமுள்ள 561 பேரூராட்சிகளில் 16 பேரூராட்சிகள் தவிர அனைத்து பேரூராட்சிகளிலும் தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. 16 பேரூராட்சிகளில் போதிய குறைவெண் வரம்பு (Quorum) இல்லாமையாலும் மற்றும் சில நிருவாகக் காரணங்களினாலும் தலைவருக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

545 பேரூராட்சிகளில் நடைபெற்ற தலைவருக்கான தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:–

| கட்சி | எண்ணிக்கை |
|---|---|
| தி.மு.க. | 283 |
| அ.இ.அ.தி.மு.க | 70 |
| காங்கிரஸ் | 61 |
| பா.ம.க | 14 |
| பா.ஜ.க | 9 |
| இ.கம்யூ(மா) | 7 |
| இ.கம்யூ | 6 |
| ம.தி.மு.க. | 5 |
| சுயேட்சை | 90 |
| மொத்தம் | 545 |

## ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் விவரம் பின்வருமாறு:

| மாவட்ட ஊராட்சி | தலைவர் பெயர் | கட்சி |
|---|---|---|
| கோயம்புத்தூர் | சி.ஆர். ராமச்சந்திரன் | தி.மு.க. |
| கடலூர் | ஆர்.சிலம்புச்செல்வி | பா.ம.க. |
| தருமபுரி | எஸ்.பி.வெங்கடேஸ்வரன் | பா.ம.க. |
| திண்டுக்கல் | ஆர்.கவிதா பார்த்திபன் | தி.மு.க |
| ஈரோடு | எஸ்.வி.சரவணன் | இ.தே.கா |
| காஞ்சிபுரம் | டி.துரைசாமி | தி.மு.க. |
| கன்னியாகுமரி | டி.அஜிதா மனோதங்கராஜ் | |
| கரூர் | ரமேஷ்பாபு பூவை | தி.மு.க. |
| கிருஷ்ணகிரி | ஆர்.ராஜேந்திரன் | தி.மு.க. |
| மதுரை | பி.அசோக்குமார் | இ.தே.கா. |
| நாகப்பட்டினம் | ஜி.ஜெயராமன் | தி.மு.க |
| | | இ.கம்யூ (மா) |



| | | |
|---|---|---|
| நாமக்கல் | எஸ்.காந்தி செல்வன் | தி.மு.க. |
| பெரம்பலூர் | டி.கொடியரசி | தி.மு.க. |
| புதுக்கோட்டை | சி.முத்துச்சாமி | தி.மு.க. |
| இராமநாதபுரம் | ஏ.ரவிச்சந்திர ராமவன்னி | இ.தே.கா. |
| சேலம் | கே.சண்முகம் | பா.ம.க. |
| சிவகங்கை | எம்.பாண்டியன் | இ.தே.கா. |
| தஞ்சாவூர் | எஸ்.செல்வி | தி.மு.க. |
| நீலகிரி | எஸ்.கோமதி | தி.மு.க. |
| தேனி | தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது | |
| திருவள்ளூர் | பி.விஜயகுமார் | இ.தே.கா. |
| திருவண்ணாமலை | பி.கிரி | தி.மு.க. |
| திருவாரூர் | எஸ்.கமலாவதனம் | இ. கம்யூ. |
| திருச்சிராப்பள்ளி | வி. சங்கீதா | தி.மு.க. |
| திருநெல்வேலி | எம்.கிரகாம்பெல் | தி.மு.க. |
| தூத்துக்குடி | என்.சின்னதுரை | அ.இ.அ.தி.மு.க. |
| வேலூர் | ஆர்.ஷீலா | தி.மு.க. |
| விழுப்புரம் | வி.எஸ்.வசுந்தராதேவி | பா.ம.க. |
| விருதுநகர் | ஏ.கடற்கரைராஜ் | தி.மு.க. |

| | |
|---|---|
| மொத்தப் பதவியிடங்கள் | 29 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியிடங்கள் | 28 |
| தி.மு.க. | 16 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | 5 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 4 |
| இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி | 1 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 1 |
| அ.இ.அ.தி.மு.க. | 1 |
| தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது | 1 |

### ஊராட்சி ஒன்றியங்கள்

| | |
|---|---|
| மொத்தப் பதவியிடங்கள் | 385 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியிடங்கள் | 373 |
| தி.மு.க | 242 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | 42 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 28 |
| இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி | 5 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 8 |
| அ.இ.அ.தி.மு.க | 25 |
| ம.தி.மு.க | 3 |
| பாரதிய ஜனதா கட்சி | 2 |
| சுயேட்சை | 17 |
| மற்றவை | 1 |
| தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது | 12 |

**மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மாநிலத் தேர்தல் ஆணையம்,**
**சென்னை.**

# உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள்

தமிழ்நாட்டில் 13.10.2006 மற்றும் 15.10.2006 ஆகிய நாட்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நேரடித் தேர்தல் நடைபெற்றது. அதனையடுத்து 28.10.2006 அன்று நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் முதல் கூட்டத்தில் (சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 29.10.2006 அன்று நடைபெற்றது) அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலைவர் / துணைத் தலைவர் மற்றும் மேயர் / துணை மேயர் பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்

### மாநகராட்சிகள்

தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சிகளில் (சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி) மேயர், துணை மேயர் பதவிகளுக்கு கீழ்க்கண்டவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| மாநகராட்சியின் பெயர் | மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்/கட்சி | துணை மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்/கட்சி |
|---|---|---|
| சென்னை | திரு. மா. சுப்பிரமணியன்<br>தி.மு.க. | திருமதி. ஆர். சத்தியபாமா<br>தி.மு.க. |
| கோயம்புத்தூர் | திரு. ஆர். வெங்கடாசலம்,<br>இ.தே.கா. | திரு. என். கார்த்திக்<br>தி.மு.க. |
| மதுரை | திருமதி. கோ. தேன்மொழி,<br>தி.மு.க. | திரு. பி. எம். மன்னன்<br>தி.மு.க. |
| சேலம் | திருமதி. ஜெ.ரேகா பிரியதர்ஷினி,<br>தி.மு.க. | திரு.சி.பன்னீர்செல்வம்<br>தி.மு.க. |
| திருச்சிராப்பள்ளி | திருமதி. சாருபாலா ஆர். தொண்டைமான்,<br>இ.தே.கா. | திரு.எம். அன்பழகன்<br>தி.மு.க. |
| திருநெல்வேலி | திரு. அ.லெ.சுப்பிரமணியன்,<br>தி.மு.க. | திரு. முத்துராமலிங்கம்<br>தி.மு.க. |






ஆறு மாநகராட்சிகளில் மொத்தமுள்ள 474 வார்டுகளில் மதுரை மாநகராட்சியில் ஒரு வார்டில் மட்டும் (29ஆவது வார்டு) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் இறந்ததால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

### நகராட்சிகள்

102 நகராட்சிகளில் மொத்தம் 3,392 வார்டுகளில் சிவகங்கை நகராட்சியில் ஒரு வார்டில் மட்டும் (9ஆவது வார்டு) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் இறந்ததால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. பிற அனைத்து வார்டுகளிலும் தேர்தல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 102 நகராட்சிகளில் சிவகங்கை நகராட்சி தவிர அனைத்து நகராட்சிகளிலும் தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. இத்தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:–

| கட்சி | எண்ணிக்கை |
|---|---|
| தி.மு.க. | 63 |
| காங்கிரஸ் | 15 |
| அ.இ.அ.தி.மு.க | 9 |
| பா.ம.க | 6 |
| இ.கம்யூ(மா) | 4 |
| சுயேட்சை | 3 |
| விடுதலை சிறுத்தை | 1 |
| மொத்தம் | 101 |

### மூன்றாம் நிலை நகராட்சிகள்

மொத்தமுள்ள 50 மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள 987 வார்டுகளில் வேலூர் மாவட்டம் மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சியின் 4 வார்டுகளைத் தவிர (வேட்பு மனு தாக்கல் ஆகாதவை) அனைத்து வார்டுகளுக்கும் (983) உறுப்பினர் தேர்தல் நடைபெற்று முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்டம் வேலம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சி தவிர அனைத்து மூன்றாம் நிலை நகராட்சிகளிலும்



## மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி கோ.தேன்மொழி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி. கோ. தேன்மொழி அவர்களுக்கு வயது 42. இவர் 8ஆவது வகுப்பு வரை படித்துள்ளார். இவரது கணவர் பெயர் ப.கோபிநாதன். இவர்களுக்கு பிரபாகரன், கார்த்திகேயன் ஆகிய இரண்டு மகன்களும், சரண்யா என்ற மகளும் உள்ளனர். இவரது பெற்றோர் சுவாமிநாதன் – பத்மாவதி ஆகியோர் ஆவார்கள். மதுரை சுப்பிரமணியபுரத்தில் குடியிருக்கும் திருமதி. கோ. தேன்மொழி அவர்களின் சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகேயுள்ள தீயனூர் ஆகும். 1986ஆம் ஆண்டிலிருந்து இவர் பொதுநல சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினராக இருந்துள்ளார். தற்போது மதுரை மாநகராட்சியின் 42ஆவது வார்டு மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மேயராகத் தேர்வு பெற்றுள்ளார்.

❖ ❖ ❖







## சேலம் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. ஜெ.ரேகா பிரியதர்ஷினி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

சேலம் மாநகராட்சி வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மாநகராட்சிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. சேலம் மாநகராட்சி, நகராட்சியாக இருந்த காலத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நகர்மன்றத் தலைவராக இருந்து மக்கள் பணி ஆற்றிய சிறப்பினைப் பெற்றதாகும்.

1.4.1972இல் சேலம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1.6.1994இல் மாநகராட்சியாக மாற்றப்பட்டது.

மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டபோதிலிருந்து, 60 கோட்டங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதல் முதலாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி அவர்கள், சேலம் மாநகராட்சியின் முதல் பெண் மேயராகப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சேலம் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகப் பொறுப்பேற்றுள்ள திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி அவர்கள், 1.7.1982இல் பிறந்தார். இவரது பெற்றோர் ஜெகதீஸ்வரன்–பங்கஜம் ஆகியோர் ஆவர். இவர் எம்.ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ. (பொது நிர்வாகம்) படித்தவர். தற்போது, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் படித்து வருகிறார். கல்லூரியில் படித்த காலத்தில் துறைச் செயலாளராகவும், கல்லூரிப் பொருளாளராகவும் இருந்துள்ளார். பள்ளி மற்றும் கல்லூரியில் படித்த காலத்தில் ஓவியப்போட்டி, பாட்டுப் போட்டிகளில் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். எம்.ஏ., ஆங்கிலத்தில் பெரியார் பல்கலைக்கழகத்தின் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். இவரது கணவர் பெயர் திரு. எஸ். பாபு. இவர் சேலம் மாவட்டம் காரிப்பட்டியில் வருவாய் ஆய்வாளராக இருந்து வருகிறார். இவர்களுக்கு 5 மாத பெண் குழந்தை ஒன்று உள்ளது. □



## **சென்னை** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. **மா.சுப்பிரமணியன்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



**செ**ன்னை மாநகராட்சியின்
வணக்கத்திற்குரிய மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் வாணியம்பாடி அருகில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். இவருக்கு வயது 47. பள்ளியில் படிக்கும்போதே பொதுவாழ்வில் நாட்டம் கொண்டு 1976ஆம் ஆண்டிலிருந்து பொதுநலப்பணியில் ஈடுபட்டார். இவரது மனைவியின் பெயர் காஞ்சனா. இவர்களுக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் இளஞ்செழியன் மாஸ்கோவில் மருத்துவம் பயின்று வருகிறார். இளைய மகன் பெயர் அன்பழகன்.

சொந்தத் தொழில் செய்யவேண்டுமென்று ஆர்வம் கொண்டு தனது நண்பரின் உதவியால் ஒரு சோடா கடை நடத்தி வந்தார். பின்னர் சைக்கிள் கடை, அதனையடுத்து கட்டுமான பொருள் வியாபாரம் செய்து படிப்படியாக முன்னேறினார்.

இவர் பிறந்த சிறிய கிராமத்தில் பட்டப்படிப்பு படித்தவர்கள் மிகவும் அரிது. ஆனால், இவர் பி.ஏ., பட்டம் பெற்று, பின்னர் எல்.எல்.பி.யும் படித்து முடித்துள்ளார்.

1996ஆம் ஆண்டில் முதன்முதலாக மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 2001ஆம் ஆண்டும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சியின் 9ஆவது மண்டலக் குழுத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ❖





## **கோயம்புத்தூர்** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. **ஆர்.வெங்கடாசலம்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



**கோ**யம்புத்தூர் மாநகராட்சியின்
வணக்கத்திற்குரிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு.ஆர்.வெங்கடாசலம் அவர்கள் 1941ஆம் ஆண்டு பிறந்தவர்.

ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி பின்னர், பொதுச்சேவையில் ஈடுபடும் பொருட்டு, விருப்ப ஓய்வுபெற்று முழுநேர பொதுப்பணியாற்றி வருகிறார்.

25 ஆண்டுகள் தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டு தொழிலாளர்களுக்கு தொண்டாற்றியுள்ளார். 1972ஆம் ஆண்டு சங்கனூர் பஞ்சாயத்து மன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

1996 மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

பொதுமக்களால் காலனி ஆர்.வெங்கடாசலம் என அழைக்கப்படும் இவரது மனைவியின் பெயர் வி.ரேணுகா. இவர்களுக்கு வி.கார்த்திகேயன் என்ற மகனும், ஆர்.காயத்திரி மற்றும் அனுராதா ஆகிய மகள்களும் உள்ளனர். ❖





**தி**ருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராக திருமதி. சாருபாலா ஆர்.தொண்டைமான் அவர்கள் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் புதுக்கோட்டை மன்னர் அவர்களின் மருமகளும், கவிமணி பாஸ்கர தொண்டைமான் அவர்களின் பேத்தியும் ஆவார். இவர் எம்.ஏ., எம்.ஃபில், பட்டம் பெற்றவர். தற்பொழுது Women empowerment என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்து வருகிறார். இவரது கணவர் பெயர் ராஜா ராஜகோபால தொண்டைமான். இவர் மறைந்த புதுக்கோட்டை மன்னர் ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ராஜா ராஜகோபால தொண்டைமானின் மகன் ஆவார்.

**திருச்சிராப்பள்ளி** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. **சாருபாலா ஆர்.தொண்டைமான்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

2001ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயராக வெற்றி பெற்று கடந்த 5 ஆண்டுகளாகத் திறம்பட செயலாற்றி உள்ளார்.

திருமதி. சாருபாலா ஆர். தொண்டைமான் அவர்களுக்கு பிருதிவிராஜ் தொண்டைமான் என்ற மகனும், ராதா நிரஞ்சனி தேவி என்ற மகளும் உள்ளனர். □





**திருநெல்வேலி** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. **அ.லெ.சுப்பிரமணியன்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



**தி**ருநெல்வேலி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள் (வயது 68), 7.5.1938இல் பிறந்தார். இவர் பி.எஸ்.சி.,பி.எல். பட்டம் பெற்றவர். இவரது மனைவியின் பெயர் திருமதி.க.நாச்சியார். இவர்களுக்கு ஏ.எல்.எஸ். லட்சுமணன், ஏ.எல்.எஸ்.சண்முகம் என்ற இரண்டு மகன்களும், ஏ.எல்.எஸ்.லதா, குட்டிமேகலா என்ற இரண்டு மகள்களும் உள்ளனர்.

வணக்கத்திற்குரிய மேயர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள், திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஆவார். இவரது சொந்த ஊர் சாத்தான்குளம் அருகே உள்ள புளியங்குளம் ஆகும். படிக்கும் காலத்திலேயே பொதுநலச் சேவையில் அதிக ஈடுபாடு கொண்டவர். பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றவர். 1964–ஆம் ஆண்டு பாளையங்கோட்டை நகரசபை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியிலிருந்து 1967,1989, 1996 ஆகிய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

நெல்லை கூட்டுறவு பேரங்காடித் தலைவர், பாளையங்கோட்டை நிலவள வங்கித் தலைவர், தமிழ்நாடு நிலவள வங்கி இயக்குநர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் வழக்குரைஞர் சங்கத்தலைவராகவும் பணியாற்றி உள்ளார். திருநெல்வேலி சந்திப்பு ம.தி.தா. இந்துக்கல்லூரி, இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளி செயலாளராக 14 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு உள்ளூர் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களிலும் பதவி வகித்து சேவை புரிந்துள்ளார். தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் 40 ஆவது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன்முறையாக திருநெல்வேலி மாநகராட்சி மேயராகப் பதவியேற்றுள்ளார். □





தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முக்கிய அறிவிப்புகள் (12.8.2006)

# பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை உயர்வு


திரு. தா.மோ.அன்பரசன்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்


* மண்பாண்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று இந்த அரசு, மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் என்ற தனி வாரியத்தை உருவாக்கும்.

* உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 100 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்பட்டு வரும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் அறவே ரத்து செய்யப்படுகிறது.

* கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 25 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் ஆகியவையும் அறவே ரத்து செய்யப்படுகிறது.

* தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 43 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

* கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து உள்ள பெண் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

* தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் திட்டத்தின் கீழ் செயல்படும் 17 மாவட்டங்களிலும் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பயிலும் தேவையுள்ள குழந்தைகளுக்கு இலவச பேருந்து சலுகை வழங்கப்படும்.

* சேலம், வேலூர், மற்றும் மதுரையில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக உதவியுடன் சித்த மருத்துவப் பிரிவு நடப்பு ஆண்டில் தொடங்கப்படும்.

* சென்னை, அயனாவரத்தில் உள்ள அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக உதவியுடன் யோகா பிரிவு இந்த ஆண்டே தொடங்கப்படும்.

* * *



## அறிந்துகொள்வோம் அரசாணையை

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் – அமல்படுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்2)துறை**

நாள் : 25.08.2006

அரசாணை (நிலை) எண் : 72

படிக்க :

1. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடிதம் எண். தி.வே / 23094 /2006, நாள்: 16.6.2006.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் கடிதம் எண். தி.வே./ 23094/2006, நாள் : 21.08.2006.

.........

**ஆணை :**

படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் பல்லாண்டு காலமாகக் காத்திருக்கும் இளைஞர்களின் துயரினைத் துடைக்கும் வகையில் இவ்வரசின் கொள்கை முடிவிற்கிணங்க பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் 150/– ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/– ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300/– ரூபாயும் உதவித் தொகை வழங்குவது குறித்த கருத்துரு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரிடமிருந்து பெற்று, அக்கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

2 (i) வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற தேவையான கல்வித் தகுதி மற்றும் மாதாந்திர உதவித் தொகை விவரங்கள் :–

| [illegible] | [illegible] |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி | ரூ.150/– |
| +2 / மேனிலைக் கல்வி தேர்ச்சி | ரூ.200/– |
| பட்டக்கல்வி மற்றும் முதுநிலைப் பட்டக்கல்வி (பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் நீங்கலாக) | ரூ.300/– |

(ii) வயது வரம்பு

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரைப் பொருத்த மட்டில் 45 வயது வரையிலும், ஏனையோரைப் பொருத்தமட்டில் 40 வயது வரையும் என்ற உச்ச வயது வரம்பில் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

(iii) காத்திருப்புக் காலம்

பயனாளிகள், வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேடுகளில் குறைந்தபட்சம் 5 ஆண்டு காலமாவது காத்திருக்கவேண்டும்.

**(3) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற கையாளப்படும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

i) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை அதிகபட்சமாக மூன்று ஆண்டு காலத்திற்கு அல்லது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொருத்தவரையில் 45 வயது என்ற உச்ச வயது வரையிலும் மற்றும் ஏனையோர்களைப் பொருத்தவரையில் 40 வயதை கடந்திருத்தல் இதனில் எது காலத்தால் முந்தியதோ அதுவரை உதவித்தொகை வழங்கப்படும். இனமறியப்படும் காலாண்டின் இறுதி நாளன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்புகளைக் கடந்தவராக இருத்தல் கூடாது.

ii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை ஒவ்வொரு காலாண்டும் வங்கி வரைவோலைகளாக வழங்கப்படும். பயனாளிகள் வங்கிகளில் தொடங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளின் மூலம் வங்கி வரைவோலைகளை காசாக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.

iii) பயனாளிகள் இணைப்பு –1ல் கண்ட சான்றிதழில் வருமானம் உள்ளிட்ட இதர அம்சங்கள் குறித்த ஒட்டு மொத்தச் சான்றிதழை வருவாய்த்துறையில் ஒருமுறை பெற்று சமர்ப்பிக்க வேண்டும். இதுதவிர, ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும், 'பணியில் இல்லை', என்பதற்கான சுய உறுதி மொழியை (self affidavit) அளிக்கவேண்டும்.

iv) பயனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேடுகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலமாவது காத்திருந்திருக்க வேண்டும். (ஐந்து ஆண்டு காலம் பயன்பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளன்று கணக்கீடு செய்யப்படும்) உதவித்தொகை அடுத்த காலாண்டு முதல் வழங்கப்படும். ஆனால் 31.12.2006 –வுடன் முடியும் காலாண்டிற்கான உதவித்தொகை மட்டும் இத்திட்டம் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் – 2ஆம் தேதி தொடங்கப்படும் என சுதந்திர தின விழா உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதால், 1–10–2006 முதல் 31–12–2006 வரையுள்ள காலாண்டிற்கான உதவித் தொகை மட்டும் முன்னதாகவே அதாவது 2–10–2006 ஆம் தேதி வழங்கப்படும்.

v) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொருத்தவரையில் 45 வயதையும், ஏனையோர்களைப் பொருத்தவரையில் 40 ஆண்டு வயதையும், கடந்தவராக இருத்தல் கூடாது.

vi) பயனாளி அரசுத்துறை அல்லது தனியார்துறை அல்லது எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுய வேலைவாய்ப்பிலோ ஈடுபட்டவராக இருத்தல் கூடாது. பயனாளி முற்றிலுமாக வேலை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

vii) பயனாளியின் தாய், தந்தை அல்லது கணவன் அல்லது மனைவி ஆகியோரின் மாத வருமானம் ரூ.2,000/–க்கு (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மிகாமலும் அல்லது ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்) மிகாமலும் இருத்தல் வேண்டும்.

viii) பயனாளி தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முழுவதுமாக தமிழ்நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும். அல்லது பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி குறைந்தபட்சம் 15 ஆண்டு காலம் தமிழ்நாட்டிலேயே குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்.

ix) பயனாளி அரசு அல்லது தனியார் ஆதாரங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல்கூடாது.

x) பயனாளி அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவ, மாணவியராக (Regular Student) இருத்தல் கூடாது. இந்நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழிக் கல்வி கற்கும் பயனாளிகளுக்குப் பொருந்தாது.

xi) ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு 1993–இல் நிறுத்தம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மனுதாரர்களும் இப்புதிய வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகின்ற வயது வரம்புகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

xii) பயனாளி உதவித்தொகை பெறும் காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

xiii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் இவ்வுதவித்தொகை பெற தகுதியற்றவர்கள் ஆவர்.



இணைப்பு – 1

**<u>வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற மனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் (வருமானம், வேலையில் இல்லாமை, தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர், கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது)</u>**

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறான சான்றிதழ் வருவாய்த் துறையிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்:–

1. திரு/திருமதி/செல்வி .................................................................. என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரரின் தாய்/தந்தை/கணவன்/மனைவி ஆகிய திரு/திருமதி.............................................. முகவரியில் வசித்து வருபவரின் மாத வருமானம் ரூ.2,000/–க்கு மிகாமலும் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு மிகாமலும் உள்ளது என சான்று அளிக்கப்படுகிறது.

2. திரு/திருமதி/செல்வி.............................. என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியில் இல்லை என்றும், இவர் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடவில்லை என்றும் இவர் முழுவதுமாக வேலையில்லாமலேயே இருந்து வருகிறார் என்று சான்று அளிக்கப்படுகிறது.

3. திரு/திருமதி/செல்வி.............................. என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார்துறை அல்லது இதர ஆதாரங்களின் வழி எந்தவிதமான உதவித்தொகையும் பெற்று வருபவர் அல்லர் என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

4. திரு/திருமதி/செல்வி.............................. என்ற வேலைவாய்ப்பற்ற மனுதாரர் தமிழ்நாட்டிலேயே தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முடித்தவர் அல்லது இம்மனுதாரரின் பெற்றோரில் தாய்/ தந்தை அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டிலேயே 15 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர் என்று சான்று அளிக்கப்படுகிறது.

5. திரு/திருமதி/செல்வி.............................. என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அன்றாடம் பள்ளி அல்லது கல்லூரிக்குச் சென்று வரும் மாணவர் அல்லது மாணவியர் அல்ல என்று சான்று அளிக்கப்படுகிறது.

ரமேஷ்குமார் கன்னா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//



# அண்ணல் காந்தியடிகள்

## பிறந்த நாள் விழா



அண்ணல் காந்தியடிகளின் 138ஆவது பிறந்தநாள் விழா 2.10.2006 அன்று சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தியாகச்சீலரின் பிறந்தநாளாம் இத் திருநாளில் அண்ணலின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதற்காக மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் காலை 7.50 மணிக்கு வருகை தந்தார்கள்.
மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர்.
முன்னதாக, காலை 7.40 மணியளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலையைச் சுற்றி உயரமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. காந்தி சேவா சங்கத்தினரின் நூற்புவேள்வி மற்றும் வழிபாட்டுப்பாடல் நிகழ்ச்சிகள் விழா மேடை அருகே நடைபெற்றன. சரியாக காலை 8.00 மணிக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் மேடையின் அருகில் வைக்கப்பட்டிருந்த அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணங்கினர். பின்னர் அண்ணலின் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தொட்டு வணங்கி அளித்த மாலையை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகள் மற்றும் பொன்மொழிகள் அடங்கிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை கையில்





ஏந்தியபடி பள்ளி மாணவ, மாண வியரின் சைக்கிள் பேரணி தொடங்கியது. சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடங்கி வைத்தார். அந்தப் பேரணி சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் நிறைவுற்றது.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் தொடர் நிகழ்ச்சியாக சென்னை கிண்டி, காந்தி மண்டபத்தில் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அப்பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

பூம்புகார் விற்பனைப் பிரிவு, அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம், சென்னை சர்வோதய சங்கம், ஆவின், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், பிரம்ம குமாரிகள் அமைத்திருந்த படக்காட்சி அரங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், காந்தி கல்வி நிலையம், பாரேரி மகளிர் சுய உதவிக்குழு, காட்டாங்கொளத்தூர் நேசம் மகளிர் சுயஉதவிக்குழு, உள்ளிட்ட அரங்கங்கள் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன. காலை நிகழ்ச்சியின் இறுதிகட்டமாக தகவல் தொடர்புத்துறை, இந்திய அரசு சார்பாக அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு, சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்த புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியின் மூலம் இளைய தலைமுறையினர் சுதந்திரப் போராட்ட தியாக வரலாற்றையும், அண்ணல் காந்தியடிகளின் அறப்போர் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள முடிந்தது.

அன்று மாலை 5.00 மணியளவில், கிண்டி காந்தி மண்டபத்தில், அண்ணல் காந்தியடிகளின் 138ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ–



மாணவிகளுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி, மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் விழாப்பேருரையாற்றினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகளின் தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி மற்றும் மதநல்லிணக்கம் தொடர்பான கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

நிறைவாக, செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

விழாவின் முடிவில், அண்ணல் காந்தி பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது.

# காந்தியடிகள் வாழ்வில்...



## "ஏழ்மை" யை ஏற்றவர் பரிசு வழங்கக் கூடாது

சபர்மதி ஆசிரமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் அன்னை கஸ்தூரிபாவின் அறையில் ஒரு திருடு நடந்துவிட்டது. திருடர்கள் துணிமணிகளடங்கிய இரண்டு பெட்டிகளை எடுத்துச் சென்று விட்டார்கள். அவற்றிலிருந்த துணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பெட்டிகளைப் பக்கத்திலுள்ள வயற்காட்டில் எறிந்து விட்டு சென்று விட்டார்கள்.

காந்தியடிகள் இதை அறிந்ததும் கஸ்தூரிபாவிடம், "இரண்டு பெட்டிகள் நிரம்பத் துணிகள் எப்படி சேர்ந்தன ? நீ தினுசு தினுசான துணிகளை அணிவதில்லையே!" என்று வினவினார்.

உடனே அன்னை, காந்தியடிகளிடம் தங்கள் பேத்திகளான ராமி, மனு (இருவரும் காந்தியடிகளின் மூத்த புதல்வர் ஹரிலாலின் மகள்கள்) தம் தாயை இழந்த பின் அங்கே அடிக்கடி வருவதை நினைவு படுத்தினார். "அவர்கள் இங்கே வரும்போது அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஓரிரு ஆடைகள் வேண்டுமல்லவா! இதற்காகவே சில சேலைகளையும், கதராடைகளையும் வைத்திருந்தேன்" என்று கூறினார்.

காந்தியடிகள் அதற்கும் ஒரு மறுப்புக் கூறினார். "நாம் துணிகளை சேகரித்து வைத்துக் கொள்ள முடியாது." வேண்டிய அளவுக்குத்தான் நம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும். கைவசம் அதற்கு மேல் துணிகள் இருக்குமானால் அவற்றை ஆசிரமத்தின் அலுவலகத்தில் கொடுத்து வைத்திருப்பதே சரி என்று கூறி முடித்தார்.

காந்தியடிகள் இத்துடன் திருப்தியடையவில்லை. அன்று மாலை வழிபாட்டுக் கூட்டத்தில் இவ்விஷயத்தைப் பற்றி விவாதித்தார். விவாதத்திற்கிடையே அவர் சொன்னார்: "நம்போன்றவர்கள் அளவுக்கு மேல் சேகரித்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளக்கூடாது. பெண்கள் வீட்டிற்கு வந்தால், நன்றாகச் சாப்பிடட்டும்" ஆனால் நம்மை போன்று "ஏழ்மை" நோன்பு கொண்டவர்கள் தங்கள் பெண்களுக்கு வெகுமதி அளிப்பது பொருத்தமற்றதாகும்.

## இந்த விளக்கைக் கொண்டு வந்தவர் யார் ?

சேவாக்கிராமத்தில் காந்தி ஜெயந்தி கொண்டாடப் பட்டது. மாலைப் பிரார்த்தனைக்குப்பின் காந்திஜி பேசவிருந்ததால், சுற்றுப்புறத்து கிராமங்களிலிருந்து மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

காந்திஜி சரியான நேரத்தில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்தார். எதிரில் ஒரு நெய்விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டார். அது புதிய பழக்கம். எனவே இமை கொட்டாமல் சில நிமிடங்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பிரார்த்தனையை ஆரம்பித்தார். அதில் ஆழ்ந்துபோனார்!



வழிபாட்டை முடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். சுற்றிலும் அமைதி நிலவியது. தம்முடைய பிறந்த தினத்தன்று, காந்திஜி என்ன பேசவிருக்கிறார் என்பதைக் கேட்ட அனைவரும் ஆவலாய் இருந்தனர். ஆனால் காந்திஜி திடீரென்று ஒரு கேள்வி கேட்டார். " இந்த விளக்கை யார் கொண்டு வந்தார் ?" அருகிலிருந்த அன்னை கஸ்தூரிபா, "நான் கொண்டுவந்தேன்" என பதிலளித்தார். " எங்கிருந்து கொண்டு வந்தாய் ?" என வினவினார் காந்திஜி.

"கிராமத்திலிருந்து கொண்டு வந்தேன். இன்று தங்களுடைய பிறந்த நாளல்லவா ?" என்று அன்னை கஸ்தூரிபா பதில் கூறினார்.

காந்திஜி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு கம்பீரமாகச் சொல்லலானார். "இன்று கஸ்தூரிபா நெய்விளக்கு ஏற்றியிருப்பது ஒரு தவறான செயல். என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு அது ஏற்றப்பட்டிருக்கிறது. அக்கம் பக்கத்து கிராமங்களில் வசிக்கும் மக்கள் எவ்வளவு ஏழ்மையில் வசிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். பாவம்! அவ்வேழைகளுக்கு சோளம், கேழ்வரகு ஆகிய ரொட்டிகளைச் சாப்பிடும்போது தொட்டுக்கொள்ள எண்ணெய் கூடக் கிடைப்பதில்லை. அப்படியிருக்க என்னுடைய ஆசிரமத்தில் நெய் விளக்கு ஏற்றப்பட்டிருக்கிறது. ஏழைக் குடியானவர்கட்குக் கிடைக்க மாட்டாத பொருள்களை நாம் இவ்வாறு வீணாக்குவதா ?" என்று காந்திஜி கூறிமுடித்தார். அச்சொற்களில்தான் என்ன துயரம்!

## குழந்தைகளைப் போலக் கற்பனை செய்யக்கூடாது

சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு தடவை காந்திஜி 'கராடி' என்ற ஊரில் தங்கியிருந்தார். ஒருநாள் கிராம மக்களின் கூட்டம் ஒன்று ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தார் காந்திஜி. ஊர்வலத்தின் முன்னிலையில் பெண்கள் தேசியக் கொடியை ஏந்தியிருந்தனர். கொட்டும் முழங்கிக்கொண்டிருந்தது. "இவர்கள் சத்தியாகிரகம் செய்யப் போகிறார்களா ? அப்படியென்றால் ஆண்களின் கைகளில் பழங்கள் பூக்கள் முதலியன ஏன் ?" என்று காந்திஜி சிந்திக்கலானார்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே வெளியே வந்த போது கூட்டத்தினர் "வாழ்க" "வாழ்க" என்று கோஷமிட்டுக் கொண்டு வந்து அவரை வணங்கி நின்றனர். மேலும் தாங்கள் கொண்டுவந்த வெகுமதிகளை மலரடிகளில் சமர்ப்பித்தார்கள்.

"நீங்கள் வந்த நோக்கம் என்ன ? இந்த மேளக்கொட்டு ஏன் ?" என்று காந்திஜி அவர்களைக் கேட்டார்.

ஊர்வலத்தின் முன் வந்த தலைவர், காந்திஜியிடம் "மகாத்மாஜி, எங்கள் கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சம் எப்போதும் இருந்து வந்தது. கோடைக்காலமும் வந்து விட்டது. கிணறுகள் வற்றிப்போய் விட்டன. ஆனால் நீங்கள் இங்கே வந்ததும் நிலைமை முற்றும் மாறிவிட்டது. இக்கிராமத்தில் தங்கள் திருவடிகள் பட்டதும் கிணறுகளில் தண்ணீர் பெருகி வந்து விட்டது. எனவே, எங்கள் நன்றியைத் தெரிவிக்கவே இந்தப் பரிசுகளைக் கொண்டுவந்துள்ளோம்" என்று மிக்க பணிவன்புடன் கூறினார்.

காந்திஜி சற்றுக் கடுமையான குரலில் "நீங்கள் என்ன பைத்தியக்காரர்களா ? என் வருகைக்கும் இந்த தண்ணீருக்கும் என்ன தொடர்பு ? கடவுளை நான் பணிக்க முடியுமா ? ஆண்டவனிடம் உங்கள் குரலுக்கும் என் குரலுக்கும் ஒரே மதிப்புத்தான் என்பதை அறியமாட்டீர்களா ?" என்று வினவினார்.

கிராம மக்கள் இதைக்கேட்டுத் தலை குனிந்தனர். காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார், "நண்பர்களே! ஒரு மரத்தின் மேல் ஒரு காகம் உட்கார்ந்த நேரத்தில், தற்செயலாக அம்மரத்தின் கிளையொன்று முறிந்து விட்டால், அதற்குக் காரணம் அக்காகமே என்று நீங்கள் சொல்வீர்களா ? உங்கள் கிராமக் கிணறுகளில் தண்ணீர் பெருகுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒருக்கால் பூமிக்கடியில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கலாம்! அதனால் புது ஊற்றுக் கிளம்பியிருக்கலாம்! நீங்கள் இவ்வாறு குழந்தைகளைப் போன்று கற்பனை செய்யக் கூடாது. சரி, நீங்கள் எல்லோரும் இராட்டையினால் நூல் நூற்க வேண்டும். பாரத அன்னைக்கு நிறைய ஆடை தேவை," என்று உழைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

*(காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம் 6) நூலிலிருந்து)*

* * *







# மரங்களின் கதை

**பாவண்ணன்**

ஹம்பி எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்தபோது சந்தித்த நபரின் முகம் ஞாபகத்தில் இல்லை. ஆனால் அவர்தான் எனக்கு இக்கதையைச் சொன்னார். சுவாரஸ்யமாகவும், தெளிவான குரலிலும் அக்கதையை விவரித்தார் அவர். சதாகாலமும் என்னை அரிக்கும் குழப்பம் எதுவும் அவரிடம் இல்லை. மரங்களைப் பற்றித்தான் அவர்க்கு எத்தனை ஞானம். எத்தனை அனுபவம். எத்தனை வருசங்கள் பாடுபட்டுச் சேகரித்த அனுபவமோ, அவரது ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு முத்துக்குச் சமம். அவர் சொன்ன கதையின் பிரமிப்பு என்னைவிட்டுச் சற்றும் அகலவில்லை. முதன்முதலில் அந்தக் கதையை என் மனைவியிடம்தான் பிரஸ்தாபித்தேன். அவளோ சிரித்துவிட்டாள். நம்பிக்கையற்ற அவள் பார்வை என்னை நிலைகுலைய வைத்தது. அன்றைய தேதியில் நான் எங்கும் பிரயாணமே செய்யவில்லை என்றும் யாரையும் சந்திக்கவே இல்லை என்றும், ஆணித்தரமாய்ச் சொன்னாள். அவள் சொன்ன பிறகு நம்பத்தான் வேண்டியிருந்தது. நீங்கள் வேண்டுமானால் சந்தேகிக்க இடமுண்டு என்ற வகையில் இதை எடுத்துக் கொள்ளலாம்.

சந்தேகம் என்று வந்துவிட்ட பிறகு இன்னொரு விசயத்தையும் சொல்லிவிடுகிறேன். முழுக்க முழுக்க அவர் பேசியது மரங்களைப் பற்றித்தான் என்றாலும் நிசமாகவே அவை மரங்களைத்தான் குறிக்கிறதா அல்லது வேறு ஏதேனும் உள் அர்த்தம் உண்டா என்று தெரியவில்லை. ஒரே ஒரு வார்த்தை நான் அவரிடம் அன்று கேட்டிருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது. ஏனோ அன்றைய தினத்தின் அளவு கடந்த பிரமிப்பு என்னை உறையவைத்து என் நாக்கையும் கட்டிவிட்டது. எல்லாம் முட்டாள் தனம்தான். ஆகவே மரமா அல்லது வேறா என்கிற கேள்விக்கு நீங்களே பதிலை முடிவு செய்து கொள்ளலாம். போடா, நீயும் உன் கதையும் என்று உதறியும் செல்லலாம். பூரண சுதந்திரம் உண்டு.

ஓடும் ரயிலில் சன்னலோர இருக்கை கிடைப்பது போன்ற அதிர்ஷ்டம் வேறெதுவும் இல்லை. நகரும் புகைப்படங்கள் போல காட்சிகள் மடமடவென்று மாறும் அற்புதத்தைக்காண கோடிக்கண்கள் வேண்டும். அன்றும் அப்படித்தான் வேடிக்கை பார்த்தபடி இருந்தேன். சுற்றிலும் நிறைய மரங்கள் உயர்ந்தவை. தாழ்ந்தவை. உலர்ந்தவை. பட்டுப் போனவை. கிளைகள் முறிந்தவை. வளைந்து சாயந்தவை. பச்சையோடும்; பச்சையைப் பறிகொடுத்தும் நிறைய மரங்களைக் காணும் போது என் மனத்தில் உருவான உணர்ச்சிகளைச் சொல்ல முடியாது! அப்போதுதான் அவர் என்னைக் கவனித்திருக்க வேண்டும். என்னைத் தொட்டு 'மரங்களைப் பார்க்கிறீர்களா?' என்றார்.

எதிர் இருக்கைக்காரர் அவர். என் பார்வையை அவர் பக்கம் திருப்பினேன். அவர் கண்கள் என்னை ஈர்த்தன. அவர் வார்த்தைகளைக் கேட்க வேண்டும் போல ஒரு உந்துதல். என் செவிகளையும் மனசையும் முழுக்க முழுக்க அவர் வசம் ஒப்படைத்தேன். அவர் பார்வையிலும், பேச்சிலும் ஏதோ ஒரு மயக்கம் உண்டாக்கும் சக்தி இருந்தது. ஒரு வினாடி பார்வையிலேயே கூட கட்டுப்பட வைக்கிற பேராற்றல். மரங்களைப் பற்றி மெல்ல பேச ஆரம்பித்தார்.

மரங்கள் இந்த உலகைச் செழுமையாகவும், பசுமையாகவும் வைத்திருக்கும் சக்தி. மரமே சக்தியின் அடையாளம். தன்னலம் கருதாதவை மரங்கள். அவை கொடுக்கும் நிழல்கள் தாய்மையுள்ளம் கொண்டவை. நிழலின் அடைக்கலத்தில் எத்தனையோ கோடி உயிர்கள் இளைப்பாறுகின்றன. அவை வழங்கும் காய்களும், கனிகளும் பிரதிபலன் எதிர்பார்க்காதவை. காலத்தின் கழிப்பில் ஒரு கட்டத்தில் இலைகள் இழந்து வெறுமையில் ஆழ்ந்தாலும் தளராமல் நிமிர்ந்து நிற்கும் அவை. காலத்தையே மீண்டும் பசுமையைக் கொண்டு வந்து போர்த்தச் செய்துவிடும் ஆற்றல் கொண்டவை. மரம் ஒரு தெய்வம், மரம் ஒரு ஆலயம்.

இதையெல்லாம் கேட்கக் கேட்க யார்க்குத்தான் ஆச்சரியமாய் இருக்காது. நானோ சொக்கிவிட்டேன். அதுவரையிலும் மரம் என்றால் நிழல் கொடுக்கும் படைப்பு என்பதுதான் என் மனசில் இருந்த பிம்பம். அதை உடனடியாய் விஸ்தரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. வானிலிருந்து சிறகுகள் அசைய வந்து உட்கார்ந்த தேவதைகள் போல இருந்தன மரங்கள். காற்றின் வேகத்தில் சிலிர்த்தன அவை.



மீண்டும் அவர் பேச ஆரம்பித்தார்.

மரங்கள் எல்லாமே ஒன்றுதான். அவற்றில் மையமாகப் பொதிந்திருக்கும் சக்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் கண்ணுக்குப் புலப்படாத அந்த சக்தியைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள் ? கண்ணுக்குத் தெரியும் உருவங்கள்தானே மதிப்பிடப் படுகின்றன. மரங்கள் வித்தியாசப்படுகின்றன. இன ரீதியாக வகைப்படுத்தப்படுகின்றன. இலைகளின் வடிவம், பூக்கள், காய்கள், தண்டு அமைப்பு எல்லா உறுப்புகள் ரீதியாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. வகைப்படுத்தப்பட்ட மரங்களிலும் கூட ஏற்ற இரக்கம். இந்த தோப்பு மரங்கள் உயர்வு. இந்த தோப்பு மரங்கள் தாழ்வு. அதிலேயே தோப்பில் சேராத சின்னச்சின்ன மரங்கள் தனி மரங்கள். பகுப்புகள். பகுப்புகள். பகுப்புகள். மரங்களின் ஆற்றல் மலினப் படுவதே இந்தப் பகுப்பால் தான். நஷ்டங்களை ஏனோ மரங்கள் உணர்வதில்லை. சுவாசிக்கக் காற்றும், நிற்க மண்ணும் இருக்கிற ஆறுதலில் எந்த நஷ்டமும் பொருட்படுத்தத்தகாததாக ஆகி விடுகிறது. வாய்த் தகராறுகளையும், அடிதடிகளையும் கூட பொருட் படுத்தாத நினைக்காத அளவுக்கு அது போய்விடுகிறது.

மரங்களை வளர்ப்பதே பெரிய கலை என்றார் அவர். சில மரங்களை விதையிலிருந்தே வளர்க்க வேண்டும். உதாரணத்திற்கு புளிய மரங்கள். இன்னும் சில மரங்களுக்கோ விதைகள் தேவையில்லை, சின்ன கிளைகள் போதும், உதாரணத்திற்கு முருங்கை மரம். முதலில் இந்த வித்தியாசத்தை அறிய வேண்டும். விதை வைக்க வேண்டிய மரத்தை கிளையிலிருந்தோ, கிளை வைக்க வேண்டிய மரத்தை விதையிலிருந்தோ உருவாக்கிவிட முடியாது என்று திட்டவட்டமாய்ச் சொன்னார். இதுவே மரம் வளர்ப்பில் பாலபாடம் என்றார். இது தெரியாமல் பாலம் விரயம் செய்தவர்கள் ஏராளம் என்று சரித்திரத்தை உதாரணம் காட்டினார்.

சில விசயங்களுக்குச் சொந்த புத்தி வேண்டும். சில விசயங்களுக்குச் சொல்புத்தி வேண்டும். இரண்டும் இல்லாதவர்களால் ஒரு காரியமும் ஒரு போதும் ஆனதில்லை என்றார். விதையோ, கிளையோ நடும் முன்பு முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டிய விசயங்கள் வெளிச்சமும்,



ஈரமும். இரண்டுமற்ற இடத்தில் விதைத்துவிட்டு விளைச்சலை எதிர்பார்ப்பது அடிமுட்டாள்தனம் என்றார். இன்னொரு விசயம் இடைவெளி. ஒவ்வொரு விதையும் சரியான இடைவெளியில் நடப்பட வேண்டும். வளர்ந்த மரம் தன் முழு ஆகிருதியையும் காட்டிக் கொண்டு எழுந்து நிற்கிற அளவு இடம் வேண்டும். சுதந்திரமாக எங்கும் திரும்பவும்; வளையவும், நெளியவும் தக்க இடம் வேண்டும். அப்போதுதான் அதன் பயனை நாமும் முழுசாக அனுபவிக்க இயலும். அதை நெருக்கடியில் தவிக்க வைத்துவிட்டு பலனை எதிர்பார்த்தால் பூச்சியம்தான் கிடைக்கும். இதெல்லாம் மரவளர்ப்பில் அடிப்படையான விசயங்கள் என்றார். 'எல்லாம் தெரியும்' என்று இவ்விஷயத்தில் அசமந்தமாய் இருப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள்.

விதையையோ, கன்றையோ ஊன்றும் முன்பு செய்ய வேண்டிய முக்கிய விசயம் பூசை. கொத்தி சீராக்கப்பட்ட இடத்தை வணங்க வேண்டும். 'ஆளாகி நின்று எங்களைக் காப்பாற்று' என்று தொட்டுக் கும்பிட வேண்டும். அப்புறம்தான் நட வேண்டும். ஒருவர் நட்டக் கன்றுகளைக் காப்பாற்றுவது அவர் கடமை. ஒருகாலும் இன்னொருவர் தீண்ட இடம் தரலாகாது. காற்று, மழை,வெள்ளம், ஆடு, மாடு, திருடன் என்று எத்தனை எத்தனை தொந்திரவுகள் எல்லாவற்றிலிருந்தும் கண்ணைப்போல காப்பாற்றி வரவேண்டும். 'என்னுடையது' என்று ஒரு அபிமானம் மனசில் விழவேண்டும். நம்மைக் கண்டதும் வளைந்து நெளிந்து அது தலையசைக்கிற அளவுக்கு மரங்களுடன் பரிச்சயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முடியும் போதெல்லாம் வளரும் மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி எரு, உரம் வைக்க வேண்டும். பூச்சிகள் அரிக்க விட்டுவிடக்கூடாது. அதுதான் அக்கறையின் அடையாளம். கவனமுடன் இருக்கவேண்டும் என்றார். இதில் தயக்கம் காட்டவே கூடாது என்று திட்டவட்டமாய்ச் சொன்னார். இந்த வழங்குதல்தான் மரங்களுக்கும், ஒருவர்க்கும் நல்ல உறவை ஸ்தாபிக்க வைக்கும் என்றார். ஏதாவது ஒரு காலத்தில் யாருக்கும் உரிமை என்கிற பிரச்சினை வரும்போது இந்த 'உறவுதான் கொடுத்து உதவும்' என்றார். ஒரு மரம் வளர்ப்பவனுக்கு பல நிலைகளில் தூர ஆலோசனைகள் தேவை என்று சொன்னார்.

கனி தரும் மரங்கள் எனில் பூவும், பிஞ்சுமாய் பெருகி நிற்கிற காலத்தில் இருந்தே எச்சரிக்கை கொள்ள வேண்டும். இருபத்துநான்கு மணி நேரமும் அதன் மேலேயே கண்வைத்திருக்கவேண்டும். வேலிகளைப் புதுப்பிக்க வேண்டும். காவலைப் பலப்படுத்தவேண்டும். கனியும் காலத்தில் விழிப்புணர்வு தேவை. அடுத்தவர் உழைப்பைத் தட்டிச் செல்லும் ஆள்கள் நிறைந்த காலமாயிற்றே. எந்த நேரத்தில் எது நடக்கும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு கனியும் பாடுபட்டவனையே சேர வேண்டும்.

மரம் வளர்ப்பவனின் இன்னொரு சிக்கல் தினந்தோறும் அதனடியில் குவியும் சருகுகளைப் பெருக்கி வாருவதும் கூடு கட்ட வரும் பறவையினங்களின் கூச்சலை ரசிக்கிற மாதிரி வேஷத்தோடு சகித்துக் கொள்வதும்தான். உள்ளுக்குள் கசப்பு. வெளியே ரசனைத் தோற்றம். இரண்டையும் சாமர்த்தியமாய்ச் செய்ய வல்லவனையே மரங்களின் பலன் சாரும் என்றார். அவனது முழுத் திறமையும் இந்த மாறு வேஷத்தில்தான் வெளிப்பட வேண்டும் என்றார்.

பொய்யோ, மெய்யோ சத்தியங்களுக்கு அஞ்சக் கூடாது என்பது இன்னொரு விஷயம் என்று குறிப்பிட்டார் அவர். இதோ கனி பழுத்துவிடும் என்று சத்தியம் செய். யார் வந்து கேட்டாலும் இந்த சத்தியத்தை திரும்பத் திரும்பச் செய்யவேண்டும். தேவையெனில் வார்த்தைகளை மாற்றி மாற்றி சத்தியம் செய்ய வேண்டும். நம்பும்படியாய் சத்தியம் செய்பவனே நல்ல பலனை அடையமுடியும். "பொய் சத்தியம் தப்பில்லையோ" என்று நடுவில் இடைமறித்தேன். லௌகிக நோக்கில் தப்பாக இருக்கலாம். ஆன்மீக ரீதியில் யோசித்தால் இது சரியாகும் என்றார். "எப்படி" என்றேன். எதிராளி ஒருவன் தினந்தோறும் இது காய்க்காது, இது பயனற்றது, இது வீண் என்று முன்னால் நின்று



சொல்லிக் கொண்டு இருக்கும் நிலையை எப்படி எதிர்கொள்வது. சுய நம்பிக்கையை விடாமல் இருக்கவும், சுற்றி இருக்கிறவர்களை நம்ப வைக்கவும் அவன் போராட வேண்டி இருக்கிறது. அவனுக்குத் தெரியாதா, கனிதர நாளாகும் என்று, ஆனால் ஒரு நம்பிக்கையின் பொருட்டு ஆவேசமான சத்தியம் அவசியமாகிறது என்றார். விவாதிக்கும் அவர் திறமையில் நான் நெகிழ்ந்து உட்கார்ந்திருந்தேன்.

மரம்வளர்க்கிறவனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய இன்னொரு முக்கிய கலை மரம் வெட்டுதல் என்றார். நான் திகைத்துவிட்டேன். அவரோ எந்த உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் இருந்தார். "அழிக்கத் தெரிந்தவனுக்குத்தான் வளர்க்கவும் முடியும்'' என்று மீண்டும் அடித்துச் சொன்னார். சமயங்களில் ஒரு தோப்பு மரம் தோப்புக்குரியவனின் சகல கட்டுப் பாடுகளையும் மீறி அடுத்த தோப்புக்களுக்கு பயன் கொடுத்துவிடும். இப்படி ஒரு கோணல் புத்தி மரத்தை எப்படிச் சகித்துக் கொள்வது? அப்புறம் தோப்புக்கு வெளியே சில ஒற்றை மரங்கள் இருக்கும். அது செய்யும் அட்டகாசங்கள் அளவு கடந்தவை. தன் கிளைகளைத் தோப்புக்குள் நீட்டி மற்ற மரங்களின் வளர்ச்சியைக் கெடுக்கும். இதற்கு எப்படி இடங்கொடுப்பான் ஒரு உரிமையாளன். அழிப்பது தவிர வேறு வழியில்லை. அவையோ தந்திரமோ, செயல் நுணுக்கமும் வேண்டும். காரியங்கள் மெல்ல மெல்ல ஒரு கதையை அவிழ்த்துவிடு. ஏதேனும் ஒரு புரளியினால் முதலில் அந்த பிம்பத்தினை உடை. யார் ஆதரவு கொடுக்கிறார்களோ; அவர்கள் கையாலேயே அழியுமாறு தந்திரங்களை உபயோகி அழியும்போது அழிவுக்காக எல்லாரோடும் சேர்ந்து பொய்க் கண்ணீர் வடித்துக் கதறுவதுதான் தந்திரத்தின் உச்சக்கட்டம் என்றார்.

அடுத்த ஸ்டேஷன் நெருங்கிக் கொண்டிருந்தது. அவர் பெட்டிகளை எடுத்து வெளியே வைத்தார். சாய்மானத்துக்கு உதவியாய் இருந்த தலையணையிலிருந்து காற்றைத் திறந்து வெளியேற்றிவிட்டு கச்சிதமாய் மடித்துப் பெட்டிக்குள் அடுக்கினார். அவர் இன்னும் பேச மாட்டாரா என்று நான் வெகு ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்திருந்தேன். ஸ்டேஷன் நெருங்குவதற்குள் மரத்தின் ரகசியங்களை எல்லாம் அவரிடம் இருந்து அறிந்து கொள்ள வேண்டும் என்கிற கட்டுக் கடங்காத ஆவல் என்னை இயக்கியது. வண்டியின் வேகம் நிதான கதியை அடைந்தபோது வெளியே தலைகள் தென்படத் தொடங்கின. புறப்படத் தயாராய் எழுந்து நின்ற அவர் கடைசி முறையாய் என்னைப் பார்த்து "யார் வேண்டுமானாலும் மரம் வளர்க்கலாம். நீ, நான்; இந்த உலகத்தில் பிறந்த எல்லார்க்கும் மரம் வளர்க்கிற உரிமை இருக்கிறது. ஆனால் எல்லார் கையிலும் மரம் வளர்ந்துவிடாது தெரியுமா. மரத்துக்கும் ஒருவனிடமும் வளர இஷ்டம் வேண்டும். வளர்க்கிறவனும் பிரியப்பட்டு, மரமும் இஷ்டப்பட்டால்தான் வளரும். அதுதான் தோப்பாகும். பலன் கொடுக்கும். மற்றதெல்லாம் சும்மா வீண் வேலை புரிந்ததா'' என்றார்.

உறைந்து போன நிலையில் அவர் போகும் திசையையே பார்த்தபடி இருந்தேன் நான் வண்டி மீண்டும் புறப்பட்டுவிட்டது.

*(சாகித்ய அக்காதெமி வெளியிட்ட "நவீன தமிழ்ச் சிறுகதைகள்" நூலிலிருந்து)*

*





# 500 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு விழா



**திரு. கே.ஆர்.பெரியகருப்பன்**
**மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்**

- பழனிமலை அடிவாரத்திலிருந்து மலைமேல் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல தற்போது உள்ள ஒரு கம்பிவட ஊர்தி திருவிழாக்காலங்களில் போதுமானதாக இல்லாததால் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேர்கிறது. இதனைத் தவிர்க்க மேலும் ஒரு கம்பிவட ஊர்தி ரூ. 6 கோடி செலவில் அமைக்கப்படும்.
- மலை மீது அமைந்துள்ள சோளிங்கர் அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் சென்றுவர மலை அடிவாரத்திலிருந்து சுமார் ரூ. 5 கோடி செலவில் கம்பிவட ஊர்தி அமைக்கப்படும்.
- சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குப் பெருந்திரளாக பக்தர்கள் வருவதைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.
- திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்க 1996–2001 ஆம் ஆண்டுகளில் தமிழில் போற்றி நூல்கள் இத்துறையால் அச்சிடப்பட்டு அர்ச்சகர்களின் பயன்பாட்டுக்காக இலவசமாக வழங்கப் பட்டன. அப்போற்றி நூல்களை மீண்டும் அச்சிட்டு அனைத்து திருக்கோயில் களுக்கும்,திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிருவாகத்தால் கம்பி வட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.
- திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அம்மன் தேர் இன்றி சப்பரத்தில் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் திருத்தேர் புதியதாக செய்யப்படும்.
- ஒருகால பூசை கூட செய்ய இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடைபெறுவதற்கு உதவும் வகையில் "ஒரு காலபூசைத் திட்டம்" செயல் பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 10,447 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன. இந்த நிதியாண்டில் மேலும் 500 திருக்கோயில்களில் ஒரு கால பூசைத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- எதிர் வரும் 2007–ஆம் ஆண்டில் 500 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

* * *

# மாநில, மாவட்ட, ஒன்றிய அளவில் ஊரக விளையாட்டுப் போட்டிகள்



திரு. **டி.பி.எம்.மைதீன்கான்**
மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்

- மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் ஊரக விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயற்கை இழை ஓடுகளம் புதுப்பிக்கப்படும்.
- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, இளைஞர்களிடம் பன்முகத் திறன்களை வளர்க்கும் வகையில் இளைஞர் நலக் கொள்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி விரைவில் வெளியிடப்படும். □



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 24.10.2006 அன்று சென்னையில், சென்னை மாநகர காவல் துறை பணிகளுக்காக வழங்கப்பட்ட யுண்டாய் நிறுவனத்தின் கார்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி இ.ஆ.ப., மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.





# இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்க கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள்



திரு. என். செல்வராஜ்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

### காட்டாமணக்கு வளர்ப்பு

2006–07ஆம் ஆண்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் பயோ டீசல் பயன்பாட்டை ஊக்குவிக்க, வனத்துறையில் உள்ள 26 வளர்ச்சி முகமை மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க 3.50 கோடி காட்டாமணக்குச் செடிகள் ரூ.10.50 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

### தேசிய புயல் இடர்ப்பாடு தடுப்புத் திட்டம்

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் உள்ள மக்கள் மற்றும் அவர் தம் உடைமைகளையும் இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் சுனாமியிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு உலக வங்கி உதவியுடன் 2006–07ஆம் ஆண்டில் ரூ.10.74 கோடி மதிப்பீட்டில் 2,000 எக்டேர் பரப்பில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் 700 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக்காடுகள் உருவாக்கப்பட்டு மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### வன உயிரினங்களால் ஏற்படும் இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குதல்

யானை, புலி, சிறுத்தை, காட்டு மாடு, மான், காட்டுப் பன்றி போன்ற வன உயிரினங்களால் ஏற்படும் உடைமை மற்றும் பயிர் இழப்புகளுக்கு ஆளாகும் மக்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை உடனுக்குடன் வழங்க புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

### உணவுப் பொருள் வழங்கல்

வனத்துறை களப்பணியாளர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டுவரும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விரிவுபடுத்தப்பட்டு வனத்துறை வாகன ஓட்டுனர்களுக்கும் வழங்கப்படும்.

### தமிழ்நாடு தேயிலைத் தோட்ட தற்காலிக தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் 3 தோட்ட மருத்துவமனைகளும், 8 மருந்தகங்களும் உள்ளன. மேற்படி மருத்துவமனைகளில் இக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வரும் முழுமையான மருத்துவ வசதி தற்காலிக தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ✦

# மதுரையில் நெசவுப்பூங்கா



திரு. என்கேகே.பி.ராஜா
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

- ★ முத்தமிழறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பணியிடச் சூழ்நிலைகளை மேப்படுத்தவும் 5,000 தறிக் கூடங்கள் மற்றும் 100 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டித்தர அனுமதி வழங்கியுள்ளார்கள்.
- ★ அமைப்புசாரா கைத்தறி நெசவாளர் களுக்கும், நல்வாழ்வுத் திட்டத்தின் பயன்கள் சென்றடையும் வகையில் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் 75 ஆயிரம் நெசவாளர்களும், நல்வாழ்வு காப்பீடுத் திட்டத்தின் கீழ் 70 ஆயிரம் நெசவாளர்களும், கூடுதலாக சேர்க்கப் படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ★ வாடிக்கையாளர்களின் விருப்பத்திற் கேற்பவும், விற்பனையை மேம்படுத்தவும் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் துணையுடன் 25 இலட்சம் ரூபாய் செலவில் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு அளிக்கப்படும்.
- ★ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, மத்திய அரசோடு இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று நெசவுப் பூங்காக்களில் ஈரோடு மற்றும் குமார பாளையம் ஆகிய பகுதிகளில் இரண்டு பூங்காக்கள் அமைக்கப் படுகின்றன. மூன்றாவது நெசவுப் பூங்கா மதுரையில் விரைவில் அமைக்கப்படும்.
- ★ எல்லா தரப்பு மக்களிடமும் கோ–ஆப்டெக்ஸ் பொருட்கள் சென்றடைய ஏதுவாக சுயஉதவிக் குழுக்களின் சேவையைப் பயன் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, மத்திய அரசோடு இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று நெசவுப் பூங்காக்களில் ஈரோடு, மற்றும் குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் இரண்டு பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. மூன்றாவது நெசவுப் பூங்கா மதுரையில் விரைவில் அமைக்கப்படும்.**





# வெல்லம், நாட்டுச்சர்க்கரை, சாம்பிராணி உள்ளிட்ட பொருட்களுக்கு வரிவிலக்கு



திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று, 22–7–2006 முதல், வரிவிலக்கு அளிக்கப்பட்ட பருப்பு மற்றும் பயறு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும், வறுகடலைக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.
- உள்மாநிலத்தில் விற்கப்படும் வெல்லம் மற்றும் நாட்டுச் சர்க்கரைக்கு தற்போது 4 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த கோரிக்கையை, அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இதற்கு 2002ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில் இருந்தது போலவே வரிவிலக்கு அளிக்கப்படும்.
- 22–7–2006 முதல் சாம்பிராணிக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இச்சலுகை மாத்திரை வடிவிலும், குச்சி வடிவிலும் உள்ள சாம்பிராணிக்கு அளிக்கப்படும்.
- 22–7–2006க்கு முற்பட்ட காலத்திற்கு மத்திய விற்பனை வரி அல்லது மாநில கொள்முதல் வரி, இதில் ஏதாவது வரி கட்டினால் போதும் என்று ஆணை வழங்கப்படும். கழிவுத்தாளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கூடுதலாக பழைய காலி பாட்டில்களுக்கும் வழங்கப்படும்.
- உள்மாநிலத்திலும், வெளிமாநிலத்திலும் விற்கப்படும் நீராடும் தேங்காய் மீதான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- தற்போது சாதாரண மக்கள் பயன்படுத்தும் ரூபாய் 200க்கும் கீழ் மதிப்புள்ள காலணிகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.
- பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் மீதான வரி 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறே முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.
- மாநிலத்தின் உற்பத்திப் பொருட்களுக்காகத் தேவைப்படும் மூலப்பொருட்கள் மீதான நுழைவு வரியினை உற்பத்திப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரிகளிலிருந்து முழுமையாக கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படும். இதனால் மாநிலத்தின் உற்பத்தியாளர்களின் இடப்பாடுகள் களையப்படும். இதற்கான அரசு அறிவிக்கை விரைவில் வெளியிடப்படும்.
- டீ செர்வ் (Tea serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகவும், கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்.
- சிட்டா நூலுக்கு முழு வரிவிலக்களிக்கப்படும்.
- தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் உரிமம் அளிக்கப்பட்ட மென்பொருட்களுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.
- சாம்பிராணிக்கு மீண்டும் விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.
- தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களிக்கப்படும். ★



திரு. வெள்ளக்கோவில்
மு.பெ.சாமிநாதன்
மாண்புமிகு நெடுஞ்சாலை
மற்றும்
துறைமுகங்கள் துறை
அமைச்சர்

# புதிய சாலைகள்-பாலங்கள் அமைக்க அரசு ஒப்புதல்

## தொகுப்பு முறை ஒப்பந்தம் ஒழிப்பு

கடந்த அரசு எடுத்த முடிவினை மாற்றி தொகுப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதை ரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இனி நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு சாலை மற்றும் பாலப்பணிகள் தனித்தனிப் பணிகளாக ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தப்படும். இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசு ஆணை இன்று வெளியிடப் படுகிறது.

## மாநிலச் சாலைகளை அகலப்படுத்துதல்

அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் (SH) இருவழித்தடங்களாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி அகலப்படுத்தும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். இதில் நடப்பாண்டில் 10 சாலைகள் இருவழித் தடங்களாகமாற்றப்பட்டு மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## நபார்டு நிதி உதவித்திட்டம் – புதிய பணிகள்

நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்பிற்கு மேலுள்ள 22 பெரிய பாலங்களும் ரூ.1 கோடி மதிப்பிற்கும் குறைந்த 251 பாலங்களும் மற்றும் 1,376 கி.மீ. நீள சாலைகளை ரூ. 251 கோடி மதிப்பில் மேற்கொள்ள இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிற்கு மேலுள்ள பின்வரும் 28 பெரிய பாலங்களையும் அறிவிப்பின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி ரூ.1 கோடி மதிப்பிற்குக் குறைந்த 108 பாலங்களை கட்டுவதற்கும் 1,041 கி.மீ. நீளசாலைகளை மேம்பாடு செய்ய இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துரு ரூ.297 கோடிக்கு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. அவ்வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது தவிர, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஊரக வளர்ச்சித் துறைக்கு தனியே ரூ.103 கோடி நிதியையும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## இரயில்வே மேம்பாலப் பணிகள்

நடப்பாண்டில் 12 மாவட்டங்களில் ரூ. 395 கோடி மதிப்பில் 22 புதிய இரயில்வே மேம்பாலங்களும் ஒரு புதிய கீழ்பாலமும் சேர்த்து மொத்தம் 23 பணிகளை இரயில்வே துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் விபத்து நேரக்கூடிய பகுதிகள் என கண்டறியப்பட்ட சுமார் 300 இடங்களில் முதற்கட்டமாக 50 இடங்களில் ரூ.38 கோடி மதிப்பில் விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ♦





# ஊனமுற்றோரை திருமணம் செய்யும் ஊனமில்லாதவருக்கு திருமண உதவித்தொகை உயர்த்தப்படும்



டாக்டர். திருமதி. பூங்கோதை ஆலடி அருணா
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

- பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தாயாரின் நினைவாக 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்' என 2000ஆம் ஆண்டில் பெயர் சூட்டிய பெருமை நமது முதல்வர் அவர்களையே சாரும். ஆனால், முந்தைய அரசாங்கத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் மேல் என்ன வருத்தமோ, வெறுப்போ தெரியவில்லை. அந்தக் கர்மவீரரின் நூற்றாண்டு விழாவைக்கூட சிறப்பாகக் கொண்டாடவில்லை. மேலும், சிவகாமி அம்மையாரின் பெயரையும் அகற்றி 'பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செய்தது. தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெருந்தலைவரின் அன்னையின் நினைவாக, இவ்வரசு, மீண்டும் இத்திட்டத்திற்கு 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என பெயர் சூட்டி செயல்பட வழிவகை செய்யும்.
- செவித்திறன் குறைபாட்டை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, பேசுவதற்குப் பயிற்சி அளித்து, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் 30 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருவாரூர், சேலம், கன்னியாகுமரி, திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், தலா ஒரு மையம் நிறுவப்படும்.
- இந்தியாவில் முதன்முறையாக சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைந்தோர் பயன்பெறும் வகையில் B.Com, BCA பட்டப்படிப்பு தொடங்க ஆவன செய்யப்படும்.
- ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை, 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் 39 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 39 இலட்சம் ரூபாய் சேர்த்து மொத்தம் 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- தமிழ்நாட்டில், 40 சதவிகித காது கேளாமைக்கு முக்கியக் காரணம் ரூபல்லா என்னும் கொடிய வைரஸ் கிருமிதான். இதை எதிர்காலத்தில் தடுப்பதற்காக, 15 வயது வளர் இளம் பெண்களுக்கு, ஒரே ஒரு முறை, 25 ரூபாய் மதிப்புள்ள ரூபல்லா தடுப்பு ஊசியினை செலுத்தி, இக்கிருமியினால் ஏற்படும் அனைத்து ஊனங்களையும் அறவே தடுத்திடலாம். இதற்கென, ஆண்டுதோறும் 15 வயதுள்ள பெண்களுக்கு ரூபல்லா தடுப்பூசி போடுவதற்கான திட்டம் செயல்படுத்தப் படும்.
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களில் காலியாக உள்ள 10,028 பணியிடங்களுக்கு புதிய பணியாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

♦ ♦ ♦

# அறிந்துகொள்வோம் அரசாணையை

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

சமூகநலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ. 200லிருந்து ரூ.500 ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந 4)துறை**

அரசாணை (ப) எண் : 160

நாள் : 11.09.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 491, பிற்படுத்தப்பட்டோர் நலம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள். 24.5.1989.
2. அரசாணை (நிலை) எண். 121, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள். 14.3.1990.
3. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண். 3004/ஊம2.1/06. நாள். 16.6.2006.

\- - - -

**ஆணை :**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி மிகவும் கடுமையான ஊனத்தால் பாதிக்கப்பட்டு வேறு எந்த வகையிலும் மறுவாழ்வு பெற முடியாதவர்களைப் பராமரிப்பதற்காக கடும் ஊனமுற்ற நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2\. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உதவித்தொகை வழங்க பயனாளிகள் தேர்வு செய்ய ஒரு குழுவினை நியமித்தும் மேற்படி உதவித்தொகை பெற 75 சதவீதத்திற்கும் மேல் ஊனமுற்றவராக இருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

3\. 2006 சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கையின்படி தற்போது ஊனமுற்றோருக்கான உதவித்தொகை மாதம் நபர் ஒருவருக்கு ரூ. 200/– என இருப்பதை மாதம் ரூ. 500/– என உயர்த்தி வழங்கிட ஏதுவாக தேவையான கருத்துருவை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனுப்பி வைத்துள்ளார். இத்திட்டத்தால் 8,400 ஊனமுற்றோர் பயன்பெறும் வகையில் ரூ.5,29,45,200/– அல்லது ரூ.529.46 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4\. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக ஆராய்ந்த அரசு, கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையை 1.9.2006 முதல் ரூ.200/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி ஆணையிடுகிறது. இந்த உயர்வினால் ஓராண்டிற்கு பராமரிப்பு உதவித்தொகை வழங்க ரூ.504.00 இலட்சம் மற்றும் பணவிடை செலவினம் ரூ.25.46 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 529.46 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ளப்படும்.

5\. இத்திட்டத்திற்கு 2006 – 2007ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதலாகத் தேவைப்படும் செலவினத் தொகை ரூ. 53.18 இலட்சங்கள் (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய 2006–2007ல் சேர்க்கப்படும். திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் கூடுதல் நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனுமதிக்கப்படுகிறார். திருத்திய மதிப்பீட்டில் மேற்படி செலவினத்தை சேர்த்திட ஏதுவாக தேவையான கருத்துருவை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

என்.எஸ். பழனியப்பன்,
அரசு செயலாளர்.





# காக்கா கதை

ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தாள். ஒரு வேப்ப மரத்தடியில் வடை சுட்டு விற்று வந்தாள். ஒரு நாள், ஒரு பெண் காக்கா அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. வடையின் வாசம் காக்காவின் மூக்கைத் துளைத்தது.

எல்லாரும் காசு கொடுத்து வடை வாங்கித் தின்றார்கள். காக்காவிடம் காசு இல்லை. காசு இல்லாவிட்டாலும் வடை தின்னும் ஆசை விட்ட பாடில்லை. அதற்கு ஒரு யோசனை உதித்தது, பாட்டியை நெருங்கியது.

"பாட்டி! என்னிடம் காசு இல்லை. ஆனால், உனக்கு உதவியாக வேலை செய்கிறேன். ஒரு வடை தருவாயா ? என்று கேட்டது காக்கா.

பாட்டி சிரித்தாள். "உனக்கு என்ன வேலை தெரியும் ? உளுந்தைச் சுத்தம் செய்யத் தெரியுமா ? ஊறவைத்த உளுந்தை ஆட்டத் தெரியுமா ? என்ன தெரியும் உனக்கு ?'' என்று பாட்டி கேட்டாள்.

"அடுப்பு எரிக்கக்காய்ந்த கள்ளி விறகு கொண்டு வரத் தெரியும் !'' என்று பதில் சொன்னது காக்கா. பாட்டி சம்மதித்தாள். காக்கா பறந்தோடிச் சென்றது. காட்டில் கிடந்த விறகுக் குச்சிகளை வாயில் கவ்வி எடுத்து வந்தது. இவ்வாறே, பலமுறை சென்று வந்து, விறகுக் குச்சிகளைக் குவித்து விட்டது. பாட்டி மகிழ்ந்து போனாள்.



"இந்தா உன் கூலி!'' என்று ஒரு வடையை நீட்டினாள். காக்கா வடையை வாயில் கவ்விக் கொண்டது. பறந்து அது குடியிருக்கும் ஆலமரத்துக்கு வந்தது. கூட்டில் அதன் கணவன் காக்கா இல்லை. இரைதேடப் போன கணவன் காக்கா இன்னும் திரும்பி வரவில்லை.

வடையை வாயில் கவ்வியபடி அங்கும் இங்கும் பார்த்தது பெண் காக்கா. அந்தப் பக்கமாய் ஒரு நரி வந்தது. காக்கா வாயில் இருக்கும் வடையை நரி பார்த்தது. அதற்கு வாயில் நீர் ஊறியது. அந்த வடையை அபகரிக்க அது நினைத்தது.

'இது எனக்கு மிக எளிய காரியம்! சிங்கத்தையே ஏமாற்ற வல்லவன் நான். இந்தக் காக்காவையா ஏமாற்ற முடியாது ?' என்று நினைத்துக் கொண்டது நரி. உடனே அது காக்காவைப் புகழத் தொடங்கியது.

"காக்கா! ஆகா! எத்தனை அழகு நீ! உன் ஒருச்சாய்த்த கண்ணும் கருகரு மேனியும்... அடடா! அழகே அழகு! அப்படியானால் உன் குரலும் அழகாக இனிமையாகத்தான் இருக்க வேண்டும். எங்கே, உன் இனிமையான குரலில் ஒரு பாட்டுப் பாடேன்'' என்று இதமாய்க் கேட்டது. பாடினால் காக்காவின் வாயிலிருந்து வடை கீழே விழுமே. அதை தூக்கிக் கொண்டு ஓடி விடலாம் என்ற நினைப்பு நரிக்கு.

'இவன் ஏன் என்னைப் புகழ்கிறான் ? முகத்துக்கு நேரே புகழ்ந்து பேசுபவனை நம்பவே கூடாது ! நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' – இப்படி நினைத்தது காக்கா.

உடனே காக்கா வடையைக் கூட்டில் பத்திரமாக வைத்தது. பிறகு நரியைப் பார்த்து, "நிஜமாகவே நான் பாடப்போகிறேன் கேட்கிறாயா ?'' என்று கேட்டது.

நரிக்குப் பெருத்த ஏமாற்றம். அது நினைத்தபடி நடக்கவில்லையே என்று எரிச்சல். அதனால், காக்காவைக் கடுகடுப்புடன் முறைத்துப் பார்த்தது.

"என்ன முறைக்கிறாய் ? உனக்கு வடை வேண்டுமானால், அதோ அந்தப் பாட்டியிடம் போய் வேலை செய். வெங்காயம், பச்சை மிளகாய் பறித்துக் கொண்டு போய்க் கொடு. பாட்டி வடை தருவாள். உழைத்தால்தான் தம்பி உணவு'' என்று பாடம் புகட்டியது.

நரியும் திருந்தி, பாட்டிக்கு உதவியாக வேலை பார்க்கும் எண்ணத்தில் ஓடிச் சென்றது. காக்கா தான் உழைத்துச் சம்பாதித்த வடையைத் தன் கணவனோடு பகிர்ந்து உண்பதற்காகக் கூட்டில் காத்திருந்தது.

*– வெமு. ஷாஜகான் கனி எழுதிய "பாடம் திருத்திய பாப்பா கதைகள்'' என்னும் நூலிலிருந்து.*

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியால் பொது அறிவைப் பெறுகிறோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த எண்ணற்ற திட்டங்களில் ஒரு அரிய திட்டம் ஏழை குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் ஆகும்.

தமிழக அரசு வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் பயன்பாட்டினை தெரிந்து கொள்வதற்காக பாப்பாகோவில் கிராமத்தில் உள்ள சமத்துவபுரத்திற்கு சென்றோம். அங்கு வசித்து வரும் திரு. பொன்னியின் செல்வன் அவர்களின் மனைவி திருமதி. நாகேஸ்வரி அவர்களை சந்தித்தோம். அவர், "எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர் என்றும், என்னுடைய மகள் பெயர் ஜெயஸ்ரீ, வயது 6 மற்றும் மகன் அருண்குமார் வயது 3. முன்பு எனது வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி கிடையாது. சமத்துவபுரத்தில் வாழும் அனைத்து குடும்பத் தலைவிகளும் பொழுதுபோக்கு இல்லாமல் இருந்தோம். அரசு என்னென்ன திட்டங்கள் அறிவிக்கின்றது ? அந்த திட்டங்களினால் நாங்கள் எவ்வாறு பயனடையலாம் ? தற்பொழுது உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது ? என்பன போன்ற எதுவுமே எங்களுக்குத் தெரியாது. நாங்கள் ஒரு இருட்டறையில் வாழ்வதுபோல் வாழ்ந்து கொண்டிருந்தோம். நாங்கள் மட்டுமல்ல எங்களுடைய குழந்தைகளுக்கும் எந்தவிதமான பொது அறிவும் பெறமுடியாமல் இருந்தார்கள். யார் தற்போதைய அமைச்சர் ? யார் தற்போதைய பிரதமர் ? என்று கேட்டால் கூட எங்களுடைய குழந்தைகளுக்கு தெரியாத நிலை இருந்து வந்தது.



ஆனால் தற்போது அந்த நிலை மாறியுள்ளது. நாங்களும் வெளி உலகைப் பார்க்கின்றோம். நாங்கள் அரசின் திட்டங்களை எளிதில் அறிந்து கொண்டு அந்த திட்டங்களினால் எங்களுக்கு என்ன பயன் ? யாரை அணுகுவது ? எப்படி அணுகுவது ? போன்ற வழிவகைகள் தற்போது தமிழக அரசு வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மூலம் தெரிய வருகிறது" என்று கூறினார்.

அடுத்தாக, திரு. செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி. சரஸ்வதி, அவரது மகள்கள் பத்தாம் வகுப்பு படிக்கும் அபிராமி, ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அஞ்சலி மற்றும் ஐந்தாவது படிக்கும் விக்னேஷ்வரி ஆகியோர் கூறுகையில், "எங்களுக்கு பொது அறிவை வளர்த்துக் கொள்ள கார்டூன், அனிமல் பிளானட் போன்ற சேனல்கள் மிகுந்த பயனளிக்கின்றன" என்றனர்.

திரு. செல்வராஜ் என்பவர் கூறுகையில், "நாங்கள் சாதாரண ஒரு கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி கூட எங்களால் வாங்க முடியாத நிலையில் இருந்து வந்தோம். நாகை மாவட்டம் புயல், மழை மற்றும் வெள்ளங்களால் பாதிக்கக் கூடிய ஒரு மாவட்டம். அரசு அறிவிக்கும் அபாய முன்னெச்சரிக்கைகளைகூட எங்களால் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்து வந்தோம். தமிழக அரசு இலவசமாக கொடுத்துள்ள இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மூலம் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தெரிந்து கொள்ள முடிகிறது" எனத் தெரிவித்தனர். மொத்தத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது பொது மக்களிடையே மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதை அறியமுடிந்தது.

முதற்கட்டமாக சமத்துவபுரங்களில் வசித்து வரும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. நாகை மாவட்டத்தில் திருக்குவளை, பாப்பாகோவில், பனங்குடி மற்றும் காட்டுச்சேரி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சமத்துவபுரங்களில் வசித்து வரும் 400 ஏழை குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் 16.9.2006 அன்று மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்களால் வழங்கப்பட்டன.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
நாகப்பட்டினம் மாவட்டம். ■



# விவசாயக் கடன் ரத்து திட்டத்தால் பயனடைந்த பனங்காடி கிராம மக்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2000–ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்தபோது, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை வட்டம் பனங்காடி கிராம மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு சங்கத்திற்குட்பட்ட செவந்தி ரோஜா மற்றும் மாதா அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 46 நபர்களுக்கு தலா ரூ.26,800 மதிப்பீட்டில் ஒவ்வொருவருக்கும் 66 சென்ட் நிலம் வழங்கப்பட்டது. தாட்கோ திட்டத்தின் மூலம் தலா ரூ.10,000 மானியமாகவும், திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நில வள வங்கி மூலம் தலா ரூ.10,000 கடனாகவும், சொந்த நிதியாக தலா ரூ.6,800–ம் பெற்று இந்த நிலம் வழங்கப்பட்டது. இது குறித்து பனங்காடி கிராம மகளிர் மேம்பாட்டுச் சங்கத்தின் இயக்குநர் திருமதி அஞ்சம்மாள் என்பவரிடம் கேட்டபோது, "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2000–ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்தபோது தாட்கோ திட்டத்தின் மூலம் 46 நபர்களுக்கு தலா 66 சென்ட் நிலம் வழங்கப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்யாமல் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தோம். இந்நிலையில், திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நிலவள வங்கியில் பெறப்பட்ட ரூ.4.60 இலட்சம் கடனுடன் சேர்த்து ரூ.13 இலட்சம் நிலுவைத் தொகையை உடனடியாக கட்ட வேண்டும் என நிர்ப்பந்தம் செய்து வந்தனர். இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் ஏழைஎளிய விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு கடன் முழுவதும் ரத்து செய்யப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து எங்கள் கிராமத்தைச் சேர்ந்த 46 நபர்கள் பெற்ற கடன் தொகை ரூ.13 இலட்சம்




முழுவதையும் ரத்து செய்யப்பட்டு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தென்காசி சு.ஜவகர், இ.ஆ.ப. அவர்கள் பரிந்துரையின்பேரில் 46 நபர்களுக்கும் நிலப்பட்டா திருத்துறைப்பூண்டி நில வள வங்கியிடமிருந்து திரும்ப வழங்கப்பட்டுள்ளதற்கு ஏழை விவசாய மக்கள் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறினர்.

**செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,**
நாகப்பட்டினம்

# செய்தி சொல்லும் சித்திரங்கள்



தமிழகத்தில் சென்னைக்கு அருகில் சிறப்புப்
பொருளாதார மண்டலம் அமைக்க
சிங்கப்பூர் அரசு முடிவு செய்துள்ளது.
இந்தியாவிலேயே தமிழகத்தில்தான்
இத்தகைய பொருளாதார மண்டலம் அமைக்க
சாதகமான நிலைமை உள்ளது.

- சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர்
திரு.பாலாஜி சதாசிவன்
சென்னையில் பேட்டி -
(3.10.2006)

போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு
மின்சார வாரியம், நுகர்பொருள் வாணிபக்
கழகம், ஆவின், வனத் தோட்டக் கழகம்,
தேயிலை தோட்டக் கழகம், அரசு ரப்பர்
கழகம் மற்றும் பூம்புகார் கப்பல்
போக்குவரத்துக் கழகத்
தொழிலாளர்களுக்கு தீபாவளியையொட்டி
20 சதவிகிதம் போனஸ்

- தமிழக அரசு வழங்கியது.





சிக்குன் குனியா பாதிப்புள்ள
அனைத்து மாவட்டங்களிலும்
"ஆபரேஷன் சிக்குன் குனியா 2006 -
கொசு ஒழிப்புப் பணி" செப்டம்பர் 5 முதல்
மேற்கொள்ளப்படுகிறது.
சிக்குன் குனியா, டெங்கு நோய்த் தடுப்பு
நடவடிக்கையில் மக்களை ஊக்குவிக்க
அக்டோபர் 16 முதல் 22 வரை
தமிழகம் முழுவதும் "சுற்றுப்புறத்
தூய்மை இயக்க வாரம்"
அனுசரிப்பு.

- தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி
பேட்டி (9.10.06)






தமிழக அரசு வெளிப்புறப் படப்பிடிப்புக்
கட்டணங்களைக் குறைத்ததால்,
உதகையில் திரைப்படப் பிடிப்புகள்
ஏராளமாக நடைபெறுகின்றன.
உதகையில் திரைத்துறையினர்
குவிந்தனர்.

குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு
அமர்த்துபவர்களை கடுமையாக தண்டிக்கும்
புதிய சட்டம் – அக்டோபர் 10 முதல் அமல்படுத்தப்பட்டது
– தீவிரமாகச் செயல்படுத்த
மத்திய, மாநில அரசுகள் முடிவு.



வாகனங்களில் செல்லும்போது செல்போனில்
பேசக்கூடாது என்பதை வலியுறுத்தி
சென்னை மாநகர போக்குவரத்துக்
காவல்துறை விழிப்புணர்வுப் பிரச்சாரம்.



# செய்தி சொல்லும் சித்திரங்கள்



பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை
ரூ.4,000 ஆகவும்,
பத்திரிகையாளர்
குடும்ப ஓய்வூதியத்தை
ரூ.2,000 ஆகவும்
உயர்த்தி அரசு ஆணை.




உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள்
வழங்குவது பற்றி பரிந்துரைக்க
உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில்
உயர்நிலைக் குழு

– தமிழக அமைச்சரவை முடிவு.



நான்கைந்து மாதங்களில்
இலட்சத்திற்கும்
மேற்பட்டவர்களுக்கு
தமிழக அரசு வேலைவாய்ப்பை
வழங்கியுள்ளது.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்







திருமதி. **கீதாஜீவன்**
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

# புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள்

✶ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கால்நடைகள் அதிகளவு பயனடைவதற்காக நடப்பாண்டில் குக்கிராமம் மற்றும் மலைப்பகுதிகளில் கூடுதலாக 500 முகாம்கள் நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

✶ நடப்பு நிதியாண்டில் புதியதாக 10 கால்நடை மருந்தகங்கள் துவக்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ கால்நடை இழப்புகளால் ஏற்படும் இடர்ப் பாட்டிலிருந்து ஏழை கிராமப்புற மக்களைப் பாதுகாத்திட ஒரு முன்னோடித் திட்டமாக மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தினைத் தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சம் கறவை மாடுகளும், எருமைகளும் பயன்பெறும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கால்நடை பட்டப்படிப்பு முடித்து, உள்ளுறை பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப் படும் உதவித் தொகை ரூபாய் 1,150 என்பதை ரூபாய் 500 உயர்த்தி, இனி மாதம் ஒன்றிற்கு ரூபாய் 1,650 என வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

✶ சென்னை, அடையாறில் பி.எஸ். குமாரசாமிராஜா சாலையில் செல்லப் பிராணிகள் சிகிச்சை நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

# ஆதிதிராவிடர்களுக்கு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய அறிவுரைப்படி, இந்து ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமன்றி, மதம் மாறிய ஆதிதிராவிடர்களும் பயன்பெறும் வகையில் மாநில அரசின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், முதல் முறையாக இந்த நிதியாண்டில் இம்மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மூலம் மொத்தம் 25 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

**இத்தொகையில்,**

- 2,500 இளைஞர்களுக்கு ஒரு ஆண்டு காலப் பயிற்சியாக உணவு தயாரித்தல், பதப்படுத்துதல் மற்றும் வழங்குதல் (Catering Technology) பயிற்சி,
- 2,000 ஆதிதிராவிட மகளிருக்கு ஒரு ஆண்டு கால செவிலியர் உதவியாளர் பயிற்சி,
- 5,000 இளைஞர்களுக்கு பவர் தையல் மிஷின்களை இயக்குவதற்குப் பயிற்சி,
- 300 இளைஞர்களுக்கு BPO, Call Centre மற்றும் விமான ஓட்டுநர் பயிற்சி போன்ற உடனடி வேலைவாய்ப்புகளைத் தரும் பயிற்சிகள்,
- ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 1,000 மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் பயிற்சி (Communication skills and Personality Development Training) ஆகிய பயிற்சிகள் அனைத்தும் மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் அளித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



திருமதி. **ஆ. தமிழரசி**
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

- இளைஞர்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்கள் சுயதொழில் தொடங்குவதற்காக 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவளித்துள்ளார்கள்.
- முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, 30,000 பயனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க 27 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

* * *





# 10, 12ஆம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மீனவ சமுதாய மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள்



திரு. **கே.பி.பி. சாமி**
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்

- 1997–98 இல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியத்தை உயர்த்தித் தந்த முத்தமிழறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு விசைப்படகிற்கு மாதம் ஒன்றுக்கு தற்போது 1,000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுவதை 1.8.2006 முதல் 1,500 லிட்டர் அளவுக்கு உயர்த்தி ஆண்டுக்கு 50 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 5,000 விசைப்படகுகளுக்கு இந்த மகத்தான சலுகையை மீனவ சமுதாயம் எண்ணி எண்ணிப் பெருமைப்படத்தக்க வகையில் வாரி வழங்கியுள்ளார்கள்.
- குமரி மாவட்ட மீனவ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மத்திய அரசின் நிதி உதவி பெற்று குளச்சலில் 23 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பகுதி மீனவர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளார்கள்.
- ஏழை எளியவர்களின் மேம்பாட்டையே இரவும், பகலும் சிந்தித்தும் எழுதியும், பேசியும், கவிதை புனைந்தும் ஊக்கம் தந்திடும் எங்களின் இதயத்துடிப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் வலைகள், கை விளக்குகள் (Handy Rechargeable Lanterns), மீன்களை எடுத்துச் செல்ல மிதிவண்டிகள் (Heavy Duty Bicycles), உயிர்காக்கும் உடை (Life Jackets), ஐஸ் பெட்டிகள் (Ice boxes) ஆகியவைகளை 100 கோடி ரூபாய் செலவில் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்திலிருந்து (Calamity Relief Fund), வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.
- மீனவ சமுதாயத்தில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 12ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவிகளுக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் வழங்கப்படுவது போல ஊக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.
- மேலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10ஆம் வகுப்பில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவிகளுக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் வழங்கப்படுவது போல ஊக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.

❖ ❖ ❖

# பால் உற்பத்தியைப் பெருக்க பயன்மிகு திட்டங்கள்



திரு. உ.மதிவாணன்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

- சங்கங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பாலின் ஆரம்பத் தரம் கெடாமல் பாதுகாக்கவும், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் வாயிலாக 875 கிராமச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் 125 குளிர்விப்பான்கள் 13 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட உள்ளன. இதன்மூலம் தமிழக பால் பண்ணைகளின் குளிர்பதப்படுத்தும் வசதி நாள்தோறும் 15 இலட்சம் லிட்டர் என்ற நிலையிலிருந்து நாள்தோறும் 19 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயரும். இதனால் நுகர்வோர்களுக்கும் தரமான பால் கிடைக்கும்.
- கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், வேலூர் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன், 1 கோடி ரூபாய் செலவில் அதிக பால் கறவைத் திறன் கொண்ட ஒரு இலட்சம் பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படும்.
- தமிழகத்தில் 2006–2007 ஆம் ஆண்டில் குறைந்தது 100 மகளிர் சங்கங்கள் அடங்கிய 300 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும்.
- மூன்று இலட்சம் பால் உற்பத்தியாளர்களை விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்யப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் கலப்பினப் பொலி காளைகள் மற்றும் எருமையினப் பொலி காளைப் பண்ணை அமைக்கப்படும்.
- சென்னை அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் சர்க்கரை நோயாளிகளுக்காக சர்க்கரை இல்லாத ஐஸ்கிரீம் மற்றும் இனிப்பு சேர்க்கப்படாத யோகர்ட் அறிமுகப்படுத்தப்படும்.
- இந்த ஆண்டு சேலத்தில் உள்ள பால் பண்ணையிலிருந்து மிக உயர்வெப்ப நிலையில் பால் பதப்படுத்தி, பேக்டீரியா போன்ற நுண்கிருமிகள் தவிர்த்த நிலைகெடா சிப்பம் கட்டும் நிலையம் உலகத் தர அளவில் 12 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தி பால் ஏற்றுமதிக்கு வழிவகுக்கப்படும்.

❖ ❖ ❖





# 3,000 ஏக்கரில் புதிதாக மல்பரி நடவு



திரு. கா. இராமச்சந்திரன்
மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர்

### பட்டு வளர்ச்சித்துறை

- புதியதாக 3,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவு செய்யப்படும். இதற்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- மல்பரி சாகுபடி மற்றும் வெண் பட்டுப்புழு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க 100 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும். இதற்கு ஒரு விவசாயிக்கு தலா 800 ரூபாய் வீதம் செலவிடப்படும்.
- சென்னைக்கு அருகில் மாமல்லபுரத்தில் 2 கோடி ரூபாய் முதலீட்டில் 'நகர்ப்புற கண்காட்சித் திடல்' ஒன்று மைய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும்.
- சென்னையில் உள்ள அரசு அருங்காட்சி யகத்தில் கைத்திற அருங்காட்சியகத்துடன் ஒரு கைவினைப் பொருள் அங்காடி அமைக்கப்படும்.

### தமிழ்நாடு பனைபொருள் வாரியம்

- மதுரையில் உள்ள மதுரை–விருதுநகர்–திண்டுக்கல் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன 'பதநீர் உற்பத்திப் பிரிவினை' நவீனப்படுத்திட புதிய இயந்திரங்கள் வாங்கிட 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.
- தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 400 ஏழை பனைத்தொழில் கைவினைஞர்கள் பயன் பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க 6 இலட்சம் ரூபாய் வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார். ✱



சென்னை மாநகர முன்னாள் மேயர் திரு. சிவராஜ் அவர்களின் 115 ஆவது பிறந்தநாளையொட்டி 29.9.2006 அன்று சென்னையில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலர்கள்



குறிஞ்சிப் பூவுக்கு தமிழ் இலக்கியத்தில் எப்பொழுதும் ஒரு தனி இடம் உண்டு. அதன் நிறத்தை அடிப்படையாக வைத்து அது நீலக்குறிஞ்சி என்று அழைக்கப்படுகிறது. தொல்காப்பிய காலத்தில் மலையும் மலையைச் சார்ந்த இடமும் "குறிஞ்சி" என்று வழங்கப்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இந்த அபூர்வ வகைப்பூக்கள் தமிழகத்தில் பல மலைகளில் பூக்கும். நீலகிரி மலைக்கு நீலகிரி என்ற பெயர் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் ஒரே நேரத்தில் பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்களால் தான் ஏற்பட்டது. மலை முழுவதும் நீலப் போர்வை போர்த்தியது போல் காணப்படுவதால்தான், இம்மலைக்கு நீலகிரி மலை என்று பெயர் வழங்கப்பட்டது. மனிதர்களின் வாழ்விடங்கள் பெருகியதால் நீலக்குறிஞ்சி செடிகள் அழியும் அபாயத்தில் உள்ளது.

**விஞ்ஞான பூர்வமான தகவல்கள்:**

குறிஞ்சி மலர்கள் அகான்தைகேன் என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. உலக அளவில் 300 வகையான ஸ்ட்ரோபிலான்தஸ் வகை பூக்கள் உள்ளன. இவைகளில் 46 வகைகள் தென்னிந்தியாவில் உள்ள மேற்கு மலை தொடர்களில் உள்ளன.

பழனி மலைகளில் மட்டும் 18 வகைச் செடிகள் உள்ளதாக தாவரவியலாளர் கே.எம். மேத்யூ கண்டுபிடித்தார். சில வகைகள் ஒவ்வொரு வருடமும் பூக்கும். சில அபூர்வ வகைகள் 16 வருடங்களுக்கு 30 முறை மட்டுமே பூக்கும். இந்த வகை பூக்கள் ப்ளேஸ்டேசியல்ஸ் என்று அழைக்கப்படுகின்றன. இதன் சிறப்பம்சம் என்னவெனில், இந்த வகை செடிகள் மலர் மலர்ந்த உடன் விதைகளை உற்பத்தி செய்யும், பின்னர் உடனே இறந்துவிடும். இவ்வகை செடிகள் கடல் மட்டத்திலிருந்து 15 மீட்டர் முதல் 24 மீட்டர் உயரமான இடங்களில் வளரும்.

குறிஞ்சி செடிகள் 60 செ.மீ. முதல் 180 செ.மீ. வரை உயரமாக வளரும். சிலநேரங்களில் 210 செ.மீ., வரை வளரக் கூடியது. பூக்களில் நிறம் வெளிர்நீலம் மற்றும் கருநீலம். சிலநேரங்களில் வெள்ளை நிறத்திலும் பூக்கள் பூக்கும். குறிஞ்சி செடிகள் "ஷோலா" எனப்படும் புல்வெளிகளில் அதிகம் வளரும். பாறைகள் நிறைந்த மலைச்சரிவுகளிலும் வளரும். இவைகள் தமிழகத்தில் கொடைக்கானல் மற்றும் நீலகிரியில் பரவலாக காணப்படுகின்றன. கொடைக்கானல் மலையில் குறிஞ்சி மலர்கள் 1,500 மீட்டர் முதல் 2,300 மீட்டர் உயரமான இடத்தில் காணப்படுகின்றன. வடகவுஞ்சி பெருமாள் மலை (1,600 மீட்டர்), செண்பகனூர் (1,750 மீட்டர்) கோக்கரின் நடைபாதை வட்டப்பகுதி (2,100 மீட்டர்), வில்பட்டி பள்ளத்தாக்கு (1,900 மீட்டர் – 2,200 மீட்டர்), வட்டக்கானல் (1,900 மீட்டர்), பூம்பாறை (1,800 மீட்டர்), கிளாவரை (1,850 மீட்டர்) ஆகிய பகுதியில் காணப்படுகின்றன. குறிஞ்சி மலர் இருக்கும் இடங்கள் அளவுக்கு அதிகமாக யூக்கலிப்டஸ் மற்றும் வாட்டல் பயிர்கள் வளர்ந்திருப்பதால் மிகவும் குறைந்து விட்டது.

நீலக்குறிஞ்சி பூக்கள் 12 வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும். இதற்கு முன் குறிஞ்சி – 1994 இல் மலர்ந்தது. 12 வருடங்களுக்கு பிறகு, 2006 இல் பூத்துள்ளது. பூக்கும் காலம் ஏப்ரலில் தொடங்கி டிசம்பரில் முடியும். குறிஞ்சி மலரை மீண்டும் பார்க்க 2018ஆம் வருடம் வரை காத்திருக்க வேண்டும்.

**குறிஞ்சி மலரின் மருத்துவ சிறப்புகள்:-**

கோடை மலையில் இரு வகை குறிஞ்சி பூக்கள் உள்ளன. 6 வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் சிறுகுறிஞ்சி, மற்றொன்று மிகவும் புகழ்பெற்ற 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி ஆகும். கோடைமலையில் ஆதிவாசி மற்றும் மலை வாழ் மக்கள் தங்கள் வயதை தாங்கள் குறிஞ்சி மலரைக் கண்டதின் அடிப்படையாக வைத்தே கணக்கிடுகின்றனர். ஒருவர் 3 முறை கண்டால் அவருக்கு வயது 36க்கு மேல் என்று கணக்கிடுவார்கள்.



ஒருவர் இரண்டு முறை நீலக்குறிஞ்சி மற்றும் ஒரு முறை சிறுகுறிஞ்சியைப் பார்த்தால் அவருக்கு வயது 30. கல்யாணமாகாத இளைஞர்களை குறிஞ்சிப் பூக்களைத் தொட அனுமதிக்க மாட்டார்கள். குறிஞ்சிப்பூ பூக்கும் பருவம் முடிவடைந்த உடன், ஆதிவாசிகள் முருகனுக்கு சர்க்கரைப் பொங்கல் வைத்து வழிபடுவார்கள். அதுவரை, மலை ஜாதி மக்கள் யாரையும் குறிஞ்சி மலர்களைப் பறிக்க அனுமதிப்பது இல்லை. இதுவே குறிஞ்சி மலர்களை பாதுகாக்கும் சிறந்த வழி ஆகும். விதைகள் உருவாவதற்கு முன்பே பூக்களைப் பறித்து விட்டால், மீண்டும் செடிகள் வளரும் வாய்ப்பு மறைந்து விடும். முழு வீச்சில் குறிஞ்சிப் பூக்கள் மலரும் போது, தேனீக்கள் அதிக அளவில் காணப்படும். குறிஞ்சிப் பூவிலிருந்து கிடைக்கும் தேன் (ஆஸ்துமா போன்ற) நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களை குணமாக்கும் மருத்துவ குணம் கொண்டது. செடியின் பட்டைகள் இரத்தத்தை சுத்தம் செய்யும் தன்மை உடையவை.

குறிஞ்சி பயிரிடப்பட்டுள்ள இடம் குறைந்து வருவதே மிகவும் கவலைக்குரியது. "ஷோலா" புல்பகுதிகள் வாட்டல் மற்றும் யூக்கலிப்டஸ் தாவரம் பயிரிடும் பகுதியாக மாற்றப்படுவது மிகவும் அபாயகரமானதாகும். மனிதர்கள் வாழும் இடமாக மாற்றுவதும் இவைகளின் அழிவை துரிதப்படுத்துகின்றன.

மற்ற குறிஞ்சி செடியுள்ள பகுதிகள் காட்டுத் தீயாலும், காட்டுக் கோழியாலும் இவைகளின் வளர்ச்சிகள் மிகவும் அழிக்கப்படுகின்றன.

**பாதுகாக்கப்படும் முறைகள்:-**

1. மரப்பயிர்கள் வளர்ப்பு மற்றும் மனிதர்கள் வாழும் இடங்களை பெருக்குவதற்காக புல்வெளிகளை அழிப்பதை முழுமையாக தடை செய்தல்.
2. காட்டுத் தீயிலிருந்து குறிஞ்சி செடிகளை காத்தல்.
3. பூக்காலம் முடிந்த பிறகு அதன் விதைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல் மற்றும் புதிய நிலப்பரப்புகளில் புதிய செடிகளை நடுதல் ஆகியவை ஆகும்.

மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு 23.9.2006 அன்று வருகை புரிந்த போது குறிஞ்சிப் பூக்கள் அடங்கிய பூங்கொத்து கொடுத்து வரவேற்கப்பட்டார். இதனால் ஈர்க்கப்பட்ட அவர் குறிஞ்சி பூக்கள் குறித்து விழா மேடையில் கவிதை எழுதினார்.

***எப்பொழுது காண்பேன் எப்பொழுது***
***காண்பேன்***
***பல ஆண்டுகளின் கனவு***
***கனவு கண்டேன் - கனவு கண்டேன் -***
***கனவு கண்டேன்***
***குறிஞ்சி மலர் தோட்டத்தில் நடந்தேன்***
***எது குறிஞ்சி மலர்கள்?***
***எங்கெங்கும் பூத்துக்குலுங்கின!***
***காட்சி ஒரு அரும்பெரும் காட்சிதான்!***

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூக்களால் அழகுக்கு அழகு பெறும் கொடைக்கானலுக்கு சென்று இந்த அரும்பெரும் காட்சியை நாமும் கண்டு மகிழ்வோம்.

*செய்தி-மக்கள்தொடர்பு அலுவலர்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*



(அன்று ஓட்டல் தொழிலாளி-
- இன்று ஆட்டோ முதலாளி)

# வெற்றிக்கதை

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, பாடி புதுநகர் காலனியைச் சேர்ந்தவர் இவர். மெலிந்த தேகம், படிப்பறிவு குறைவு என்பதை பார்வை காட்டினாலும் பணிவான பண்பு கொண்டவர். தனியார் ஓட்டலில் தொழிலாளியாக பணியாற்றிய 42 வயதான அவரின் பெயர் ராயதுரை. ஆறுமுகம் என்ற 90 வயது தந்தை. ரஞ்சனி என்ற மனைவி. ராஜேஷ் என்ற மகன். ரஞ்சிதா, கல்பனா என்ற இரு மகள்கள் ஆகிய குடும்ப உறுப்பினர்களோடு ஓலைக் குடிசையில் சராசரி நிலைக்கு கீழ் வாழ்வு நடத்தி வந்தவர் இந்த ராயதுரை.

தனது குடும்ப பொருளாதாரத்தை உயர்த்திடவும், பசியின்றி நல்ல துணிமணிகளோடு தனது குழந்தைகளை வளர்த்திடவும் ஓலைக் குடிசையில் ஓராயிரம் இனிய வண்ணக் கனவுகளோடு எண்ணச் சிறகுகளை விரித்து பறந்த ராயதுரைக்கு, தமிழ்நாடு அரசின் கட்டுபாட்டிலுள்ள தாட்கோ நிறுவனத்தின் தனி நபர் கடன் திட்டம் பற்றி அறிய ஆர்வம் வந்தது. போதிய படிப்பறிவு இல்லாமல் ஓட்டல் தொழிலாளியாகப் பணியாற்றும் தனக்கு வாழ்வு எங்கே விடியும் என விடியலை நோக்கி காத்திருந்த இவர், தள்ளாத வயதிலும் தளராத உள்ளத்தோடு நல்ல ஆலோசனைகளை வழங்கும் தனது தந்தையோடும், துன்பத்திலும், இன்பத்திலும் தனது வாழ்வில் பங்கேற்கும் மனைவியோடும் கலந்து பேசி ஒரு முடிவெடுத்தார். தனது வாழ்க்கைக்கு சாலை வழியே சாலச்சிறந்தது என்ற தீர்மானத்துடன், முயற்சி செய்து முதலில் ஆட்டோ ஓட்ட கற்றுக் கொண்டு உரிமம் பெற்றார். அதனைத் தொடர்ந்து வாடகை ஆட்டோ ஓட்டி தொழில் நடத்தி வந்தார். இந்த தொழிலில் ஒரு நாளைக்கு ஆட்டோ வாடகை மற்றும் செலவு போக ரூ.80 முதல் ரூ.100 வரை வருமானம் கிட்டியது. சொந்தமாக ஆட்டோ வாங்கும் எண்ணம் ராயதுரை உள்ளத்தில் ஒளிக்கீற்றாய் உதித்தது.

தனது சிந்தையில் உதயமான புதிய சிந்தனையுடன் திருவள்ளூரிலுள்ள தாட்கோ அலுவலகம் சென்றார். தன்நிலையை எடுத்துக்கூறி உதவி கேட்டவருக்குத் தனி நபர் கடன் திட்டம் பற்றி விளக்கி கூறப்பட்டது. உடனடியாக கலைஞர் அரசிடம் தனிநபர் கடன் கோரி விண்ணப்ப மனு செய்தார். கடன் நடைமுறையும் விரைவில் முடிந்து ஈக்காட்டுதாங்கல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் தனது பங்குத் தொகையான ரூ.5,322ஐ செலுத்தி ரூ.76,116 வங்கிக் கடன் பெற்றார். வங்கிக் கடன் தவிர்த்து ரூ.25 ஆயிரம் மானியத்தோடு ஆட்டோ ஒதுக்கீடும், சாலையில் ஆட்டோ ஓடுவதற்கான அனுமதியும் (Auto Permit) ஒருசேரப் பெற்று அதற்கான ஆணையையும், ஆட்டோ சாவியினையும் 15.8.06 அன்று சுதந்திரத் திருநாளில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. ரண்வீர் ப்ரசாத்,இ.ஆ.ப., அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். ராயதுரை, தனது குடும்பத்தின் வாழ்க்கை சக்கரம் ஓட, ஆட்டோவின் வண்டிச் சக்கரங்கள் சரியாக ஓடவேண்டும் என்பதை நன்கு அறிந்து கொண்ட ராயதுரை கண்ணும் கருத்துமாக ஆட்டோவை பராமரித்து வந்தார். பயணிகளிடமும் பணிவோடு பழகினார்.ஆட்டோ சவாரியும் அதிகம் கிடைத்தது. வருவாயும் சற்றுக் கூடியது. குடும்பமும் பொருளாதாரத்தில் உயரத் தொடங்கியது.

பசி, பட்டினி, வறுமையில் சிக்கி ஓலைக் குடிசையின் ஓரத்தில் ஒண்டி, குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்கு ஏங்கித் தவித்த ராயதுரைக்கு வந்தது புதுவாழ்வு, கை தூக்கி விட்டது கலைஞர் அரசு.

ஆட்டோ ஓட்டுநர் ராயதுரையிடம் நாம் பேசியபோது, "ஒரு நாளைக்கு சுமார் 350 ரூபாய் வருமானம் வருவதாகவும், அதில் ஒரு நாளைக்கு பெட்ரோல் செலவு 120 ரூபாய் போக, வங்கி கடனுக்கு என 60 ரூபாயும், குடும்பச் செலவு மற்றும் சேமிப்புக்கு என 170 ரூபாயும் ஒதுக்கி வாழ்க்கை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

தற்போது வங்கிக் கடனுக்கு செலுத்த தவணைத்தொகையாக மாதம் ரூ.900 நிர்ணயிக்க பட்டிருந்தாலும், மாதத்திற்கு ரூ.1,700 என்று கூடுதலாகவே செலுத்தி வங்கிக் கடனை அடைத்துவருவதாகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்த அவர், ஓலைக்குடிசையிலிருந்து பாடி புதுநகரில் ஓட்டு வீட்டிற்கு ரூ.600 வாடகையில் குடியேறி இருப்பதோடு, தனது குழந்தைகளை நல்ல பள்ளியில் படிக்க வைப்பதாகவும், சேமிப்புக்கு ஏற்றவாறு விரும்பும் துணிமணிகளை எடுத்து கொடுத்து குடும்பத்தாரை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பதாகவும் நெகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்தார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போல, தான் அரசிடமிருந்து அடைந்த பயனை, தனது தோழர்களுக்கும் உறவினர்களுக்கும் சொல்லி மற்றவர் பயனடைய வழிகாட்டுகிறார் முன்னாள் ஓட்டல் தொழிலாளி– இந்நாள் ஆட்டோ முதலாளி ராயதுரை.

முயன்றால் முன்னேறலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இவரது தொழில் சிறக்க தமிழக அரசு கைகொடுத்துள்ளது. அவர் மேலும், வளம் பெருக வாருங்கள் வாழ்த்துவோம்.

***செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,***
*திருவள்ளூர் மாவட்டம்.*



# அறிந்துகொள்வோம் அரசாணையை

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

திட்டங்கள் – புதிய மாநில திட்டம் – அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – அறிமுகப்படுத்துதல் – திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி2)துறை**

அரசாணை (நிலை) எண் : 115

நாள் : 11.9.2006

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதம் 48049 /2006 எஸ்.எஸ். –3, நாள்.29.6.2006.

- - - -

**ஆணை :**

பதின்மூன்றாவது சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில், அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்றும், கிராமங்களில் உள்ள முக்கிய தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் தளங்களாக மாற்றப்படும் என்றும், ஐநூறு அல்லது ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், கிராமங்களில் மக்கள் பொதுவாகக் கூடும் மையப்பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

2. மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மாநில அரசால் செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு உரிய பயன்பாடு இல்லாமல் இருப்பதாலும், இந்த அறிவிப்புகளை மத்திய அரசு திட்டங்களின் மூலம் நிறைவேற்ற முடியாத காரணத்தாலும், மாநில அரசின் புதிய திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய திட்டத்தின் சிறப்பு அம்சங்களை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து மாநில அரசால் ஏற்கெனவே செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு மாற்றுத் திட்டமாக "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" (All Villages Anna Renaissance Scheme) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயற்படுத்தலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே அதனை பின்வருமாறு செயற்படுத்த ஆணையிடுகிறது.

**4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள்**

i) அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு ஆண்டுக்கு ஒரு கிராமத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. 'நமது கிராமம்' திட்டத்தில் நிதி ஆதாரங்கள் அனைத்தும் மிக மெல்லிய அளவில் பரவலாக்கப்பட்டது. மேலும், வறுமை ஒழிப்புத் திட்டம் மற்றும் ஊரகக் குடியிருப்புத் திட்டம் ஆகியவை இத்திட்டங்களில் மேற்கூறிய உள்ளீடான குறைபாடுகள் காரணமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட முடியவில்லை.

ii) மாநில அரசு நிறைவேற்றும் மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கம் ஆகியவை எதிர்பாரா நிலையில் குறுகிய வாய்ப்பாகவே அமைந்துள்ளது. செய்யவேண்டுவன, செய்யக் கூடாதவை என அறுதியிடப்பட்ட மிகக் கடினமான மத்திய அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள் உள்ளூர்ப் பகுதிகளின் தேவைக்கேற்ற நெகிழ்வு தன்மை அற்றதாக உள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஊரகப் பகுதிகளில் வீட்டு வசதி அளிக்கவும், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், சுய வேலைவாய்ப்பை உருவாக்கவும் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், சுகாதாரத்தின் ஒரு சில பகுதிகளை மட்டுமே உள்ளடக்கியது முழு சுகாதார இயக்கம் ஆகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டொன்றுக்கு சராசரியாக 3லிருந்து 4 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் 6 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. மேலும், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகிய இரண்டும் வேலைவாய்ப்பை உருவாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

iii) ஊரகப் பகுதிகளில், சமுதாய சொத்துக்களை உருவாக்கவும், பராமரிக்கவும், அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குமான தேவைகள் அதிகமாகவே உள்ளன. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், கிராம ஊராட்சிக்கென குறிப்பிட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி ஊராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட பொருட்களை நடைமுறையில் உள்ள திட்டங்கள் மூலம் நிறைவேற்ற முடிவதில்லை. மேலும், பெரும்பாலான உள்ளாட்சி நிறுவனங்கள் அவற்றின் தேவைகளை நிறைவு செய்ய போதிய சொந்த நிதி ஆதாரங்கள் இல்லாததால் பல்வேறு திட்ட நிதி ஒதுக்கீடுகளை எதிர்நோக்கியே உள்ளன. தற்போது உள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு அவற்றின் வழிகாட்டி நெறிமுறைகள் எளிமையானதாக இருக்கவும், உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களின் விருப்பப் பணிகளை எடுத்துச் செய்யும் வகையிலும், கிராம வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமாக தேவைப்படும் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் எடுத்துச் செய்ய இயலாத அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ள புதிய திட்டமே "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' ஆகும்.

## 5. நிதி ஒதுக்கீடு

நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.175 கோடி, வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு (Ultra Poor) ஒதுக்கப்பட்ட ரூ.20 கோடி, ஊரகக் குடியிருப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 கோடி மற்றும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 கோடி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் உள்ள சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதிகளிலிருந்து ரூ.90 கோடி தொகையினையும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் நடப்பு 2006–2007 நிதி ஆண்டில் கூடுதலாக ரூ. 90 கோடி ஒதுக்கீடு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–ல் சேர்க்கப்படும். இது தொடர்பாக உரிய கருத்துருக்களை அரசு நிதி (ஊ.வ) துறைக்கு திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–க்கான கருத்துருக்கள் அனுப்பும்பொழுது சேர்த்து அனுப்ப தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேற்குறிப்பிட்ட மொத்தம் ரூ.500 கோடி நிதியை "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு'' ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டில் பயன்படுத்த அரசு ஆணையிடுகிறது.

## 6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்

"4515.00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு JP. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 16. பெரும்பணிகள் (த.தொ.கு.எண்.4515.00.800 JP. 1602)''

## 7. கிராமங்கள் தேர்வு

மாநிலத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து அவை ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூபாய் 20 இலட்சம் நிதியில் படிப்படியாக, 5 ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராமங்களை இத்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிசீலிக்கப்படும். குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த தனிநபர் வருமானம் உள்ள 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. வட்டார அளவில் கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்யும் முறை

குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த வருமானம் உள்ள 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, அனைத்து ஊராட்சிகளையும், அவைகளின் தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், ஏறுமுகமாக வரிசைப்படுத்தி, முதலாமாண்டில் 6 முதல் 7 ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், இரண்டாவது வருடத்தில் அடுத்த 6 முதல் 7 ஊராட்சிகள் இத்திட்டத்தில் பங்கேற்கத் தகுதியுடையவையாகின்றன. இந்த முறையில் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும், பாகுபாடு ஏதுமின்றி ஒரே சீரான நிதிப் பங்கீடு மற்றும் திட்ட செயலாக்கம், இதன் மூலம் உறுதிப் படுத்தப்படுகின்றன. எனவே, வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், கிராம ஊராட்சிகளை ஏறுமுகமாக வரிசைப்படுத்தி, அதன்படி ஒவ்வொரு வருடமும் சுமார் 2,500 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்படும்.

## 9. இந்தப் புதிய திட்டத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

### I) வரையறுக்கப்படாத நிதி

ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒதுக்கப்படும் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத தொகையாக இருக்கும். இதிலிருந்து கிராமத்தின் முக்கியத் தேவைகளைப் பிரதிபலிக்கும் பணிகளை மேற்கொள்ள இயலும். எஞ்சிய ரூ.15 இலட்சத்தில் கீழ்க்கண்ட பணிகளை ஊராட்சி மேற்கொள்ளும். மேலும் வரையறுக்கப்படாத ரூ.5 இலட்சம் நிதியினை தேவைக்கேற்ப கீழ்க்கண்ட பணிகளையும் நிறைவேற்ற பயன்படுத்தலாம்.

### II) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

தமிழ்நாடு முழுவதும் சுமார் 27,000 கி.மீ. நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்தப் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படலாம். மேற்படி சாலைகளை அமைக்க சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி, பொது நிதி மற்றும் மாநில நிதிக்குழு மான்யம் ஆகியவை போதுமானதாக இல்லை. ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேற்படாமல் சிமெண்ட் கான்கீரீட் சாலைகள் அமைக்க வரையறை செய்யப்படுகிறது. சிமெண்ட் பாலங்கள் அமைப்பது மற்ற பொருட்களைப் பயன்படுத்துவது போன்ற மாற்றுத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்த ஊக்கப்படுத்தலாம்.

### III) தெரு விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள்

கட்டுமானங்கள் உள்ள மற்றும் கட்டுமானங்கள் இல்லாத பொது இடங்களில் தெருவிளக்குகள் அமைப்பது 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 110 (அ) மற்றும் 111 (ஆ) –ன்படி கிராம ஊராட்சியின் கடமையாகும்.

#### (அ) இதுவரை தெரு விளக்குகள் அமைக்கப்படாத இடங்களுக்கு தெரு விளக்கு வசதிகளை விரிவாக்குதல்

இப்பணி தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம். இத்திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகள் போன்ற விரிவாக்கப் பகுதிகள் மற்றும் புதியதாக ஏற்படுத்தப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்புப் பகுதிகளுக்குத் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, தெருவிளக்குகள் விரிவுபடுத்தப்படலாம்.

#### (ஆ) சோடியம் ஆவி விளக்குகள்

கிராமங்களில் மக்கள் கூடும் பொதுவான முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் வரையறைகளுக்குட்பட்டு அமைக்கப்படலாம்.

### IV. ஒரு கிராமத்திற்கு ஒரு குளம்

**கிராமங்களில் உள்ள குளம் குட்டைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தலை ஊராட்சியின் கடமை என ஊராட்சிகளின் விதி 110 (ஜி) வரையறை செய்கிறது**

அறுகிவரும் நீர் ஆதாரங்களால் நிலத்தடி நீரின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. கூடுதல் ஆழ்துளை குழாய் கிணறுகளின் மூலம் நீரினை உறிஞ்சுவதால் இப்பிரச்சினை மேலும் தீவிரமாகிறது. எனவே, உத்வேகத்துடன் மழை நீரை சேகரிப்பதின் மூலம் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவது அவசியமாகிறது. இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீரமைப்புகளின் கொள்ளளவை அதிகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் என்ற இத்திட்டத்தின் கீழ் இயந்திரங்களைக் கொண்டு குளங்கள், குட்டைகள், கோவில் குளங்கள், மற்றும் ஊருணிகளில் அதிகபட்ச தரம் மற்றும் சரியான அளவுகளுடன் அகலப்படுத்துவது மற்றும் ஆழப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். மேலும், தேவையான இடங்களில் கைப்பிடிச்சுவர், இறங்குபடிகள் மற்றும் வேலிகள் அமைப்பது போன்ற இதர அம்சங்களும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ், சிறுபாசன குளங்களை மேம்படுத்தக்கூடாது. மேலும், தொலைநோக்குப் பார்வையுடன், நீர் சேகரிப்பு திட்டப் பணிகள் முறையாக செய்யப்பட வேண்டும். சுற்றுச்சூழல் மற்றும் நீர்வளம் மேம்படும்.

இந்த வகையிலான பணியை குறைந்த பட்சம் ரூ.3 இலட்சம் செலவிலும் தேவையின் அடிப்படையில் அதிகபட்சத் தொகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குளம் அமைக்க ரூ.3 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யலாம்.

### V. உள்நாட்டு மீன்வளம் :-

உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவது உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இது நிலைகளை தூய்மைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடல்லாமல், ஊராட்சி வருவாயையும் அதிகப்படுத்துகிறது. மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, நிலையான வருமானம் ஈட்டும் தொழிலாகவும் இது விளங்குகிறது. குறைந்த முதலீட்டுடன் மீன்வளத்துறை ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் இதுபோன்ற மீன்வளத்தைப் பெருக்கி குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு உள்ளாட்சி நிறுவனங்கள் ஏலம் விட்டு வருவாயைப் பெருக்கும் உரிமையுடன் ஊரக உள்ளாட்சிகளிடம் ஒப்படைக்கலாம்.

இத்திட்டத்தில் ஒரு குளத்தை மேம்பாடு செய்ய சுமார் ரூ.25,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்படுகிறது.

### VI. இடுகாடு மற்றும் சுடுகாடுகள் :-

இடுகாடு மற்றும் சுடுகாடுகள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (எப்)–ன்படி ஊராட்சியின் கடமை ஆகும்.

இடுகாடு / சுடுகாடுகள் திறந்தவெளியாக உள்ளன. இத்தகைய இடுகாடு / சுடுகாடு பகுதிகளில் அடிப்படை வசதிகளும் குறைவு. ஊரகப் பகுதிகளில் முறையாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்ட இடுகாடு / சுடுகாடு என்பது அடிப்படைத் தேவையாகும். பல கிராமங்களில் சரியான இடுகாடு / சுடுகாடு இல்லை. அப்படியே இருந்தாலும் அவை அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமலேயே உள்ளன. ஆகவே, இத்திட்டத்தின் கீழ் முறையான வரையறை செய்யப்பட்ட எல்லைகள், சுற்றுச்சூழல், காத்திருப்போர் அறை, விளக்கு வசதி, நீர்வசதி போன்றவை செய்துதரப்படலாம். கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்படலாம். நாளடைவில் நடைபாதை வசதிகளை ஏற்படுத்தலாம். மேலும், கிராம ஊராட்சிகள், இடுகாட்டின் உள்ளேயும், சுற்றுப்புறங்களிலும் மரக் கன்றுகளை நடுவதன் மூலம், தூய்மையான சுற்றுச்சூழல் உருவாகும்.

### VII. குடிநீர் வழங்கல் :-

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (ஜி)–ன்படி கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது கிராம ஊராட்சியின் கடமையாகும்.



தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் பெரும்பான்மையானவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பட்டன. குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஊராட்சிகளின் பொறுப்பில் உள்ளன. மிகப்பழைய பம்புகள் மற்றும் குடிநீர் இணைப்புகளைக் கொண்டுள்ள இக்குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பது ஊராட்சிகளுக்கு மிகவும் கடினமாக உள்ளது. பழைய குடிநீர் இணைப்புகளில் உள்ள நீர்க்கசிவுகள் பல நோய்கள் பரவ காரணமாகிறது.

பழைய குடிநீர்த் திட்டங்களைப் புனரமைப்பது, தூர் வாருதல், அகழ்வு செய்தல், குடிநீர் குழாய் விஸ்தரித்தல், மின் பம்புகளைப் புதுப்பித்தல், போன்ற பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நெறிமுறைகளின் படி இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்துடன் தேவையான இடங்களில் கூடுதல் ஆதாரங்களையும் உருவாக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு பணிக்கு குறைந்தபட்சம் ரூ.1 இலட்சம் எனவும், தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் வரையறை செய்யலாம்.

### VIII. விளையாட்டு :–

விளையாட்டுத்திடல், பூங்காக்கள், விளையாட்டுக் குழுக்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111 (எச்)–ன்படி, ஊராட்சியின் கடமையாகும்.

விளையாட்டு நடவடிக்கைகள் இளைஞர்களின் சக்தியை நெறிப்படுத்தி, சமூக பொருளாதார பிரச்சினைகளைக் குறைப்பதற்கும்; ஊரக இளைஞர்களிடையே விளையாட்டுத் திறமையை உருவாக்குவதற்கும் பயன்படும். தேவையின் அடிப்படையில், மக்கள் கூடும் பொதுவான இடங்களிலும் பள்ளிகளிலும், விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த 2000–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "விளையாட்டு மற்றும் மனமகிழ்வு மன்றங்களை" புதுப்பிக்கலாம்.

கிராம இளைஞர்களுக்கான விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்க ஒரு கிராமத்திற்கு ரூ. 50,000 என வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. அல்லது அந்த கிராமத்தில் உள்ள பள்ளியில் விளையாட்டு மையம் அமைக்க ரூ. 1.50 இலட்சம் செலவு செய்யலாம்.

### IX. படிப்பகம் :–

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு III (ஜி) மற்றும் (ஐ) ன்படி, படிப்பகம் எழுத்தறிவு மையங்கள், அமைத்தல், மற்றும் பராமரித்தல் ஊராட்சியின் கடமையாகும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமுதாயக் கூடம் உள்ளது. அவை பெரும்பாலும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. இந்த சமுதாயக் கூடங்கள் அல்லது அதில் ஒரு பகுதியை படிப்பகங்களாகப் பயன்படுத்தலாம்; சமுதாயக் கூடங்கள் கிடைக்கப் பெறவில்லையெனில் அக் கிராமத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடம் அல்லது ஒரு பொது கட்டடம் படிப்பகமாக மாற்றியமைக்கப்படலாம்.

கிராமப்புறங்களில், செய்தித்தாள்கள், வார இதழ்கள் போன்ற பத்திரிக்கை படிக்கும் பழக்கத்தினை உருவாக்கிட தமிழ், ஆங்கில செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்களுக்கு கிராம ஊராட்சிகள் சந்தா செலுத்தி மகளிர் சுயஉதவிக்குழுக் கட்டடங்கள் அல்லது இதர பொதுவான மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் கிடைக்குமாறு நடவடிக்கை எடுக்கலாம். கேரம் போர்டு, சதுரங்கம், போன்ற உள்ளரங்க விளையாட்டுக்களை மேலும் ஊக்கப்படுத்தலாம். படிப்பகங்களாக பயன்படுத்தத்தக்க சமுதாயக் கூடங்கள், இதர பொதுக் கட்டடங்களை, சிறிய அளவில் பழுது நீக்கி பயன்படுத்தலாம். புத்தகம், மேஜை, நாற்காலி, அலமாரி போன்ற மரச்சாமான்கள் நன்கொடை வடிவில் வேண்டி பெறலாம்.

இவ்வாறு நிறுவப்படும் ஒவ்வொரு படிப்பகத்திற்கும் செலவு செய்ய ரூபாய் 1.00 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

### X. கிராம அங்காடிகள் / சந்தைகள்

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111 (சி), ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் / சந்தைகள் தவிர கிராம சந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு கிராம ஊராட்சியைச் சேர்ந்தது என குறிப்பிடுகிறது.

பொதுமக்களும், கால்நடைகளும், வழக்கமாகக் கூடும் கிராம அங்காடி மற்றும் சந்தைகள் நல்ல நிலையில் இல்லை. அவ்விடங்களில் சரியான சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் இல்லை. சரியான தரைத்தளம் இல்லாமலும், வியாபாரிகள் நிழலிடம் இல்லாமலும் நாள் முழுவதும் வெயிலில் அமரும் நிலை உள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் கிராம அங்காடிகளும், சந்தைகளும், புதுப்பிக்கப்படலாம். தரைத்தளமும், ஓடு வேய்ந்த மேற்கூரையும் அமைக்கலாம். பொதுமக்களுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான குடிநீர் வசதிகளும், செய்து தரலாம். பொது கழிப்பிடங்கள் / கழிப்பறைகளும் தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும்.

### XI. தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் (IEC)

இத்திட்டத்திற்கு, ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்படும் நிதியாகிய ரூ.500 கோடியில், ஒரு விழுக்காடு ஆகிய ரூ.5 கோடி நிதி தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பற்றியும், கல்வி, சுகாதாரம், துப்புரவு மற்றும் சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு இந்த நிதியினைப் பயன்படுத்தலாம். இந்த நிதியினை ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்தளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

### XII. பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துதல்

ஒவ்வொரு ஊராட்சிக்குமான ரூபாய் 20 இலட்சத்துடன் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், புதுவாழ்வுத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் நிதியினையும் ஒருங்கிணைத்து தேர்வு செய்யப்படும் கிராமங்களின் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் மிகவும் குறைந்த தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் கிராமங்கள் செயலாக்கத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றன. இந்த கிராமங்களில் செயல்படுத்தப்படுகின்ற பணிகள் 1994 –ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு உட்பட்டவையாகும். மீதம் உள்ள பணிகளைத் தேர்வு செய்வதற்கும், செயற்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி அல்லது தொடர்புடைய துறைகளுக்கு செயலாக்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். இத்திட்டங்களை செயல்படுத்திய பிறகு கிராமங்களில் விடுபட்டுள்ள அடிப்படை வசதிகள் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் (RIDF) கீழ் நிதி பெற்று நிறைவேற்றப்படும்.

11. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பயனடைய உள்ள கிராமங்களின் பட்டியல் ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரால் பின்னர் வெளியிடப்படும். மேலும், இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் செயற்பாட்டிற்கு உரிய நெறிமுறைகள் திட்ட வாரியாக தனியாக வெளியிடப்படும்.

12. இத்திட்டத்திற்கென அரசால் அனுமதிக்கப்படும் தொகையைப் பெற்று உரிய கிராம ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்கிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

13. இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் மதிப்பீட்டுக்கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

14. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 54117/ஊவ/2006, நாள் 08.9.2006–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் உத்தரவுப்படி//

க.அசோக் வர்தன் ஷெட்டி
அரசு செயலாளர்





# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தால் மணம் புரிந்தோரின் மனமகிழ்ச்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக முதற்கட்டமாக ரூபாய் 12 இலட்சத்து 75 ஆயிரம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு சமூகநலத்துறை மூலம் நிதி வழங்கப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு அரசு வழங்கும் திருமண உதவித் தொகை முழுவதும் நிறுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்பட்டதை ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி உத்தரவிட்டார். ஏழை தாய்மார்களும், இதுவரை திருமணமாகாத ஏழைப் பெண்களும் இத்திட்டத்தினை பெரிதும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் 57 ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 8 இலட்சத்து 55 ஆயிரம் திருமண உதவித் தொகையாக அவர்களது திருமணத்திற்கு முன்பாகவே வழங்கப்பட்டது.

இதுபோல், தமிழக அரசு சமூகநலத்துறை மூலம் மேற்கொள்ளப் படும் கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு முதல் கட்டமாக ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதி பெறப்பட்டு, இதுவரை 11 தம்பதியருக்கு தலா ரூபாய் 20 ஆயிரம் வீதம் ரூ.2 இலட்சத்து 20 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 7 இலட்சத்து 30 ஆயிரம் நிதி பெறப்பட்டு, இதுவரை 9 விதவை தாய்மார்களின் மகள்கள் திருமணத்திற்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் ரூபாய் 90 ஆயிரம் விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்களின் திருமண நிதியுதவித் திட்டத்தில் 2 பெண்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடநூல் வழங்கும் திட்டத்தில் 700 குழந்தை களுக்கு ரூபாய் 70 ஆயிரம் மதிப்பீட்டில் இலவச பாடநூல்கள் வழங்கப் பட்டுள்ளன.

தற்பொழுது மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கிய திருமண உதவித்தொகை மூலம் பொருளாதார வசதியற்ற நிலையில் தங்கள் மகள்களுக்கு நடக்காமல் இருந்த திருமணம், தற்பொழுது நடைபெற்றுள்ளது என்று உதவித் தொகை பெற்ற பெரம்பலூர் மாவட்டம், திருவெங்கனூர் கிராமத்தை சேர்ந்த ஆனந்தவள்ளி, நல்லநாயகபுரம்

கிராமத்தை சேர்ந்த கலையரசி, விளாக்குறிச்சி செந்தாமரை, எசனை கீழக்கரையை சேர்ந்த மல்லிகா, செஞ்சேரி சிவமாலை ஆகியோர் மனம் நெகிழ்ந்து தங்களது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து உள்ளார்கள்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் தரம் உயர்த்தப்பட்ட 8 அரசு பள்ளிகளில் 1,133 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு அடிப்படை இலவச கல்வி**

தமிழக அரசு அறிவித்த 100 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதில் பெரம்பலூர் மாவட்டத்தில் 8 அரசு பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன. இதன்மூலம் அடிப்படை கல்வி கனவாக இருந்த 1133 ஏழை மாணவ, மாணவியர்கள் இலவசமாக அடிப்படை கல்வி பயிலும் வாய்ப்பு பெற்றுள்ளனர். தமிழக அரசு அறிவித்த 100 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்ட திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில்

1. அனுக்கூர் அரசு உயர்நிலைப்பள்ளி – அரசு மேல்நிலைப் பள்ளியாகவும்.

2. கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி – அரசு மேல்நிலைப்பள்ளியாகவும்

3. மீன்சுருட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி – அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டன. மேலும் கீழ்காணும் 5 அரசு உயர்நிலைப்பள்ளிகளும் உருவாக்கப்பட்டன.

1. அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து – அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி புதிதாக தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2. சிறுகடம்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும்

3. அருங்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப்பள்ளியாகவும்

4. பெரியதத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும்

5. சோழன் குடிகாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தி உத்தரவுகள் வழங்கப்பட்டு மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் அரசு உயர்நிலைப்பள்ளிகளும், அரசு மேல்நிலைப்பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளதுடன், மகளிர் கல்வியை ஊக்கப்படுத்திட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிகளும், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளது. பெரம்பலூர் கிராமப்புற ஏழை மாணவ, மாணவிகளின் அடிப்படை கல்வி வசதிக்கு பெரிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பள்ளிகள் இந்த ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டதன் மூலம் மட்டும் கிராமப் பகுதிகளில் 600 மாணவர்களும், 533 மாணவிகளும் அடிப்படை உயர்கல்வி பெற இலவச வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வி தரத்தில் மிகவும் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் பெற்றிடவும் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை அனைத்து தரப்பு பொதுமக்களும் பெற்றோர்களும் அரசின் நல்ல செயல்பாடாக வரவேற்று அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
பெரம்பலூர்





## கோ-ஆப்டெக்ஸ் நிறுவன பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை

**கோ**–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழக அரசு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 2005–2006 ஆம் ஆண்டிற்கு தீபாவளி போனஸ் 8.33 சதவிகிதம் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும், உச்சவரம்பாக ரூ.3,000/–ஐ வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி 1,069 கோ–ஆப்டெக்ஸ் பணியாளர்கள் பயனடைவார்கள்.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் தீபாவளி போனஸ் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்கள். □

அறிந்து கொள்வோம் அறிவியல்

## பாலூட்டிகள்

*குட்டி போட்டு பால் கொடுத்து வளர்க்கும் விலங்குகளை பாலூட்டிகள் என அழைக்கிறோம். மனிதர்களாகிய நாமும் பாலூட்டிகளே. பாலூட்டிகளுக்கு உடலில் முடிகள் காணப்படும். பாலூட்டிகளின் இரத்தம் சற்று சூடாக (Warm blood) இருக்கும். டால்பின், திமிங்கலம் போன்றவை கடலில் வாழும் பாலூட்டிகள் ஆகும். உலகில் சுமார் 5,000 வகையான பாலூட்டிகள் இருக்கின்றன.*



*பாலூட்டிகள் தாவர மற்றும் இறைச்சி உணவை உண்டு வாழ்கின்றன. சில பாலூட்டிகள் பூச்சிகளை சாப்பிட்டு வாழ்கின்றன. சில வகை பாலூட்டிகள் தாவர உணவு மற்றும் இறைச்சி உணவு இரண்டையும் உண்டு வாழ்கின்றன. சில வகை பாலூட்டிகள் தாவர உணவை மட்டுமே உண்டு வாழ்பவையாகவும் உள்ளன. இதே போல சில வகை பாலூட்டிகள் இறைச்சி உணவை மட்டுமே சாப்பிட்டு வாழ்பவையாகவும் இருக்கின்றன.*



*குதிரைகள், மாடுகள் போன்றவை தாவரங்களை (Herbivores) மட்டுமே சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள் ஆகும். புலி, சிங்கம் போன்றவை இறைச்சிகளை (Cornivores) மட்டுமே சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள். மனிதர்கள், கரடிகள் போன்றவை தாவரம் மற்றும் இறைச்சிகள் (Omnivores) இரண்டையும் சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள். எறும்புத் தின்னி போன்றவை பூச்சிகளை (In-sectivores) தின்று வாழும் பாலூட்டிகள்.*



*மிக வேகமான பாலூட்டி சிறுத்தை ஆகும். இவை மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்டவை. தேவாங்கு எனும் பாலூட்டியே மிக மந்தமான பாலூட்டியாகும். இவை மணிக்கு ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் மட்டுமே ஓடும். பாலூட்டிகளிலேயே மிகப்பெரிய பாலூட்டி நீலத்திமிங்கலம்தான். இது கடலில் வாழும் பாலூட்டியாகும். நிலத்தில் வாழும் பாலூட்டிகளில் மிகப்பெரியது ஆப்பிரிக்க யானையாகும்.* ●

# படமும் செய்தியும்



16.10.2006 அன்று, தலைமைச் செயலகத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
தலைமையில் 10ஆவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களை, 3.10.2006 அன்று சிங்கப்பூர் வெளியுறவுத்துறை இணைஅமைச்சர் டாக்டர் பாலாஜி சதாசிவன் அவர்கள் சந்தித்துப் பேசினார்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களை, 26.10.2006 அன்று ஜெர்மன் நாடு –ஹேம்பர்க் மாநிலத்தின் மாநகர வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் மைக்கேல் ஃபிரெடேக் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவினர் சந்தித்து, ஜெர்மன் நாட்டில் உள்ள ஹேம்பர்க் மாநகருக்கும் சென்னை மாநகருக்கும் இடையே மாநகர வளர்ச்சி, குடிநீர் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் எரிசக்தி மேம்பாடு ஆகியவை குறித்துப் பேசினர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள் முன்னிலையில், 30.10.2006 அன்று தமிழகத்திற்கும் தெற்கு ஆஸ்திரேலியாவிற்கும் இடையே தொழில் வர்த்தக முதலீடு செய்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தெற்கு ஆஸ்திரேலிய முதல்வர் மைக்ரான் மற்றும் எத்னே லாஞ்ஜூ, ரேமண்ட் காரண்டு, ஏ.கே. தரீன், லட்சியான் பார்க்கர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப, தொழில்துறைச் செயலாளர் திரு.சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப, மற்றும் டாக்டர் டி.வி. சோமநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# பொதுமக்கள் மனுக்கள் உடனுக்குடன் தீர்வு

மலைகளின் அரசி என வர்ணிக்கப்படும் நீலகிரி மாவட்டம் பல்வேறு இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்ட மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் தோடர், கோத்தர், குரும்பர், இருளர், படுகர் போன்ற பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் மலைப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தங்களின் தேவைகளை, அரசு மூலம் கிடைக்கக் கூடிய பயன்களைப் பெற ஆட்சியர் அலுவலகம் வந்து செல்ல பெரும் சிரமப்பட்டனர். நிலையை அறிந்த மாவட்ட நிருவாகம் பொதுமக்கள் வசதிக்காக "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.



இம்மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு மாவட்ட நிருவாகம் "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியுள்ளது. அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் திட்டம் செயல்படுத்தும் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று தேவையான சேவைகளை அந்த இடத்திலேயே செய்து கொடுப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ், பிறப்பு இறப்புச் சான்றிதழ், நில ஆவணங்களின் நகல், பட்டா மாறுதல், முதியோர் ஒய்வூதியம் ஆகிய கோரிக்கைகள் அந்த இடத்திலேயே நிறைவேற்றப்படும். இதுபோன்ற மனுக்கள் தொடர்பாக குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு உத்தரவுகளை உடனே வழங்குவதற்காக கணினியும், நில ஆவண மென்பொருளும் அந்த கிராமத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இத்திட்டம் முதற்கட்டமாக 13.9.2006 அன்று கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தும்மனட்டி கிராமத்தில் மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற சிறப்புத் திட்டத்தின் தொடக்க நாள் அன்று பல்வேறு கோரிக்கைகள் உள்ளடக்கிய 510 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதின் பயனாக 303 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டன.



இத்திட்டத்தினை துவக்கி வைத்த மாண்புமிகு கதர் வாரியத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் விழாவில் பேசும்போது கூறியதாவது :

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு செயல்படுத்தியதின் மூலம் இம்மாவட்ட விவசாயிகளுக்காக அவர்கள் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன் ரூ.101 கோடி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் விவசாய பெருமக்கள் மிகவும் மகழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேபோன்று ரூ.2க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் ஏழை, எளிய தாய்மார்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதேபோன்று சத்துணவு சாப்பிடும் பள்ளிக் குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக வாரந்தோறும் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்தார். மக்களுக்காக மக்கள் நலனுக்காக ஜனநாயக முறையில் நடைபெறும் கலைஞர் ஆட்சியில் மக்கள் அனைத்து நலமும், வளமும் பெற்று வாழ இதுபோன்ற "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற சிறப்புத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இத்திட்டம் அடுத்ததாக கல்லட்டி, மசினகுடி, கூடலூர், பந்தலூர் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு எவ்வித குறையும் இல்லை என்ற நிலையை உருவாக்க அனைத்து கிராமங்களிலும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது", இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் நலனே முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசுக்கு மேலும் பெருமையும் புகழும் சேர்க்கும் வகையில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா அவர்களின் சீரிய முயற்சியில் "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் சீரிய முயற்சியால் பயன்பெற்ற பொதுமக்கள் தங்களின் நன்றியை அரசுக்குத் தெரிவித்தனர் என்றால் அது மிகையாகாது.

*செய்தி–மக்கள்தொடர்பு அலுவலர்,*
*நீலகிரி மாவட்டம்.*

O O O O

## 38ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்கள்

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1. | Ashtray | புகைத்தட்டம் |
| 2. | Bedlam | அமளிதுமளி |
| 3. | Bio-heritage | உயிரி மரபியம் |
| 4. | Bio-Diversity | உயிரினப் பன்மை |
| 5. | Bio-Resources | உயிரின வளம் |
| 6. | Compere | இணைப்புரையர் |
| 7. | Coupons | உரிமைச்சீட்டு, பெறுகைச்சீட்டு |
| 8. | Episode | தொடர்கண்ணி |
| 9. | Disruption | ஊடறுப்பு சீர்குலைப்பு |
| 10. | Damp - proof | ஈரக்காப்பு |
| 11. | Fool - proof | தெற்றும் |
| 12. | Frantic Search | பதைப்புத் தேடல் |
| 13. | Dampening | தணிப்பு |
| 14. | Lipstick | இதழ்ப்பூச்சு |
| 15. | Lounge | இடைக்கட்டு |

– தமிழ் வளர்ச்சித் துறை



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 30.10.2006 அன்று, சென்னையில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு.கோ.சி. மணி, திரு. பரிதி இளம்வழுதி, திருமதி. டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா மற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. கம்பம். பெ. செல்வேந்திரன் ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 99ஆவது பிறந்தநாள் மற்றும் 44ஆவது குரு பூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் உள்ள தேவர் நினைவிடத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.



# அரசு வழங்கிய 2 ஏக்கர் நிலத்தில்

## குச்சிக்கிழங்கு பயிரிடும் ஏழை விவசாயி

ஏழை, எளியோர்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற பல திட்டங்களை உருவாக்கி அரசு செயல்படுத்தி வருகிறது. அரசு பொறுப்பேற்ற 100 நாட்களில் 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் ரத்து, மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டுமுறை முட்டை, திருமண நிதியுதவி ரூ.15,000 ஆக உயர்வு, கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 6,000 உதவி, 13,000 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் வேலை, முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகை இரட்டிப்பாக உயர்வு உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பேறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்றும் நிலமற்ற ஏழை விவசாயகுடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலம் தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்றும் ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்டன.

ஈரோடு மாவட்டத்தில் 17.9.2006 அன்று தந்தை பெரியார் பிறந்த நாளில் நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இந்த 2 ஏக்கர் நிலம் பெற்ற ஏழை விவசாயிகள் இருவரை நேரில் சந்தித்து இத்திட்டம் குறித்து அவர்களிடம் பேட்டி காணப்பட்டது.

ஈரோடு வட்டம், சிவகிரி 'பி' கிராமம் பொரசமேட்டுப்புதூர் என்பதாகும். இப்பகுதியில் தென்னை செழித்தோங்கியுள்ளது. மஞ்சள் மற்றும் கரும்பு பயிரிடப்பட்டுள்ள விவசாய பூமியாகும். இங்கு வசித்து வரும் பூவாத்தாள் (வயத 47) என்பவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராவார். இவர் நிலமற்ற ஏழை விவசாயக் கூலி. விவசாய நிலங்களில் களை எடுத்தல், நெல் பயிரிடுதல், நிலங்களில் கல் பொறுக்குதல் போன்ற கூலி வேலை செய்து வருகிறார். இதன் மூலம் இவருக்கு நாள்தோறும் ரூ. 30 கூலியாக கிடைக்கிறது. ஒரு மாதத்தில் இவருக்கு 15 நாட்கள் மட்டுமே கூலி வேலை கிடைக்கிறது. இவர் மட்டுமல்லாமல் இவருடைய கணவர் சண்முகம், மகன் விஜயகுமார் ஆகியோரும் விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர். இவருடைய மகன் +2 வரை படித்துள்ளார். வறுமையின் காரணமாக இவரும் தாய் தந்தையருக்கு துணையாக இருந்து கூலி வேலை செய்து வருகின்றனர். விவசாய கூலி வேலைக்கு சென்று வரும் இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1500 வருமானம் கிடைக்கின்றது. இந்த குறைந்த வருமானத்தின் மூலம் குடும்பத்தை நடத்துவது என்பது சிரமமாக உள்ளதென திருமதி. பூவாத்தாள் தெரிவித்தார்.

ஆனாலும், தொடர்ந்து கூலி வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு அரசு நிலம் வழங்குகின்றது என்பதை கேள்வியுற்று வருவாய்துறை அலுவலர்களை அணுகியுள்ளனர். நிலமற்ற ஏழை விவசாயிகள் என்பதால் இவர்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலப்பட்டா 17.9.2006 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்களால் வழங்கப்பட்டது.



2 ஏக்கர் நிலம் பெற்ற திருமதி. பூவாத்தாள் தெரிவித்ததாவது:-

எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ள கற்கள் அகற்றப்பட்டு சமன்படுத்தப்பட்டுள்ளது. இதில் ரோஸ் என்னும் ரக குச்சிக்கிழங்கு பயிர் செய்யப்பட உள்ளது. இப்பயிருக்குத் தேவையான தண்ணீர் பக்கத்து நிலத்துக்காரரிடமிருந்து பெற்று விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும். குச்சிக்கிழங்கு 8 முதல் 10 மாத பயிராகும் இதற்கு மிதமான தணணீர் தேவை. குச்சிக்கிழங்கு போடுவதன் மூலம் உழவு செலவு, உரச்செலவு போன்றவை ஏக்கருக்கு ரூ. 8,000 செலவாகும். 2 ஏக்கருக்கு ரூ.16,000 செலவாகும். இதன் மூலம் 16 டன் கிழங்கு அறுவடை செய்யலாம். தற்போது 1 டன் கிழங்கு ரூ.2,000 முதல் ரூ.2,500 வரை விற்பனை செய்யப்படுகிறது. 2 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படும் குச்சிக்கிழங்கு ரூ.32,000-க்கு விற்பனையாகும். இதில் குச்சிக்கிழங்கு பயிர் செய்வதற்காக செலவிடப்படும் தொகை ரூ.16,000 போக மீதம் ரூ. 16,000 வருமானமாக கிடைக்கும். இதன் மூலம் எங்கள் குடும்பம் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும். நாங்கள் இதுவரை நிலமில்லாமல் இருந்து கூலி வேலை செய்து வந்தோம்.

2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம் ஏழை எளியவர்கள் பயன்படும் திட்டமாகும். இந்தத் திட்டத்தினால் எங்களுக்கு சொந்தமாக நிலம் கிடைத்துள்ளது. அரசு மூலம் நிலம் கிடைக்கும் என நாங்கள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. நாங்கள் எங்களுடைய நிலத்தில் நன்றாக பயிர் செய்து பிழைத்துக் கொள்வோம். எங்களின் வாழ்வு வளமடைய நிலம் வழங்கிய அரசுக்கும், முதல்வருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றனர் இவரது குடும்பத்தினர்.

இதேபோன்று, புரசைமேட்டுப்புதூரைச் சேர்ந்த மற்றொரு ஏழை விவசாயியான கண்ணம்மாள் (வயது 45) என்பவருக்கும் 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இவருக்கு கணவர் மற்றும் 2 மகன்கள் உள்ளனர். இவர் நிலமில்லாத ஏழை விவசாய கூலி தொழிலாளி, தினம் கூலி வேலைக்கு சென்று வருகிறார். விவசாய கூலி வேலை மூலம் மாதந்தோறும் இவருக்கு ரூ.1500 வரை கிடைக்கிறது. இவர் மிகவும் சிரமப்பட்டு வந்துள்ளார். தற்போது இவருக்கு அரசு 2 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. இந்த தரிசு நிலம் இவருடைய பராமரிப்பில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. தற்போது இந்த நிலம் இவருக்கு சொந்தமாகியுள்ளது. இதில் குச்சிக்கிழங்கு பயிரிட்டுள்ளார். இவருடைய நிலத்திற்கு தண்ணீர் பிரச்சினையில்லை. பக்கத்து நிலத்துக்காரரிடமிருந்து தண்ணீர் பெற்று விவசாயம் செய்கிறார். இவருக்கு குச்சிக்கிழங்கு பயிரிடுதல் மூலம் விவசாய செலவினங்கள் போக வருடத்திற்கு ரூ.10,000 முதல் ரூ. 15,000 வரை வருமானம் கிடைக்கிறது. இது தவிர இவரும் இவரது குடும்பத்தினரும் கூலி வேலைக்குச் சென்று வருகின்றார்கள். கூலி வேலை செய்து பிழைத்து வந்த எங்களுக்கு அரசாங்கம் 2 ஏக்கர் நிலத்தை வழங்கி சொந்தமாக்கி உள்ளது என்று கூறுகிறார். இந்நிலத்தில் நல்லமுறையில் விவசாயம் செய்து மேன்மைக்கு வருவோம் என்கிறார். பல வருடங்களாகச் சிரமப்பட்டு வந்த எங்களுக்கு அரசு நல்ல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்நிலத்தில் விவசாயம் செய்து வருமானத்தை பெருக்கிடுவோம். விவசாய கூலியாக இருந்த எங்களை அரசு, நிலத்துக்கு சொந்தகாரராக ஆக்கி பெருமைப்படுத்தியுள்ளது. சமூகத்தில் நல்ல அந்தஸ்தை அரசு உருவாக்கி தந்துள்ளது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம் என்று மனம் நெகிழ சொன்னார் திருமதி. கண்ணம்மாள்.

2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் 430 நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 561.89 ஏக்கர் நிலம் 17.9.2006 அன்று நடைபெற்ற அரசு விழாவில் வழங்கப்பட்டது.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.





தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

எச்.ஐ.வி உள்ளோருக்கு...
அன்பைத் தந்து
அரவணைப்போம்
ஆதரவாகத் துணை
இருப்போம்!



சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு
மற்றும் கட்டுப்பாடு சங்கம்
மயிலாப்பூர், சென்னை - 4

மேலும் விபரங்களுக்கு இலவச தொலைபேசி சேவையைத் தொடர்பு கொள்ளுங்கள். 1097

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

நவம்பர் 2006 ரூ.10/-




## தமிழ் மாநிலம் அமைந்த 50ஆம் ஆண்டு பொன்விழா





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
11.11.2006 அன்று, திருச்சிராப்பள்ளியில்.
வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகை திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
11.11.2006 அன்று, திருச்சிராப்பள்ளி பாலக்கரை ஹீபர் சாலை சந்திப்பில் ரூ.16 கோடி செலவில்,
புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தைத் திறந்துவைத்து,
அதற்கு "சிங்கத்தமிழன் சின்னச்சாமி-சண்முகம் பாலம்" என்று பெயர் சூட்டினார்.

# தமிழரசு


செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2006
மலர் : 38 இதழ் : 5


## இந்த இதழில்...


**சமத்துவப் பெருவிழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை...** 2

**தமிழ் மாநிலம் அமைந்த 50 ஆம் ஆண்டு பொன்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை** 14

**அயல்நாட்டினரை ஈர்க்கும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை** 30

**தமிழகத்தில் நேரு** 37

**சட்டை - சிறுகதை** 52

**மதிப்புக் கூட்டுவரியின் சிறப்பு அம்சங்கள்** 74


முதலாம் பக்க அட்டை :

சென்னையில்
1.11.2006 அன்று நடைபெற்ற
தமிழ் மாநிலம் அமைந்த
50 ஆம் ஆண்டு பொன்விழா.

நான்காம் பக்க அட்டை :

சென்னையில்
13.11.2006 அன்று நடைபெற்ற
சமத்துவப் பெருவிழா

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

"வாராது வந்த மாமணி" என்பது போல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா. குறள் : 101

**– கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம் , ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

# பத்தாண்டுகால ஜனநாயகப்பட்டினி போக்கப்பட்டுள்ளது

சென்னை
கலைவாணர் அரங்கத்தில்,
13.11.2006 அன்று நடைபெற்ற
**சமத்துவப் பெருவிழா** நிகழ்ச்சியில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை

**தொ**டக்கத்திலே வரவேற்புரையாற்றிய உள்ளாட்சித்துறை செயலாளர் அசோக் வர்தன் ஷெட்டி பேசும் போது "இது ஒரு வித்தியாசமான விழா" என்று சொன்னார். அல்ல, இது வித்தியாசத்தைப் போக்குவதற்காக நடத்தப்படுகின்ற விழா. வித்தியாசம் போக்கப்பட்டு, அதைப் பாராட்ட நடைபெறுகின்ற விழா. இந்த விழாவிலே கலந்து கொண்டு அருமைத் தலைவர்களும், கவிஞர்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும், எங்களையும், நான்கு ஊராட்சிகளில் வெற்றிபெற்ற குறிப்பாக பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் வெற்றி பெற்ற தலைவர்களுக்கு பாராட்டும் வழங்கியிருப்பது எங்களுடைய மற்றும் அவர்களுடைய எதிர்காலப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரக் கூடியவை என்பதை முதலில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றுதான் உலகில் எல்லா தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக தொண்டாற்றியிருக்கிறார்கள். அந்தத் தொண்டு வெற்றி பெற்றதா, அல்லது வெற்றி பெற முடியுமா என்ற இந்தக்







கேள்விகளுக்கெல்லாம் ஒரு கடந்த பத்து அல்லது இருபதாண்டுகளுக்கு முன்பே பதில் காண்பது எளிய காரியமாக இல்லை. ஆனால் இன்றைக்கு பதில் காணுகின்ற வலிமையை நாமெல்லாம் பெற்றிருக்கிறோம் என்றால், இந்த வலிமையை நமக்குத் தந்தவர்கள்தான் தந்தை பெரியார் அவர்களும் அவர்களுடைய வழி நின்று இந்த இயக்கத்தை கட்டிக் காத்தவர்களும், இன்றைக்கும் நமக்கெல்லாம் உரமாகத் திகழ்பவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.

## "சாதி" தமிழ் அகராதியிலே இல்லை

எப்படிப்பட்ட சமுதாயம் நம்முடைய சமுதாயம் என்பதற்கு கடந்த காலத்தில் இந்தச் சமுதாயத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டவர்கள் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டியிருந்தது என்பதை எண்ணிப் பார்த்தாலே நாம் அதைப் புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக "சாதி" என்ற இந்தச் சொல் தமிழ் அகராதியிலே இல்லை. சாதி என்பது தமிழனுக்கு என்றைக்கும் இருந்த தில்லை. சதி என்ற ஒரு சொல் இருந்து; அதற்குக் கால் முளைத்து "சாதி" என்று ஆகிவிட்டது. அந்தக் கால் முளைத்த "சாதி" தமிழனை பல்வேறு கூறுகளாக ஆக்கி, சமுதாயத்திலே பல்வேறு முரண்பாடுகளை, வேறுபாடுகளையெல்லாம் உருவாக்கி, ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ள, ஒருவரையொருவர் வீழ்த்த, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த பயன்படுத்தப்பட்டது.

அதை சரியான நேரத்தில் கண்டு கொண்டு இதை வீழ்த்தினால்தான் சமுதாயம் ஒட்டுமொத்தச் சமுதாயம் வாழ முடியும் என்று கண்டவர்கள் பலர் என்றால், அதை செயல்படுத்த துணிந்த ஒரே தலைவர் நம்முடைய தந்தை பெரியார் அவர்கள்தான். அவர்கள் அதைச் செயல்படுத்திய காரணத்தால்தான் சாதி ஒழிப்பு மாநாடுகள், சாதி ஒழிப்புக் கூட்டங்கள், சாதி ஒழிப்புச் செயல்பாடுகள் என்ற இவைகளையெல்லாம் அவர்களுடைய போராட்டங்களிலே வரிசைப்படுத்தி நடத்திக் காட்டினார்.

தந்தை பெரியார் அவர்கள் இந்தப் பிரச்சாரத்தை செய்து நம்மையெல்லாம் இந்த அளவிற்கு திருத்தியிருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திராவிட இயக்கம் தோன்றிய அந்தக் காலத்தில் நான் அந்த இயக்கத்தோடு சேர்ந்து தோன்றியவன் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய அருகதை எனக்கில்லாவிட்டாலும் அந்த வயது எனக்கு அப்போது இல்லாவிட்டாலும் கூட, அந்த இயக்கத்தினுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்லுகின்ற ஆரம்ப காலத்திலே மிக இளைஞனாக, கூட்டங்களில் பேசும்போது, கிராமங்களிலே நான் எடுத்துச் சொன்னக் கருத்து, கிராம மக்களுக்கு அவர்களுடைய உள்ளத்திலே பதிந்த கருத்து, பதியக் கூடிய அளவிற்கு இருந்த கருத்து, நான் எடுத்துக் காட்டிய கருத்து, அது என்னவென்றால், கிராமவாசிகளைப் பார்த்துச் சொல்வேன், என்னுடைய கூட்டங்கள் நடைபெறுகின்ற கிராமங்களில் இன்றைக்கு பல்லாயிரக் கணக்கிலே மக்கள் கூடலாம், அன்றைக்கு 100 பேர், 200 பேர் கூடியிருக்கின்ற அந்தக் கூட்டங்களில் நான் பேசியிருக்கிறேன், இன்னும் எனக்கு நினைவு இருக்கின்றது.



## சாதி ஆணவம் பிள்ளைகளின் படிப்பிலே நஞ்சாகத் தடவப்பட்டிருக்கிறது

பள்ளிக்கூடத்திலே சென்று பாடப் புத்தகத்தை வாங்கி, புரட்டிப் பாருங்கள், பெரியோர்களே, தாய்மார்களே, என்று ஆரம்பித்து, அந்தப் புத்தகத்தை நீங்கள் புரட்டிப் பார்த்தால், நம்முடைய பெரியவர்கள், நம்முடைய ஊரிலே இருக்கின்ற தொழிலாளிகள், ஊரைக் காப்பாற்றக் கூடியவர்கள் படங்கள் எல்லாம் அதிலே இருக்கும், அவர்கள் செய்கின்ற தொழிலும் அதிலே அச்சியற்றப்பட்டிருக்கும். படங்கள் வடிவில்.

குயவன் மண்பாண்டம் செய்கிறான், உழவன் ஏர் உழுகிறான், கருமான் வேலை செய்கிறான் என்றும், தச்சன் நாற்காலி செய்கிறான் என்றும் "ன்'' விகுதியிலே முடிகின்ற அந்த வாசகங்களுக்கு அடுத்து, அடுத்த பக்கத்தைப் புரட்டினால், "அய்யர் பூஜை செய்கிறார்'' என்றிருக்கும். ஆக அந்தக் காலத்திலேயே இந்தச் சாதித் திமிர், சாதி ஆணவம் நம்முடைய ஆரம்பக் காலத்து பிள்ளைகளின் படிப்பிலேயே நஞ்சாகத் தடவப்பட்டிருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்பதை நான் மக்களிடத்திலே பிரச்சாரம் செய்தது இன்னமும் நினைவில் இருக்கிறது.

### பட்டினி கிடந்தன ஜனநாயகம்

ஆனால் இன்னமும் அந்த நிலையே இருக்கிறது. அதை தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அது இருந்த காரணத்தினால்தான் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி இவைகள் எல்லாம் பத்தாண்டு காலமாக ஜனநாயகப் பட்டினி கிடந்தன. அந்தப் பட்டினி இன்றைக்குப் போக்கப்பட்டு, ஜனநாயக உணவை அவர்கள் உட்கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதற்கு நம்முடைய உழைப்பும் தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலே நாம் ஏற்றுக் கொண்ட தியாகங்களும் என்பதை தயவுசெய்து நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது.

இன்று இந்த நிகழ்ச்சியில் உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் இந்தப் புதிய வரவுகளுக்கு பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய உள்ளாட்சித் தலைவர்களுக்கு உற்சாகமளிக்கின்ற வகையில் ஒவ்வொரு ஊருக்கும் இருபது இலட்ச ரூபாய் அந்த ஊர் மக்களுடைய வசதி வாய்ப்புகளுக்காகச் செலவழிக்கப்படும், வழங்கப்படும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார். உள்ளாட்சித்துறை அமைச்சர் கூறினார் என்றால், முதலமைச்சர் சொல்லித்தான் கூறியிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே தகுந்த முறையில் அவைகள் செலவழிக்கப்பட இங்கே பேசிய நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய, அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு அது நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மூலமாக நான்கு ஊர்களுக்கு 80 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றாலுங் கூட, இங்கே பரிசுகள் எல்லாம் வழங்கப் பட்டன. நம்முடைய தொல்.திருமாவளவன் அவர்கள் விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் சார்பாக ஒரு பட்டயத்தையே எனக்குத் தந்து, என்னை "சமத்துவப் பெரியார்'' என்று பட்டம் சூட்டி உங்கள் கைதட்டல் மூலமாகவும் அதை ஆமோதிக்க வைத்திருக்கிறார்.



### தலித் மக்களின் சார்பில் தரப்பட்ட பட்டம்

இதை திருமாவளவன் தந்த பட்டம், தலித் மக்களின் சார்பாக தந்த பட்டம் என்ற முறையில் அதை நான் பெரிய விருதாக கருதிக் கொண்டாலும் கூட, "சமத்துவப் பெரியார்'' என்றுநான் என்னை அழைத்துக் கொள்ள அருகதையும் உள்ளவனாக கருதவில்லை. நான் பெரியாருக்குப் பேரன், பெரியாரிடம் மாணவனாக இருந்தவன். 1945ஆம் ஆண்டு இங்கே குறிப்பிட்டார்களே, அதைப் போல பாண்டிச்சேரியில் அடிபட்டு வீழ்ந்து, உடம்பெல்லாம் காயத்தோடு உயிர் போய் விட்டதென்று, என்னை பகைவர்கள்



விட்டுச் சென்ற பிறகு, அண்ணன் தளபதி அழகிரிசாமி அவர்களின் உதவியோடு பெரியார் தங்கியிருந்த இடத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டு, பெரியார் அவர்கள் என்னை ஆரத் தழுவி, என்னுடைய காயத்திற்கு மருந்து போட்டு, அங்கிருந்து என்னை வா, ஈரோடு குடியரசு அலுவலகத்திற்கு என்று அழைத்துச் சென்றாரே, அப்படி அழைத்துச் சென்றபோது, குடியரசு துணை ஆசிரியனாக நான் பணியேற்று, அந்தப் பணியை தொடர்ந்தபோது குடியரசு பத்திரிகையில் நான் எழுதிய ஒரு கட்டுரை "தீட்டாயிடுத்து'' என்பதாகும். ஏன் இப்படி எழுதினேன் என்றால், அதற்கு முதலில் ஒரு கட்டுரை எழுதினேன்.

திருவண்ணாமலையிலே தீபம், அதைப்பற்றி எழுது பார்க்கலாம் என்று பெரியார் அவர்கள் என்னைச் சோதித்துப் பார்த்தார். நான் அந்தக் கட்டுரைக்கு "அண்ணாமலைக்கு அரோகரா'' என்று தலைப்பிட்டு எழுதினேன். அது அச்சடித்து வந்த பிறகு அதைப் படித்துப் பார்த்து பெரியார் அவர்கள், நன்றாக இருக்கிறது, இருந்தாலும் இப்படி "அ'' னாவுக்கு "அ''னா போட்டு, அலங்காரமாக எழுதினால் எனக்குப் பிடிக்காது, விஷயத்தை மட்டும் சொல் என்றார்கள். அப்போதே எனக்கு பெரியார் ஆசிரியராகி விட்டார் என்பதை நீங்கள் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

### சாதி ஒழிப்புக்குப் பயன்பட்ட பெரியாரின் கொச்சைத் தமிழ்

சரி, அய்யாவுக்கு என்ன எழுதினால் – எப்படி எழுதினால் பிடிக்கும் என்பதை யூகித்து தெரிந்து கொண்ட நான், இன்னும் இரண்டு நாள் கழித்து பார்க்கலாம் என்று இருந்தபோது, ஒரு சம்பவம் நடந்தது. அதுவும் சமத்துவத்தை உள்ளடக்கிய சம்பவம்தான். திருவையாறு உங்களுக்குத் தெரியும். அந்தத் திருவையாறில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தியாகய்யர் உற்சவத்தில் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா பாகவதர்களும், பாடகர்களும் வந்து இலவசமாகவே கச்சேரி நடத்துவார்கள். அப்படி நடத்தியபோது பெரியவர் ஒருவர், உயர்சாதிக்காரர், நல்ல சங்கீத வித்வான் ஒருநாள் வந்தார். இங்கே யார் எல்லாம் பாடினார்கள் என்று கேட்டார். இன்னின்னார் பாடினார்கள் என்று சொன்னார்கள். சொன்னவுடன் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் கேட்டார். அவர் எல்லாவற்றையும் தமிழாகவே பாடியிருப்பாரே, தமிழ் இசையே பாடியிருப்பாரே என்றார். ஆமாம், தமிழ் இசைதான் பாடினார். பாடியவர் தண்டபாணி தேசிகர் என்று சொன்னவுடன், சேச்சே, தமிழ் இசையே பாடப்பட்ட இந்த மேடை தோஷமாகி விட்டது, தீட்டாகி விட்டது, எனவே இங்கே புண்யாஜனம் செய்து, இந்த மேடையை புனிதமாக்கி விட்டு, அதற்குப் பிறகுதான் நான் இங்கே உட்கார்ந்து பாடுவேன் என்று சொல்லி விட்டார்.

இது பத்திரிகைகளிலே வந்த செய்தி, நான் புதிதாக கற்பனை செய்து சொல்கின்ற சொல் அல்ல. ஏடுகளிலே அப்போது வந்த செய்தி. அப்படியே தோஷம் கழிக்கப்பட்டு, அந்தப் பெரியவர் அந்த இடத்திலே மறுநாள் பாடினார் என்று செய்தி. பெரியார் இதைப் படித்துப்பார்த்து விட்டு, அந்தப் பேப்பரை என்னிடம் தூக்கியெறிந்து, இதை வைத்து எழுது என்றார். எழுதினேன், அதற்கு நான் கொடுத்த தலைப்புதான் "தீட்டாயிடுத்து'' என்பதாகும். அதைப் படித்துவிட்டு அய்யா சொன்னார். "சபாஷ், இப்படித்தான் தலைப்பு போடணும்'' என்றார். அதாவது மேடை தீட்டாயிடுத்து என்று நான் அவ்வளவு கொச்சையாகச் சொன்னதுதான் அய்யாவுக்கு பிடித்தது. அப்படித்தான், இங்கே தளபதி வீரமணி பேசும்போது கூடச் சொன்னாரே, அய்யா எப்போதும் எல்லோரும் புரிந்துகொள்ளும் பாஷையிலேதான் பேசுவார் என்று, அப்படிப் பேசி, எழுதி இந்த நாட்டு மக்களை தன்பால் கவர்ந்தவர், இழுத்தவர், ஈர்த்தவர் தந்தை பெரியார் அவர்கள். பெரியாரின் கொச்சைத் தமிழ் சாதி ஒழிப்புக்கு பயன்பட்டிருக்கின்றது.

நாங்கள் அழகாக எழுதி அண்ணாவைப் போல் எழுத வேண்டுமென்று முயற்சித்து, அண்ணாவைப்போல் எழுதிப் பார்த்து, புரட்சிக் கவிஞரைப் போல எழுத வேண்டுமென்று முயற்சித்து, அதைப்போல கவிதைகளை எழுதி, எவ்வளவு எழுதினாலும், அத்தனையும் தந்தை பெரியார் அவர்களுடைய அந்தக் கொச்சைத் தமிழுக்கு முன்னால் என்றைக்கும் நின்றதில்லை. அந்தக் கொச்சைத் தமிழ்தான் இன்றைக்கு சாதிய ஒழிப்புக்கு, மதமாச்சரியங்களால் ஏற்படுகின்ற மடமைகளைக் கொளுத்துவதற்குப் பயன்பட்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட தந்தை பெரியாருடைய வழியில் நான்கு ஊராட்சி மன்றங்களில் நம்முடைய தோழர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன், 80 இலட்ச ரூபாய் அவர்களுக்கு அரசின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நான்கு ஊராட்சி மன்றங்களுக்கும், இதிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றாலுங்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதனால் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியை அடையாளபூர்வமாக நான் வெளிப்படுத்த விரும்புகின்ற காரணத்தால், இருபது இலட்சம் ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நான்கு ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் இருபது இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதையும் எடுத்துக் கூறி, இங்கே வந்து வாழ்த்திய பெருமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நேரம் பேச இயலவில்லை, உடல் நலமும், குரல் நலமும் சரியாக இல்லாத காரணத்தினால் இந்த அளவோடு விடை பெற்றுக் கொள்கிறேன்.

# பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளுக்கு தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

"ஏறக்குறைய பத்தாண்டு காலமாக நடைபெற முடியாமல் இருந்த நான்கு ஊராட்சிகளினுடைய தேர்தலை நடத்தி அதனுடைய வெற்றி விழாவாக இந்த சமத்துவப் பெருவிழா நிகழ்ச்சி எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது."

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்கக் கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைப்படுகிறேன்.

அண்மையிலே நடந்து முடிந்திருக்கக் கூடிய உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலைப் பொறுத்தவரையிலே 6 மாநகராட்சிகளையும் 102 நகராட்சிகளில் 88 நகராட்சிகளையும், 50 மூன்றாந்தர நகராட்சிகளில் 39 நகராட்சி களையும், 561 பேரூராட்சிகளில் 371 பேரூராட்சிகளையும், 29 மாவட்ட ஊராட்சிகளில் 27 ஐயும், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 324 ஒன்றியங்களையும் உங்களுடைய அன்போடு, ஆதரவோடு நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சிறப்பான வகையிலே வெற்றியைப் பெற்றிருக்கிறது.

இந்த வெற்றியை நாம் பெற்றிருந்தாலும் இதை அடைந்து கொண்டிருக்கின்ற மகிழ்ச்சியைவிட மதுரை மாவட்டத்தில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சிகளிலும் விருதுநகர் மாவட்டத்தில் கொட்டக் கச்சியேந்தலில் நடைபெற்று முடிந்திருக்கக் கூடிய இந்த தேர்தலில் நாம் பெற்றிருக்கக் கூடிய மகிழ்ச்சியைவிட வேறு எந்த மகிழ்ச்சியும் நாம் பெரிதாகக் கருதிட முடியாது. பத்தாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பெரும் பிரச்சினை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நமது ஆட்சியின் மூலமாக தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆக, இது இந்த அரசிற்குப் பெருமை – குறிப்பாக இதை வழி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய த்மிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இது ஒரு பெரும் பெருமை என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.



**ஒருதுளி பங்கு**

உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் என்கின்ற அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இதில் எனக்கும் ஒருதுளி பங்கு உண்டு. இந்த அடியேனுக்கும் அந்தப் பெருமை உண்டு என்பதை நான் மறந்துவிட முடியாது.

பாப்பாபட்டி ஊராட்சித் தலைவர் பொறுப்பிற்கு ப.பெரியகருப்பன் அவர்களும், துணைத் தலைவராக க.தேவராஜ் அவர்களும், கீரிப்பட்டி ஊராட்சி தலைவராக மு.பாலுச்சாமி அவர்களும் துணைத் தலைவராக வெ. பழனிச்சாமி அவர்களும், நாட்டார்மங்கலம் ஊராட்சித் தலைவராக ப.கணேசன் அவர்களும், துணைத் தலைவர் பொறுப்பிற்கு அ.முத்துராமலிங்கம் அவர்களும், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சித் தலைவர் பொறுப்பிற்கு சோ.கருப்பன் அவர்களும், துணைத்தலைவராக மு.முனியாண்டி அவர்களும், அவர்களோடு சேர்ந்து தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த வார்டின் உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் இந்த நேரத்தில் ஊரக வளர்ச்சி – உள்ளாட்சித்துறையின் மூலமாக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



உள்ளாட்சி மன்றங்களுடைய பொறுப்பு என்பது தொடர்ந்து 6 மாதத்திற்கு அது காலியாக இருந்திட முடியாது. அந்த வகையிலேதான் இன்றைக்கு சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து 10 முறை தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டும் இந்த 4 ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே முறையாக தேர்தலை நடத்த முடியவில்லை. போட்டியிடுவதற்கு முன்வர முடியாத ஒரு சூழ்நிலை. சில நேரங்களில் போட்டியிட்டாலும் வெற்றி பெற்றிருந்தாலும் பதவியேற்றவுடன் ராஜினாமா செய்ய வேண்டிய ஒரு நிலை.

அது மட்டுமல்ல; சில நேரங்களிலே வேட்பு மனு தாக்கல்கூட செய்ய முடியாத ஒரு நிலை. ஆகவே, இந்த நிலையில் இருந்த அந்த நிலையை மாற்றி, தமிழகத்திலே நம்முடைய ஆட்சி உருவாக்கப்பட்டதற்குப் பிறகு இந்த நான்கு ஊராட்சிகளில் முறையாக இந்த தேர்தலை நடத்தி, அதற்குரிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடியவர்களை அழைத்து இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 4 ஊராட்சி மன்ற தலைவர்களுடைய பொறுப்பு என்பது 1996–லிருந்து இந்தத் தலைவர்கள் பொறுப்பு என்பது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. 1996லும் தேர்தல் நடைபெறவில்லை – 2001ஆம் ஆண்டிலும் இந்தத் தேர்தலை நடத்த முடியவில்லை. இடையிலே பல்வேறு முயற்சிகள் நடந்திருந்தாலும், ஆனாலும் முறையாக தேர்தலை நடத்த முடியவில்லை. இப்பொழுது நாம் நடத்தி முடித்திருக்கிறோமே, இந்த உள்ளாட்சித் தேர்தலை பொறுத்தவரையிலே ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே சுழற்சி முறையிலேதான் நாம் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறோம்.

ஆனால், இந்த நான்கு ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் இந்த சுழற்சி முறையிலே விதிவிலக்கு அளித்து அதற்காக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த ஆணையை, சட்டமன்றத்திலே ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை சட்ட மன்றத்திலே இதற்காக வரவேற்று இதற்காக குரல் கொடுத்திருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த மேடையிலே வீற்றிருக்கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு சிலர் வரவில்லை ஏன் என்பது உங்களுக்குத் தெரியும்.

கீரிப்பட்டி – கொட்டக்கச்சியேந்தல் இந்த ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே நான் இங்கே குறிப்பிட விரும்புவது தலைவர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அழைத்து, நினைவு பரிசு வழங்கி சால்வை அணிவித்து வாழ்த்திய நேரத்தில், அந்த வாழ்த்துக்களைப் பெற்ற தலைவர்கள் முதல்வரிடத்திலே எடுத்து வைத்த கோரிக்கைகள் எங்களுடைய ஊராட்சிக்கு இந்தந்த வசதிகளை எல்லாம் செய்து தரவேண்டும் என்று அந்த கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள்.

# சமத்துவம் வேண்டிய சான்றோர்கள்



புத்தர்

முதன் முதலில் சாதிப்பாகுபாடுகளை எதிர்த்த சமுதாய சீர்திருத்த மகான்
மண்ணுயிர் அனைத்தையும் தன்னுயிர் போல் கருதிட வேண்டும் என போதித்தவர்

## திருவள்ளுவர்



"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

## மகாத்மா காந்தியடிகள்
(1869 - 1948)



★ தீண்டாமை என்பது ஒரு பாவச்செயல் என பிரகடனம் செய்த அண்ணல்.

★ சாதி சமய நல்லிணக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்த மகாத்மா.

## தந்தை பெரியார்
(1879 - 1973)



★ ஒடுக்கப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றுத்தந்த சுயமரியாதை இயக்கத் தந்தை.

★ பகுத்தறிவுப் பகலவன். தாழ்த்தப்பட்டோருக்கு சம உரிமை பெற்றுத் தந்த வைக்கம் வீரர்.

## பேரறிஞர் அண்ணா
(1909 - 1969)



★ சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் தந்து சமத்துவ சமுதாயம் கண்டவர்.

★ சுயமரியாதை இயக்கத்திற்கும், சமூக நீதிக்கும் வித்திட்ட பேரறிஞர்.





## சர்.பிட்டி. தியாகராயர்
(1852 - 1925)



★ சமூக நீதிக்காக பெரும் தொண்டாற்றிய நீதிக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவர்!

★ ஒடுக்கப்பட்ட மக்கள் சட்ட ரீதியாக எல்லா உரிமைகளும் பெற பாடுபட்டவர்!

## தமிழ்த்தென்றல் திரு.வி.க.
(1883 - 1953)



★ இங்கு பிறந்தவர் யாவரும் தமிழரே!

★ தமிழகத்தை தாயகமாக கருதுபவர்கள் யாவரும் தமிழரே!

## இராமலிங்க வள்ளலார்
(1823 - 1874)



★ சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே...
... ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"

## இராஜாராம் மோகன்ராய்
(1774 - 1833)



★ உடன்கட்டை ஏறும் கொடுமையை எதிர்த்து வெற்றி கண்டவர்.

★ குழந்தை திருமணத்தை எதிர்த்தவர். பெண் கல்வியை வளர்த்தவர்.

## இரட்டமலை சீனிவாசன்
(1860 - 1945)



★ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டுக்கு பெரும் தொண்டாற்றியவர்.

★ 1930இல் லண்டன் வட்டமேஜை மாநாட்டில் பழங்குடியினர் உரிமைக்காக குரல் கொடுத்தவர்

## இராமானுஜர்
(1017 - 1137)



★ சாதி பேதமற்ற பக்தி நெறி

★ திருமந்திர பொருளை திருக்கோட்டியூர் கோயிலில் அனைத்து மக்களுக்கும் உபதேசம்.

**நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு**
**தமிழகத்திலே இருக்கக் கூடிய கிராமப்**
**பகுதிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர**
**வேண்டும் என்கின்ற அடிப்படையில்**
**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்**
**திட்டம் என்ற ஒரு உன்னதமான திட்டத்தை**
**உருவாக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும்**
**20இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யக்கூடிய**
**ஒரு சூழ்நிலையை நம்முடைய முதல்வர்**
**அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.**

நான் இந்தத் துறையினுடைய அமைச்சர் என்கின்ற முறையிலே தெரிவிக்க விரும்புவது நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்திலே இருக்கக் கூடிய கிராமப் பகுதிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர வேண்டும் என்கின்ற அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு உன்னதமான திட்டத்தை உருவாக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

ஆகவே, அப்படி ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய சூழ்நிலையின் அடிப்படையில் இந்த கீரிப்பட்டி, கொட்டக்கச்சியேந்தலைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அந்த இரண்டு ஊராட்சிகளும் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லி, அதே நேரத்தில் பாப்பாபட்டி, நாட்டார் மங்கலத்தைப் பொறுத்தவரையிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய விருப்பார்ந்த நிதிகளிலிருந்து இந்த ஆண்டு 20 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த ஊரினுடைய அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

தேவார மூவர் பாடிய ஊர் திருவாரூர். பசுவின் கன்று மீது தேரை விட்டதற்காக தனது ஆருயிர் மகன்மீது தேரை விட்ட மனுநீதிச் சோழன் பிறந்த ஊர் திருவாரூர். திருவாரூர் தேருக்கு அழகுண்டு. இப்படி பல சிறப்புகளை திருவாரூர் பெற்றிருந்தாலும், அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல அங்குள்ள மக்களிடையே சாதி வேறுபாடு கிடையாது. பிறப்பால் உயர்வு – தாழ்வு கிடையாது. இதை நான் சொல்லவில்லை.

எனவே நான்கு ஊராட்சியினுடைய நிலையைப் பொறுத்தவரையிலே குழப்பம் கூடாது. இதை அப்படியே பழைய நிலையிலிருந்து தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லி சட்டமன்றத்திலே பலர் குரல் கொடுத்தார்கள். அதை முழு மனதோடு நமது முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டு சட்டமன்றத்திலே அதை சட்டமாக்கி, சட்டமாக்கியதோடு மட்டுமல்லாமல் அன்றைக்கு முதல்வராக சட்டமன்றத்திலே உரையாற்றுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார். முறையாக தேர்தலை நடத்திட வேண்டும் – நியாயமாக இந்தத் தேர்தலை நடத்தி அதில் தேர்வு செய்யக்கூடிய அந்தத் தலைவர்களை பிரதிநிதிகளை எல்லாம் நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகரமாக இருக்கக் கூடிய சென்னை மாநகரத்திற்கு அழைத்து அவர்களைப் பாராட்டி விழா நடத்திட வேண்டும் என்று சட்டமன்றத்திலே எடுத்துச் சொன்ன அந்த உறுதிமொழி இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆக, இந்த விழா நடத்துவது மட்டுமல்ல – நம்முடைய அரசு செயலர் வரவேற்புரையாற்றுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். இந்த விழா எப்படி நடைபெற வேண்டும் யார் யார் இந்த விழாவிற்கு அழைக்கப்பட வேண்டும். எந்த நிலையிலே இந்த விழாவினை நடத்திட வேண்டும் – அதுமட்டுமல்ல; விழாவினுடைய அழைப்பிதழைக் கொண்டு போய், நானும் நம்முடைய செயலர் அவர்களும் முதல்வரிடத்திலே காண்பித்தபோது அந்த அழைப்பிதழில் திருத்தங்களையெல்லாம் செய்து இந்த விழாவிற்கு ஒரு தலைப்பைத் தந்தார். அதுதான் 'சமத்துவப் பெருவிழா' என்கின்ற அந்த தலைப்பு.

ஆக, அந்த தலைப்பை தருகிறபோது, அவரே கைப்பட எழுதி, அதைத்தான் இன்றைக்கு நீங்கள் அழைப்பிதழிலே பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆகவே, அந்த நிலையிலேதான் இன்றைக்கு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் என்பது சமத்துவம்தான். சமத்துவத்தின் அடையாளம்தான் தமிழ். 'த' என்பது வல்லினம் 'மி' என்பது மெல்லினம் 'ழ்' என்பது இடையினம். தமிழ் எழுத்துக்கள் வல்லினம் – மெல்லினம்– இடையினம் மூன்று இனத்திலிருந்தும் ஒவ்வொரு எழுத்து இடம் பெறும் வகையில் அமைந்திருப்பதுதான் தமிழ். அதே போன்று பல்வேறு இன மக்களும் ஒன்றுகூடி ஒரே இடத்தில் ஒற்றுமையாக உறுதியுடன் வாழ்வதுதான் சமத்துவம் அந்த சமத்துவத்திற்குத்தான் இந்த விழா.

இந்த விழா சமத்துவப் பெருவிழாவாக நடைபெறுகிறது. வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நன்றி சொல்லி விடை பெறுகிறேன்.

**சமத்துவப் பெருவிழாவில் (13.11.2006)**
**முன்னிலை வகித்து**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்**
**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

* * *





# சத்துணவு - அங்கன்வாடி மையங்களில் 30 ஆயிரம் பணியாளர்கள் உடனடி நியமனம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 22.11.2006 அன்று சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் முடிவில் பின்வரும் ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 33,333 மகளிர் பயனடையும் வகையில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு பெரும் வரவேற்பு இருப்பதைக் கருத்தில் கொண்டு இதன் கீழ் அதிக மகளிர் பயனடையும் வண்ணம் நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 60 கோடியாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்.

2. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்புத் தொகை ஒவ்வொரு மாதமும் ரூபாய் 200 வீதம் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் இந்தத் தொகை மாதம் ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டு இதன் மூலம் 8,400 பேர் தற்போது பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் பயனாளிகளின் எண்ணிக்கையை 8,400 லிருந்து 10,000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு கூடுதலாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகும்.

3. டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற தற்போது வயது வரம்பு 20 முதல் 30 ஆண்டுகளாக உள்ளது. 30 வயதைக் கடந்த விதவைகளை மறுமணம் செய்து கொள்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த வயதுவரம்பை 30லிருந்து 35 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.

4. தமிழக அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தற்போது ஆண்டொன்றிற்கு ரூபாய் 250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயன்பெற அதிக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்காக கூடுதலாக ரூபாய் 100 இலட்சம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

5. சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் 30,000 பணியாளர்கள் உடனடியாக நியமனம் செய்யப் படுவார்கள்.



(2)

# சமத்துவம் பேணிய சான்றோர்கள்

### மகாத்மா பூலே
(1828 - 1890)



★ தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளுக்கான முதல் பள்ளியை 1848இல் நிறுவியவர்.

★ சத்ய சோதக் சமாஜம் நிறுவி சமூக நீதிக்காக போராடியவர்.

### பெருந்தலைவர் காமராஜர்
(1903 - 1975)



★ ஏழை, எளிய மக்களின் கல்விக்கண் திறந்த கர்மவீரர்.

★ வயிற்றுப் பசியை போக்காமல் அறிவுப் பசியை தீர்க்க முடியாது என பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்.

### மகாகவி பாரதியார்
(1882 - 1921)



"சாதிகள் இல்லையடி பாப்பா!
உயர் தாழ்ச்சி
இகழ்ச்சி சொலல் பாவம்"

### மூதறிஞர் இராஜாஜி
(1878 - 1972)



★ தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கிற்காகப் பாடுபட்டவர்.

★ கோயில்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிட ஆணையிட்டவர்

### அயோத்திதாசப் பண்டிதர்
(1845 - 1914)



★ 19 ஆம் நூற்றாண்டிலேயே தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக இயக்கம் கண்ட முன்னோடி.

★ ஆதிதிராவிடர்களுக்காக பல பள்ளிகளை நிறுவியவர்.

### பாவேந்தர் பாரதிதாசன்
(1891 - 1964)



"சாதி, மதம் தமிழ் இல்லை! அந்தச் சாதி மதத்தை தமிழ் கொள்வதில்லை"



# சமத்துவம் பேணிய சான்றோர்கள்

### ப.ஜீவானந்தம்
(1907 - 1963)



★ மனித நேயர், சாதி சமய மறுப்பாளர், பொதுவுடைமைவாதி.

★ நான் ஒரு நாத்திகன், ஏனெனில் நான் மனிதர்களை நேசிக்கிறேன் என்றவர்.

### அம்பேத்கர்
(1891 - 1956)



★ இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி.

★ தாழ்த்தப்பட்டோருக்கு அரசியல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெற்றுத் தந்தவர்.

### பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
(1908 - 1963)



★ ஆங்கிலேயரின் குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் போராடி, அச்சட்டத்தை திரும்ப பெறச் செய்தவர்.

★ தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தனது சொந்த நிலங்களை தானமாக வழங்கியவர்.

### நாராயண குரு
(1854 - 1928)



★ சாதியத்தின் கோரப் பிடியிலிருந்து கேரளத்தை மீட்டவர்.

★ தாழ்த்தப்பட்டோருக்கு பல்லாயிரம் ஆண்டுகளாக மறுக்கப்பட்ட கல்விச் செல்வத்தை வழங்கியவர்.

### டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி
(1886 - 1968)



★ தேவதாசி முறையை ஒழிக்க சட்டம் இயற்ற காரணமானவர்.

★ அவர்கள் புனர்வாழ்விற்காக "அவ்வை இல்லம்" நிறுவியவர்.

### டாக்டர் நடேசனார்
(1875 - 1937)



★ 1912இல் திராவிட சங்கம் தோற்றுவித்து சமூக நீதிக்காக பாடுபட்டவர்.

★ ஆதிதிராவிட மக்கள் சமுதாய விழிப்புணர்வு பெற்று எழுவதற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.



# தமிழகத்தில் எல்லாம் தமிழில் வர நாம் அனைவரும் இணைந்து நின்று செய்து முடிப்போம்

**தமிழ் மாநிலம் அமைந்த 50ஆம் ஆண்டு பொன் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

*(1.11.2006)*

"**வெ**ள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம், உள்ளத்தால் ஒருவரே, மற்று உடலினாற் பலராய் காண்பார்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இந்த மேடையைப் பார்த்தாலும், எதிரே அமர்ந்திருக்கின்ற பெருங்கூட்டத்தைப் பார்த்தாலும், உடலினாற் பலராய் காணப்பட்டாலும், நாமெல்லாம் உள்ளத்தால் ஒருவரே என்று நிரூபிக்கின்ற விழாவாக, தமிழ்த் திருவிழாவாக இந்த விழா இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த நான்கைந்து நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் அலுவலகங்களுக்குக் கூடச் செல்லாமல், வீட்டிலேயே இருந்தேன். இருந்தாலும் விழா, தமிழ் விழா என்ற காரணத்தால், எப்படியும் இதிலே கலந்து கொள்ள வேண்டுமென்று நானே அழைத்திருக்கும்போது அழைக்கப்பட்டவர்கள் வருகின்ற நேரத்தில் அவர்களை வரவேற்பதுதான் தமிழ்ப்பண்பாடு என்ற அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.





**அண்ணா மொழிந்த வரலாற்று வாசகம்!**

தமிழ் விழாவில் ஒரு தமிழன் கலந்து கொள்கின்ற வாய்ப்பு இருந்தும், கலந்து கொள்ள முடியாமல் போனால், அதைத் தவிர்த்தால் அது பெரும் தவறு என்பதை இதே மேடையில் 1968ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். 1968ஆம் ஆண்டு சென்னை ராஜ்யத்திற்கு, "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கப்பட்டு, அந்த நாளை விழாவாகக் கொண்டாட அறிவிக்கப்பட்ட அந்த நாளில், அறிஞர் அண்ணா, அந்த நாளை தொடங்கி வைக்க வருகை தந்தார், இதே இடத்திற்கு அப்போது இது "கலைவாணர் அரங்கம்" அல்ல, "பாலர் அரங்கம்" என்ற பெயரிலே விளங்கியது.

அப்போது அந்த விழாவில் பேசும்போது, "என்னுடைய உடல்நிலை மிகமிக சோர்வுற்றிருக்கின்றது. நான் விழாவிலே கலந்து கொள்ளக்கூடாதென்று என் வீட்டார், நண்பர்கள், மருத்துவர்கள், இயக்க முன்னோடிகள் என்று அத்தனை பேரும் தடுத்தும் கூட நான் இந்த விழாவிலே கலந்து கொண்டுதான் தீருவது என்று வந்திருக்கிறேன், காரணம் இருப்பது ஒரு உயிர், அது போகப் போவது ஒரு முறைதான், அது ஒரு நல்ல காரியத்திற்காகப் போகட்டுமே என்ற அந்த உறுதியோடுதான் இங்கே வந்திருக்கிறேன்" என்று அண்ணா சொன்னார்கள்.

அன்றைக்கு அண்ணா அவர்களின் உடல் நிலை எப்படி இருந்தது என்பதற்கும், இன்றைய என் உடல் நிலைக்கும் யாரும் ஒப்பிட்டுப் பார்த்து கதை எழுத மாட்டார்கள் என்று நம்புகிறேன். இது ஒரு சாதாரண வகையிலே உடலில் ஏற்பட்ட நோய் தாக்குதல்தான். அதைச் சமாளிக்க முடியாமல் ஐந்தாறு நாட்களாக படுக்கையிலே இருந்து இன்றைக்கு எழுந்து வந்தேன். வந்தபோதுகூட, தலைவர்கள் எல்லாம் என்னிடம், சிறிது நேரம் மட்டும் பேசி விட்டுப் போனால் போதும் என்று கூடச் சொன்னார்கள். நான் இயன்ற வரையில் சில கருத்துக்களை உங்களிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று நம்புகிறேன்.

**எனதுள்ளம் அடைந்த பெருமகிழ்ச்சி!**

இந்த விழாவில் ஏறத்தாழ 60 பேர்களுக்கு நம்முடைய ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களிடத்திலே சிறப்புக் கேடயங்களைப் பெற்றிருக்கின்றார்கள். தமிழ்நாடு என்று வடிவமைக்கப்பட்ட அந்த செப்புக் கேடயங்களை இங்கே பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம்

வெளியூரிலிருந்து, திருத்தணியிலிருந்து, கன்னியா குமரியிலிருந்து வேறு பல மாவட்டங்களிலிருந்து இங்கு அழைக்கப்பட்டு இந்த மேடையிலே அவர்கள் வந்து தோன்றுவதற்கு முன்னால், புத்தாடை புனைந்து வாருங்கள் என்று அதையும் வழங்கி, அதைப் பெற்று புத்தாடை, புதுச் சொக்காய், புதுத்துண்டு இவைகளோடு வந்து காட்சி தந்த அந்த நிலைமையை நான் பார்த்தபோது என்னுடைய உள்ளம் பெருமகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது.

அதுமாத்திரமல்ல; ஓர் அறிவிப்பையும் செய்ய விரும்புகிறேன். எல்லைப் போராட்ட வீரர்கள் சுமார் 150 பேர்களுக்கு சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் 149 பேருக்கு இந்த எல்லைப் போராட்டத்திலே ஈடுபட்ட இந்த மான மறவர்களுக்கு, தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களுக்கு இதுவரையிலே 3,000 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த விழாவினை முன்னிட்டு இன்று தொட்டு அந்தத் தொகை 4,000 ரூபாயாக உயர்த்தித்தரப்படும் என்பதை உங்களிடத்திலே நான் அறிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல அந்தக் குடும்பங்களிலே யாராவது மறைந்திருப்பார்களேயானால், எஞ்சியுள்ளவர்களுடைய வாழ்க்கைக்காக குடும்பப் பாதுகாப்புக்காக, அவர்களுடைய மரபுரிமையினருக்கு மாதந்தோறும் இதுவரை1,500 ரூபாய் வழங்கப்பட்டதை இனிமேல் 2,000 ரூபாயாக வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வ.உ.சி இழுத்த செக்கு

இங்கே நம்முடைய திருமாவளவன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். விநாயகம் போன்றவர்களுக்கு, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்களுக்கு, நேசமணி போன்றவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்க வேண்டும். ஒரு மண்டபமே கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எந்த நேரத்திலும், எந்த நிலையிலும், எந்தத் தியாகிகளையும் நாங்கள் மறந்ததில்லை. சொல்லப் போனால், இருபதாண்டு காலம், முப்பதாண்டு காலம் நம்முடைய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் ஆட்சி, வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறிய பிறகு, தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோதுகூட, கண்டுபிடிக்க முடியாத – சிதம்பரனார் இழுத்த செக்கை நான் முதல் அமைச்சராக ஆனபிறகுதான், தேடிக் கண்டுபிடித்து அது கோயம்புத்தூர் சிறையில் இருக்கிறது என்று கண்டறிந்து, அதைக்கொண்டு வந்து சென்னை மாநகரத்திலே "கண்காட்சிப்" பொருளாக வைத்து அனைவரையும் பார்க்கச் செய்து, இப்போது அது கிண்டியிலே கவர்னர் வளாகத்திற்குள் வைக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

### தியாகிகளைப் பாராட்டுகிற அரசு

தியாகிகளுடைய மண்டபம் ஒன்று, நண்பர் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப கட்டப்பட்டிருக்கின்றது. சங்கரலிங்கனாருடைய சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவு ஏன், சென்னை கோட்டை கொத்தளத்தில் ஒரு சிறுவன் கொடியேற்றினான். அந்தச் சிறுவன், பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் கூட, அவனுடைய வீரத்தை, தியாகத்தை, நாட்டுப்பற்றை பாராட்டி அவனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றியிருக்கிறோம். "ஆர்யா" என்ற பாஷ்யம் என்பது அவனுடைய பெயர். அவன் கோட்டை கொடிமரத்திலே ஏறி தேசியக் கொடியை ஏற்றினான், அப்படி ஏற்றிய அந்த வீரத்தைப் புகழ்ந்து தி.மு.கழக ஆட்சியிலே கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே கவர்னர் வளாகத்திற்குள் பாஷ்யத்தின் சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது. இப்படியெல்லாம் தியாகிகளைப் பாராட்டுகின்ற அரசுதான் தி.மு.கழக அரசு. எனவே இங்கே நம்முடைய அய்யா மருத்துவர் ராமதாசு அவர்களும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோழர்களும் திருமாவளவன் போன்றவர்களும் அத்தனை பேரும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துகளையெல்லாம் நெஞ்சிலே பதிய வைத்து தியாகிகளை என்றைக்கும் மறக்க மாட்டோம். அந்தத் தியாகிகள் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்றல்ல. எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டிற்கு மண்ணுக்கு, மொழிக்குப் போராடியவர்கள், அந்தப் போரிலே மாண்டவர்கள், அந்தப் போரிலே தங்கள் உடமைகளை இழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்ற அரசாக தி.மு.கழக அரசு இருக்கும் என்பதை இந்த நல்ல நாளில் வீரத்திருநாளில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கின்ற மத்திய அரசினுடைய முடிவின்படி 1.11.1956ஆம் ஆண்டு சென்னை மாநிலம் (மெட்ராஸ் ஸ்டேட்) முதன் முதலாகத் தோன்றியது. சென்னை மாநிலம் தோன்றிய 25ஆவது ஆண்டு நினைவாக என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே 1.11.1981இல் சென்னையில் இந்த நாளின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டிருக்கின்றது. ஆகவே தேசிய இயக்கத்தார், திராவிட முன்னேற்றக் கழகத்தார், கம்யூனிஸ்ட் நண்பர்கள் அல்லது வேறு கட்சிக்காரர்கள் என்கின்ற பேதம் இல்லாமல் வேறுபாடு இல்லாமல் எல்லோரும் நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டு மக்கள், எல்லோரும் தேசியத்தார் என்ற அந்த உணர்வோடுதான் இதுபோன்ற விழாக்களிலே நாம் கலந்து கொள்கின்றோம்.



### சரித்திரப் புகழ்பெற்ற பக்கங்கள்

மாநிலம் தோன்றிய 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி, இன்றைக்கு கலைவாணர் அரங்கத்திலே நாம் கூடியிருக்கின்றோம். ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். 1924ஆம் ஆண்டு இருக்கிறதே, அது நான் பிறந்த ஆண்டு. அந்த பிறந்த ஆண்டுக்கு, நான் பிறந்தது மாத்திரம் சிறப்பு அல்ல, வேறு பல சிறப்புகளும் இருக்கின்றன. வேறு பல சிறப்புகள் என்பதால், நான் பிறந்தது சிறப்பு என்று அர்த்தமல்ல. பல சிறப்புக்கள் இருக்கின்றன. அந்தச் சிறப்புக்களில் ஒரு சிறப்பாக ஒட்டிக் கொண்டிருக்கின்ற சிறப்பு, நான் பிறந்த சிறப்பு. ஏனென்றால் ஒரு சாதாரண குடும்பத்தில், தஞ்சை மாவட்டத்தில், திருக்குவளை என்ற கிராமத்தில் மிக மிக மிக என்று எத்தனை மிக மிக போட்டுக் கொண்டாலும் பொருந்தக் கூடிய, அப்படிப்பட்ட ஒரு சாதாரணக் குடும்பத்தில், இழித்துப் பேசக் கூடிய குடும்பத்திலே பிறந்தவன் நான். அதனால்தான் இழிமொழிகளை, பழிச்சொற்களை எந்த நேரத்திலும் தாங்கிக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை நான் பெற்றிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அப்படிப்பட்ட நான் 1924 ஆம் ஆண்டு பிறந்தேன். அந்த 24ஆம் ஆண்டுதான் பிரச்சினைக்குரிய காவேரி ஒப்பந்தமும் பிறந்தது. அந்த 24ஆம் ஆண்டுதான் மாவீரன் லெனின் மாண்டான். அந்த 24ஆம் ஆண்டுதான் தந்தை பெரியார் "வைக்கம் வீரர்" ஆனார். எவ்வளவு சரித்திரப் புகழ்பெற்ற பக்கங்கள் என்னுடைய பிறப்பையொட்டி இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

அந்த 24ஆம் ஆண்டு நடைபெற்ற இன்னொரு சம்பவத்தை இந்த நேரத்தில் குறிப்பிடுவது மிக மிக முக்கியம் என்று நான் கருதுகிறேன். 1924ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி 39ஆவது காங்கிரஸ் மகாசபை பெல்காம் நகரில் கூடியது. அதன் தலைவராக அப்போது விளங்கியவர் அண்ணல் காந்தியடிகள். அந்தக் காந்தியடிகள் கொண்டு வந்த தீர்மானம் என்ன தெரியுமா?

1. மாநில அரசுகளை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும்.
2. திருத்தி அமைக்கப்பட்ட மாநிலங்கள் பூரண சுயாட்சி பெற்றதாக இருக்க வேண்டும்.
3. அந்தந்த மாநில மொழியிலேயே அதனதன் சட்டமன்றங்களும் நடைபெற வேண்டும்.
4. மாநிலந்தோறும் உள்ள நீதிமன்றங்களும், மாநில மொழியிலேயே நடைபெறவேண்டும்.

இதெல்லாம் நான் சொல்வதல்ல, மகாத்மா காந்தி அவர்கள் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் தேதி 39 ஆவது காங்கிரஸ் மகாநாட்டில் பெல்காம் நகரத்தில் கூடிய அந்த மாநாட்டில் உதிர்த்த வாசகங்கள். அவர் நேரடியாக எழுதிய தீர்மானம் அந்தத் தீர்மானத்தைத் தான் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்ற வேண்டும். செயல்படுத்த வேண்டுமென்று நாம் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறோம். இப்படி பேசிக்கொண்டேயிருந்தால், ஒவ்வொரு விழாவிலும்

பேசிக் கொண்டேதான் இருப்போம். எனவே இதைச் செயற்படுத்த வேண்டிய காலம் விரைவிலே வந்தாக வேண்டும், செயல்படுத்துகின்ற சிங்கங்களாக நம்முடைய இளைஞர்கள், வாலிபர்கள் முன் வர வேண்டுமென்று அவர்களையெல்லாம் இந்த விழாவின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

1927ஆம் ஆண்டில் Indian Statutory Commission என்ற ஒரு கமிஷன் ஏற்பட்டபோது காங்கிரஸ் கட்சி தனது தீர்மானத்தில், என்ன வடித்தெடுத்தது என்றால்,

'The time has come for the Re-distribution of Provinces on a linguistic basis'

'மொழி வழி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்று 27ஆம் ஆண்டிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. ஆக இன்றைக்கு நாம் இந்த விழா கொண்டாடுவது அன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில்தான் என்பதை மறந்து விட முடியாது.

**தாய்மொழி வளர்ச்சி**

நாங்கள் நன்றி மறக்கக்கூடியவர்கள் அல்ல. நன்றி தெரிவிப்பவர்கள். அப்படித்தான் காங்கிரஸ் கட்சியின் நண்பர்களுக்கெல்லாம் இந்தத் தீர்மானத்தை 1927ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்து நிறைவேற்றியதற்காகவும், 28ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் அமைக்கப்பட்ட நேரு தலைமையிலான மொழிக் குழு "மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டால்தான் அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் தாய்மொழி வளர்ச்சி பெறும்'' என்பதை வலியுறுத்தியது.

இவற்றின் விளைவாக இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசு வங்காள மாகாணத்திலிருந்து அஸ்ஸாம், ஒரிசா ஆகியவற்றைத் தனித்தனி மாநிலங்களாகப் பிரித்து, எஞ்சிய கல்கத்தாவையும் அதன் பகுதிகளையும் வங்காளராஜ்யம் என தனி மாநிலம் ஆக்கியது. இவைகள் எல்லாம் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் இங்கே உரையாற்றிய டி.கே.ரெங்கராஜன் அவர்களும் நன்கறிவார்கள். தோழர் பாண்டியன் அவர்களும் நன்கறிவார்கள். அவர்கள் இத்தகைய வரலாறுகளை உருவாக்கியிருக்கும் இயக்கத்தினர். எனவே நான் அதை விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இல்லையென்றே கருதுகிறேன்.

**தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிற காட்சி!**

ஆனால், வங்காள ராஜ்யம் தனி மாநிலமாக ஆன பிறகும் கூட, தென்னிந்தியாவில் தமிழகம், ஆந்திரம், மலபார், தென்கன்னடம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட சென்னை ராஜ்யத்தை மட்டும் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்க பிரிட்டிஷ் அரசு அப்போது பிடிவாதமாக மறுத்துக் கொண்டே இருந்தது. அந்தப் பிடிவாதத்தை தகர்த்ததின் வெற்றியாகத்தான் இன்றைக்கு மாநிலங்கள் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிந்திருக்கின்றன. அதிலே ஒரு மாநிலமாக தமிழகம் இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றது என்று விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே நண்பர் திருமாவளவன் குறிப்பிட்டதைப் போல் இது மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்ற விழாவா அல்லது இதிலே வரவு செலவு என்று பார்த்தால் இந்த





மொழிவாரி மாநிலப் பிரிவினைகளால் நமக்கு வரவு அதிகமா, செலவு அதிகமா என்று பார்த்தால் வரவு குறைவுதான். ஆனால் செலவு அதிகம்தான். என்னென்ன செலவு என்றால், இன்றைக்கு தேவிகுளம், பீர்மேடு நம்மிடத்திலே இல்லை, அது செலவுக் கணக்கிலே போய் விட்டது. வரவுக் கணக்கிலே இருப்பது நாம்தான். நாம் மிச்சம் இருக்கிறோமே அதுதான் இந்த மாநிலப் பிரிவினையால் ஏற்பட்ட நன்மை.

நான் இதனை எதற்கு ஒப்பிடுகிறேன் என்றால், ஒரு தெருவில் தீப்பற்றி எரிந்து வீடுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகி, வீடுகளிலே இருந்த பண்ட பாத்திரங்கள் எல்லாம் கருகிப்போய், எல்லாம் போய்விட்டதே என்று அழுகின்ற நேரத்தில் மிச்சம் அந்தத் தாய் பெற்ற குழந்தை மாத்திரம் ஒரு மூலையிலே உயிரோடு துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அந்தக் குழந்தையைத் தூக்கிய தாய், "ஆ, என் கண்ணே, நீ பிழைத்திருக்கிறாயா ?'' என்று கொஞ்சுவாளே, அதைப் போல நம்முடைய மொழி தமிழ், இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டு பிழைத்திருக்கின்றது. அதை வளர்ப்போம். அதை வாழ்த்துவோம், அதற்கு வலிமை சேர்ப்போம் என்ற அந்த எண்ணத்தைத் தான் இந்த மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு நாம் பெற்றிருக்கின்ற உறுதியாகக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**இணைந்து நின்று செய்து முடிப்போம்!**

"இந்த உறுதியான நாளில் தமிழகத்தில் எல்லாம் தமிழிலே வரவேண்டும். அதற்கு கருணாநிதி ஆவன செய்ய வேண்டும், உங்கள் காலத்திலே இல்லாமல் எந்தக் காலத்தில் செய்யப் போகிறீர்கள் ?'' என்று எல்லோரும் கேட்டார்கள். நம்முடைய மருத்துவர் அய்யாவிலிருந்து திருமாவளவனிலிருந்து, எல்லோரும் " உங்கள் காலத்தில் தான் செய்ய வேண்டும்'' என்று சொன்னார்கள் தயவு செய்து, இது "நம்முடைய" காலம் என்பதை மறந்து விடாதீர்கள்! இதிலே உங்கள் காலம், எங்கள் காலம் என்று அல்ல, நம்முடைய காலத்திலே செய்வோம், நம்முடைய காலத்திலே நாம் இணைந்து இன்று செய்து முடிப்போம்! நல்ல காரியத்தைச் செய்யும்போது இணைவதிலே தவறில்லை. ஆகவே இணைந்து நின்று செய்வோம் என்று அனைவரையும் அதற்கு அழைத்து இந்த அளவில் உடல் நிலை கருதி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ●

## உயர்நீதிமன்ற வழக்கு மொழியாக தாய்மொழி தமிழ்

**தமிழக அரசு அறிவிப்பு**

சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும், இதுவரையில் ஆங்கில மொழியில் மட்டுமே நடைபெற்று, ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. அரசியல் சாசனச் சட்டம் பிரிவு 348–இல் உயர்நீதிமன்றத்திலும் மற்றும் உச்சநீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆங்கில மொழியே சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

எனினும், அரசியல் சாசனச் சட்டம் பிரிவு 348, உட்பிரிவு (2) –ல் மாநில மொழியில் உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மாநில அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள அரசியல் சாசனச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ள வழக்கு மொழியாக தாய்மொழி தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும். □

# ஐந்து மாதங்களில் தமிழகத்தில் ரூ.3,000 கோடி வெளிநாட்டு முதலீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்




**அ**றிஞர் அண்ணா அவர்களுடைய பொன்மொழி ஒன்று உண்டு. அது பொன்மொழி மாத்திரமல்ல, ஆளுகிறவர்களை எச்சரிக்கின்ற மொழி. “சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள், அரசே, அதுதான் காலக்குறி'' என்பது அந்தப் பொன்மொழியாகும். இப்படிச் சொன்னால், அவர்கள் புரட்சி செய்ய ஆரம்பித்தால், இன்றைக்கு மௌனப் புரட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற வேலையற்றதுகள், சாலையோரத்திலே படுத்துறங்குகின்றவர்கள் கொதித்தெழுந்து எரிமலையாகி, எதிர்க்கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தால் அரசு




228657


கவிழும், நாடு நாசமாகும், ஊர் சீர்கெடும், பூகம்பம் ஏற்படும், புயல் வீசும், சூறாவளி தோன்றும் அந்தச் சுழற்காற்றில் நீங்கள் எல்லாம் சுருட்டி எறியப்படுவீர்கள் என்ற எச்சரிக்கையை ஆளுகின்ற ஆட்சியாளருக்கு அந்த இரண்டு வாக்கியம் எடுத்துச் சொன்னது. அதைத்தான் இன்றைக்கு நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டு இந்த அரசு சாலையோரத்திலே கிடக்கின்ற வேலையற்றதுகளுக்கு வேலை கொடுக்கின்ற பணியை, வேலை கொடுக்கின்ற வரையில் அவர்களுடைய வாழ்க்கைக்கு இன்பம் அளிக்கின்ற அந்தச் சேவையில் ஈடுபட்டிருக்கின்றது. அதனுடைய அடையாளமாகத்தான் இன்றைக்கு திருச்சி நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அந்த அரசுக்கு தலைமையேற்பவன் என்ற முறையில் நான் திருச்சியிலும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் தமிழகத்தில் எல்லா பகுதிகளிலும் இந்த ஒரே நாளில் வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு தொகை, ப்ளஸ் டூ படித்தவர்களுக்கு ஒரு தொகை, பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர்களுக்கு ஒரு தொகை என்று – முறையே 300 ரூபாய், 200 ரூபாய், 150 ரூபாய் என்று வழங்குகின்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருக்கின்றன.

**ஆறுதலான உதவி**

இந்த ஏற்பாட்டின்படி இந்த ஒரு நாள் தமிழகம் முழுவதும் பயன்பெறுகின்ற இளைஞர்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய புள்ளி விவர எண்ணிக்கையின்படி மாவட்ட வாரியாகப் பார்த்தால் திருச்சியிலே இன்றைக்கு வழங்கப்படுகின்ற இந்தத் தொகை எத்தனை பேர்களுக்கு வழங்கப்படுகின்றது என்றால், 14,089 பேருக்கு வழங்கப்படுகின்றது.

சென்னை மாவட்டத்தில் 5,528 பேர்; திருவள்ளூர் மாவட்டத்தில் 5,218 பேர்; காஞ்சிபுரத்தில் 5,407 பேர்; வேலூர் மாவட்டத்தில் 9,783 பேர்; திருவண்ணாமலை மாவட்டத்தில் 9,242 பேர்; கரூர் மாவட்டத்தில் 3,629 பேர்; பெரம்பலூர் மாவட்டத்தில் 7,548 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 7,199 பேர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 6,039; திருவாரூர்

**வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித் தொகை திட்டத்தில் திட்டம் தொடங்கப்பட்ட 11.11.2006 அன்று மட்டும் பயன்பெற்றோர் விவரம்**

| வ.எண். | மாவட்டம் | நபர்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | 5,528 |
| 2. | திருவள்ளூர் | 5,218 |
| 3. | காஞ்சிபுரம் | 5,407 |
| 4. | வேலூர் | 9,783 |
| 5. | திருவண்ணாமலை | 9,242 |
| 6. | கரூர் | 3,629 |
| 7. | பெரம்பலூர் | 7,548 |
| 8. | புதுக்கோட்டை | 7,199 |
| 9. | தஞ்சாவூர் | 6,039 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 14,089 |
| 11. | திருவாரூர் | 4,080 |
| 12. | கடலூர் | 8,824 |
| 13. | நாகை | 6,074 |
| 14. | விழுப்புரம் | 9,661 |
| 15. | கோவை | 2,774 |
| 16. | சேலம் | 8,293 |
| 17. | நீலகிரி | 4,540 |
| 18. | தருமபுரி | 6,732 |
| 19. | கிருஷ்ணகிரி | 4,496 |
| 20. | நாமக்கல் | 8,527 |
| 21. | ஈரோடு | 4,230 |
| 22. | மதுரை | 11,684 |
| 23. | தேனி | 6,893 |
| 24. | திண்டுக்கல் | 6,317 |
| 25. | சிவகங்கை | 5,690 |
| 26. | இராமநாதபுரம் | 5,956 |
| 27. | விருதுநகர் | 6,342 |
| 28. | தூத்துக்குடி | 5,018 |
| 29. | நெல்லை | 8,923 |
| 30. | கன்னியாகுமரி | 10,080 |

மாவட்டத்தில் 4,080 பேர்; கடலூர் மாவட்டத்தில் 8,824 பேர்; நாகை மாவட்டத்தில் 6,074 பேர்; விழுப்புரம் மாவட்டத்தில் 9,661 பேர்; கோவை மாவட்டத்தில் 2,774 பேர்; சேலம் மாவட்டத்தில் 8,293 பேர்; நீலகிரி மாவட்டத்தில் 4,540 பேர்; தருமபுரி மாவட்டத்தில் 6,732 பேர்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4,496 பேர்; நாமக்கல் மாவட்டத்தில் 8,527 பேர்; ஈரோடு மாவட்டத்தில் 4,230 பேர்; மதுரை மாவட்டத்தில் 11,684 பேர்; தேனி மாவட்டத்தில் 6,893 பேர்; திண்டுக்கல் மாவட்டத்தில் 6,317 பேர்; சிவகங்கை மாவட்டத்தில் 5,690பேர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,956 பேர்; விருதுநகர் மாவட்டத்தில் 6,342 பேர்; தூத்துக்குடி மாவட்டத்தில் 5,018 பேர்; நெல்லை மாவட்டத்தில் 8,923 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 10,080 பேர்; ஆக மொத்தம், தமிழ்நாடு முழுவதிலும் இன்று ஒரு நாளில் மட்டும் வழங்கப்படுகின்ற எண்ணிக்கை 2 இலட்சத்து 6 ஆயிரத்து 766 இளைஞர்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றது.

**ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, இந்திய நாட்டுச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை ஒரே கையெழுத்தில் ரத்து செய்த ஆட்சி தான் இன்றைக்கு உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேனே, என்னுடைய தலைமையில் உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி.**

இந்த நிதி உதவியைப் பெற்று அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற வேதனையை அறவே துடைத்துக் கொள்வார்களா என்றால் முடியாது. இது ஒரு வகையில் ஒரு ஆறுதலான உதவிதான். இப்பொழுது இதையாவது பெற்றுக் கொள்ளுங்கள் என்று இளைஞர்களுக்கு, படித்து வேலை இல்லாமல் இருக்கின்ற வாலியர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு தொகைதான் இந்த இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு தரப்படுகின்ற தொகையாகும்.

**கடமைத்தொகை**

இதைக் கருணைத் தொகை என்றோ, உதவித் தொகை என்றோ நான் குறிப்பிட விரும்பவில்லை. உண்மையாகச் சொல்ல வேண்டுமேயானால், இதற்குப் பெயர் "கடமைத் தொகை" – ஒரு அரசுக்கு உள்ள கடமையை நிறைவேற்றுவதற்காகத் தரப்படுகின்ற தொகை, அதைத்தான் இன்று தமிழகம் முழுவதும் இந்த அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் ஆங்காங்கு இளைஞர் களைச் சந்தித்து இந்தத் தொகையை வழங்குகின்றார்கள்.

இதற்கு நான் இளைஞர்களிடம் நன்றியை எதிர்பார்க்கவில்லை. என்ன கைமாறு என்று அவர்களிடம் நாங்கள் கேட்கவில்லை, அதை எதிர்பார்க்கவும் இல்லை. நாங்கள் அவர்களிடம் விரும்புகின்ற கைமாறெல்லாம், இதைப் பெற்று, இதை அப்படியே ஒழுங்காக பெற்றோர்களிடம் அளித்து, அவர்கள் தங்களுடைய தேவையை ஓரளவு நிறைவு செய்து கொள்ள நீங்களும் உதவியாக இருந்து இதற்குப் பிறகு, இந்த உதவிக்குப் பிறகு அடுத்த கட்டமாக வேலைவாய்ப்புகளை, அதே நேரத்தில் தேடியலைந்து, அதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்று, வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அரசின் திட்டங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு உங்களுடைய குடும்பத்தை, வீட்டைக் காப்பாற்றி, வீட்டைக் காப்பாற்ற மாத்திரம் நாம் பிறக்கவில்லை, நாட்டையும் காப்பாற்ற பிறந்திருக்கிறோம் என்ற நல்ல எண்ணத்தோடு பணியாற்றுவீர்களேயானால் நான் பெரிதும் மகிழ்வேன், நான் உற்சாகமடைவேன், நான் இன்று வழங்கிய இந்த நிதித்தொகை உள்ளபடியே பயனுடையது என்று நான் எண்ணுவேன்.

**வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு**

அடுத்தடுத்த திட்டங்களைச் செயல்படுத்த முனைவதற்கு இந்த நாள் ஒரு தூண்டுகோல் நாளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இங்கே பேசிய நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தொட்டியம் சட்டப்பேரவை உறுப்பினர் ராஜசேகரன் பேசும்போது இந்த ஆட்சி பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு தொடர்ந்து தன்னுடைய வாக்குறுதிகளையெல்லாம் காப்பாற்றி வருகிறது என்று சொன்னார்கள். இப்படிச் சொல்வது தமிழ்நாட்டில், ஏன் பொதுவாக நாட்டில், ஏன் பொதுவாக உலகத்தில் ஒரு ஆச்சரியமான



செய்திதான். தேர்தலுக்குப் பிறகு, தேர்தலில் நின்று வெற்றி பெற்ற ஒரு கட்சியின் ஆட்சி, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை யெல்லாம் காப்பாற்றுகின்றது என்றால் அது வியப்புக்குரிய செய்திதான், ஆச்சரியத்திற்குரிய செய்திதான். ஆனால் அந்த ஆச்சரியத்திற்கு இடையிலே, வியப்புக்கு இடையிலே இங்கே



தமிழகத்திலே இருக்கின்ற தி.மு.கழக அரசானாலும் அல்லது தி.மு. கழகத்தின் ஆதரவோடும், தி.மு.கழகத்தின் ஒத்துழைப்போடும் டெல்லியிலே அமைந்திருக்கின்ற நம்முடைய தியாகச் சுடர் திருமதி. சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு நடத்தப்படுகின்ற பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய ஆட்சியானாலும், இந்த ஆட்சி தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்க விடாமல், அதை நிறைவேற்றுவது நம்முடைய கடமை என்ற உணர்வோடு நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நீங்கள் காணுகிறீர்கள், நாம் காணுகிறோம்.

**உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி**

இப்போது நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நம்முடைய ஆளுங்கட்சியினுடைய கூட்டணிக் கட்சிகள் அத்தனையும் மிகப்பெரும் வெற்றியை எல்லா இடங்களிலும் பெற்றிருக்கின்றன என்றால், அதற்கு என்ன காரணம்? நான் வேறு காரணங்களை அரசியல் ரீதியாக தேடி அலைய விரும்பவில்லை, ஒரேயொரு காரணம், வழங்கிய வாக்குறுதிகளை வாய்மையோடு நிறைவேற்றினோம் என்ற காரணம்தான், தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையோடுதான். ஆனால் இந்த வாக்குறுதிகளை வழங்கப்பட்ட போது மக்கள் நம்பினார்களோ இல்லையோ, வாக்காளர்கள் நம்பினார்களோ இல்லையோ எங்கே நம்பி விடப் போகிறார்களோ என்று பயந்து ஒரு சாரார், இதை நம்பாதீர்கள், நம்பாதீர்கள் இவைகள் எல்லாம் வெத்து வேட்டுகள், இவைகள் எல்லாம் வெறும் முழக்கங்கள், இவைகள் எல்லாம் தேர்தல் காலத்திலே சொல்லக் கூடிய காற்றிலே கலக்கக் கூடிய வேதாந்தங்கள். இவைகள் நடக்காது, நடக்க முடியாது, இவர்களால் நடத்த இயலாது என்றுதான் எங்களுடைய பலகீனத்தைச் சுட்டிக் காட்டி எங்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு வசதிகளையெல்லாம் குறை சொல்லி, இவர்களால் இதைச் செய்ய முடியாது என்று குறிப்பிட்டு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து செய்யத் தொடங்கியதும், தொடர்ந்து செய்ய முடியாது என்று அடுத்த கட்டத்திற்குத் தாவி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாளிலேயே அதே மேடையில் கொண்டு வா, கோப்புகளை என்று

# உதவித்தொகை அளித்து உற்சாகமும் தன்னம்பிக்கையும்

ஈரோடு முனிசிபல் குடியிருப்பில் வசிப்பவர் திருமதி எஸ். விஜயசித்ரா (வயது 35) இவர் இளங்கலை கலையியல் படித்துவிட்டு கடந்த 12 ஆண்டுகளாக வேலை வாய்ப்பு கிடைக்காமல் இருப்பவர். ஈரோட்டில் 11.11.2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்.கே.கே.பி.ராஜா தமிழக அரசு கொண்டு வந்துள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் இவருக்கு உதவித் தொகையை வழங்கினார்.




அரசின் உதவியைப் பெற்றுக் கொண்ட திருமதி. எஸ். விஜயசித்ரா, எனக்கு வேலைக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை உள்ளது. இவ்வுதவியை கணினிப்பயிற்சி பெறவும், புத்தகங்கள் வாங்கவும் வேலைக்கு மனுசெய்யவும் பயன்படுத்துவேன். வேலை தேடும் உற்சாகத்தையும், வாழ்வில் மேலும் உயர தன்னம்பிக்கையையும் இந்த உதவித்தொகை அளித்துள்ளது. எனக்கு 3 மாதத்திற்கான உதவித் தொகை ரூ.900 அளிக்கப்பட்டுள்ளது. எனது குடும்பத்தினரும் நானும் ஊக்கம் பெற்றுள்ளோம் என்று கூறினார்.



இதே விழாவில் உதவித்தொகை பெற்ற திரு. ஜி. அசோக்குமார் (வயது 32) , "மீண்டும் +2 தேர்வில் வெற்றி பெற்று வாழ்வில் உயருவேன்" என்கிறார். "அரசு எனக்கு உதவித்தொகையாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு தலா ரூ.150 வீதம் மொத்தம் ரூ.450 வழங்கியுள்ளது. இதுவரையில் போட்டித் தேர்வுக்கு சொந்தமாக புத்தகம் வாங்க இயலாத நிலையில் இருந்தேன். அரசின் இந்த உதவி மூலம் இனி புத்தகங்களை நானே வாங்கிப் படிப்பேன். வேலைக்கு விண்ணப்பிக்க இனி கடன் வாங்க வேண்டியதில்லை. அரசின் இந்தத் திட்டத்தினால் எனக்கு தன்னம்பிக்கை கூடியுள்ளது. உழைக்க வேண்டும் என்ற உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது" என்று திரு. அசோக்குமார் நம்மிடம் கூறினார்.

இந்த இருவர் மட்டுமின்றி உதவித் தொகை பெற்ற அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனம்கனிந்த நன்றியை உணர்ச்சிப் பெருக்கோடு கூறினர்.

இத்திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பற்ற 4,354 இளைஞர்களுக்கு ரூ.25 இலட்சத்து 79 ஆயிரத்து 550 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது. இவர்களில் 1,449 பேர் எஸ்.எஸ். எல்.சியும், 2290 பேர் +2வும், 615 பேர் பட்டப்படிப்பும் படித்தவர்கள்.

உழைத்து உயரத்துடிக்கும் இளைய சமுதாயத்திற்கு அரசின் இந்த உதவித் தொகை உற்சாகம் தரும் ஊக்கமாகவே அமைந்துள்ளது.

செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

* * *

சொல்லி, கொண்டுவரப்பட்ட கோப்பு, ஏழை விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயிகளுக்கு கடன்பட்டு, கவலையிலே தோய்ந்திருக்கின்ற விவசாயிகள் பட்ட கடனைத் தீர்க்கின்ற வகையில் கூட்டுறவுக் கடன், ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, இந்திய நாட்டுச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை ஒரே கையெழுத்தில் ரத்து செய்த ஆட்சி தான் இன்றைக்கு உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேனே, என்னுடைய தலைமையில் உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி.

அதே நாளில்தான் எல்லா கட்சித் தலைவர்களும் அமர்ந்திருந்த அந்த மேடையிலேதான் அடுத்த தேர்தல் வாக்குறுதியாக தரப்பட்ட, இளஞ் சிறார்களுக்கு சத்துணவோடு இனிமேல் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்படும் என்ற அந்தத் திட்டத்தை எந்த நாளிலே தொடங்குவது என்று அறிவித்தேன் என்றால், பிள்ளைகளுக்கு கல்விச் சாலைகளைத் திறந்து வைத்து, கல்விக் கண் திறந்தாரே காமராஜர், அவர் பிறந்த நாளில் இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று தெரிவித்து, அந்தத் திட்டத்தையும் அறிவித்தேன்.

அதைப் போலவே தான், அதைத் தொடர்ந்து தான் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்ற திட்டத்திற்கும், அதே மேடையில் கையெழுத்திட்டேன்.

**தொழிற்சாலைகள் நிரம்ப வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலில் பயிற்சி பெறுங்கள், அதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள், இந்தப் பணத்தை முடிந்தால் அதற்கு செலவிடுங்கள், இல்லாவிட்டால் அதை உன் பெற்றோரிடம் கொடுங்கள், அவர்கள் குடும்பத்தை நடத்தட்டும், இது ஏதோ நம்முடைய இஷ்டம் போல் செலவு செய்து கொள்ள ஜாலியாக சினிமா பார்க்க, கேளிக்கை நடத்த கொடுக்கப்பட்ட தொகை என்று கருதாதீர்கள். இது முதலமைச்சர் கொடுக்கின்ற தொகை அல்ல, தம்பி உன்னுடைய அண்ணன் உனக்குக் கொடுக்கின்ற தொகை.**

## குவியும் சாதனைகள்

அடுத்து, தரிசு நிலங்களை வழங்குகின்ற திட்டம். அந்த தரிசு நிலங்களைப் பண்படுத்தி வழங்குவோம், பண்படுத்த தேவை இல்லாத நிலங்களாக இருந்தால் அவைகளில் எந்தவிதமான தகராறும் இல்லாத நிலமாக இருந்தால், அதையெடுத்து யாருக்கு அது உரியதோ அந்த விவசாயிக்கே வழங்குவோம் என்று அந்தத் திட்டத்தையும் அறிவித்து, அதனுடைய செயலாக்கமாக திருவள்ளூர் மாவட்டத்தில், நானே அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதே நாளில் தமிழகம் முழுதும் 26,000க்கு மேற்பட்ட ஏக்கர் பண்படுத்தப்பட்ட நிலங்கள், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது அடுத்தபடியாக அந்த நிலங்களை மூன்று மாதங்களுக்குப் பிறகு வழங்கப்படும் என்று அறிவித்ததற்கேற்ப இன்னும் சில நாட்களிலே அநேகமாக டிசம்பர் 17ந்தேதி அடுத்த கட்ட நிலம் வழங்குகின்ற காரியம் தமிழ்நாடு முழுதும் நடைபெறும். நான் விழுப்புரத்தில் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய குறிப்பிட்ட பகுதிகளில் கலந்து கொண்டு ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை வழங்கவிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் நடக்காது, தேர்தல் நேரத்திலே மக்களை ஏமாற்றுவதற்காக அளிக்கப்படுகின்ற வாக்குறுதி என்று சொல்லப்பட்டது. யார் சொன்னார், எவர் சொன்னார் என்றெல்லாம் நான் கூற விரும்பவில்லை. அப்படிச் சொன்னால் இந்த அரசு விழா, அரசியல் விழாவாக ஆகிவிடும்.

சொன்னார்கள், உங்களுக்கே தெரியும்.

நீங்கள் என்ன தெரியாதவர்களா? யார் சொன்னார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? ஆனால் சொன்னவர்களின் வாய் அடைத்துப் போகின்ற அளவிற்கு இந்த நான்கைந்து மாதக் காலத்தில் இந்த ஆட்சியின் சாதனைகள் குவிந்து கொண்டே இருக்கின்றன. அப்படி குவிகின்ற சாதனைகளிலே ஒன்றுதான் இன்றைக்கு இளைஞர்களுக்கு, படித்து, எந்தப் பணியும் இல்லாமல் திரிந்து கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்ற, ஆறுதல் அளிக்கின்ற, அவர்களைப் பெற்ற தாய் தந்தையருக்கு, சகோதரர்களுக்கு ஒரு மின்னல் கீற்று போன்ற புன்னகையை அவர்களுடைய முகத்திலே உருவாக்குகின்ற ஒரு காரியம், அதைத்தான் இன்றைக்கு எங்களால் செய்ய முடிந்திருக்கிறது. இந்த மின்னல் கீற்று போன்ற புன்னகை பௌர்ணமி காலத்து நிலவைப் போல், அந்த முகம் முழுதும் பரவி, அவர்கள் மகிழ்ச்சியோடு உலவிட தமிழகத்திலே உங்களுக்குத் தெரியும் – இந்த ஐந்து மாத காலத்தில் ஆறு பெரிய தொழிற்சாலைகளுக்கு ஏறத்தாழ 3,000 கோடி ரூபாய் முதலீடு தமிழகத்தில் வெளிநாட்டுக்காரர்கள் செய்கின்ற அளவிற்கு கையெழுத்துபோட்டு ஒப்பந்தம் நிறைவேறியிருக்கின்ற செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது.

**உள்ளூர் ஆட்களுக்கு வேலை**

அந்த ஒவ்வொரு தொழிற்சாலையும் உடனடியாக அமைய இருக்கின்றது. அப்படி அமையுமேயானால், அந்தத் தொழிற்சாலைகளிலே பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நான் தொழிற்சாலைக்கு இங்கே உரிமை கோரி, அதனுடைய நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு வந்திருக்கின்ற தொழில் அதிபர்கள், அவர்கள் கொரியாவிலிருந்து வந்தாலும், ஜப்பானிலிருந்து வந்தாலும், ஜெர்மனியிலிருந்து வந்தாலும், எங்கிருந்து வந்தாலும் அவர்களுடைய அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்து போடும் போது நான் அவர்களிடம் கேட்கின்ற முதல் வார்த்தை, நீங்கள் இங்கே தொழிற்சாலையை உருவாக்கினால், அந்தத் தொழிற் சாலையிலே வேலை பார்க்க உள்ளூர் ஆட்களுக்குத்தான் பெரும்பான்மை யோருக்கு நீங்கள் வேலை அளிக்க வேண்டும் என்ற உறுதியைப் பெற்றுக் கொண்டுதான் அந்தத் தொழிற் சாலைகளுக்கு இப்போது அனுமதி அளிக்கப் படுகின்றது. உரிமை வழங்கப்படுகின்றது. இதைச் சொல்லக் காரணம் இன்றைக்கு 100 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞன் வாழ்நாள் முழுவதும் 100 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கவா இந்தத் திட்டம்? இந்தத் திட்டத்தை, இது அமோகமாக வாழ்க,வளர்க என்று யாரும் வாழ்த்தக் கூடாது. வாழ்த்தினால் மாதா மாதம் 150 ரூபாய் வாங்கிக் கொண்டே வாழ்க்கையை நடத்து என்று இளைஞர்களுக்குச் சொல்வது போலாகிவிடும். மாதா மாதம் 300 ரூபாய் வாங்கிக் கொண்டு உன்னுடைய வாழ்க்கையை நடத்து என்று அந்த படித்த பட்டதாரிக்கு சொல்வது போலாகிவிடும். ஆகவேதான் தொழிற்சாலைகள் நிரம்ப வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலில் பயிற்சி பெறுங்கள், அதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள், இந்தப் பணத்தை முடிந்தால் அதற்கு செலவிடுங்கள், இல்லாவிட்டால் அதை உன் பெற்றோரிடம் கொடுங்கள், அவர்கள் குடும்பத்தை நடத்தட்டும், இது ஏதோ நம்முடைய இஷ்டம் போல் செலவு செய்து கொள்ள ஜாலியாக சினிமா பார்க்க, கேளிக்கை நடத்த கொடுக்கப்பட்ட தொகை என்று கருதாதீர்கள். இது முதலமைச்சர் கொடுக்கின்ற தொகை அல்ல, தம்பி உன்னுடைய அண்ணன் உனக்குக் கொடுக்கின்ற தொகை. நீ அந்தக் கடமையை சரியாக நிறைவேற்று, நான் மனம் மகிழ நிறைவேற்று என்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

* * *



# ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டிற்குள் முதலீட்டுத் திட்டங்கள்

**சென்னையில் இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை (2.11.2006)**

சென்னையில் இன்று நடைபெறும் இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்புகளுடைய தேசிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கூட்டமைப்பு உயரிய தொழில் அமைப்புகளில் ஒன்றாகும். இந்த கூட்டமைப்பு பல்வேறு மட்டங்களில் மாநில அரசுடன் பெருமளவில் தொடர்ச்சியான தொடர்பு வைத்துள்ளது. கொள்கைகளை உருவாக்குவது போன்றவற்றில் இந்த அமைப்பின் பங்களிப்பை நாங்கள் மிகவும் மதிக்கின்றோம்.

பொருளாதார வல்லுநர்கள் கூறுவதைப்போல இது வளர்ச்சிக் காலம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசின் முற்போக்கு கொள்கை காரணமாக இந்திய பொருளாதாரம் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சீனாவில் இருந்து இந்தியாவிற்கு தங்களது கவனத்தை திருப்பி வருகின்றனர். நாம் அனைவரும் ஒரு குழுவாகப் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது.



நாம் எல்லாம் வரம்புகள் அற்ற உலகச்சந்தை யுகத்தில் இருக்கின்றோம். போட்டி என்பது வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் எழுதப்படாத சட்டமாக உள்ளது. இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தொழிலுக்காகப் போட்டியிட்டு வரும்போது மாநில அரசுகள் முதலீடுகளுக்காகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் போட்டியிட்டு வருகின்றன. தமிழ்நாடு தொடர்ந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் பெருமளவில் கவர்வதில் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது, இருந்து வரும்.

தமிழ்நாட்டில் பொருள் உற்பத்தித் துறை, வேலைவாய்ப்பினை அளிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்த பங்கை வகிக்கிறது. இருப்பினும் சேவைத்துறை வேலைவாய்ப்புகளை அளிப்பதில் மிகப் பெரும் அளவில் உருவாகி வருகிறது. எனவே, தமிழக அரசு உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறை ஆகியவற்றின் ஆரோக்கியமான வளர்ச்சியை விரும்புகிறது.

**தமிழக அரசின் முயற்சியால் குவியும் முதலீடுகள்**

ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டிற்குள் முதலீட்டுத் திட்டங்கள் பெருகி வருகின்றன. மாநில அரசின் துடிப்பான முன்முயற்சி மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை ஆகியவை இதற்கு முக்கியமான காரணங்களாகும். இதைத் தக்க வைத்துக் கொள்வது தேவையாகிறது. எனவே, நான் எனது தலைமையின் கீழ் தொழில் முனைப்பு குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளேன்.

**மாணவர்களை தொழிலுக்கு தயார்படுத்தும் அளவிற்கு தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்த்த நாங்கள் விரும்புகிறோம். தொழில்நுட்பத்தில் முழு திறமை பெறும் அளவிற்கு அவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. இதை தொழில் நிறுவனங்களுடன் இணைந்துதான் செயல்படுத்த முடியும். திறமையான தொழிலாளர்களுக்கு தேவை வளர்ந்து வருகிறது.**

தமிழ்நாடு அரசு முதலீட்டாளர்களுடன் நட்புக் கொண்டதாகவும் முடிவுகளை மேற்கொள்வதில் வெளிப்படையானதாகவும் இருந்து வருகிறது. மேலும், முதலீட்டு ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவெடுப்பதில் மாநில அரசு விரைவாகச் செயல்பட்டு வருகிறது. மிக முக்கியமாக முதலீட்டாளர்களுக்கு நாங்கள் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோம். எனவே, தமிழ்நாடு தொழில் முதலீடுகளைப் பெருமளவில் பெறுவதில், குறிப்பாக அயல்நாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் முன்னணியில் இருப்பதில் எந்த வியப்பும் இல்லை. புதிய அரசை அமைத்து ஐந்துமாத காலத்தில் மாநில அரசு மோட்டரோலா, அப்பல்லோ டயர்ஸ், டெஸ்ஸால்வ் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த டெல் மற்றும் தைவான் நாட்டைச் சேர்ந்த பெங்டெய் ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை செய்து உள்ளது. இந்த ஐந்து திட்டங்கள் மூலமாக மொத்தத்தில் 2,300 கோடி ரூபாய் முதலீடு வந்துள்ளது. இந்த ஐந்து திட்டங்களும் 50 ஆயிரம்பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பினை அளித்துள்ளது.

முதலீடுகளை ஈர்ப்பதில் நாங்கள் ஆர்வம் செலுத்தி வரும்போதே தமிழ்நாட்டில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் நாங்கள் அதே கவனத்தைச் செலுத்தி வருகிறோம். கடந்த 2.7.2005 அன்று ரூ. 2,428 கோடி செலவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேது சமுத்திரத் திட்டத்தினை இந்திய பிரதமர் அவர்கள் துவக்கி வைத்ததிலிருந்து எங்களது கடமை உணர்வு தெளிவாகிறது. தூத்துக்குடி துறைமுகக் கழகம் உள் துறைமுகத்தை வளர்ப்பதற்கான திட்டத்தை துவக்கி உள்ளது. எண்ணூர் துறைமுகக் கழகம் நிலக்கரி, இரசாயனம், எரிவாயு, இரும்புத் தாது மற்றும் கன்டெய்னர் டெர்மினல் திட்டங்களை மேலும் வளர்ச்சியடையச் செய்ய திட்டமிட்டுள்ளது. மேலும், சென்னை துறைமுகம் இரண்டாவது கன்டெய்னர் டெர்மினலை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இவை அனைத்தும் மத்திய அரசுடன் எங்கள் ஒருங்கிணைப்பின் காரணமாக சாத்தியமாகி உள்ளது.

**வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் முனைப்பாக இருக்கிறோம்**

மாணவர்களை தொழிலுக்கு தயார்படுத்தும் அளவிற்கு தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்த்த நாங்கள் விரும்புகிறோம். தொழில் நுட்பத்தில் முழுதிறமை பெறும் அளவிற்கு அவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. இதை தொழில் நிறுவனங்களுடன் இணைந்துதான் செயல்படுத்த முடியும். திறமையான தொழிலாளர்களுக்கு தேவை வளர்ந்து வருகிறது. ஆகவே, இந்த கூட்டமைப்பின் உறுப்புத் தொழில் நிறுவனங்கள் இந்த மாநிலத்தில் உள்ள பாலிடெக்னிக்குகள் மற்றும் ஐ.ஐ.டி. தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாக பணியாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு தொழிலில் தொடர்ச்சியான பயிற்சிக்கான வாய்ப்பினை அளிக்கலாம் இந்த முன்முயற்சிக்கு தொழில் நிறுவனங்களுக்கு செயல்திறனுடைய ஆதரவை நான் எதிர்பார்க்கிறேன்.

வளர்ச்சிப் போக்கிற்கு மனிதத்துவம் தேவை என்பதில் என்னுடன் நீங்கள் ஒத்துப்போவீர்கள் என்று நம்புகிறேன். பொருளாதாரத்தில் வளர்ச்சி என்பது வேலை வாய்ப்புகளில் வளர்ச்சி என்றும் பொருள் படவேண்டும். சமுதாயத்தின் கீழ் மட்டங்களில் உள்ள பிரிவினருக்கு அதிகமான வாய்ப்புகளை அளிப்பது என்றும் அது பொருள்பட வேண்டும். தமிழக மக்களுக்காக வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது அரசின் முனைப்பாக எப்போதுமே இருந்து வருகிறது. நுட்பமான தொழில் பயிற்சி, தொழில் வாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை விரிவாக்குதல் ஆகியவற்றின் மூலம் உள்ளூர் சமுதாயத்தினரை வளர்த்தெடுப்பது நமது பொதுவான இலட்சியமாக உள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் அறிவிக்கப்பட உள்ள தொழில் கொள்கை பொருளாதார வளர்ச்சிக்கு எங்களது அரசின் கடமை உணர்வை மேலும் புதுப்பிக்கும். வரும் மாதங்களிலும் ஆண்டுகளிலும் இந்த கூட்டமைப்பினுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதை எதிர்பார்க்கிறேன். இந்த செயற்குழு கூட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன். □

# அயல்நாட்டினரை ஈர்க்கும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை



தமிழ்நாட்டிற்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், சுற்றுலாத்தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு தற்போது இரண்டாவது இடத்தையும், உள்நாட்டுப் பயணிகளின் வருகையில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

**சுற்றுலா காவலர்கள்**

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் போக்கவும் "சுற்றுலா காவலர்களை" ஏற்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்து அதற்கான ஆணையை 17.10.2006 அன்று வெளியிட்டுள்ளது.

சோதனைக் கட்டமாக பின்வரும் சுற்றுலா தலங்களில் சுற்றுலா காவலர்கள் (Tourism Police) நியமிக்கப்படுவார்கள்.

மாமல்லபுரம் , உதகமண்டலம் , கொடைக்கானல், மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஒரு புறக்காவல் நிலையம் ஏற்படுத்தப்படும். அதில் ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஐந்து காவலர்களும் நியமிக்கப்படுவார்கள்.

**வழிகாட்டிகள் நியமனம்**

சுற்றுலாப் பயணிகளுக்கு, சரியான தகவல்களை அளிக்கவும், அவர்களுக்கு உரிய வழிகாட்டவும், முதற்கட்டமாக 400 வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். இந்த வழிகாட்டிகள் பின்வரும் இடங்களில் செயல்படுவார்கள்.

சென்னை, தஞ்சாவூர், கொடைக்கானல், மாமல்லபுரம், மதுரை, உதகமண்டலம், காஞ்சிபுரம், இராமேசுவரம், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி.







இதற்கான ஆணை 5.9.2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகள்:-**

தமிழ்நாட்டிற்கு வரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலாத்துறை கடந்த நான்கு மாதங்களில் வெளிமாநிலங்களில் கீழ்க்கண்ட இடங்களில் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது.

| | |
|---|---|
| மும்பை | (15.6.2006) |
| அகமதாபாத் | (14.6.2006) |
| கொல்கத்தா | (28.7.2006) |
| ஹைதராபாத் | (17.10.2006) |
| ஜெய்ப்பூர் | (27.10.2006) |

இரயில்வே நிருவாகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து RAIL CUM TOUR- திட்டத்தை டெல்லி, மும்பை, அகமதாபாத், ஹைதராபாத், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் நடத்தியது. இத்திட்டத்தின்படி சுற்றுலாப் பயணிகள் சென்னை சென்ட்ரல் நிலையம் வரையில் இரயிலில் அழைத்து வரப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தின் மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி தமிழ்நாட்டில் உள்ள

சுற்றுலாப் பகுதிகள் பற்றிய ஒருங்கிணைந்த கையேடு இந்தியில் வெளியிடப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளில் மதுரை, இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு விரும்பி அதிக எண்ணிக்கையில் செல்கின்றனர். எனவே அந்த இடங்களைப் பற்றி தனித்தனியாக சிறப்புக் கையேடு இந்தியில் முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளது.

**குறும்படம் மற்றும் விளம்பரப்படம்**

"தமிழ்நாடு சுற்றுலா பற்றிய" குறும்படம் ஒன்று 20 நிமிடம் தயாரிக்கப்பட்டு பிற மாநிலங்களில் நடைபெறும் விளம்பர முகாம்களின்போது பத்திரிகையாளர்களுக்கும், சுற்றுலாப் பயண முகவர்களுக்கும் காண்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள் பற்றிய விளம்பரப்படம் (20 நொடிகள் ) ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. பிற மாநிலங்களில் உள்ள தொலைக் காட்சிகளின் மூலம் இவை வெளியிடப்படும்.

**அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை**

தமிழ்நாடு சுற்றுலா பற்றிய விளம்பரங்கள் வெளிநாடுகளில் வெளிவரும் வார / மாத இதழ்களில் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன. மேலும் வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகம் மேம்பாட்டுச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொள்கிறது. கடந்த செப்டம்பர் மாதம் 12.9.2006 முதல் 15.9.2006 வரை நடைபெற்ற (பசுபிக் ஆசியா பயணமுகவர்கள்) PATA மாநாட்டில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்துகொண்டுள்ளது. நவம்பர் திங்களில் லண்டனில் நடைபெற்ற (6.11.2006 முதல் 9.11.2006 வரை) W.T.M. (உலக சுற்றுலா வர்த்தக சந்தை மாநாடு) மாநாட்டில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டது. அப்போது தமிழ்நாடு சுற்றுலா பற்றிய கையேடுகள் வீடியோ குறுந்தகடு, வண்ணப்பட குறுந்தகடு, தமிழகம் பற்றிய முழுமையான குறுந்தகடு ஆகியவை பயணிகளுக்கு வழங்கப்பட்டது.

**சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்**

இந்த ஆண்டு பின்வரும் முக்கிய சுற்றுலாத் தலங்களில், மைய அரசின் உதவியோடு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் செட்டிநாடு.

முன்னே குறிப்பிட்ட ஒவ்வொரு இடத்திற்கும் ரூபாய் ஐந்துகோடி வரை செலவழிக்கப்படும்.

மேலும் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடுத் திட்டத்தின் கீழ் சென்னை – காஞ்சிபுரம் – மாமல்லபுரம் சுற்றுலா சுற்றுச்சாலை ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி பின்வரும் இடங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

குன்றத்தூர், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், திருப்புக்குழி, பழையசீவரம், நென்மேலி, திருக்கழுக் குன்றம், மாமல்லபுரம், திருப்போரூர்.

**கம்பிவழிப் பயணம்**

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க கம்பிவழிப் பயணம் (Rope Car) பின்வரும் இடங்களில் செயல்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| உதகமண்டலம் | – | மொத்த மதிப்பீடு ரூ. 1,518.69 இலட்சம் (மைய அரசு நிதி உதவி ரூ. 397 இலட்சம்) |
| கொடைக்கானல் | – | மொத்த மதிப்பீடு ரூ. 1,396.5 இலட்சம் (மைய அரசு நிதி உதவி ரூ. 363 இலட்சம்) |
| கன்னியாகுமரி | – | மொத்த மதிப்பீடு ரூ.1,613.50 இலட்சம் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து செலவினங்களையும் ஏற்றுக்கொள்கிறது) |
| ஏற்காடு | – | BOOT திட்டம் அடிப்படையில் தனியார் மூலம் செயல்படுத்தப்படும். |

இதற்கான அரசு ஆணை 14.9.2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**மதுரைக்கு ஹெலிகாப்டர் சேவை**

மதுரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி "பவன்ஹான் (Pawan Hans) ஹெலிகாப்டர்" நிறுவன அதிகாரிகள் மதுரைக்கு "ஹெலிகாப்டர்" சேவை தொடங்குவது பற்றி தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாட உள்ளார்கள். *







புதுடெல்லியில் மதநல்லிணக்க மலர்ப் பேரணியில்

# தமிழ்நாட்டிற்கு விருது

மத ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்துகின்ற மலர்ப் பேரணி விழா (Phool Walon-ki-Saine) மொகலாயப் பேரரசர் அக்பர் காலத்திலிருந்து தில்லி நகருக்கு அருகிலுள்ள "மெஹரௌலி" என்ற இடத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விழா, இந்து, முஸ்லீம் ஒற்றுமையையும் மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்த, பேரரசர் அக்பர் அவர்களால் (கி.பி. 1556–1605) துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1961–ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் இந்த மலர்ப் பேரணி விழா செம்மையுற நடத்திட வழிவகை செய்தார். இவ்விழா, பழம் பெருமை காக்கும் அதன் மரபு முறைகள் மாறாமல் இன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. விழா நாளன்று, இந்துக்களும், முஸ்லிம்களும் தர்க்காவிலிருந்தும் காளி கோவிலிலிருந்தும் அணி வகுத்துச் சென்று இறை வழிபாடு செய்து மக்கள் நலம் வேண்டுவார்கள். இந்து முஸ்லீம் இணைந்து செல்லும் இப்பேரணியின் முன்னே வனப்புமிக்க வெல்வெட்டாலும், அழகிய வேலைப்பாடுகள் மற்றும் வண்ணப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய மலர் விசிறிகள் (பங்கா) மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் தங்கள் மலர் விசிறிகளையும் (பங்காக்களையும்) கலைஞர்களையும் அனுப்பி இவ்விழாவில் பங்கேற்க வைக்கின்றன. 1961ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு, மலர் விசிறி மற்றும் கலைக்குழுக்களையும் அனுப்பி இவ்விழாவில் கலந்து கொண்டு வருகிறது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மலர் விசிறிகளுக்கும், கலை நிகழ்ச்சிகளுக்குமென வழங்கப்படும் பரிசுகள் சென்ற ஆறு ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கே கிடைத்துள்ளன.



இந்த ஆண்டு 2006 மத நல்லிணக்கம், மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் மலர்ப் பேரணியில், இரண்டு மலர் விசிறிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த ஆண்டு மலர்ப் பேரணியில் தமிழ்நாடு அரசு பங்கேற்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி தமிழ்நாடு அரசின் சார்பாக மதுரையைச் சேர்ந்த டாக்டர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையிலான கலைக்குழு மத ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளை அமைத்து வழங்கியது. ஆந்திரா, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் டெல்லி மாநிலங்களும் பங்கேற்றன. தமிழ்நாடு அரசு சார்பாக தப்பாட்டம், கரகம் மற்றும் சிலம்பு ஆட்டம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தன. இந்த மலர்ப் பேரணி விழாவில் மாண்புமிகு மத்திய மற்றும் புதுடெல்லி மாநில அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர். இக்கலைவிழாவில், தமிழ்நாடு அரசு சார்பாக கலந்துகொண்ட கலைக்குழு சிறந்த கலைக் குழுவாகவும், சிறந்த மலர் விசிறிகளாகவும் தேர்வு செய்யப்பட்டது. புதுடெல்லி, தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையர் திரு. சசிசேகர், இ.ஆ.ப., அவர்கள் சிறந்த கலைக்குழு மற்றும் மலர் விசிறிகளுக்கான சிறப்புப் பரிசுகளை தமிழ்நாடு அரசின் சார்பில் பெற்றுக்கொண்டார். ✦







## திருப்பெரும்புதூரில்

# சாம்சங்க் நிறுவன தொழிற்சாலை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

தமிழகத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் மற்றும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஆகிய இரண்டு உற்பத்தித் தொழிற்சாலைகளைத் தொடங்குவது தொடர்பாக, தமிழக அரசுக்கும், சாம்சங்க் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 10–11–2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. அவ்வமயம், மாண்புமிகு மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உடனிருந்தார்.

சாம்சங்க் நிறுவனக் குழுமம் தென்கொரியாவில் முதலிடத்திலுள்ள வர்த்தக நிறுவனமாகும். சாம்சங்க் நிறுவனக் குழுமத்தின் முன்னணி நிறுவனமான சாம்சங்க் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், செமிகண்டக்டர், தொலைத் தொடர்பு, டிஜிடல் மீடியா, டிஜிடல் ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பம் போன்றவற்றில் உலக அளவில் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாகும். சாம்சங்க் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் 2005 ஆம் ஆண்டில் 56.7 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய் 2,55,000 கோடி) விற்று முதல் செய்து 7.5 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய் 34,000 கோடி) நிகர லாபம் ஈட்டியுள்ளது. மிகவேகமாக வளர்ந்து வரும் வர்த்தக அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சாம்சங்க் எலக்ட்ரானிக்ஸ், வண்ண மானிட்டர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், நினைவுப்பதிவுச் சில்லுகள் மற்றும் டி.எப்.டி. – எல்.சி.டி. போன்றவற்றை உலகிலேயே அதிக அளவு உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். 2005–ஆம் ஆண்டு நிறுவன புகழ் (Brand Equity) கணக்குப்படி, சாம்சங்க் உலக அளவில் 20–ஆவது இடத்தில் வரிசையிடப் பட்டுள்ளது. 2005–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப புகழின் கணக்குப்படி, சாம்சங்க் உலக அளவில் 7–ஆவது இடத்தில் வரிசையிடப் பட்டுள்ளது.

இந்தியாவில் சாம்சங்க் நிறுவனம் புதுதில்லிக்கருகில் உள்ள நோய்டா என்ற இடத்தில், பலவிதமான நுகர்வோர் மின்னணுச் சாதனங்களை– அதாவது

தட்டை வடிவிலான (flat) மற்றும் LCD வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் மற்றும் கணினி மானிட்டர்கள் போன்ற வீட்டு உபயோகப்பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.

சாம்சங்க் நிறுவனம் தனது உற்பத்தி மையத்தை இந்தியாவில் அமைப்பது குறித்து பல்வேறு மாநிலங்களை விரிவாக ஆராய்ந்தது. தமிழக அரசின் உத்வேகம் ஊட்டும் அணுகுமுறை, தரமான மனிதவளம், சிறந்த சாலைவசதி, நம்பகமான சரக்குப் போக்குவரத்து சேவை மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய காரணங்கள் சாம்சங்க் நிறுவனத்தை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஈர்த்துள்ளது. சாம்சங்க் நிறுவனம் திருப்பெரும்புதூரில் தொடங்கவுள்ள தொழிற்சாலைகள் 2007ஆம் ஆண்டின் மத்தியில் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

சாம்சங்க் நிறுவனம், வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஏர்கண்டிஷனர்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஒன்றை ரூ.284 கோடி முதலீட்டில் தொடங்கவுள்ளது. மேலும் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் ஒன்றை ரூ.166 கோடி முதலீட்டில் அமைத்து அதன் மூலம் கம்ப்யூட்டர் மானிட்டர்கள் (L.C.D. மானிட்டர்கள் உட்பட) கம்ப்யூட்டர் பிரிண்டர்கள் மற்றும் பிற தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்கவுள்ளது. ஆக மொத்தம் சாம்சங்க் நிறுவனம் இந்த இரண்டு திட்டங்களிலும் சேர்த்து ரூ.450 கோடி முதலீடு செய்யவுள்ளது.

சாம்சங்க் நிறுவனம், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் தனது உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது. அதைப்போல திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் சாம்சங்க் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் அமையவுள்ளது. சாம்சங்க் நிறுவனத்திற்கு உள்ளீட்டு பொருள்கள் வழங்கும் நிறுவனங்கள் (Vendors) பலரும் இத்திட்டத்தால் கவரப்பட்டு தங்களது தொழிற்சாலைகளை திருப்பெரும்புதூர் சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் சிப்காட் தொழிற்பூங்காவில் அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் மூலமாக சுமார் 2,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1,500 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிட்டும். இத்திட்டத்தின் மூலம் எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் உற்பத்திக்கு தமிழகத்தில் மேலும் ஊக்கம் கிடைக்கும் என்றும் தமிழகத்தில் கொரிய நாட்டு முதலீடு மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழிற்துறைச் செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்களும் சாம்சங்க் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் தென் மேற்கு ஆசிய மண்டல தலைமையிடத் தலைவரும், தலைமை நிருவாக அலுவலருமான திரு.எஸ்.எச். ஓ. அவர்களும் கையொப்பமிட்டனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் சாம்சங்க் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளாக திருவாளர்கள், டபிள்யூ.ட்டி.யாங்க் (இயக்குநர் மற்றும் தலைமை நிதி அதிகாரி), ஆர். சுட்ஷி (துணை நிருவாக இயக்குநர்), ஒய்.பி.யூ (இயக்குநர் உற்பத்தி)) மற்றும் சுனில் கோயல் (துணை செயல் தலைவர் – நிதி) ஆகியோரும் தமிழக அரசின் தலைமை செயலாளர், திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் திரு. சந்திரமௌலி, இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர். ■





# தமிழகத்தில் நேரு

நவம்பர் 14 - ஜவகர்லால்நேரு பிறந்த நாள்



**இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராக இருந்தபோது பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 1936-இல் (அக்டோபர் 5-20) தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது நடந்த சில சுவைமிகு சம்பவங்கள்.**

குபீரென்று கோபப்படுவதும், அடுத்த வினாடியே அதை மறந்து விடுவதும் நேருவுக்கே உரிய தனித் தன்மை சில நேரங்களில் அவர் குழந்தையைப் போல் மாறிவிடுவதும் உண்டு.

ஒரு நாள் சுற்றுப் பயணம் முடித்துவிட்டு வந்திருந்த நேரு அன்றைய பத்திரிகைகளில் தமது நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்திருப்பதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு பக்கத்தில் இருந்தவரிடம் "ஒரு கத்திரிக்கோல் வேண்டுமே ?" என்றார்.

"கத்திரிக்கோல் எதற்காக ?" என்று கேட்டார்கள்.

"பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிற என் மகள், இதையெல்லாம் பார்த்தால் தன் தந்தைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவாள்; இந்தச் செய்தித்தாள்களில் உள்ள படங்களைக் கத்தரித்து அவளுக்கு அனுப்பப்போகிறேன்." என்றார் நேரு.

"அப்படியானால் இந்தப் படங்கள் எதற்கு ? அவர்களிடம் கேட்டு அந்தப் புகைப்படங்களையே வாங்கித் தருகிறோம்" என்றார்கள், அங்கிருந்தவர்கள்.

"அப்படியானால் அந்தப் படங்களைக் கண்ணாடி போட்டே வைத்துக் கொள்வாள் அவள்" என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார் நேரு. அவருடைய இந்த மகிழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் அதிசயிக்கச் செய்வதாக இருந்தது.

* * *



**கோ**வை மாவட்டம் கோபியில் நேருவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குப் பேசுவதாக முன்னேற்பாடு இல்லை. ஆனால் அங்கிருந்த அமைதியான மக்களைக் கண்ட நேரு, சுமார் அரைமணி நேரம் உரையாற்றினார்.

"இதுபோன்ற அமைதியான மக்களிடையே பேசுவது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது." என்றும் அவர் பெருமையோடு சொன்னார்.

⌘ ⌘ ⌘

**பொ**ள்ளாச்சி பொதுக்கூட்டம் இரவு 10 மணிக்கு நேரு முதலானோர் அங்கு வரவே சுமார் பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

கூட்டம் முடிந்ததும் "உடுமலைக்குப் போகலாம்" என்றார் நேரு.

"நீங்கள் சாப்பிட வருவீர்கள் என்று சேட்ஜி காத்திருப்பாரே?" என்றார் ஒருவர்.

"சேட்ஜியும் அவர் விருந்தும் காத்திருக்கலாம்; ஆனால் என்னுடைய மக்களை நான் காக்க வைக்க முடியாது" என்றுமிகுந்த கண்டிப்போடு சொல்லிவிட்டார், நேரு.

⌘ ⌘ ⌘

**நே**ருவைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் கோவை மாவட்ட மக்கள் எடுத்துக் கொண்ட உரிமை, "அவருடைய சிவந்த கரங்களில் நகக்கீறல்களாகக் கோடு கோடாகத் தெரிந்தது. இதைக் கவனித்த தி.சு. அவினாசிலிங்கம் "எங்கள் மாவட்ட மக்கள் இப்படி அதிகப்படியாக நடந்து கொண்டதற்காக, தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்றார் பணிவோடு.

"மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பின் அடையாளச் சின்னமல்லவா இது; இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!" என்றார் நேரு, சிரிப்போடு!

⌘ ⌘ ⌘

## நேருவின் பொன்மொழிகள்



**ஜனநாயகம்**

ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்; வாக்குரிமையைச் சமஉடைமையாகப் பெற்றிருப்பதால் மட்டுமே அது சமத்துவமாகாது; ஆனால், பொருளாதார, சமூகச் சமநிலையே ஜனநாயகத்தின் பொருளாகும். ஒரு பிடிவாதமான ஒரு கோட்பாட்டாலோ, அல்லது மதத்தாலோ நான் பிணைக்கப் பட்டவனல்ல; ஆனால், நான் மனிதனுடைய உள்ளார்ந்த ஆன்ம நெறியினை நம்புகிறேன். தனி மனிதனுடைய உள்ளார்ந்த பெருந்தன்மையை நான் மதிக்கிறேன். ஒரு கோட்பாடாக, அதை அடைவது என்பது சற்றுச் சிரமமே, சமத்துவத்தை வலியுறுத்துகிற ஒரு சமூக அமைப்பில், பெரிய வேறுபாடு இன்றி ஜனநாயகத்தை எய்திட இயலுமென்றே நான் நம்புகிறேன். பணம் படைத்தவரின் இழிவான நடத்தையை எவ்வளவு வெறுக்கிறேனோ அதே அளவு ஏழையரின் ஏழ்மை நிலையையும் நான் வெறுக்கிறேன்.

✶ ✶ ✶

**சோஷலிசம்**

உலகப் பிரச்சினைகளுக்கு, தீர்வுகாணக் கிடைத்திட்ட, ஒரு திறவுகோல், சோஷலிசமே வெறும் மனித இனநலப் பற்றாளனாக இல்லாமல், விஞ்ஞானப் பொருளாதார அடிப்படையிலேயே நான் இச்சொல்லைப் பயன்படுத்துகிறேன். எவ்வகையிலும், சோஷலிசம், பொருளாதாரச் சித்தாந்தத்தை விட, ஒருவகையில் சிறந்ததாகும். இது ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்பதனாலேயே அது என்னைப் பாதித்துள்ளது. ஏழ்மை, வேலையில்லாப் பெருஞ்சுமை, அவமதிப்பு, தன்னுரிமையற்ற நிலை ஆகிய இந்திய மக்களின் இத்தகு துயரங்களுக்கு சோஷலிசத்தைத் தவிர வழியேதுமில்லை. ஜனநாயகத்துடன் சோஷலிசத்தை எவ்வகையில் அமைதி மற்றும் சட்டப்பூர்வமான முறையில், இணைப்பது என்பதுதான், நம் முன்னேயுள்ள வினாவாகும். இந்தியா, தனக்கு முன் வைத்துக் கொண்டிருக்கிற பிரச்சினை இதுதான். எவ்வித வற்புறுத்தல் அல்லது கட்டாயத்தின் பேரிலும் இதனை நாம் வெற்றி கொள்ள இயலாது. மக்களின் நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் பெற்றுத்தான் இதை அமல்படுத்த வேண்டும்.

✶ ✶ ✶

**உரிமை**

விரும்பியபடி வாழ, முன்னேற்றமடைய அவரவருடைய விதியை அவரவரே நிர்ணயம் செய்து கொள்ள, உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உரிமையுண்டு. சமாதான சகவாழ்வை மேற்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு.

✶ ✶ ✶





# உடல் நலம் பேணல்




உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு; நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

கூழை யேநீ குடித்தாலும்,
குளித்த பிறகு குடி, அப்பா!
ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா!

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்,
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்.

தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்தபின் உணவும்,
நோயை ஓட்டி விடும், அப்பா!
நூறு வயதும் தரும், அப்பா!

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே;
வையம் புகழ வாழ்வாயே.

– கவிமணி தேசிக விநாயகம்
"குழந்தைச் செல்வம் நூலில்"

# குழந்தை

- ஒரு குழந்தை குறை கூறப்பட்டே வாழ்ந்தால், அவன் கண்டனம் செய்யக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை விரோதத்துடன் வாழ்ந்தால், அவன் சண்டை போடக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை கேலி செய்யப்பட்டு வாழ்ந்தால், அவன் நாணமடையக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை அவமானத்துடன் வாழ்ந்தால், அவன் குற்ற உணர்வோடு இருக்கக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தால், அவன் பொறுமையைக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை உற்சாகப்படுத்ததுலுடன் வாழ்ந்தால், அவன் நம்பிக்கையைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை புகழப்பட்டு வாழ்ந்தால், அவன் மெச்சுதலைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை நேர்மையுடன் வாழ்ந்தால், அவன் நீதியைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை பாதுகாப்புடன் வாழ்ந்தால், அவன் விசுவாசத்தைக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை அமைதியுடன் வாழ்ந்தால், அவன் தன்னையே விரும்பக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை ஏற்கப்பட்டு நட்போடு வாழ்ந்தால், அவன் உலகத்தில் அன்பைக் காணக் கற்றுக்கொள்கிறான்.

– டோராத்தி லா நெட்டே

# சொல்லும் பொருளும்

பணக்கார வியாபாரி ஒருவர் இறக்கும் நிலையில் இருந்தார். மகனுக்குத் தமது வியாபார ரகசியத்தைச் சொல்லத் துடித்தார்.

1. வியாபார இடத்திற்கு நிழலில் போ; நிழலில் வா.
2. பணத்தைக் கடன் கொடு; திருப்பி நீயாகக் கேட்காதே.
3. அதிக விலைக்கு வாங்கு; மலிவாக விற்பாயாக.

நாலாவது ரகசியத்தைச் சொல்லுமுன் வியாபாரி மூச்சு நின்று விட்டது. தன் தந்தை சொன்னபடியே செய்தான். தன் வீடு தொடங்கி கடை வரைக்கும் கல் மண்டபம் கட்டினான்; பணம் கடன் கொடுத்தான்; எவரிடமும் திருப்பிக் கேட்கவில்லை. அதிக விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்கு விற்றான்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. பணம் கரைந்து போய் விட்டது. அவன் உறவினர் ஒருவர், வீட்டுக்கு வந்தார். நிலைமையை அறிந்தார். கோடீஸ்வரன், லட்சாதிபதியாக மாறி இருப்பதை அறிந்தார். அனுதாபத்துடன் விவரம் கேட்டார்.

தந்தையின் மூன்று ரகசியங்களைப் பெரியவரிடம் சொன்னான் வியாபாரியின் மகன்.

வந்த பெரியவர் படித்தவர் மட்டுமன்று; உலக அனுபவம் உள்ளவர்.

"அட அப்பாவி உன் தந்தை சொன்னவற்றை நீ புரிந்து கொள்ளவில்லை!"

"என்ன அர்த்தம் ?"

பெரியவர் விளக்கம் சொன்னார்.

"முதல் இரகசியம். நீ நிழலில் போக வேண்டும். அதாவது வியாபார இடத்திற்கு அதிகாலையில் போ. மாலைக்குப் பின் திரும்பி வா.

இரண்டாம் இரகசியம். யோக்கியர்களாகப் பார்த்துக் கடனைக்கொடு; அவர்களாகத் திருப்பித் தருவார்கள். நீ கேட்டு கடன் வசூல் செய்கிற ஆசாமிகளிடம் கடனைக் கொடுக்காதே என்று பொருள்.

மூன்றாம் இரகசியம். நிரம்பக் கொள்முதல் செய்; விலை மலிவாக இருக்கும்; அப்படியானால் நிறைய வாடிக்கைக்காரர்கள் ஏற்படுவார்கள். நிறைய வாங்கி நிறையப்பேருக்கு விற்பது என்று பொருள்.

இப்புதிய விளக்கத்தைக் கேட்ட பின்பு வாணிபம் செய்த சிறுவன் விழிப்படைந்தான். இழந்த செல்வத்தைப் பெருக்கும் மார்க்கத்தையும் தந்தையின் சூட்சும சூத்திரங்களையும் கண்டு கொண்டான். ✶

(சிந்தனைக்கு விருந்தாகும் குட்டிக்கதைகள் என்ற நூலிலிருந்து...)







நவம்பர் 14
சர்வதேச சர்க்கரை நோய் தினம்

# சிறார்களைத் தாக்கும் சர்க்கரை நோய்



"சர்க்கரை' என்கிற பெயர், கேட்பதற்கு இனிப்பாக இருந்தாலும், "சர்க்கரை நோய்" மிகக் கசப்பானதாகும். இது உடல் நலக்கேட்டை உண்டாக்கும் ஒரு நோய். பெரியவர் – சிறியவர் வேறுபாடின்றி எல்லோருக்கும் இந்த நோய் வரலாம். சிறுவர்களை அந்நோய் எவ்வாறெல்லாம் தாக்கும் – அந்த நோய்க்கு ஆளான சிறியவர்களைப் பாதுகாப்பது எப்படி என்பது பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இளம் வயதினரையும் சர்க்கரை நோய் பரவலாகத் தாக்குகிறது.

## நோய் ஏற்படுவதற்கான காரணம்

இந்த நோய் சிறுவர்களிடையே வருவதற்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன; 'போலியோ' அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ அல்லது தட்டம்மை அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ இந்நோய்க்கு இதுதான் காரணம் எனத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

## நோயின் அறிகுறிகள்

இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும். அதிகத் தண்ணீர் குடிக்கும், அதாவது எப்போதுமே தாகம் அதிகமிருக்கும். அதுமட்டுமல்ல; பசியும் அதிகமாக இருக்கும். அதிகம் சாப்பிட்டும் கூட, உடல் எடை வேகமாகக் குறையும். குழந்தை மிகச் சோர்வுடன் காணப்படும்.



இவைகளை அலட்சியப்படுத்தினால் 48 மணி நேரத்திற்குள்ளாகவே, அதாவது இரண்டு நாட்களுக்குள் குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும் வாய்ப்புள்ளது. அவ்வாறு சென்றால் கூட, இரு நாட்களுக்கு முன்பு இதுபோன்ற நிலை ஏற்பட்டால், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரிடம் அதை மறக்காமல் கூற வேண்டும்.

நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும்போது, குறைந்தது ஒரு முறையாவது சர்க்கரையின் அளவை இரத்தத்திலும், சிறுநீரிலும் பரிசோதனை செய்து பார்ப்பது நல்லது.

ஒரு வேளை இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருப்பின் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தையை நலமாக்கி விடலாம்.

### நோயைக் கட்டுப்படுத்த...

மருத்துவர் பரிந்துரைக்கும் இன்சுலின் ஊசியை தொடர்ந்து குழந்தைக்குப் போட்டு வர வேண்டும். குறைந்தது ஒரு முறை அல்லது இருமுறையாவது ஊசி போட்டால்தான் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். ஊசியை மருத்துவர் அறிவுரைப்படி தொடர்ந்து போட்டு வந்தோமானால் மற்ற குழந்தைகளைப் போலவே இந்த குழந்தையும் நன்கு வாழலாம்.



### உணவுக் கட்டுப்பாடு

சர்க்கரை நோய் கண்ட சிறியவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம். குறிப்பாக இனிப்பு வகைகளை விருப்பம்போல் சாப்பிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்ற உணவு வகைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி அளிக்கலாம்.

இந்நோய் உள்ள சிறுவர் சிறுமியருக்கு வாந்தி, பேதி, சளி, காய்ச்சல், மலேரியா, டைபாய்டு போன்ற நோய்கள் ஏற்பட்டால், அப்போது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பார்த்து மருத்துவரின் ஆலோசனைப்படி இன்சுலின் ஊசி போடவேண்டும்; மற்ற நோய்க்கும் மருந்துகள் சாப்பிடுவது அவசியம்.



### சர்க்கரை அளவு குறைந்தால்....

மாதம் ஒருமுறை உணவுக்கு முன்பு ஒருமுறை இரத்தப் பரிசோதனையும், ஆலோசனையின்படி ஊசி போட்டுக் கொண்டு, அரை மணிநேரம் கழிந்தவுடன் உணவுக்குப் பின் இரண்டு மணி நேரம் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டும்.

உணவுக்கு முன் 80–120 மி.கி., உணவுக்கு இரண்டு மணி நேரம் கழித்து 120 – 160 – மி.கி.வரை இருப்பது நன்று.



குழந்தை தாழ்சர்க்கரை நிலைக்குச் சென்று விடாமல் பார்த்துக் கொள்வது அவசியம். சர்க்கரையின் அளவு 60. மி.கி. குறைவானால், அதிகமான பசி, உடல் வேர்த்து விடுதல், படபடப்பு, கைகால்களில் நடுக்கம், தெளிவின்மை, உளறுதல், மயக்கம், நினைவிழத்தல் ஆகியவை ஏற்படும். நினைவு இழப்பதற்கு முன், ஏதாவது ஓர் இனிப்பான திரவத்தை உடனே கொடுத்து விட வேண்டும்.

பெற்றோர்கள் ஊசிக்குப் பயந்து கொண்டு மாற்றுச் சிகிச்சை முறைக்கு செல்வது, அதாவது மருந்து சாப்பிட்டாலே போதும் என்ற அளவில் குழந்தைகளைக் கொண்டு செல்கின்றனர். இது முற்றிலும் தவறு. சில நாட்களுக்குள் இக் குழந்தைகள் இச்சிகிச்சை பலனின்றி மயக்க நிலையை அடைந்து, உயிருக்கு ஆபத்து நேரலாம்.

சர்க்கரை நோயை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், அதனால் ஏற்படும் உடல் பிரச்சினைகள் தவிர்க்கப்படுவதோடு, பின் விளைவுகளான கண்கள், சிறுநீரகம், கால் நரம்புகள் பாதிப்பு போன்றவை பெருமளவு தடுக்கப்படுகின்றன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு இந்நோய் வந்து விட்டதே என அஞ்சவேண்டியதில்லை – சற்று எச்சரிக்கையுடன் செயல்பட்டால் நோயற்ற மற்ற குழந்தைகள் போல் அக்குழந்தையும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

* * *




# மோட்டார் வாகனத் தொழிலின் உலக வரைபடத்தில் சென்னைக்கு முக்கிய இடம்

தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் கால்கோள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (4.11.2006)

**மா**ண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே!

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களே!

தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே,

மத்திய அரசின் மாண்புமிகு கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ் அவர்களே!

மத்திய அரசின் மாண்புமிகு கனரகத் தொழில்கள் துறை இணை அமைச்சர் திருமதி. காந்தி சிங் அவர்களே!

மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசின் உயர் அதிகாரிகளே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

அனைவர்க்கும் என் வணக்கம்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் மோட்டார் வாகனத் தொழில்களை மேம்படுத்து வதற்காகவும், அவற்றை மேலும் வளர்ப்பதற்காகவும் நவீன ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் சோதனை வசதிகளைச் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தித் தருமாறு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். எனது, அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பிரதமர் அவர்கள், மதுரையில் சேதுசமுத்திரத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றியபோது, 'மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் (National Automotive Testing Research and Development Infrastructure Project - NATRIP) தமிழகத்தில் அமைக்கப்படும்' என 2.7.2005 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, "சென்னைக்கு அருகில், ஒரகடம் என்னும் இடத்தில் வாகனச் சோதனை மையம் அமைவதற்குரிய சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது; விரைவில் அந்த மையம் நிறுவப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்" என 22.7.2006 என்று தமிழக சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட் டிருந்தோம். அதன்படி, நீண்டகாலம் நமது நெஞ்சில் கனவாக இருந்த இந்த மாபெரும் திட்டம் இன்று இங்கே எழுச்சியுடன் நிகழும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியுடன் நிறைவேறத் தொடங்குகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்களும், நமது மதிப்பிற்குரிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களும் மகத்தான இந்தத் திட்டத்தை மட்டுமல்ல;

தமிழ் மக்களின் 150 ஆண்டுகால கனவாக இருந்த சேதுசமுத்திரத் திட்டத்தைத் தமிழகத்திற்கு வழங்கி இருக்கிறார்கள்.

அதே போல, நூறாண்டுகளுக்கு மேல் நாம் கோரிவந்தபடி தமிழ்ச் செம்மொழித் திட்டத்தை நிறைவேற்றியும் இருக்கிறீர்கள்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கியா தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்கி உள்ளார்கள்.

பல ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தைத் தாம்பரத்திலே நிறுவி உள்ளார்கள்.






சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ரயில்வே மண்டலம் அமைக்க ஆவன செய்துள்ளார்கள்.

சேலம் உருட்டாலையைச் சர்வதேச அளவுக்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை (Cold Rolling Mill) அமைத்திட 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இந்த தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் தொடங்கும் திட்டத்தினையும் தமிழகத்திற்குத் தற்போது வழங்கி உள்ளார்கள்.

இவைபோல, பல திட்டங்களை, கேட்டதை கேட்டபடியே உடனுக்குடன் நமக்கு வழங்கிவரும் நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கும்,

நமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாசத்திற்கும், நிறைந்த மதிப்பிற்கும் உரிய தியாகத் திருவிளக்கு திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தமிழக மக்கள் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுவரை வழங்கியுள்ள திட்டங்களுக்கு நன்றி செலுத்துகின்ற அதே நேரத்தில், தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் ஏற்கெனவே கோரியுள்ள ஒரு சில முக்கிய திட்டங்களையும் தமிழகத்திற்கு விரைவில் அனுமதித்து உதவுமாறு தங்கள் இருவரையும் அன்போடு கேட்டுக் கொண்டு, இத்திட்டங்களை இங்கே நினைவுபடுத்துவது எனது தலையாய கடமைகளில் ஒன்று என்று கருதுகிறேன்.

- ✦ குமரி மாவட்டம் குளச்சலில் ஒரு பெரிய துறைமுகம் (Major Port).
- ✦ மதிப்புக்கூட்டு வரியை 1.1.2007 முதல் தமிழகத்தில் நடைமுறைப்படுத்து வதால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு ஈட்டுத்தொகை வழங்குதல்.
- ✦ பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல்.
- ✦ கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குதல்.

- சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தி, டெல்லி மற்றும் மும்பையிலுள்ள பன்னாட்டு விமான நிலையங்களின் தரத்திற்கு இணையாக மேம்படுத்தி நவீனமயமாக்குதல்.
- சென்னைக்கும் மதுரைக்கும், சென்னைக்கும் கோவைக்கும் இடையில் அதிவேக புல்லட் ரயில்களை இயக்குதல்.
- தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க ஆணை பிறப்பித்தீர்கள். அதற்கு நன்றி, என்றென்றும் நன்றி. ஆனால் அந்தச் செம்மொழித் திட்டம் செம்மையாக நிறைவேற இன்னும் வழி வகுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, செம்மொழித் திட்டத்தின் சார்பாக ஆண்டுதோறும் "வள்ளுவர்" விருதும், "தொல் காப்பியர்" விருதும் வழங்க வேண்டுமென்றுநான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

– இத்தகைய பல்வேறு திட்டங்களைத் தமிழகத்திற்கு அனுமதித்திட வேண்டுமென நேரிலும், கடிதங்களின் மூலமாகவும் மத்திய அரசுக்கு பலமுறை கோரிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களையும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களையும் மிகுந்த அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

நமது நாட்டில் மோட்டார் வாகனத் தொழில்கள், அண்மையில் அலை அலையாகப் பெருகிவருகின்றன. இத்தொழில்களில், இந்தியா முழுவதிலும் ஐம்பது ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீடுகள் செய்யப்பட்டு, மோட்டார் வாகனங்களின் ஆண்டு விற்பனை மதிப்பு 1 இலட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளது; இது நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய மகத்தான தேசிய சாதனையாகும்.

மோட்டார் வாகனத் தொழிலில், தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. அசோக் லேலண்டு, டி.வி.எஸ் போன்ற பெரிய மோட்டார் நிறுவனங்கள் பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றன. ஆனால், 1996க்குப்பின் ஹூண்டாய் மோட்டார் நிறுவனமும், ஃபோர்டு தொழிற்சாலையும் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மோட்டார் வாகனத் தொழில்களில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. நமது நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பலர் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் ஆர்வத்துடன் அமைக்கத் தொடங்கி உள்ளனர்.

இந்தத் தொழிற்சாலைகளின் வேகமான வளர்ச்சி காரணமாக, இந்தியாவில் உற்பத்தியாகும் வாகன உதிரிபாகங்களில் தமிழகம் 35 விழுக்காடு அளவுக்கு உற்பத்தி செய்கிறது; அதேபோல, மோட்டார் வாகனங்களின் உற்பத்தியும் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது.



இவை இந்திய வாகனத் தொழில்களின் வளர்ச்சியில் தமிழகம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இன்று அடிக்கல் நாட்டப்படக்கூடிய இந்த மையம், மத்திய அரசின் 1,718 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு களுக்கான மெகா திட்டத்தின் ஓர் அங்கமாக, மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில், ஓரகடத்தில் அமைக்கப்படுகிறது.

470 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாகும் இந்த மையத்தை அமைப்பதற்காகத் தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனம் 304 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. அனைத்து அம்சங்களிலும் வாகனங்களைச் சோதனை செய்து, அவற்றின் தரத்தை உறுதி செய்திடும் ஒரு முழுமையான மையமாக இது விளங்கும்.

ஓரகடத்தில் நிறுவப்படும் இந்த மையம் அனைத்து வகை வாகனங்கள், உதிரி பாகங்களின் தரம், வாகன இயக்கமுறைகள் ஆகியவற்றை ஈரோ 5 எனப்படும் ஐரோப்பிய விதிமுறைகளின் படி சோதித்துச் (HOMOLOGUS) சான்றிதழ் வழங்கும்; மேலும், வாகன என்ஜின் மற்றும் தகவல் தொடர்பு போன்றவைகளில் பின்பற்றப்படும் மின்னணு முறைகள் (INFROTRONICS), வாகனங்களில் அமைக்கப்படும் சீட்பெல்ட் முதலிய பாதுகாப்பு, தடுப்புச் சாதனங்கள் (PASSIVE SAFETY), புறச் சூழல்களுக்கேற்ப வாகனத்தில் அமையும் மின்காந்தத் தாங்கு திறன்கள் (ELECTRO MAGNETIC COMPABILITY) ஆகியவற்றைத் துல்லியமாகச் சோதனை செய்திடும் மிகச் சிறந்த ஆய்வு மையமாக இது திகழும்.

இந்த மையம், வாகன ஓட்டத்தைச் சோதித்தறிவதற்காக 1.8 கி.மீ. நீள சோதனைப் பாதையுடனும் அமையும். இத்திட்டம் 3,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். ஐயுற வேண்டாம். அதுவும் உள்ளூர் தொழிலாளர்களே இதில் பெரும்பாலோர் இடம் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையம் அமைவதன் மூலம்தான், உண்மையிலேயே ஒரு முழுமை வாய்ந்த மோட்டார் வாகனத் தொழில்களுக்கான இணைப்பு மையம் (Automobile Hub) எனும் சிறப்பைச் சென்னை மாநகரம் பெறும்;

உலக அளவில் வாகனச் சோதனை மற்றும் உறுதிப்படுத்துதல் தொழிலின் சந்தை மதிப்பு 560 பில்லியன் அமெரிக்க டாலராகும். இதில் கணிசமான தொகையை இந்த மையம் இங்கே ஈர்க்கும். எனவே, மோட்டார் வாகனத் தொழிலின் உலக வரைபடத்தில் சென்னை ஒரு முக்கிய இடத்தைப் பெறும்.

இத்திட்டம், தமிழகத்தில் வாகனத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடையேயும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டுச் சந்தையிலும், வெளிநாட்டு ஏற்றுமதிகளிலும்

“

**தமிழகத்தில் வாகனத் தயாரிப்புத் தொழில்களில் தற்போது ஏறத்தாழ 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் எனவும், அடுத்த 10 ஆண்டுகளில் இத்தொழில்களில் 5 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரியவந்துள்ளது.**

”

செல்வாக்குப் பெற்று, 'தென்கிழக்கு ஆசியாவின் டெட்ராய்ட்' என சென்னை மாநகரம் புகழப்படுகிறது.

தற்போது, தமிழக கார் தொழிற் சாலைகளில் ஏறத்தாழ 100 கோடி அமெரிக்க டாலர் (ஒரு பில்லியன்) அளவுக்கு முதலீடுகள் செய்யப் பட்டுள்ளன. ஹூண்டாய் நிறுவனம், 2007 ஆம் ஆண்டில், ஆண்டு உற்பத்தித் திறனை 6 இலட்சம் கார் என உயர்த்திட முடிவு செய்து, தனது தொழிற்சாலையை விரிவுபடுத்தி வருகிறது.

இந்த வாகனச் சோதனை மையம் தயாரிப்புகளைச் சோதித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணிகளை விரைந்து முடித்து, தொழிற்சாலைகளில் வாகன உற்பத்திப் பணிகள் விரைவாய் நிகழ உதவும்.

தமிழகத்தில் வாகனத் தயாரிப்புத் தொழில்களில் தற்போது ஏறத்தாழ 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் எனவும், அடுத்த 10 ஆண்டுகளில் இத்தொழில்களில் 5 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த ஆய்வு முடிவில், தமிழகத்தில் வாகன உற்பத்தி 2015ஆம் ஆண்டில், 6 முதல் 7 மடங்குவரை அதிகரிக்கும் என்றும், இத்தொழில் முதலீடுகள் 15 பில்லியன் அமெரிக்கா டாலர் முதல் 20 பில்லியன் அமெரிக்க டாலர் வரை உயரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 5 மாதங்களில், மோட்டோரோலா, அப்போலோ டயர்ஸ், டெசால்வ், குரோத்லிங்க், டெல் கம்ப்யூட்டர்ஸ் ஆகிய ஐந்து தொழில் நிறுவனங்களுடன், தொழிற்சாலைகளைத் தொடங்கிட, தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஐந்து தொழில் நிறுவனங்களின் மூலம், தமிழகத்தில் 2,300 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் பெருகும்; 24,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 26,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 50 ஆயிரம் பேர் நிரந்தர வேலை வாய்ப்புகளைப் பெறுவர்.

மாநிலத்தின் விரைவான முன்னேற்றம் கருதி, இந்த அரசு மத்திய அரசுடன் இணைந்து இணக்கமாகச் செயல்படுகிறது. இந்த இணக்கமான நல்லுறவு மேலும் மேலும் தொடர வேண்டும்; மத்திய அரசின் உதவிகளும் ஒத்துழைப்பும் தமிழகத்திற்குத் தொடர்ந்து கிடைத்திட வேண்டும் என இவ்வேளையில் மீண்டும் அன்புடன் கேட்டுக்கொண்டு, இதற்குக் காரணமான அனைவருக்கும் உங்கள் சார்பாக நன்றி தெரிவித்து அமைகிறேன்.

வணக்கம்.







# சென்னையில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்





சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையுடன் பன்னாட்டு அரிமா சங்கம் – 324ஏ5, பன்னாட்டு ரோட்டரி சங்கம்–3230 மற்றும் இளைஞர் விழிப்புணர்வு இயக்கம் ஆகியவை இணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை 12.11.2006 அன்று சென்னையில் உள்ள 155 வார்டுகளிலும் நடத்தியது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தியாகராய நகர் டாக்டர் கிரியப்பா சாலையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

அந்த முகாமில் கண் சிகிச்சை முகாம், பொது மருத்துவப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ ஊர்தியைப் பார்வையிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், "சென்னை மாநகராட்சி சார்பில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்களுடன் இணைந்து பொதுமக்களின் சேவைக்காக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் சிக்–குன்–குனியா, மூட்டு வலி, இரத்தக் கொதிப்பு, தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், வயிற்றுப் போக்கு, கண் நோய் மற்றும் நீரிழிவு நோய்களுக்குப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை தேவைப் படுபவர்களுக்கும் உடனடியாக செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அனைத்து ஊராட்சிகளிலும் வருமுன் காப்போம் திட்டம் மூலம் மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது. தேவைப்படும் பகுதிகளுக்கு இது போன்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும். நடமாடும் மருத்துவ ஊர்திகள் மூலம் ஏழை, எளிய மக்கள் இருக்கும் குடிசைப் பகுதிகளுக்கும், மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படுகிறது" என்றார்.

**ஏறத்தாழ 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த முகாமில் 400 மருத்துவர்கள், 800 செவிலியர்கள் மற்றும் 4,000க்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர்கள் இச்சிறப்புப் பணியில் ஈடுபட்டனர்**





228657
சென்னை-600 008

ஏறத்தாழ 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முகாமில் 400 மருத்துவர்கள், 800 செவிலியர்கள் மற்றும் 4,000க்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர்கள் இச்சிறப்புப் பணியில் ஈடுபட்டனர். சென்னை மாநகராட்சியில் உள்ள 10 மண்டலங்களிலும் இலவச கண் சிகிச்சை முகாம்களும் நடமாடும் மருத்துவ ஊர்தி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையில் நடைபெற்ற மருத்துவ முகாம்களில் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்று மருத்துவப்பரிசோதனை செய்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா, ஆணையாளர் திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திரு. கே. மணிவாசன், இ.ஆ.ப., மருத்துவ அலுவலர் திரு. குகானந்தம், மண்டல அலுவலர் திரு.பி. முருகேசன், மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் மா.பா. அன்புதுரை, வே.கிருஸ்டி, சைதை பி.ரவி, ஏ.பாபு. திருமதி. சுசீலா கோபாலகிருஷ்ணன், அரிமா மற்றும் ரோட்டரி சங்க நிருவாகிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி

* * *

**2007 ஆம் ஆண்டின் அரசு பொது விடுமுறை நாட்கள்**

| வ.எண். | விழா | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 1. 1. 2007 | திங்கள் |
| 2. | பொங்கல் திருநாள் | 15. 1. 2007 | திங்கள் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16. 1. 2007 | செவ்வாய் |
| 4. | உழவர் திருநாள் | 17. 1. 2007 | புதன் |
| 5. | குடியரசு தினம் | 26. 1. 2007 | வெள்ளி |
| 6. | முகரம் | 30. 1. 2007 | செவ்வாய் |
| 7. | தெலுங்குப் புத்தாண்டு | 19. 3. 2007 | திங்கள் |
| 8. | மகாவீர் ஜெயந்தி | 31. 3. 2007 | சனி |
| 9. | மீலாதுன் நபி | 01. 4. 2007 | ஞாயிறு |
| 10. | புனித வெள்ளி | 06. 4. 2007 | வெள்ளி |
| 11. | தமிழ்ப் புத்தாண்டு | 14. 4. 2007 | சனி |
| 12. | மே தினம் | 1. 5. 2007 | செவ்வாய் |
| 13. | சுதந்திர தினம் | 15. 8. 2007 | புதன் |
| 14. | கிருஷ்ண ஜெயந்தி | 4. 9. 2007 | செவ்வாய் |
| 15. | விநாயகர் சதுர்த்தி | 15. 9 2007 | சனி |
| 16. | மகாத்மாகாந்திபிறந்தநாள் | 2. 10. 2007 | செவ்வாய் |
| 17. | ரம்ஜான் | 14. 10. 2007 | ஞாயிறு |
| 18. | ஆயுதபூஜை | 20. 10. 2007 | சனி |
| 19. | விஜயதசமி | 21. 10. 2007 | ஞாயிறு |
| 20. | தீபாவளி | 8. 11. 2007 | வியாழன் |
| 21. | பக்ரீத் | 21. 12. 2007 | வெள்ளி |
| 22. | கிறிஸ்துமஸ் | 25. 12. 2007 | செவ்வாய் |

## சிறுகதை

கிருஷ்ணன்நம்பி

# சட்டை

அந்தக் கல்யாணத்துக்கு முத்துசாமி எப்படிப் போகாமல் இருக்கமுடியும்? எத்தனை அன்பாக, கரிசனையாக வீடுதேடி வந்து அழைத்துவிட்டுப் போயிருக்கிறான் ராஜாராமன். "நீ மட்டும் காலை எட்டு மணிக்குள் வந்து சேராமலிருந்தாயோ, கல்யாணத்தையே ஒத்திபோடச் சொல்லிவிடுவேன்'' என்று பிரியமும், கண்டிப்பும் கலந்து சொல்லி விரலை ஆட்டி எச்சரித்து விட்டல்லவா போனான் அவன்.

கோரம்பாய்ப் படுக்கையில் புரண்டபடி சிந்தனைகளில் மனசைப் புரட்டினான் முத்துசாமி. ஆனால், பக்கத்து கிராமத்தில் நடக்கிற ஒரு சிநேகிதனின் கல்யாணத்திற்குப் போவதில் பிரமாதமான சிந்தனைக்கோ, மன அலைச்சலுக்கோ எங்கே இடம் இருக்கிறது? ஒன்றுமில்லைதான். போட்டுக் கொண்டு போக ஒரு சட்டை மட்டும் கைவசமிருந்தால் முத்துசாமி ஒன்றையுமே யோசித்திருக்கமாட்டான். ஆமாம், அவனுக்குப் போட்டுக் கொள்ள ஒரு சட்டை இல்லை. அன்று வரை அது அவனுக்கு ஒரு குறையாகவேபடாமலிருந்தது. மாசம் அஞ்சுக்கும் பத்துக்கும் கடைக்குக்கடை ஏறி இறங்கிக் கணக்கு எழுதிட்டு வருகிற உத்தியோகத்துக்கு சட்டை எதற்கு? மேலும் அந்த ஊர் என்ன பெரிய பட்டணக்கரையா? குக்கிராமத்தைவிடக் கொஞ்சம் ஓசத்தியாக இருக்கும். அந்த ஊரில் அந்த உத்தியோகத்துக்குச் சட்டை அவசியமில்லை என்றுதான் தனக்குள் வாதித்துக் கொண்டான்.

முத்துசாமிக்கு எளிமையில் நம்பிக்கை கிடையாது. பணக்காரனுக்கு எளிமை அழகாக இருக்கலாம்; ஏழைக்கு வேண்டுமென்ற ஆசை இல்லாமலில்லை. ஆனால் அரை வேட்டிக்கே இடம் தர உதைக்கும் அவனுடைய 'பட்ஜெட்' சட்டைக்கு இடம் கொடுக்க வேண்டுமே அவனுக்கு இரண்டு பச்சைக்கரை வேட்டிகளும் இரண்டு பனியன்களும் இருந்தன. இதைத் தவிர தோளில் போட்டுக் கொள்கிற துண்டுகள் இரண்டு. ஊரில் ஆறு இருக்கிறது. ஆற்றோரத்தில் கல்லும் கிடக்கிறது. துவைத்துத் துவைத்து, மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான். மாசம் முப்பது முதல் நாற்பத்தியைந்து ரூபாய்வரை வருகிற வருமானத்தில் நன்றாகச் சாப்பிடுகிற நாலு குழந்தைகளையும் மனைவியையும் வைத்து சம்ரட்சிக்க வேண்டுமானால் கோவணம் கட்டிக் கொண்டு வாழக்கூடத் தகப்பன் கற்றுக் கொள்ள வேண்டும்.



முத்துசாமியும் எத்தனையோ கல்யாணங்களுக்குப் போயிருக்கிறான். இப்போது ஏற்பட்டிருக்கிற மாதிரி தர்ம சங்கட நிலைமை இதற்குமுன் எப்போதுமே அவனுக்கு ஏற்பட்டதில்லை. அவனைக் கல்யாணத்துக்கோ அல்லது பிற விசேஷங்களுக்கோ அழைத்தவர்கள் எல்லாம் அவனைப் போன்ற ஆண்டிகளாகவோ, அல்லது அவனைவிடவும் இறங்கின ஆண்டிகளாகவோதான் இருந்தனர். வெறும் வேட்டி துண்டுக்காரன் வீட்டுக் கல்யாணத்துக்கு பனியன், வேட்டி, துண்டுடன் அந்தஸ்தாகப் போயிருக்கிறான் அவன். எந்தப் பணக்காரர் வீட்டுக் கல்யாணத்துக்கும் அன்று வரை அழைக்கப் பட்டதில்லை அவன். அப்படி ஒரு சந்தர்ப்பம் நேரவில்லை.



இப்போது நேர்ந்துவிட்டது. அவனுடன் அவ்வூரில் சின்ன வயசில் ஒன்றாகப் படித்த ராஜாராமன், பட்டணம் போய் பெரிய படிப்புப் படித்து, பெரிய பட்டம் பெற்று, பெரிய மிராசுதார் பெண்ணையும் ரூபாய் பதினாயிரம் வரதட்சிணையையும் தட்டிக் கொண்டு போக 'ஜம்'மென்று மாப்பிள்ளையாக வந்திருக்கிறான். கொடுத்து வைத்தவன்; அதிர்ஷ்டசாலி. ஆனால் இந்த நிலையிலும் இந்த ஏழை முத்துசாமியை மறக்கவில்லையே அவன். எத்தனை நல்ல மனசு அவனுக்கு ஹாட்டும், ஸூட்டுமாகக் கொளுத்துகிற வெயிலில் கைக்குட்டையால் முகத்தையும், கழுத்துப் பட்டையையும் துடைத்துக் கொண்டு குங்குமமாகச் சிவந்த முகத்துடன் இந்தக் குடிசைக்கு வந்தானே. வந்தவனிடம் 'சட்டை வாங்கிக்கொடு; உன் கல்யாணத்துக்கு வருகிறேன்' என்று கேட்க முடியுமா? ராஜாராமனின் அன்பை நினைத்தபோது முத்துசாமியின் மனசு ஒரு தரம் விம்மிற்று; கிளுகிளுத்து உடம்பு புல்லரித்துக் கண் துளிர்த்தது. மிராசுதார் வீட்டு மாப்பிள்ளைப் பையன் அங்கே வந்து போவதைப் பார்த்து அண்டை வீட்டுக்காரர்கள் கொஞ்சம் அசந்துதான் போனார்கள். அசட்டு முத்துசாமியிடம் அவர்களுக்கெல்லாம் சற்று மதிப்புகூட உண்டாயிற்று.

கோரம்பாய்ப் படுக்கை உடம்பைச் சற்று உறுத்தவே சட்டென்று முத்துசாமி எழுந்து உட்கார்ந்து கொண்டான். முதுகைச் சொறிந்தான். அந்தக் குடிசையில் எத்தனையோ பொருட்கள் இல்லாமலிருந்தன. அங்கே மூட்டைப்பூச்சிகள் கூட இல்லை அதில் அவனுக்கு அளவற்ற திருப்தி ஒன்றுமில்லாவிட்டாலும் மூட்டைக்கடி இன்றி நிம்மதியாகத் தூங்கலாமல்லவா? ஆனால் அன்று அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பணக்கார சிநேகிதனின் கல்யாணத்துக்குப் போட்டுகொண்டு போக அவனுக்கு ஒரு சட்டை இல்லை.

சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் தவம் புரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கைக் கழற்றி எடுத்து அதன் சுடரைச் சற்று பெரிது பண்ணினான். 'மூட்டைத் தொல்லை இல்லை என்று சந்தோஷபட்டுக் கொண்டிருந்தோமே இங்கேயும் வந்துவிட்டதா?' சிம்னி விளக்கின் ஜீவனற்ற தேய்ந்த ஒளியில் கோரம்பாயில் மூட்டைப் பூச்சியைத் தேடினான் அவன். ஒரு மூட்டை அகப்பட்டது. இங்கேயும் மூட்டை வந்துவிட்டது. தப்ப முயற்சித்த மூட்டையைப் பிடித்து விரல்களுக்கிடையே கொலை செய்தான். ரத்தத்தின் செம்மை அவனது இடக்கைச் சுட்டுவிரலிலும், கட்டைவிரலிலும் தோய்ந்து, அது மூட்டையின் ரத்தமா, முத்துசாமியின் ரத்தமா? அந்த உரிமைப் பிரச்சினை பற்றி வெகுநேரம் அவனால் சிந்திக்க முடியவில்லை. அந்தக் கல்யாண நினைவு, சட்டை நினைவு மீண்டும் அவன் நெஞ்சில் கால்பரப்பியது.

சிம்னி விளக்கின் சுடரைச் சின்னதாக்கி சுவரில் மாட்டினான். அவனுடைய மூத்தமகன் அருணாசலம் தூக்கத்தில் ஏதோ உளறியபடிப் புரண்டு படுத்தான். மற்ற மூன்று குழந்தைகளும் சுருண்டு சுருண்டு வரிசையாகக் கிடந்தன. அவன் மனைவி சுப்பம்மா பாதி திறந்த வாயுடன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கால் மூன்று வயசுக் கடைக்குட்டிப் பையனின் முதுகில் கிடந்தது. முத்துசாமி எழுந்துபோய் மெதுவாக அந்தக் காலை நகர்த்தி தரையில் போட்டுவிட்டுத் தன் படுக்கைக்கு வந்தான். படுத்தபடியே தன் குழந்தைகளையும் மனைவியையும் சற்றுநேரம் அமைதியாகப் பார்த்தான். சுப்பம்மா ஒரு மரக்கட்டையைத் தலையணையாக வைத்திருந்தாள். குழந்தைகளின் தலைமாட்டில் ஒரே ஒரு எண்ணெய்ச் சிக்குப்பிடித்த, பூப்போட்ட தலையணை ஒருவர் தலைக்கும் அணையாகாமல் விலகிக்கிடந்தது. மொத்தம் அவர்களிடம் இரண்டு தலையணைகளே இருந்தன. ஒன்றை முத்துசாமி வைத்துக் கொள்வான். மற்றொன்று மற்றவர்களுக்கு யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவான் அவன். சுப்பம்மா அதைக் குழந்தைகளிடம் கொடுத்து விடுவாள். அவர்கள் தினமும் 'எனக்கு, எனக்கு' என்று தலையணைக்காகச் சண்டை போடுவார்கள். அருணாசலம் பெரியவனாதலால் – எட்டு வயசு அவனுக்கே வெற்றி கிடைக்கும். அவன் தன் தலைக்குத் தலையணை வைத்துக் கொள்வான். மனசிருந்தால் தன் தம்பிக்கோ, தங்கைக்கோ தலையணையில் ஒண்டிக் கொள்ள இடம் கொடுப்பான். சற்று நேரத்தில் அந்தத் தலையணை நழுவி ஒருவருக்கும் இல்லாமல் அப்பால் போய்விடும்.

முத்துசாமி அந்தத் தலையணையை ஒரு நிமிஷம் கவனித்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தத் தலையணைகூடத் தன் குழந்தைகளில் ஒன்றோ என்று அவனுக்கு அப்போது தோன்றிற்று போதும் போதும்; இருக்கிற குழந்தைகளுக்கே ஒன்றையும் காணோம்.....

மறுபடியும் சட்டை நினைவு வந்துவிட்டது. மணி என்ன இருக்கும்? பன்னிரண்டுக்கு மேலிராது. தெரு விளக்கின் மங்கிய வெளிச்சம் ஜன்னல்வழி உள்ளே விழுந்து கொண்டுதானிருந்தது. எதிர்வீட்டுப் பசுமாடு 'ம்மா' என்று எதற்கோ சத்தம் கொடுத்தது. ஒரு கணம் சுவர்க் கோழியின் சங்கீதத்தை ரசித்தான் முத்துசாமி.

ஐந்து ரூபாய் பணம் கடன் வாங்கியாவது ஒரு புதுச் சட்டை தைத்துக் கொண்டு விடலாம் என்ற எண்ணம் வெகு நேரத்திற்குப் பின் அவன் மனசில் பளிச்சிட்டது. அந்த நினைப்பு தோன்றியபோது அவன் உடல் ஒரு தரம்



குலுங்கிற்றா? அவனது சராசரி மாத வருவாயில் ஆறில் ஒருபங்கு அல்லது ஒன்பதில் ஒரு பங்கு! புதுச்சட்டை ஒன்று தைத்துக் கொள்ளும் எண்ணம் எப்படித்தான் தன் மனசில் தோன்றியதோ என்று ஆச்சரியமும், எரிச்சலும் அடைந்தான் அவன். அம்மாதிரி ஒரு எண்ணம் தனக்கு வந்திருக்கக் கூடாது என்று நினைத்தான். ஒரு நாள் கல்யாணத்துக்காகப் புதிதாக ஒரு சட்டை தைத்துக் கொள்ளத் துணிவதோ? பொறுப்பற்ற எண்ணங்கள் சில வேளைகளில் தன்னிடம் தலைகாட்டுவதை எண்ணி அவன் வெட்கினான்.

தெருவிளக்கு அணைந்துவிட்டது. அணைந்து எத்தனை நேரமாகியிருக்கும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. எங்கிருந்தோ நாய் குரைத்த சப்தம் வந்தது. சட்டைப் பிரச்சினை பற்றி ஒரு முடிவுக்கும் வராமலே சற்று நேரத்தில் அவன் தூங்கிப் போய் விட்டான். துயர்ப்படும் ஏழை மக்களின் இரவில் தூக்கம் எத்தனை பெரிய இன்பமாய்ச் சிறகு விரிக்கிறது.

காலையில் முத்துசாமி படுக்கையை விட்டு எழுந்தபோது மணி ஏழாகிவிட்டிருந்தது. வழக்கமாக ஆறு மணிக்கெல்லாம் எழுந்து விடுபவன், இரவு வெகுநேரத்திற்குப்பின் தூங்கியதால் காலையில் ஒரு மணி நேரம் அதிகமாகத் தூங்கிவிட்டான் போலிருக்கிறது. பாயைச் சுருட்டி ஒரு மூலையில் எறிந்துவிட்டுக் குளிக்கப் புறப்பட்டான். உமிக்கரியும், துண்டும், பனியனும் எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கி நடந்தான். மனதில் சட்டை நினைவு மீண்டும் இழையோட ஆரம்பித்துவிட்டது. மறுநாள் அல்லவா கல்யாணம்.

குளிர்ந்த ஆற்றுப் பரப்பில் இரண்டு கைகளையும் விரித்துத் துழாவிக்கொண்டு இறங்கியபோது தனக்கேற்ற ஒரு சட்டை நீரில் மிதந்து வரக்கூடாதா என்று அவன் நப்பாசைப்பட்டான். உடனே தன் அசட்டுத் தனத்தைத் தனக்குள் கண்டித்துக் கொண்டான். உடுத்துக் கொண்டு போக கம்பிக்கரையாக ஜரிகைபோட்ட வேட்டி அவனிடமிருந்தது. யாரோ எப்போதோ மோட்டாரில் தவறி விட்டுவிட்டுப் போன ஒரு காகிதக் கட்டை எடுத்துப் பிரித்தபோது அதனுள் அழகிய புதிய ஜரிகை வேட்டி இருந்ததை அவன் கண்டான். அது அவனுடையதாகிவிட்டது. அந்த வேட்டியைப் பத்திரமாக வைத்திருக்கும்படிச் சுப்பம்மாவிடம் அவன் கொடுத்து வைத்தான். ஒன்றிரண்டு கல்யாணங் களுக்குக்கூட அதை உடுத்திக்கொண்டு போனதுண்டு. அதையே ராஜாராமன் கல்யாணத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், சட்டை இல்லையே, சட்டை போட்டுக்கொள்ளாமல் ஜரிகை வேட்டி உடுத்திக்கொண்டு போவதில் என்ன அர்த்தம் இருக்கிறது; என்ன அந்தஸ்து இருக்கிறது?

சின்ன வயசில் முத்துசாமி சட்டை போட்டுக் கொண்டுதான் ஐந்தாவது வகுப்புவரை படித்தான். முதலில் கொஞ்சம் பணமுள்ள ஏழையாக இருந்த முத்துசாமியின் தந்தை படிப்படியாய்ப் பரம ஏழையாகப் போனார். பிறகு தன் மகனை அவர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவுமில்லை; அவனுக்குச் சட்டை தைத்துக் கொடுக்கவுமில்லை. அவரால் அது முடியவில்லை. பிறகு பல வருஷங்களுக்குப் பின்–மூன்று வருஷங்களுக்கு முன்னால் தம் கடைசிப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தபோது முத்துசாமிக்கு ஒரு சாதாரண ஒற்றை வேட்டியும் வாங்கிக் கொடுத்து, ஒரு வெள்ளைச் சட்டையும் தைத்துக்



கொடுத்தார் அவர். ஆனால், சட்டை முத்துசாமியின் உடம்புக்குச் சரியாக இல்லை. குருட்டுக் கணக்கில் சின்னதாகவே துணி வாங்கி, சின்னப் பையனுக்குச் சேருகிற மாதிரித் தைத்து வாங்கிவிட்டார். "ஒங்க சட்டையும் லெச்சணமும், நீங்களே வெச்சிக்கிடுங்க" என்று ஆத்திரத்துடன் தன் தகப்பனார் முன்னால் வீசி எறிந்தான். அவன் தரையில் விழுந்த சட்டையை சுப்பம்மா எடுத்து தன் பெட்டிக்குள் வைத்துக் கொண்டாள். சற்று பெரிய பையனான பிறகு தன் மகன் அருணாசலத்துக்காவது அணிவிக்கலாமே என்று அவள் நினைத்தாள்.

அவ்வளவுதான். ஐந்தாம் வகுப்புக்குப் பிறகு முத்துசாமிக்குச் சட்டை இல்லாமலே போய்விட்டது. தன் பணத்தில், தான் சட்டை தைத்துப் போட்டுக் கொள்ளும் காலம் இன்னும் வரவில்லை.

தன் வறுமையையும் துன்பங்களையும் நினைத்து உருகியபடி ஆற்று நீரில் உடம்பை நனைத்துக் கொண்டிருந்தான் முத்துசாமி, பொழுது ஏறிக்கொண்டு போயிற்று வெயில் சற்று கடுத்து விட்டது. அவசர அவசரமாக நாலு முழுக்குப் போட்டுவிட்டு, துவைத்து வைத்த வேட்டி, பனியனுடன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான் அவன்.

மணி ஒன்பது அடித்துவிட்டது. வேட்டி மாற்றிக் கொண்டு தன் மனைவியண்டை போனான். அவள் மூத்த மகன் அருணாசலத்துக்குச் சட்டை பொத்தான் போட்டுக் கொண்டிருந்தாள்... அருணாசலத்துக்குப் பள்ளிக்கூடம் போக நேரம் ஆகிவிட்டது. பொத்தானை மாட்டிக் கொண்டே, "ஒங்களுக்கு மட்டும் நாலு முசுகட்டைக் கீரைத்தோசை செஞ்சு வைச்சிருக்கேன். ஆறிப் போறதுக்கு முன்னாலே தின்னுடுங்க" என்றாள் சுப்பம்மாள்.

"அதுசரி சுப்பம்மா, நாளைக்கு அந்தக் கல்யாணத்துக்குப் போட்டுக்கிட்டுப் போகச் சட்டை இல்லையே என்ன செய்யிறதுன்னு யோசிக்கிறேன்" என்று தன் பிரச்சினையை அவன் சொன்னான். ஏற்கெனவே முன் தினம் அவளிடம் சொல்லியாகிவிட்டது. இன்று மீண்டும் சொல்கிறான். அவளிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது ?

"என்ன செய்யிறது சொல்லுங்க... போக வோண்டாம்னு வெச்சிரவேண்டியதுதான். நமக்கெதுக்கு கல்யாணமும் கார்த்திகையும்... என்று விரக்தியைக் கொட்டினாள் சுப்பம்மா.

தன் சட்டை சரியாக இருக்கிறதா என்று குனிந்து பார்த்துக்கொண்டான் அருணாசலம். துவைத்து உலர்த்தியதால் எண்ணற்ற சுருக்கங்கள் விழுந்து அந்தக் காக்கிச் சட்டை சுருணையாக இருந்தது. சட்டையின் இரண்டு விளிம்புகளையும் வெட்டி வெட்டி இழுத்துவிட்டுக் கொண்டான் அச்சிறுவன். முத்துசாமி பேசினான்.

"எப்படி சுப்பம்மா போகாம இருக்கிறது.... ?"

"அப்படியானா, சட்டை போட்டுக்காமலே போங்க... பனியனும் துண்டும் இருக்கவே இருக்கு."

முத்துசாமி ஒன்றும் பேசாமல் தோசையை எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான். சுப்பம்மா கணவனுக்குத் தண்ணீர் எடுத்துவைத்தாள்.

தன் பெற்றோர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்ற அருணாசலம் ஒரு நிமிஷம் ஏதோ யோசித்துவிட்டு, "அம்மா பெட்டியிலே ஒனக்கு சட்டை இருக்கப்பா; வெள்ளச் சட்டை" என்று சொன்னான்.

முத்துசாமி மனைவி பக்கம் திரும்பினான்.

"அதாங்க, அந்தப் பழைய சட்டை ஒங்க தங்கச்சி கல்யாணத்துக்கு ஒங்கப்பா தெச்சுக் கொடுத்தாரே ஒங்களுக்கு 'அளகா' அதைச் சொல்றான் பய."

"அதை இன்னமுமா வெச்சிருக்கே ?"





"பின்னே, வெச்சுக்காமே குளத்திலேயே போடுவாங்க. ரெண்டு வருசம் போனா இந்தப் பயலுக்குப் போட்டுக்க சரியா இருக்கும்,"

இதற்குள் அருணாசலம் அம்மாவின் ஓலைப் பெட்டியிலிருந்த அந்தப் *பழைய* சட்டையை எடுத்துக்கொண்டு அங்கு வந்து விட்டான்.

"இதோ பாரப்பா, இந்தச் சட்டைதான் இதைப் போட்டுக்கிட்டுக் கல்யாணத்துக்குப் போ" என்று உற்சாகமாகச் சொன்னான் அருணாசலம்.

முத்துசாமிக்கு எரிச்சல் பிடுங்கிற்று "ஏலே, முட்டாக்களுதே, யாருடா உன்னை இதை எடுத்திட்டு வரச் சொன்னா....ம் ?" என்று கூச்சல் போட்டான். சுப்பம்மா குறுக்கிட்டாள். "பள்ளிக்கூடத்துக்குப் பொறப்பட்டு நிக்கற பிள்ளையை எதுக்கு திட்டுறீங்க ? அவனுக்கு என்ன தெரியும் ?"

"இங்கிருந்து போறியா இல்லையா" என்று இரைந்தான் முத்துசாமி.

"இந்தச் சட்டை அப்பாவுக்குச் சேராதுடா பயலே. இனிமே நீதான் இதைப் போட்டுக்கிடணும்" என்றாள் தாய்.

"சேரும் அம்மா" என்றான் சிறுவன்.

"எப்படிடா சேரும் ?"

"போட்டுக்கிட்டாத்தானே சேரும்" என்று முரண்டு பண்ணினான் *அருணாசலம்.*

"பய ஆசையைத்தான் எதுக்குக் கெடுக்கணும் ? போட்டுக் காமிச்சிருங்களேன்" என்றாள் சுப்பம்மா கனிந்த குரலில். கையைத் துடைத்துக் கொண்டு வந்த முத்துசாமி ஒன்றும் பேசாமல் தன் மகன் கையிலிருந்த சட்டையை வெடுக்கென்று பிடுங்கி அணிந்து கொள்ள முற்பட்டான். மறு கணம் அவன் உடம்புக்கு பெரிசாக, 'தொள தொள'வென்று அந்தச் சட்டை சேர்ந்து கொண்டது!

முத்துசாமி பித்துப் படித்தவன் போல் அலறினான் –

"சட்டை சரியா இருக்கு சுப்பம்மா: ரொம்பச் சரியா இருக்கு, ரொம்பச் சரியா இருக்கு."

அவன் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் குதித்தான்; கொம்மாளமடித்தான். உடனே, கசங்கிவிடாதபடி சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டுவிட்டு அருணாசலத்தை வாரி எடுத்துத் தழுவிக் கொண்டான்.

பசியிலும், பட்டினியிலும், வாழ்க்கைத் துயரங்களிலும் அடிபட்டு, சட்டம் சட்டமாய்விட்டுச் சருகாய்க் காய்ந்துபோய் நின்ற தன் கணவனின் மெலிந்த உடம்பைப் பார்த்துக் கண்ணீர் மல்க நின்றாள் சுப்பம்மா.

(சாகித்ய அக்காதமி வெளியிட்ட
நவீன தமிழ்ச் சிறுகதைகள்
நூலிலிருந்து....)

* * *


## சந்தாதாரர் ஆகுங்கள்

### தமிழரசு

தமிழக அரசின் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

<u>தமிழரசு சந்தா விவரம்</u>

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

தனி இதழ் – ரூ.10/–
ஆண்டுச் சந்தா – ரூ.120/–
ஆயுள் சந்தா – ரூ.1,000/– (10 ஆண்டுகள்)

**தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்**

தனி இதழ் – ரூ.15/–
ஆண்டுச் சந்தா – ரூ.60/–
ஆயுள் சந்தா – ரூ.500/– (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தா தொகையினை
வங்கி வரைவோலையாகவோ,
பணவிடை மூலமாகவோ,
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப் பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பார்க்க, படிக்க, பயன்பெற**

இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்

## 60 ஆயிரம் பன்மொழி நூல்கள்கொண்ட

# தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம்

உலகப் புகழ் பெற்ற தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அண்மைக் காலமாக பல வளர்ச்சிகளை எய்தியுள்ளது.

**நூல்கள் பதிப்புப் பணி**

மாமன்னர் சரபோஜியின் 229ஆவது பிறந்தநாள் விழாவில் பொதுமக்களால் மிகவும் விரும்பி வாங்கப்படும் இலக்கிய, வைத்திய, வானவியல் நூல்கள் 39ன் மறுபதிப்பு நூல்களும் புதிதாக 9 சமஸ்கிருத நூல்களும், 7 தமிழ் நூல்களும், ஒரு மராத்தி நூலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வெளியீடுகளையும் சேர்த்து இந்நூலகம் இதுவரை 495 நூல்களை வெளியிட்டுள்ளது. 24.9.2006லிருந்து 50 சதவிகிதம் தள்ளுபடி விலையில் புத்தகங்கள் விற்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தினமும் சராசரி ரூ.20,000க்கு புத்தகங்கள் விற்பனையாகி வருகின்றன. புத்தகங்கள் அனைத்தும் சிறந்த எழில் வண்ண அட்டைகளுடன் வெளியிடப்பட்டுள்ளன.

**கணினிமயமாக்கல்**

இந்நூலகத்தில் 12 கணினிகள் பொருத்தப்பட்டு புத்தகங்கள் யாவும், கணினியிலும், தானியங்கி அச்சகத்திலும் அச்சாகி வெளியிடப்படுகின்றன. இதனால் தனியார் அச்சகங்களில் இந்நூலகப் புத்தகங்கள் தயாரிப்பது தவிர்க்கப்பட்டது. இதனால் நூலகத்திற்கு ஆண்டுதோறும் சற்றேறக்குறைய ரூ.6 இலட்சம் சேமிப்பாகிறது.

**புதிய நூல்கள் அச்சுப் பணி**

சிறந்த பதிப்பாசிரியர்களைக் கொண்டு இலக்கியம், இலக்கணம், மருத்துவம், ஜோதிடம் போன்ற பொருண்மையில் பத்து நூல்கள் அச்சாகி வருகின்றன. இதில் தொல்காப்பிய உரைக்கொத்து (எழுத்ததிகாரம்), தொல்காப்பிய உரைக்கொத்து (சொல்லதிகாரம்), வண்ணத் திரட்டு, திருவரங்க கலம்பகம், குமாரசாமியம், சூடாமணி உளமுடையான், இரகுநாத விலாசம், சிவரகசியங்கள் (அம்சங்கள் 9, 10, 11, 12) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

**தேசிய சுவடிகள் சேகரிப்பு**

நடுவண் அரசு இந்நூலகத்தை தேசிய சுவடிகள் ஆய்வு மையமாகவும், சுவடிகள் பாதுகாப்பு மையமாகவும் நியமித்துள்ளது. (MRC & MCC) இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஈரோடு ஆகிய 11 மாவட்டங்கள் அடங்கும்.

அ. இதுவரை கண்டறியப்படாத சுவடிகளை கண்டறிதல்.

ஆ. இணக்க அட்டவணை தயாரித்தல்.

இ. சுவடிகளைப் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்துதல் ஆகியவை தேசிய சுவடிகள் ஆய்வு மையப்பணிகளில் சில.

**சுவடிகள் பாதுகாப்பு மையம்**

மடங்கள், கோயில்கள், பெருமளவில் சுவடிகள் வைத்திருப்போர் ஆகியோரிடம் சென்று சுவடிகள் பாதுகாப்பு முறையை விளக்கியும், செயல்படுத்தியும் சுவடிகள் பாதுகாக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதுவரை ஈரோடு, மதுரை, பழனி ஆகிய நகரங்களில் சுவடிகளை பாதுகாப்பும், விழிப்புணர்வும் செயல்முறை விளக்கமும் செய்து காட்டப்பட்டது. இதேபோன்று சிவகங்கை மாவட்டம் கோவிலூரிலும் நடத்தப்பட்டது. 31.1.2006, 1.2.2006 மற்றும் 2.2.2006 ஆகிய மூன்று நாட்கள் தஞ்சாவூரில் மூலப்பாடம் செயல்முறை மற்றும் முருகியல் (Text, practice and Aasthetics Exploring the ancient tradition of Indian Architecture with particular reference to South India) என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் இந்தியாவின் பல்வேறு மாநிலத்திலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டு இந்திய சிற்பக்கலை தொடர்பாகவும், சிற்பங்களின் காலம், வளர்ச்சி, செயல்முறை ஆகியவற்றையும் விளக்கினார்கள். வெளிநாட்டு அறிஞர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.



13.9.2006 மற்றும் 14.9.2006 ஆகிய நாட்களில் பாண்டிச்சேரி பல்கலைக்கழக தமிழ்த்துறையும், நூலகமும் இணைந்து இருநாள் 'சுவடியியல்' கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் பாண்டிச்சேரி பல்கலைக்கழக முதுநிலை மாணவர்களும் ஆய்வுத்துறை மாணவர்களும் கலந்து கொண்டனர். அவர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

1.2.2006 முதல் 5.2.2006 முடிய ஐந்து நாட்கள் எல்லா மாவட்டங்களிலும் சுவடிகள் சேகரிப்பு முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டு சுவடிகள் இருக்கும் இடங்கள் கண்டறியப்பட்டன. சற்றேறக்குறைய ஒரு இலட்சம் சுவடிகள் கண்டறியப்பட்டன. தற்போது அதற்கான படிவங்கள் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் இதுவரை தமிழில் 26 விவரப் பட்டியல்களும், சமஸ்கிருதத்தில் 23 விவரப்பட்டியல்களும், தெலுங்கில் 3, மராத்தியில் 6 விவரப்பட்டியல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டடப் பணிகள்**

உலக புகழ்பெற்ற இந்நூலகத்திற்கு ஒரு நல்ல எழில் கூட்டும் முகப்புத் தோற்றம் வேண்டும் என்பதால் முகப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் (DRDA) ஒப்படைக்கப்பட்டு திரு.கண்ணன் ஸ்தபதியின் துணையோடு பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதுபோன்று நூலகத்தின் பின்புறம் உள்ள இடத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்யாவண்ணம் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. நூலகத்தின் கீழ்ப்புறம் உள்ள அறை ஒன்றும் தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றிற்கான மதிப்பீடு ரூ.15 இலட்சமாகும்.

**சுவடிகள் மற்றும் நூல்களை மென்பொருள் வடிவில் பாதுகாக்கும் முறை**

நூல்களைப் பாதுகாக்க அண்மைக் காலமாக Digitilisation எனும் மென்பொருள் முறை கையாளப்பட்டு வருகிறது. இம்முறை உலகின் முன்னோடி நூலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, இந்த நூலகமும் இத்திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக திருப்பதி திருமலை தேவஸ்தானம் இந்தியப் பண்பாட்டுப் பாதுகாப்பு (Indian Heritage) திட்டத்தின் கீழ் நூலகத்தில் தங்களிடமுள்ள கருவிகளை இங்கு கொண்டு வந்து பொருத்தி முக்கிய நூல்களை 'டிஜிட்டலைசேஷன்' செய்ய ஏற்பாடாகி வருகிறது.

**உலக பண்பாட்டுப் பதிவேடு**
(World Heritage Register)

அரிய பொருண்மை கொண்ட சிற்பச் சுவடிகள் 96 (சமஸ்கிருதம் 86 மற்றும் தமிழ் 10) பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புத்தகப் பிரிவு**

இப்பிரிவில் சற்றேறக்குறைய 60,000க்கு மேற்பட்ட பன்மொழிப் புத்தகங்கள் உள்ளன. மேலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்கான புத்தகங்கள் வாங்கி ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தவும், மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் ஒரு திட்ட முன்மொழிவை நடுவண் அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது ஐ.ஏ.எஸ்., தேர்வுக்கான புத்தகங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**குறும்படம்**

நூலகம் பற்றிய குறும்படம் (CD ) ஒன்று தமிழ்ப் பல்கலைக்கழக நாடகவியல் துறையால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**இணையதளம்**

Sarasvatimahallibrary.Com என்ற இணைய தளம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நூலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள சற்றேறக்குறைய 500 புத்தகங்களின் விவரங்கள் கொண்ட மென்பொருள் தயாராகி வருகிறது.

**நுண்படம் எடுத்தல்**

நுண்படம் எடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 20,000 சுவடிகள் நுண்படமெடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஆய்வாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் புத்தகங்களின் முக்கியப் பகுதிகளையும், சுவடிகளின்



சென்னை கன்னிமாரா பொது நூலகத்தில் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தை 22-11-2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

பகுதிகளையும் நுண்படம் மற்றும் ஜெராக்ஸ் எடுத்து வழங்கப்பட்டு வருகிறது.

**பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

ஆண்டுதோறும் தமிழ், கிரந்தம், தெலுங்கு, மராத்தி மொழிகளில் சுவடியியல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்ற மாபெரும் வரலாற்றுச் சின்னமான நூலகத்தின் சார்பில் 9.10.2006 அன்று மாமன்னர் சரபோஜியின் 229ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாவில், பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.தங்கமுத்து, சரஸ்வதி மகால் நூலகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவ-மாணவியர் முனைவர் பட்டம் பெற தகுதி பெறுவார்கள் என்று அறிவித்தார். தமிழ், சமஸ்கிருதம், மராட்டியம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களில் ஆய்வு மேற்கொள்ள மாணவருக்கு வழிகாட்டும் பேராசிரியர்களையும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அனுப்பிவைக்கும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சுப்ரமணியம் ஓலைச்சுவடிப் பிரிவில் சரஸ்வதி மகால் நூலகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவரை தமிழ்ப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் பெற அங்கீகரிக்கும் என்று அறிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சா.விஜயராஜ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, "திருமலை திருப்பதி தேவஸ்தானம், இந்தியா ஹெரிடேஜ் என்ற அமைப்பை செயல்படுத்துகிறது. அதன் மூலம் நமது நூலகத்தின் ஓலைசுவடிகளையெல்லாம் நமக்கு செலவில்லாமல் மென்பொருள் வடிவில் தயாரித்துத் தர இருக்கிறார்கள். அதற்கான ஆணை விரைவில் வெளிவரும். அதற்குப் பின்னர் இங்குள்ள ஓலைச்சுவடிகளை மென்பொருள் வடிவில் யார் வேண்டுமானாலும் படிக்கலாம். அவற்றில் அடங்கியுள்ள மிகப்பெரிய கருத்துகள் உலகெங்கும் கொண்டு சேர்க்கப்படும். யுனெஸ்கோ நிறுவனம் வெளியிடுகின்ற உலகப் பண்பாட்டுப் பதிவேட்டில் சரஸ்வதி மகால் நூலகத்தைப் பதிவு செய்ய இந்திய அரசு பரிந்துரை செய்துள்ளது. எந்த நோக்கத்தில் இந்நூலகத்தை சரபோஜி மாமன்னர் நிறுவினாரோ அது தொடரவேண்டும். இங்குள்ள அறிவு பொக்கிஷங்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட வேண்டும்" என்றார்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தஞ்சாவூர்.*

❖ ❖ ❖



# இராமநாதபுரம் மாவட்ட பனைத் தொழிலாளர்களுக்கு ஊக்க உதவிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை வெல்லம் விற்பனை கூட்டுறவுச் சங்கம் 09.07.1954-இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 01.11.1993 முதல் இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இவ்வமைப்பு இயங்கி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட பனை வெல்லம் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுபாட்டின் கீழ் 117 பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள், 14 பனை ஓலை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒரு பனந்தும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கங்களில் மொத்தம் 51 ஆயிரம் பனைத்தொழிலாளர்கள் மற்றும் பனை ஓலைத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள 6 கோடி பனை மரங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1.50 கோடி பனை மரங்கள் உள்ளன. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக பனைத்தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய வளமற்ற நிலவளம், நீர்வளம், மழைவளம் ஏதுமில்லா வறட்சியான பகுதியாகும். ஆனால் இங்குள்ள நிலத்தில் "கற்பகத்தருவாம்" பனை மரங்கள் மிகுந்த அளவில் வளர்ந்து செழித்தோங்கி உள்ளன. இம்மாவட்ட மக்கள் மனத்திடம் உள்ளவர்களாகத் திகழ்ந்த போதிலும் வேறு தொழில்கள் இல்லாமையால் வறுமைக் கோட்டிற்குட்பட்டு வாழ்கின்றனர். சுருங்கக் கூறின் இம்மாவட்ட மக்கள் பெரும் பகுதியினர் பனைத் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.



இம்மாவட்டத்தின் ஏழைப் பனைத் தொழிலாளர்களுக்கு 2005-06 ஆம் ஆண்டு பகுதி - 2 திட்டத்தின் கீழ் 200 நபர்களுக்கு பதனீரை காய்ச்சி கருப்புக்கட்டி தயார் செய்வதற்கு ரூ. 1,500/- பெறுமான கொப்பரைகள், மரத்துடுப்புகள் மற்றும் கருப்புக்கட்டி மர அச்சுகள் போன்ற கருவிகள் இம்மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

சந்தையில் பனைப்பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வது, பனைத்தொழிலாளர்கள் ஒவ்வொரு வருடமும் பனைத்தொழில் செய்து பதனீர் இறக்கி கருப்புக்கட்டி உற்பத்தி செய்வதற்கும் பதனீரை இடம் பெயர்ந்து விற்பனை செய்வதற்கும் தமிழ்நாடு அரசு ஆணையின் பேரில் உரிமம் பெற்றுத் தரும் பணிகளை பனை வெல்லம் கூட்டுறவுச் சங்கம் செய்கிறது. 2006 ஜனவரி முதல் 31.08.2006 முடிய மொத்தம் 900 பனைத் தொழிலாளர்களுக்கு பதனீர் இறக்க உரிமம் வழங்கப் பட்டுள்ளது. இம்மாவட்ட ஏழைப் பனைத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில்கள், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் மத்திய கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் மற்றும் மானியம் பெற்றுத்தருவதும் இச்சங்கத்தின் பணியாக உள்ளது.

இச்சங்கத்தின் கீழ் சாயல்குடி, கீழக்கரை முதலிய இடங்களில் கொள்முதல் நிலையங்களும், மாவட்ட ஆட்சியர் வளாகம் மற்றும் இராமேஸ்வரத்தில் விற்பனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொ)**
இராமநாதபுரம் மாவட்டம்.

## தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவராக திரு. குமரி அனந்தன் அவர்களும், உறுப்பினர்களாக தி. கார்மேகம் (செட்டியார்பட்டி, விருதுநகர் மாவட்டம்) இரா. தா. தங்கமாங்கனி, (ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்) ஐ. அந்தோணி வியாகப்பன் என்ற துரைசாமி, (தென்காசி, விருதுநகர் மாவட்டம்) ஜெ. ஜெயக்குமார் ரூபன் (நாட்டார்குளம், தூத்துக்குடி மாவட்டம்) சி. வரதராஜ் (வையப் பமலை, நாமக்கல் மாவட்டம்) எஸ். சிவலிங்கம் (தாமரைக்குளம், ராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நியமனம் செய்துள்ளார்.



# வளரும் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

கலை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வளர்ந்துவரும் இளம் கலைஞர்களுக்கு வாய்ப்புகளை அளித்து வருகிறது. இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் வாயிலாக, வாய்ப்பாட்டு இசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைப்பிரிவுகளில் கலை நிகழ்ச்சிகள் வழங்கத்தக்க வகையில் கற்றுத் தேர்ந்த 15 முதல் 30 வயது வரையிலான கலைஞர்களைத் தெரிவு செய்து, அக்கலைஞர்களைக் கலை உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழகத்தில் நன்முறையில் செயற்பட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்குத் தேவையான நிதியுதவி வழங்கி, அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்திட ஏற்பாடுகளைச் செய்து தருகின்றது. இத்திட்டத்தின்படி கலைஞர் ஒருவருக்குத் தலா நான்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்பு வழங்கப்படுகின்றது.






ஆண்டுதோறும் நடைபெறும் இந்தத் திட்டத்தின் வாயிலாக வெளி உலகுக்குத் தெரியவந்த கலைஞர்கள்தான் நடிகை திருமதி. ரேவதி, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன், திரு. உன்னிகிருஷ்ணன். திரு. திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம், திரு. பி.கிருஷ்ண மூர்த்தி, திரு. சிக்கல் குருச்சரண், திருமதி.காயத்ரி கிரீஷ், திரு. நெய்வேலி சந்தானகோபாலன், திரு. சேஷம்பட்டி சிவலிங்கம், திருமதி. பார்வதி ரவி கண்டசாலா, திருமதி. ஊர்மிளா சத்தியநாராயணா, திருமதி. கவிதா ராமு போன்றோர். இத்திட்டச் செயலாக்கத்திற்காக தமிழக அரசு, ரூ.6. இலட்சம் தொகையினை இயல், இசை, நாடக மன்றத்திற்கு நல்கையாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் (2006–2007) திரு. திருப்பாம்புரம் சோ.சண்முகசுந்தரம், திரு. டி. எஸ். இலட்சப்பா பிள்ளை, திருமதி இலால்குடி விஜயலட்சுமி, திரு. வழுவூர் வி.ரவி ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் இசைத் துறையில் 70 கலைஞர்களை நேர்காணல் செய்து அவர்களில் பின்வரும் 28 கலைஞர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

குரலிசைக் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வி பி. சுசித்ரா, செல்வன் ஏ. ரோகித், செல்வன் ரா. ராகவேந்திரா, செல்வி ராகினி ஸ்ரீ.எம், செல்வி ஷ்ரத்தா மோகன், திருமதி ஞா. கற்பகம், கரூர் மாவட்டம் காகிதபுரத்தைச் சேர்ந்த செல்வி மோ. சாமுண்டீஸ்வரி.

வயலின் இசைக் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன் இரா. அமிர்தராஜ், செல்வன் ஜி.பத்ரிநாத், செல்வி ஸ்ரீவித்யா ஆர். எஸ். ஐயர்.

புல்லாங்குழல் இசைக் கலைஞரான சென்னையைச் சேர்ந்த செல்வன் சுருதி சாகர்.

மிருதங்கம் இசைக்கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன். டி. ஸ்ரீகாந்த், செல்வன் வி. பிரசாந்த், செல்வன் மாயவரம் சு.சிவா, செல்வன் இரா. சரண், செல்வன் ஆர். அரவிந்த், விருதுநகரைச் சேர்ந்த செல்வன் எம். இலட்சுமணன்.

கடம் வாசிக்கும் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன் ஜி. சந்திரசேகர சர்மா, திருவெறும்பூரைச் சேர்ந்த செல்வன் எஸ். கிருஷ்ணசாமி.

கஞ்சிரா வாசிக்கும் கலைஞரான சென்னையைச் சேர்ந்த செல்வன் ஜி. ஹரிகர சர்மா.

நாதசுரம் வாசிக்கும் கலைஞர்களான காஞ்சிபுரம் மாவட்டம் ஓரிக்கையைச் சேர்ந்த செல்வன் ஜி. பிரகாஷ், செல்வன் க. வரதன், சிதம்பரத்தைச் சேர்ந்த செல்விகள் மு.சுந்தரி – மு. சாவித்திரி, கும்பகோணத்தைச் சேர்ந்த செல்வன் க. சீனிவாசன் – செல்வன் க. சண்முகநாதன், பொள்ளாச்சியைச் சேர்ந்த செல்வன் ஆர். சக்தி சரவணன், திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூரைச் சேர்ந்த செல்வன் எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் ஆவர்.



மேலும், திருமதி. ஸ்ரீப்ரியா, திருமதி. நந்தினி ரமணி, திருமதி. அம்பிகா காமேஷ்வர், திருமதி. ராதிகா சுர்ஜித் ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் பரதநாட்டியத் துறையில் 43 கலைஞர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, அவர்களில் சென்னையைச் சேர்ந்த செல்வி பூர்ணிமா பாலசுப்பிரமணியன், செல்வி டி.எம்.ஸ்ரீதேவி, செல்வன் நிதீஷ்குமார், செல்வி எஸ். சுகன்யா கவுர், செல்வி ஸ்ரீநிதி சுந்தர், செல்வி மைதிலி பிரகாஷ், செல்வி எல். முருகசங்கரி, செல்வி வித்யாலட்சுமி சீனிவாசன் ஆகிய 8 கலைஞர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

இத்தகவலை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் கவிஞர் இளையபாரதி தெரிவித்துள்ளார். ■


செய்தி சொல்லும் சித்திரங்கள்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற மற்றும் உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் தமிழகம் முழுவதும் தீவிர வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள்.
ஸ்கேன்
சென்னை அரசு பொது மருத்துவமனையில் ரூ. 5.50 கோடியில் அதிநவீன ஸ்கேன் கருவி நிறுவப்படும். - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பு.
குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் அமலுக்கு வந்தது.




தமிழகம் முழுவதும் நல்ல மழை - அணைகள், ஏரிகள் நிரம்பின.
வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், தமிழகம் முழுதும் 9 ஆயிரம் கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.
மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அதிக நன்மைகளை தமிழக அரசு செய்து வருகிறது.
- மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்.






## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

# 2,636 செவிலியர்களுக்கு காலமுறை ஊதியம், 2,540 செவிலியர்களுக்கு தொகுப்பூதியம் உயர்வு

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், தொடக்க சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் மாதம் 2,500 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 2,636 செவிலியர்களுக்கு, அவர்களது பணிமூப்பின் அடிப்படையில் ரூ.5,000–150–8,000 என்ற ஊதிய விகிதம் வழங்கப்படும். பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், மாதம் 2,500 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் 2,540 செவிலியர்களின் தொகுப்பூதியத்தினை, முதலாண்டில் மாதம் 3,500 ரூபாய் எனவும், இரண்டாம் ஆண்டில் மாதம் 4,000 ரூபாய் எனவும், மூன்றாம் ஆண்டில் மாதம் 5,000 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கிடையே, மருத்துவமனைகளில் அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களில் பணிமூப்பு அடிப்படையில் இவர்களை நியமனம் செய்து, முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இவை அனைத்தும் 1.9.2006 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

1990–91, 1991–92 ஆகிய ஆண்டுகளில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களாகப் பயிற்சி பெற்றும் பல ஆண்டுகளாக இரண்டாம் நிலை சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் நியமனம் செய்யப்படாமல் உள்ள 742 பணியாளர்களையும், வயது வரம்பினைத் தளர்த்தி, காலியாக உள்ள பணியிடங்களில் உடனடியாக இரண்டாம்நிலை சுகாதார ஆய்வாளர்களாக நியமனம் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

## 742 [illegible]

# உலக அதிசயங்களைக் கொண்ட கோ–ஆப்டெக்ஸின் 1 இலட்சத்து 64,492 வண்ண பட்டுச்சேலை

**கோ**ஆப்டெக்ஸ் நிறுவனம் கோவை மாவட்டம் சிறுமுகை புதூர் இராமலிங்க சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து, பாவில் 164 வண்ணங்களையும், ஊடையில் 1003 வண்ணங்களையும் இணைத்து ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 492 வண்ணங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய ரக பட்டுச் சேலையினை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 22.11.2006 அன்று, தலைமைச் செயலகத்தில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி, அந்தப் புடவைக்கு "மயில்தோகை பட்டுச்சேலை" எனப் பெயரிட்டுள்ளார்.



பட்டுச்சேலை தயார் செய்த சிறுமுகைபுதூர் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஆர். ராதாகிருஷ்ணன், மேலாளர், திரு. வி. திருமூர்த்தி, நெசவாளர் – திரு. எம். தர்மராஜ், வடிவமைப்பாளர் திரு. பி. சங்கரவேல் பாண்டியன், தனி அலுவலர் ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டாடை அணிவித்து சிறப்புச் செய்தார்கள்.

ஐந்து ஜாக்கார்டு பெட்டிகள் மற்றும் 11,531 ஜாக்கார்டு அட்டைகள் உதவியுடன் உலக அதிசயங்களான எகிப்து பிரமிடு, பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரம், பாரீஸ் நகரின் ஈபிள் டவர், இந்தியாவின் தாஜ்மகால், சீனப் பெருஞ்சுவர், எம்பயர் எஸ்டேட் பில்டிங், பாபிலோன் தொங்கும் தோட்டம் ஆகியவை இப்பட்டுச் சேலையின் பார்டரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல், எட்டாவது உலக அதிசயப் பட்டியலில் உள்ள மதுரை



மீனாட்சி அம்மன் கோவிலின் அழகிய தோற்றமும், அதன் மீது சூரிய ஒளிக்கதிர் மின்னும் வகையிலும் முந்தானையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, முந்தானையில் யாளி, அன்னப்பறவை, கோவில்தேர் வடிவமைப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டுச்சேலை 15 நெசவாளர்களின் உழைப்பில் 25 நாட்களில் நெய்யப்பட்டது. பாவில் பயன்படுத்தப்பட்டுள்ள 164வண்ணங்களும், ஊடையில் உள்ள 1003 வண்ணங்களும் தனித்தனியான வண்ணங்கள்தான் என்று மத்திய அரசுக்குச் சொந்தமான டெக்ஸ்டைல்ஸ் குழு பரிசோதித்து உறுதிசெய்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த உலக அதிசய சாதனைப் பட்டுப் புடவை ஒன்றின் விற்பனை விலை ரூ. 40,000/– ஆகும். பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவை குறித்து வழங்கும் ஆர்டரின் பேரில், 45 நாட்களில் இந்தப் பட்டுப் புடவை நெசவு செய்து வழங்கப்படும். உலக அளவில் புகழ்பெறுகின்ற வகையில் நெய்யப்பட்ட இந்தப் பட்டுச் சேலை கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.



இந்தச் சேலை குறித்து மேலும் சில தகவல்களை கோ–ஆப்டெக்ஸ் நிறுவன தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.அவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"தமிழ்நாடு நெசவாளர்களின் தனித்திறமைக்கு இந்தப் பட்டுச் சேலை ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது. நம் நெசவாளர்கள் பட்டுப்பாரம்பரியம் மிக்கவர்கள். இப்பொழுது பலர் இந்தப் பட்டுச்சோலையை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உலக அளவிலிருந்தும் ஆர்டர்கள் பெற்று நெய்து தர கோ–ஆப்டெக்ஸ் தயாராக உள்ளது. இணைய தளத்தின் மூலம் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் மின்னஞ்சல் மூலம் ஆர்டர்கள் தரலாம்.

கோ – ஆப்டெக்ஸ் பட்டுதான், நாட்டிலேயே சுத்தமான, தரமான பட்டு ஆகும். ஜரிகையின் தரத்திலும் நாங்கள் எந்தவித சமரசமும் செய்து கொள்வதில்லை. ஒவ்வொரு சேலையிலும் பட்டு மற்றும் ஜரிகையின் எடை எவ்வளவு என எழுதப்பட்டிருக்கும்.

இந்த மயில்தோகை பட்டுச்சேலையில் 500 கிராம் பட்டும், 300 கிராம் ஜரிகையும் உள்ளது. இச்சேலையின் வண்ணத்தை 28 தலைசிறந்த பட்டு வணிகர்களும் சோதித்து சான்றளித்துள்ளனர்.

தங்களுக்கு பிடித்த படங்கள் பொறித்து சேலை வேண்டும் என யார் விரும்பினாலும் அவர்களுக்கும் இந்த மயில் தோகை பட்டுச் சேலையில் அவர்கள் விரும்பும் படம் பொறித்து தயாரித்து தரப்படும். வாடிக்கையாளர்கள் தாங்கள் வைத்திருக்கும் தங்களது திருமணப்பட்டுச் சோலையின் வடிவமைப்பைப் போலவே சேலை வேண்டும், என எதிர்பார்ப்பவர்களும் அதே போல புதிய சேலைகளை நெய்து தரவும் தயாராக உள்ளோம். அந்நாளையபட்டுச் சேலைகளை கோ– ஆப்டெக்ஸ்சில் அளித்தால் அந்த மாதிரியை பிரதி எடுத்துக் கொண்டு அவர்களுக்கு பரிசளிக்கவும் இருக்கின்றோம்" என்று அவர் கூறினார்.

தமிழக அரசின் நிறைந்த ஊக்கத்தினால் கோ–ஆப்டெக்ஸ் சாதனைகளைக் குவித்து வருகிறது. தமிழக நெசவாளர்களின் உயரிய கலை வெளிப்பாட்டில் உருப்பெற்றுள்ள இந்தப் பட்டுச்சேலை உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றால் அது வியப்பில்லை. □

# அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் ஆங்கில மொழித்திறனை வளர்க்கும் சான்றிதழ் கல்வித் திட்டம்

**த**மிழகத்தில் உள்ள அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் Business English Certificate (B.E.C.) என்னும் சான்றிதழ் கல்வி திட்டத்தினை அறிமுகப் படுத்துவதற்கு 7.11.2006 அன்று, தமிழக அரசுக்கும், பிரிட்டிஷ் கவுன்சில், சென்னை ஆகியோருக்கிடையே ஒப்பந்தம் கையெழுத் தானது. தமிழக அரசின் கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர், சு. மணி மற்றும் சென்னை பிரிட்டிஷ் கவுன்சிலின் முதன்மைச் செயலாளர் திரு.கிரிஸ் கிப்சன் ஆகிய இருவரும் தமிழக அரசின் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்கள் மற்றும் உயர் கல்வித் துறை செயலர் க. கணேசன், இ.ஆ.ப, ஆகியோர் முன்னிலையில் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் பயனடைவார்கள். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் தேர்விற்கு இந்த சான்றிதழ் படிப்பின் மூலமாக மாணவர்களைத் தயார்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான நோக்கமாகும். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வழங்கும் சான்றிதழ் மிகப் பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் இச்சான்றிதழ் படிப்பின் மூலம் தமிழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். தமிழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய படிப்புக்கான பாடங்களை படிப்பதற்கான கல்லூரி நேரங்கள் போக பிற நேரத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக மாணவர்கள் தங்களுடைய அறிவுத் திறனை பிறருக்கு வெளிப்படுத்த இந்தப் படிப்பு ஒரு கருவியாக அமையும். வேலைவாய்ப்பு பெறுவதற்கான நேர்முகத் தேர்வுகளில் மிகச் சிறப்பாக பதில் அளிக்கவும், இச்சான்றிதழ் மூலம் பெறும் ஆங்கிலத் திறன் பயனுள்ளதாக இருக்கும். தமிழகத்தில், மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை அதிகரிப் பதற்கும், அவர்களுக்கான பன்னாட்டு நிறுவனங்களின் வேலைவாய்ப்பினை உறுதிசெய்வதற்கும், இச்சான்றிதழ் படிப்பு பயனுள்ளதாக இருக்கும். மாநில கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் செயலாக்கப் படுகின்ற இத்திட்டம், அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ – மாணவிகளும் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் இத்திட்டத்தில் சேரலாம். பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மிக அதிக அளவில் முதலீடு செய்து கொண்டு இருக்கின்ற இச்சூழ்நிலையில் தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவிகளும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான திறனை மாணவ – மாணவிகளுக்கு வழங்கு வதற்கும், இச்சான்றிதழ் படிப்பு பயனுள்ள வகையில் அமையும். ■







**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

# சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.32 கோடி ஒதுக்கீடு!

**25 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதிஉதவி**

**ம**கப்பேறு காலத்தில் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் வருமான இழப்பினை ஈடு செய்யவும், கருவுற்ற காலத்தில் ஊட்டச் சத்துள்ள உணவை உட்கொண்டு எடை குறைவில்லாத குழந்தைகளை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை ஏற்படுவதைத் தடுக்கவும் உதவக்கூடிய வகையில் தமிழக அரசின் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், பின்னர் 3 மாதங்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 6,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளாகிய 15.9.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 21 ஆயிரத்து 985 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதிக்குள் 2 இலட்சத்து 11 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதிஉதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் 12,206 ஏழை கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து, தமிழக முதலமைச்சர் அவர்கள் 22.11.2006 அன்று, தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகரைச் சேர்ந்த 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கினார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே. எஸ். ஆர். இராமச்சந்திரன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் 11.11.2006 அன்று திருச்சிராப்பள்ளி பெரியார் மருந்தியல் மகளிர் கல்லூரியின் புதிய நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.



14.11.2006 அன்று, சென்னையில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் சார்பில், நடைபெற்ற 39–ஆவது தேசிய நூலக வார விழாவில் சிறந்த நூலகர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பதக்கங்களை அணிவித்து, சான்றிதழ் வழங்கினார். உடன் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் உள்ளார்.



மதுரை மாவட்டம் சக்கிமங்கலம் சமத்துவபுரத்தில் 11.11.2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன் அவர்கள் உள்ளார்.





மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள், 14.11.2006 அன்று முன்னாள் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 118ஆவது பிறந்தநாளையொட்டி அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர்.




14.11.2006 அன்று சென்னையில் 53ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தொடுதிரைக் கணினியைத் துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

# மதிப்புக் கூட்டு வரியின் சிறப்பு அம்சங்கள்



மாண்புமிகு
வணிகவரித்துறை அமைச்சர்
திரு. **எஸ்.என்.எம். உபயதுல்லா**
அவர்கள் 15.11.2006 அன்று
கூறியிருப்பதாவது:

## 2007 ஜனவரி 1 முதல் மதிப்புக் கூட்டுவரி அமல்

1. சட்டமன்ற வரவு செலவு, கூட்டத்தில் அறிவித்தபடி தமிழகத்தில் மதிப்புக் கூட்டு வரி, 1.1.2007 முதல் அமல் படுத்தப்படும். இதற்கான, நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இதன்படி, கடந்த அக்டோபர் 28ஆம் தேதி தமிழக அரசின் அரசிதழில், (Gazette), மதிப்புக் கூட்டு வரி தொடர்பான சட்டமுன்வடிவு முறைப்படி வெளியிடப்பட்டுள்ளது. இது தற்போது, தமிழக அரசின் வணிகவரித் துறையின், இணையதளத்திலும் (www.tnsalestax.com) சேர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள வணிகப் பெருமக்கள் மற்றும் வணிகர் சங்கங்கள் இந்த சட்ட முன்வடிவினை ஆராய்ந்து இதில் ஏதேனும் சந்தேகங்கள், குறிப்புகள், தெளிவுரைகள் தேவை இருப்பின் அதனைத் துறைத் தலைமையிடத்தில் தொடர்புடைய அதிகாரிகளிடம் (தொலைபேசி, பேக்ஸ் அல்லது இ–மெயில் மூலம்) தெரிவித்தால் அவை அரசால் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்து கொள்கிறேன்.

## வரிசெலுத்துவோர் அடையாள எண்

2. விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு செய்து 2006–2007ஆம் ஆண்டுக்குப் பதிவினை புதுப்பித்துக் கொண்ட மற்றும் இந்த ஆண்டில் புதிதாகப் பதிவு பெற்ற அனைத்து வணிகர் களுக்கும், புதிய பதினொரு இலக்கம் கொண்ட வரிசெலுத்துவோர் அடையாள எண் (TIN - Tax payer Identification Number) வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய எண்ணைப் பெறுவதற்கான முறையை எளிமைப்படுத்தும் வகையில் வணிகவரித்துறை, தனது இணையதளம் மூலம், இந்த எண்ணைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த முறைப்படி ஒவ்வொரு வணிகரும் துறையினுடைய இணையதளத்தை (www.tnsalestax.com) அணுகி GET TIN - என்ற பொத்தானை அழுத்தி, தங்களுடைய விற்பனைப் பதிவு எண்ணை, நுழைவு (enter) செய்தால் TIN எண் வழங்கப்படும். இதனைத் தாமே அச்சில் நகல் எடுத்துக் கொள்ளலாம். இந்த முறையில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமானால், தொடர்புடைய வணிகர்கள் தங்களுடைய 2006–2007–க்குப் பதிவு புதுப்பிக்கப்பட்ட விவரங்களுடன், பதிவு அதிகாரி அலுவலரிடமோ (அல்லது) தொடர்புடைய உதவி ஆணையர்/துணை ஆணையரிடமோ, நேரில் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிருவாக வசதியினைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய எண்ணை, 1.1.2007 முதல் உள்ள வரி தொடர்பான அனைத்து ஆவணங்களிலும் வணிகர்கள், வணிக நிறுவனங்கள் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.





> "மதிப்புக் கூட்டு வரி முறையில் வரி மீது வரி விதிக்கும் முறை இருக்காது. இதனால் பொருள்களின் மீதுள்ள வரிச்சுமை (cascading effect) நீக்கப்படுகிறது."

3. மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தியபின், தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்று நடைமுறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் புதிய சட்டத்தின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இதனை எளிதாக்கவும், அனைத்து வணிகர்களும் ஒரே சமயத்தில் மனு அளிப்பதைத் தவிர்க்கவும், துறை பதிவுச் சான்றிதழ் அளிப்பதைச் சீர்செய்யவும், 15.11.2006லிருந்தே வணிகர்கள் இதற்கான மனுவைத் தொடர்புடைய பதிவு அலுவலரிடம் அளிக்க அரசு வழி வகை செய்துள்ளது. இதன்படி துறையின் இணையதளத்தை அணுகி அதற்குரிய படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து 2 புகைப்பட நகல்களுடன் இணைத்து, போதுமான அஞ்சல் வில்லை ஒட்டிய சுய முகவரியிட்ட உறையையும் சேர்த்து, பதிவு அலுவலருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த மனுக்களைப் பெற்று பரிசீலித்துப் புதிய சான்றிதழ்கள் மதிப்புக் கூட்டுவரி அமலுக்கு வந்த 15 நாட்களுக்குள் வணிகர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு செய்த வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய எந்தவித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

## சிறப்பு அம்சங்கள்

- ⇨ புதிய பொருளாதாரக் கொள்கையை செயற்படுத்தவும், வெளிநாட்டுச் சந்தையில் இந்திய ஏற்றுமதிகளை அதிகப்படுத்தவும், விற்பனை வரி விதிப்பு முறையை சுயவரிவிதிப்பு முறையாக எளிமைப்படுத்தவும், அனைத்து மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டது.
- ⇨ தற்பொழுது பிரேசில், ஐரோப்பா, சீனா, இலங்கை உட்பட 130க்கு மேற்பட்ட நாடுகளில் மதிப்புக் கூட்டு வரிமுறை நடைமுறையில் உள்ளது. இம்முறை எளிமையானது, வெளிப்படையானது மற்றும் சுலபமானது.
- ⇨ இந்தியாவில் 2003–04இல் அரியானாவிலும், 2005–06ல் 24 மாநிலங்களிலும், 1.4.2006 முதல் மேலும் 4 மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரி முறை செயல்படுத்தப்படுகிறது.
- ⇨ பாண்டிச்சேரி, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டும் செயற்படுத்தவில்லை. தமிழ்நாட்டில் வரும் 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.
- ⇨ மதிப்புக் கூட்டு வரி முறையில் வரி மீது வரி விதிக்கும் முறை இருக்காது. இதனால் பொருள்களின் மீதுள்ள வரிச்சுமை (cascading effect) நீக்கப்படுகிறது.
- ⇨ மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும்பொழுது, தற்பொழுது விதிக்கப்படும் கூடுதல் வரி, உபரி வரி, மறுவிற்பனை வரி ஆகியவைகள் நீக்கப்படும்.
- ⇨ தற்பொழுது நடைமுறையிலுள்ள விற்பனை வரிச் சட்டத்தில் பொருட்களின் விற்பனைக்கு பல்வேறு வரி விகிதங்களில் வரி விதிக்கப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி முறையில் 1 சதவிகிதம், 4 சதவிகிதம் மற்றும் 12.5 சதவிகித வரி விகிதங்களில் மட்டும் வரி விதிக்கப்படும். தங்கம், வெள்ளி மற்றும் அதன் நகைகளுக்கு 1 சதவிகித சிறப்பு வரியும், சில பொருளினங்களுக்கு 4 சதவிகித வரியும், ஏனைய அனைத்து பொருட்களுக்கும் 12.5 சதவிகித வரியும் விதிக்கப்படும். பெட்ரோல், டீசல், மதுவகைகள் போன்ற பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரி முறையில் வரிவிதிப்பில்லாமல், சிறப்பினமாகக் கருதி, 20 சதவிகிதத்திற்கு மேல் வரி விதிக்கப்படும்.
- ⇨ செலுத்தப்பட்ட நுழைவு வரி, பொருளின் விற்பனைக்குச் செலுத்தப்படும் வரியில் முழுவதுமாக கழித்துக் கொள்ளப்படும்.
- ⇨ உள்மாநிலத்தில் கொள்முதலுக்குச் செலுத்தப்படும் வரி, அப்பொருளின் விற்பனையின் போது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். ஒரு மாதத்தில்

பயன்பெற்றோர் பகர்வன

# அன்று இலவச வீடு இன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட அறிவிப்புகள் ஒவ்வொன்றையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி அதன் பயனை பொதுமக்கள் அடையும் வண்ணம் ஆணைகளாக வெளியிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறார். அந்த அடிப்படையில் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, ரூபாய் 7,000 கோடி அளவிற்கு கூட்டுறவு கடன் தள்ளுபடி என்ற மிகப்பெரிய சாதனைகளை செய்து முடித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஏழை எளிய மக்களுக்கு இலவச நிலம் மற்றும் வறுமைகோட்டிற்கு கீழ்வாழும் மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் அறிமுகப்படுத்தப் பட்டு, கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவாமூர், பள்ளிப்பட்டு, கழுதூர், ஐவதுக்குடி ஆகிய நான்கு சமத்துவ புரங்களில் வாழும் குடும்பங்களுக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களால் 16.9.06 அன்று 396 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.



திருவாமூரில் உள்ள பெரியார் சமத்துவபுரத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெற்ற திரு. என். சீனுவாசன் (வயது 77) அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து இதுகுறித்து கேட்டபோது அவர் நம்மிடம் தெரிவித்ததாவது :

நான் எனது மனைவி அம்புஜம் (65) மற்றும் மகன் வரதராஜன் (27), மகள் ஆண்டாள் (21) ஆகியோருடன் இந்த சமத்துவபுரத்தில் கதவு எண்.86, சூரியகாந்தி தெருவில் வசித்து வருகிறேன். சமத்துவபுரத்தில் எந்த வீட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. இதனால் தினந்தோறும் நிகழும் நிகழ்வுகள் மற்றும் உலக நடப்புகள், உள்ளூர் செய்திகள், பொழுது போக்கு அம்சமான நாடகங்கள் உள்ளிட்ட எதுவும் அறியவோ, பார்க்கவோ இயலவில்லை. மேலும், எந்த பொதுவான விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்றாலும் 15 கி.மீ. தொலைவில் உள்ள பண்ருட்டி நகருக்குதான் செல்ல வேண்டும். மேலும், இங்கு வசிக்கும் மக்கள் பெரும்பாலும் கூலிவேலை செய்பவர்களாகவே இருக்கிறார்கள். என் போன்ற ஓரளவு படித்தவர்கள் வீட்டில் முடங்கி கிடக்க முடியாமலும், நாட்டு நடப்புகளை அறிய முடியாமலும் தவித்துக் கொண்டிருந்தேன்.

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சமத்துவபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு முதல்கட்டமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதையும், செவி வழியாகவே என்னால் அறிய முடிந்தது. இதை ஒரு கணம் யோசித்துப் பார்க்கையில் முதன் முதலாக சமத்துவபுரம் மக்கள் பயனடைய வேண்டுமென முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளதை அறியும்போது அவர் சமத்துவபுரம் மக்களை மேம்படுத்த வேண்டும், எல்லா வசதிகளும் இந்த சமத்துவபுரம் மக்கள் பெற வேண்டும் என்ற அடிப்படையில் இங்கு சமுதாயக் கூடம், கிளை நூலகம், வணிக வளாகங்கள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்டவற்றை செய்து தந்திருக்கிறார். எனக்கு வழங்கப்பட்ட இந்த தொலைக்காட்சிப் பெட்டியின் மூலம் காலையிலேயே என்னால் அதுவரை நடந்துள்ள அனைத்து செய்திகளையும் அறிய முடிகிறது. அதே சமயம் மாலை நேரங்களில் ஓய்வாக இருக்கும்போது பிற பொழுது போக்கு அம்சங்களையும் பார்க்க வாய்ப்பாக அமைந்துள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெற்றதன் மூலம் தினசரி நாளிதழ்களைப் படிக்க வேண்டிய அவசியமோ, செவி வழியாக செய்திகள் பெற வேண்டிய அவசியமோ இல்லாமல் நேரிடையாகவே என்னால் அறிய முடிகிறது.



கதவு எண். 83ல் வசித்து வரும் திரு. கே. நாகப்பன் (வயது 40) அவரது மனைவி சாந்தி (வயது 36) ஆகியோரிடம் தொலைக்காட்சிப் பெட்டியின் பயன் குறித்து கேட்டோம்.

திரு. நாகப்பன் நம்மிடம், "நாங்கள் நான்கு குழந்தைகளுடன் சமத்துவபுரத்தில் வசித்து வருகிறோம். நான் தினமும் கூலி வேலைக்கு சென்று மாலை 5 மணியளவில் வீடு திரும்புவேன். அன்றாட செய்திகள் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பேன். ஆனால் அதற்கான வசதியில்லை. எந்தவிதமான செய்திப் பரிமாற்றங்களுக்கும் இடமின்றி தனித்து விடப்பட்டதை போலவும், உலக நடப்புகள் ஏதும் தெரியாமல் ஓர் இருட்டில் இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும். சமத்துவபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு 16.9.06ல் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்பட உள்ளதை இரண்டு நாட்களுக்கு முன்பு அறிந்த நிலையில் அன்றைய தினமே என் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருப்பதை போன்ற உணர்வு ஏற்பட்டது. எங்களை பொறுத்தளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எங்களுக்கு குடியிருக்க இலவசமாக வீடு கட்டிக் கொடுத்தார். அந்த இலவச வீட்டில் வைத்து அழகு பார்க்க இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியையும் வழங்கி உள்ளார். இதற்காக நாங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியை செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.*

அதிகமாக கொள்முதல் செய்கிறபோது செலுத்தப்பட்ட வரி, அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதிகம் உள்ள தொகை அடுத்த ஆண்டு இறுதிவரை கொண்டு செல்லப்பட்டு, தேவையெனில் வணிகர்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

- மூலதனப் பொருட்கள், தொழிலக உட்பொருட்கள் (Industrial input) ஆகியவற்றிற்கு 4 சதவிகித வரி விதிக்கப்படும். உற்பத்தியாளர்கள் மூலதனப் பொருட்கள் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யும்போது 36 மாதங்களில் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரிக் கழிவு செய்து கொள்ளலாம்.

- பதிவு பெற்ற வணிகர்கள் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்யும்பொழுது கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை 4 சதவிகிதம் வரை வரிக் கழிவு செய்து கொள்ளலாம். அதற்கும் மேலாக கொள்முதல் செய்த போது செலுத்திய வரி அதிகமாக இருந்தால், அவ்வரியை வேறு பொருட்கள் விற்கும் பொழுது வரிக் கழிவு செய்து கொள்ளலாம். இச்சலுகை **"சி"** படிவம் பெற்று விற்பனை செய்யும் வணிகர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

- வெளிமாநில கிளைகளுக்கு மற்றும் முகவர்களுக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு கொள்முதல் செய்தபோது செலுத்திய வரி 4 சதவிகிதத்திற்கு மேற்பட்டுள்ள வரியை மட்டும் கழிவு செய்து கொள்ளலாம். இச்சலுகை **"எப்"** படிவம் பெற்று வணிகம் செய்யும் வணிகர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

- ஏற்றுமதியாளர்களுக்கு செய்யப்படும் விற்பனை, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு செய்யப்படும் விற்பனை மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் பொழுது, அந்நிறுவனங்கள் அத்தகைய பொருட்கள் கொள்முதல் செய்யும் பொழுது செலுத்திய வரியினை சில ஆவணங்கள் அளித்து மூன்று மாத காலத்திற்குள் திரும்பப் பெற்றுக் கொள்ள விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

- தற்பொழுது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் வரி தள்ளிவைப்புத் திட்டத்தில் உள்ள நிறுவனங்கள் மீதமுள்ள காலத்திற்கும், தொகைக்கும் அப்பயனை அனுபவித்துக் கொள்ளலாம். வரி தள்ளுபடி செய்யும் திட்டத்தில் உள்ள நிறுவனங்கள் மதிப்புக் கூடுதலின் தொடர்ச்சி அறுந்துவிடாமல் இருக்கும் வகையில் அவை வரி தள்ளிவைப்புத் திட்டத்தின் கீழ் வரி செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

- தண்டம் விதித்தல் தொடர்பான பிரிவுகள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் எளிமையாக்கப்பட்டுள்ளது.

- மதிப்புக் கூடுதல் வரி முறையை அமல்படுத்தும்பொழுது, ஆரம்ப இருப்பில் இருந்த பொருட்களுக்கு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் கொள்முதல் செய்த பொழுது செலுத்திய வரியை வரிக்கழிவாக செய்து கொள்ள விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

- மதிப்புக் கூட்டு வரி முறையில் வணிகராகப் பதிவு செய்து கொள்வதற்கு உள்மாநிலத்திலேயே பொருட்களை கொள்முதல் செய்து, உள்மாநிலத்திலேயே பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களுக்கு தற்பொழுதுள்ள ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.3 இலட்சம் வரம்பிலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதர வணிகர்களுக்கு ஆண்டு விற்பனைத் தொகை வரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- சிறு வணிகர்களுக்குப் பயனளிக்கும் வகையில், உள்மாநிலத்தில் பொருட்களை கொள்முதல் செய்து உள்மாநிலத்தில் பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 50 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால், அவ்வணிகர்கள் தங்கள் விற்பனைத் தொகைக்கு ஒரு சதவிகிதத்திற்கு மிகாமல் வரி செலுத்திட வகை செய்யும் இணக்க வரிவிதிப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

> **"மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும் பொழுது, தற்பொழுது விதிக்கப்படும் கூடுதல் வரி, உபரி வரி, மறுவிற்பனை வரி ஆகியவைகள் நீக்கப்படும்."**

- வணிகர்கள் தமக்குத்தாமே சுயவரிவிதிப்பு செய்து கொள்ளும் திட்டம் மதிப்புக் கூட்டு வரி முறையின் சிறப்பு அம்சமாக அனைத்து வணிகர்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி வணிகர்கள் மாதாந்திர நமூனாக்களை உரிய படிவத்தில், உரிய வரித் தொகையுடன் செலுத்துவது போதுமானது. தற்பொழுது நடைமுறையிலுள்ள வரிவிதிப்பு அலுவலர்களால் ஒவ்வொரு ஆண்டும் கணக்கு சரிபார்க்கும் முறை களையப்படும். ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் முறையில் வணிக வரி ஆணையர் மொத்தம் பதிவு பெற்ற வணிகர்களில் 20 சதவிகிதத்திற்கு மிகாத எண்ணிக்கையில் வணிகர்களை தணிக்கைக்கு உட்படுத்த தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்வணிகர்கள் பற்றிய விவரம் வணிக வரித்துறையின் இணைய தளத்தில் வெளியிடப்படும். மேலும் வரிவிதிப்பு அலுவலகங்களின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். அத்தணிக்கையின் முறையும் வெளிப்படையான தன்மையைக் கொண்டதாக அமையும்.

- மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்டால் பல வகையான கணக்குகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தவறான எண்ணம் வணிகர்களின் மத்தியில் நிலவி வருகிறது. மதிப்புக் கூட்டு வரியில் கணக்குகள் வைத்துக் கொள்ளும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் கொள்முதல் செய்கின்றபோது செலுத்திய வரியை விற்பனை செய்கின்றபோது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்ளும் முறையில் வரி நிர்ணயம் செய்யப்படுவதால் வணிகர்கள் கொள்முதல் மற்றும் விற்பனை கணக்குகளை வைத்துக் கொண்டால் போதுமானது.

- உற்பத்தியாளர்கள் உள்மாநிலக் கொள்முதலின் போது செலுத்திய வரியை கழித்துக் கொள்வதாலும், ஒரே சீரான வரிவிதிப்பு அனைத்து மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படுவதாலும், வெளி மாநிலச் சந்தையில் பொருட்களை விற்பது இலகுவாகும்.

- வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வணிகர்கள் உள்மாநிலக் கொள்முதலின்போது செலுத்திய வரியை அரசிடமிருந்து திரும்பப் பெற வழிவகை செய்யப்பட்டிருப்பதால், ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிட எளிதாகும்.

■ ■ ■



# அண்ணா போற்றிய பெருமக்கள்

- நூல் விற்பனைக்கு

தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையால் 1988 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "அண்ணா போற்றிய பெருமக்கள் (தொகுதி-1)" என்ற நூல் விற்பனைக்கு உள்ளது.

இந்நூல் மிகக் குறைந்த பிரதிகளே உள்ளன. 456 பக்கங்கள் கொண்ட இந்நூல் ரூ.46 மட்டுமே.

தமிழரசு அலுவலகம், சென்னை, அண்ணா நினைவிடத்திலுள்ள அண்ணா நினைவு நூலகம் மற்றும் விற்பனை நிலையம், காஞ்சிபுரம், அண்ணா நினைவு இல்லம் மற்றும் சென்னை, கலைவாணர் அரங்கின் பின்புறமுள்ள மாநிலச் செய்தி நிலையம் ஆகிய இடங்களில் இந்நூல் விற்பனைக்குக் கிடைக்கும்.

இந்நூல், சான்றோர்கள், பாவலர்கள், காவலர்கள், இந்திய விடுதலை இயக்கப் பெருமக்கள், திராவிட இயக்கப் பெருமக்கள், சமூக நலப் பெருமக்கள், அரசியல் மற்றும் கலையுலகப் பெருமக்கள் ஆகியோர் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய கருத்துக்கள் அடங்கிய மிகச்சிறந்த தொகுப்பாகும். ■

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சீர்மிகு புதிய திட்டம்

# "அறிவியல் ஆனந்தம்"

அறிவியல் பாடம் என்பது குழந்தைகளின் உள்ளங்களில் ஒளிந்திருக்கும் விஞ்ஞானிகளை வெளிக் கொண்டு வரவும், புதிய புதிய கண்டுபிடிப்புகளை அவர்கள் உருவாக்க ஊக்கம் அளிப்பதாகவும் அமைந்திருக்கும் ஒரு பாடமாகும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் பள்ளிக் குழந்தைகள் அறிவியலை பாடப்புத்தகத்தில் உள்ள தகவல்களாக மட்டுமே பார்க்கிறார்கள். அவர்கள் பள்ளியில் தாங்கள் கற்பதையும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் இணைத்துப் பார்ப்பதில்லை. இதனால், அறிவியல் அவர்களுக்கு வாழ்க்கைக்கு தொடர்பு இல்லாததாகவும், விருப்பமில்லாததாகவும் இருக்கிறது. இந்த இடைவெளியை முற்றிலுமாக நீக்கி, குழந்தைகள் அறிவியல் கருத்துகளைப் பற்றி சிந்திப்பதற்கும், வாழ்க்கையுடன் தொடர்பு உடையதாக மாற்றிடவும், "அறிவியல் ஆனந்தம்" என்னும் பெயரில் சீர்மிகும் திட்டம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்கும் கல்வித் திட்டம், AID INDIA நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 4 மாதங்களில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் அனைத்துக் குழந்தைகளும் வெவ்வேறு அறிவியல் தத்துவங்களை விளக்கும் 35 அறிவியல் சோதனைகளை கற்றுக் கொள்வார்கள். இச்சோதனைகளுக்கு விலை குறைந்த எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களை உபயோகிப்பார்கள். எளிய பொருட்களை வைத்து வியக்கத்தக்க சோதனைகளை எவ்வாறு செய்யலாம் என்று கற்றுக் கொள்வார்கள். முக்கியமாக, குழந்தைகள் குழுக்களாக அமர்ந்து சோதனைக்கான விளக்கத்தை விவாதித்து, அந்த அறிவியல் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு தங்களது பிஞ்சு மனங்களில் பசுமரத்தாணியாக பதிய வைத்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள் வாரத்திற்கு இரண்டு முறை வகுப்புகள் எடுப்பார்கள். நான்கு மாத முடிவில், குழந்தைகள் தாங்கள் கற்றுக் கொண்ட அறிவியல் சோதனைகளையும், கருத்துகளையும் கண்காட்சி மூலம் பொதுமக்களுக்கு விளக்குவார்கள். இந்தப் புதிய "அறிவியல் ஆனந்தம்" திட்டம் குழந்தைகளிடம் அறிவியலில் உள்ள புரிதலை மேம்படுத்தவும், அறிவியலைப் பற்றி கற்றுக் கொள்வதிலும், சிந்திப்பதிலும் அதிக ஆர்வம் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ளது.

"அறிவியல் ஆனந்தம்" என்னும் இந்த அற்புதத் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். சந்தோஷ் பாபு. இ.ஆ.ப., அவர்கள் 27.10.2006 அன்று துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டம் முதற் கட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக இவ்வூராட்சி ஒன்றியங்களில் உள்ள 101 நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் 20,000 மாணவர்கள் பயனடைவார்கள்.



–செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி.





R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06
TN/PMC(CCR) WPP-518/06-08








# தமிழரசு

விலை ரூ.10

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

டிசம்பர் 2006








திருவள்ளுவர் ஆண்டு 2037
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 2006
மலர் : 38 இதழ் : 6


# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு


தென்னக நதிகளை தேசியமயமாக்க வேண்டும் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்) — 2

உயர்வு நோக்கிடும் பாதையிலே ஒவ்வொரு நாளும் சாதனைகள் — 28

உபரி நீரை பகிர்ந்துகொள்வதே இயற்கை நியதி (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்) — 33

ரூ.45.67கோடி மதிப்பீட்டில் பெரம்பூர் மேம்பாலப்பணி — 52

கன்னிமாரா நூலகம் — 58

திருட்டு – சிறுகதை — 66


## திருக்குறள்

**நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது.** குறள் : 235

துன்பங்களுக்கிடையே கூட அவற்றைத் தாங்கும் வலிமையால் தமது புகழை வளர்த்துக் கொள்வதும், தமது சாவிலும் கூடப் புகழை நிலை நாட்டுவதும் இயல்பான ஆற்றலுடையவருக்கே உரிய செயலாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : சென்னையில் நவீனரக சிறப்புப் பேருந்துகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார். (3.12.06)

**இரண்டாம் பக்க அட்டை** : புதுடெல்லியில் நடைபெற்ற முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை (29.11.06)

**நான்காம் பக்க அட்டை** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புழல் மத்திய சிறை வளாகத்தைத் திறந்து வைத்தார். (26.11.06)


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம் , ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in



# தென்னக நதிகளை தேசியமயமாக்க வேண்டும்

**9.12.2006 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களே! தேசிய வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியப் பொருளாதாரம் உன்னதமான அளவை எட்டியுள்ள இந்த நேரத்தில் இங்கு நாம் அனைவரும் இன்று ஒன்றாகக் கூடியுள்ளோம். இந்தப் பின்னணியில் பதினொராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை ஆவணத்தைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கின்றோம்.



11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை ஆவணம் ஒரு பக்கம் துணிவான நோக்கத்தினைக் கொண்டுள்ளதெனினும், அது எய்திடக் கூடிய அளவிலேயே அமைந்துள்ளத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். 9 சதவிகிதம் வளர்ச்சியை அடைந்திட உத்தேசித்துள்ள அதேவேளையில், அந்த வளர்ச்சியின் பயன்கள் ஏழை எளியோரைச் சென்றடையாவிட்டால், துரித வளர்ச்சி என்று சொல்வதற்குப் பொருளேதும் இல்லாமல் போய்விடும் என்பதை அணுகுமுறை ஆவணம் கவனத்தில் கொண்டுள்ளது.

நமது மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேளாண்மையையே சார்ந்துள்ளனர். வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் ஊட்டுவதில் நாம் எடுக்கும் முயற்சியின் அடிப்படையிலேதான் பதினொராவது திட்டத்தின் வெற்றி அமையும்.

ஒரு பக்கம் வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறையினால் வேளாண்மை பொய்த்து வருவதை நாம் பார்த்து வருகின்றோம். மறுபக்கம், நதிகளில் நிகழும் வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் கடுஞ்சேதத்தையும் மற்றும் 40,000 டி.எம்.சி. அளவுக்கும் அதிகமான நீர் யாருக்கும் பயன்படாமல் வீணே கடலிலே போய்க் கலக்கின்ற ஒரு நிலையையும் சந்தித்து வருகிறோம். ஆனால், நாம் குடி நீருக்காகவும், பாசனத்திற்காகவும். மிகக்குறைவான 1 டி.எம்.சி. அல்லது 2 டி.எம்.சி. தண்ணீருக்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வருகிறோம். இதுதான் இந்திய முரண்பாடாகும்.

வேளாண்மைத் துறையை முன்னேற்றுவதும், அதற்குப் புத்துயிர் அளிப்பதும்தான் நமது நோக்கம் ஆகும். அதன்மூலம், நம் விவசாயிகள் தொடர்ந்து வருமானத்தை ஈட்டவும், அதன் பயனாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிய அளவிலே பங்களித்திடவும் முடியும். புதிய பாசன ஆதாரங்களை உருவாக்கிடாமல் இது சாத்தியமாகாது. 50 ஆண்டுகளாக நதிகளைத் தேசியமயமாக்குவது மற்றும் அவைகளை இணைப்பது பற்றி நாம் தொடர்ந்து பேசி வருகின்றோம். அதனை நிறைவேற்ற வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. தீபகற்ப நதிகளை இணைப்பதில் உலகளாவிய சிக்கல்கள் எதுவும் இல்லை. தேசிய நீர் மேம்பாட்டு முகமை தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான சாத்தியக் கூறு அறிக்கைகளைத் தயாரித்து; அத்திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமானதுதான் எனக் கணித்துள்ளது.

*நதிகளை, குறிப்பாகத் தென்தீபகற்ப நதிகளைத் தேசியமயமாக்குவதற்கும் மற்றும் இணைப்பதற்கும் பரிந்துரைத்திடுமாறு தேசிய வளர்ச்சிக் குழுவை நான் வலியுறுத்துகிறேன். மேலும் பதினொராவது திட்டத்தில் அத்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.*

இந்தியா போன்ற நாட்டில், தொழில்நுட்பம் முன்னேறியும் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் வரத் தொடங்கியும் உள்ள நிலையில், பெரிய நதிகளைக்கூட நமது தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலக் கூடியதுதான்.

நதிகளை, குறிப்பாகத் தென்தீபகற்ப நதிகளைத் தேசியமயமாக்குவதற்கும் மற்றும் இணைப்பதற்கும் பரிந்துரைத்திடுமாறு தேசிய வளர்ச்சிக் குழுவை நான் வலியுறுத்துகிறேன். மேலும் பதினொராவது திட்டத்தில் அத்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும். நதிகளை இணைப்பதால், வெள்ளத்தைத் தடுக்கும் முயற்சிகளுக்கு உதவுவதோடல்லாமல் ; வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்களுக்குப் பாசன வசதியை ஏற்படுத்துவதற்கும் உதவும். அது உறுதியான வேளாண்மை வளர்ச்சிக்கும், ஊரக ஏழை மக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் உதவுகிறது. இதனால் குறைந்த செலவில் அதிக அளவு புனல் மின்சாரம் கிடைக்கவும், நமது நாட்டில் நீர்வழிப் போக்குவரத்து வசதி ஏற்படவும் உதவியாக இருக்கும். இந்த வகையில் நாம் எடுக்கும் முயற்சிகள் மிகுந்த பயனளிக்கக் கூடியதாகவும், நமது வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான வேளாண்மைத்துறை வரும் ஆண்டுகளில் நீடித்து நிலைத்து நின்று நமது நாட்டின் வளர்ச்சிக்கு உற்ற




துணையாகவும் அமையும். நாம் இப்போதே விழித்தெழுந்து செயலாற்றத் தவறிவிட்டால், எதிர்காலச் சந்ததியினர் நம்மைக் கிஞ்சிற்றும் மன்னிக்கமாட்டார்கள்.

வரிச் சீரமைப்பு முறையைத் தொடர்வது என்ற நிலையில், வரிவிதிப்புக் கொள்கையை முடிவு செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை மாநிலங்களே பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தை நாம் மறந்துவிடக்கூடாது. சில மாநிலங்களில் உற்பத்தி செய்யும் பொருள்களின் மீதான ஆயத்தீர்வைகளை முழுவதுமாக மத்திய அரசு விலக்கிக் கொண்டுள்ளது. இது செயற்கையான முறையில் மூலதனத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயர்த்துச் செல்லும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இந்த வேறுபாடுகளை உடனே களைந்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அனைவருக்கும் பாதகமானதும், ஏழை எளியோருக்கு உதவுவதற்கான நிதியாதாரங்களைக் குறைப்பதுமான, விலக்கு அளித்திடும் ஆரோக்கியமற்ற வரிக்கொள்கைப் போட்டியைத் தவிர்க்கும் வகையில் ஓர் அமைப்பை நாம் அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்கிட வேண்டும் என்று மாநில முதல்வர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேவைவரி விதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசே வைத்துக்கொண்டுள்ளது. சேவைவரி மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அவ்வரி வசூல், மாநிலங்களால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும். மத்திய அரசுடன் அந்த நிதி பகிர்ந்து கொள்ளப்படலாம்.

மத்திய விற்பனை வரியைப் படிப்படியாக நீக்குவதற்கான இழப்பீட்டுத் தொகை என்பது மற்றொரு கவலையளிக்கக்கூடிய அம்சமாகும். மத்திய விற்பனை வரியைப் படிப்படியாக நீக்குவதற்கு நாங்கள் உடன்பட்டாலும், அதிகாரமளிக்கப்பட்ட நிதியமைச்சர் களடங்கிய குழுவின் பரிந்துரைகளின்படி, நிதி இழப்பீடு இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அணுகுமுறை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு, மின்சாரத்தில் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக இழப்புகளைக் குறைத்ததில் நாட்டிலேயே சிறந்த சாதனையைச் செய்துள்ளது. தமிழ்நாட்டில் மின்வாரியம் இன்னும் பிரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அதனைப் பிரிப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் மின்சார நிறுவனத்தை அமைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு மின்சார சட்டத்தில் தகுந்த திருத்தத்தை ஏற்படுத்திட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



அனைத்து மாவட்ட தலைமை நகரங்களிலும் கழிவுநீர் திட்டங்களைச் செயல்படுத்துவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. கழிவுநீர்த் திட்டங்கள் நீண்ட பயனளிக்கும் கால அளவினைக் கொண்டுள்ளன. அவை 40 முதல் 50 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நிதிப்பயனளிப்பதாக அமையும். 10 முதல் 15 ஆண்டுகளில் முதிர்வடையும் கடன்களைக் கொண்டு கழிவுநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த முயற்சி செய்யும் மாநிலங்களுக்கு இது பிரச்சினைகளை உருவாக்குகிறது. இதே போன்ற பிரச்சினை பொது போக்குவரத்துத் துறையிலும் இருக்கின்றது. 40 முதல் 100 ஆண்டு காலம் கொண்ட கடன் பத்திரங்களைக் கையாளும் ஒரு நீண்ட கால கடன் சந்தை நாட்டிற்குத் தற்போது மிகவும் அவசியமாகிறது. ஒரு நீண்ட கால கடன் சந்தையை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு என ஒரு பணிமுனைப்புக் குழுவை உடனடியாக அமைத்திட வேண்டும் என மத்திய நிதியமைச்சகத்தையும் இந்திய ரிசர்வ் வங்கியையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு இடைநிலைக் கல்வியை அனைவருக்கும் அளிக்கக் கருதியுள்ளது. பதினொராவது திட்டத்தில் இடைநிலைக் கல்விக்கெனத் தனியே 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் எனத் திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் ஏற்கெனவே பெரும்பாலான குடியிருப்புகள் சாலைகளால் இணைக்கப்பட்டு அவற்றிற்குக் குடிநீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுவிட்டன. மேலும், மாநிலத்தின் பாசன ஆதாரமும் மற்ற மாநிலங்களைவிட அதிக அளவு பயன்படுத்தப்பட்டுவிட்டது. இதன் காரணமாக 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டைப் போன்று செம்மையாகச் செயல்படும் மாநிலம், அது அடைந்த வெற்றிக்காக மறைமுகமாகத் தண்டிக்கப்படுகிறது என்பதையே இது உணர்த்துகிறது. 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்பு விலக்கு அளித்திடுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஊரக மின்வசதித் திட்டத்திற்குப் பதிலாக 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்கு நிதி அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற திட்டங்கள், காலப்போக்கில் ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வழி வகுக்கும்.

நிதிப் பற்றாக்குறைக்கான உரிய அளவு இன்னும் நிர்ணயிக்கப்படாமலேயே உள்ளது. இது தொடர்பாக, ஒரு வெளிப்படையான மற்றும் ஆக்கபூர்வமான விவாதத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். நிதிச் சீர்திருத்தம் மற்றும் வரவு செலவுத்திட்ட மேலாண்மை (FRBM) இலக்குகளைத் தளர்த்திடும்போது, அது மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்திட வேண்டும் என்ற ஓர் அம்சத்தை நான் வலியுறுத்திட விரும்புகிறேன்.

தமிழக அரசு, புதியதாகப் பொறுப்பேற்றவுடன் முதல் வரவு–செலவுத் திட்டத்திலேயே மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தினை 1.1.2007 முதல் செயல்படுத்தும் ஒரு முடிவினை மேற்கொண்டது. ஒரே சீரான மதிப்புக் கூட்டு வரி திட்டத்திற்கு மாறுவதால் தொடக்க ஆண்டில் கணிசமான அளவு வருவாய் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இழப்பு ஈடுகட்டப்படாத பட்சத்தில், பதினொராவது திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது என்பது பெரும் பாதிப்புக்குள்ளாகக்கூடும். 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல் படுத்திய மாநிலங்களுக்கு வழங்கியதைப் போலவே, தமிழ்நாட்டிற்கும் முதல் வருடத்தில் 100 விழுக்காடு இழப்பீடும், இரண்டாவது வருடத்தில் 75 விழுக்காடும், மூன்றாவது வருடத்தில் 50 விழுக்காடு இழப்பீடும் வழங்கவேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு இழப்பீடு வழங்கப்படாத நிலையில், திட்ட செலவுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை எதிர்கொள்வது கடினமாகிவிடும் என்று நான் கவலைப்படுகிறேன். மதிப்புக் கூட்டுவரியை நடைமுறைப்படுத்தும் முடிவு முன்னரே எடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக இழப்பீடு வழங்க மறுப்பது நியாயமானதாக இருக்காது.

நாம் பதினொராவது திட்டத்தினை அடைந்துள்ள நிலையில், திட்டமிடும் முறைகளையே ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு இது ஒரு சரியான தருணம் ஆகும் எனக் கருதுகிறேன். முதலாவதாக, 'திட்டம்' மற்றும் 'திட்டம் – சாராதது' ஆகியவற்றிற்கு இடையே உள்ள செயற்கையான வேறுபாட்டினை நீக்கிட வேண்டும். இரண்டாவதாக, மாநில திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கும் நடைமுறைகள் யாவும் தேவையற்ற, எளிதில் பின்பற்ற இயலாத, பெரும்பாலும் பழமையானதாக உள்ளன. தமிழ்நாட்டின் 2006–2007 ஆம் ஆண்டுத் திட்டத்தில்,

# நம் குடிகாக்கப் போரிட்டவருக்கு கொடி நாளில் நன்றி செலுத்துவோம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் சென்னை பொதிகை தொலைக்காட்சியிலும் வானொலியிலும் 7.12.2006 அன்று ஆற்றிய கொடிநாள் உரை.

அன்பிற்குரிய தாய்மார்களே,

பெரியோர்களே,

நண்பர்களே,

என் உயிரினும் மேலான
அன்பு உடன் பிறப்புகளே,

வணக்கம்.

*இன்று கொடி நாள்!*

*நமது நாட்டுத் தேசியக் கொடியை*
*நினைந்து வணங்கும் திருநாள், இந்தக்*
*கொடி நாள்!*

*நாட்டு வரலாற்றில் வீரத்தின் சின்னமாய்*
*நிலைபெற்று விட்ட, "அஞ்சா நெஞ்சன்*
*பகத்சிங் ஏற்றிட நினைத்த நமது கொடி –*

*அறப்போர் வீரன் திருப்பூர் குமரன்*
*திருக்கரம் ஏந்திய தேசியக் கொடி –*
*பற்று மிகக் கொண்டு நாட்டின் மீது–*
*பாஷ்யம் என்ற வீர இளைஞன் –*
*கோட்டை கொத்தளத்தில் ஏறி*
*கொடிக்கம்பத்தில்*
*பறக்கவிட்ட*
*பார்புகழும் மணிக்கொடி –*
*அல்லும் பகலும் அனுப்பொழுதும்*
*மறவாமல்*
*அன்னைத் திருநாட்டின் அடிமைத்தனம்*
*அகற்றிட*



*அண்ணல் காந்தியடிகள் உயர்த்திப்*
*பிடித்த*
*உரிமைக் கொடி –*
*வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக்*
*கடலில்*
*பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து*
*செல்லும்*
*வீரர்களின் மண்டை யோடுகளை*
*முத்தமிட்டபடி*
*பயணம் நடத்தும் முறிந்த எலும்புத்*
*துண்டுகளையும்*
*அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு*
*முகம் சுளிக்காமல் – முகாரி பாடாமல் –*
*முதுகு காட்டாமல் –*

"முன்னேறு நீ" "முன்னேறு நீ"
என்று முரசொலித்து

*எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச்*
*செய்து*
*எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி*
*பாயுமோ*
*எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு பாயுமோ*
*என்று*
*சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப்*
*பார்ப்பதும்*
*வீரர்களுக்கு அழகில்லை என்ற*
*போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும்*
*மறந்து விடாமல் –*
*மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்*
*செண்டு,*
*மங்கையின் இதழை விடச் சுவையானது*
*என்ற*
*மனோபலத்தோடு இந்த மண் மீட்கப்*
*போர்புரிந்து*
*மாண்டவர்களின் குருதிப் புனலிலே*
*தோய்த்தெடுத்த கொடி ! இந்தக் கொடி !*

இன்று கோட்டை முதல் குடிசை வரை
நாடு முழுதும் பட்டொளி வீசிப் பறக்கிறது!

இந்தக் கொடி பறக்க ஏறத்தாழ இருநூறு ஆண்டுகாலம் இங்கிலாந்து நாட்டுப் பேரரசை எதிர்த்துப் போராடி இன்னுயிர் ஈந்த, செக்கிழுத்துச் சிறைப்பட்ட, சொத்து சுகங்களை இழந்து சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட வீரத் தியாகிகளை நினைவுகூர்ந்து நமது வீர வணக்கத்தைச் செலுத்திட நமக்கு உணர்வூட்டும் உன்னதப் பெரு நாள் இந்தக் கொடி நாள்!

இந்நாளில் வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதும் வாழ்த்துரைப்பதும் நமது தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகளிலே ஒன்றாகும்.

பிஞ்சு நெஞ்சு முதல் வீர உணர்வுகளைத் தாய்ப்பாலாக ஊட்டி, இளைஞர்களை வீரம் கொப்பளிக்க வளர்த்து ஆளாக்குவதை இயல்பாகக் கொண்டது தமிழினம் என்பதை நமது இலக்கியங்கள் சொல்கின்றன.

*"ஈன்றுபுறம் தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக்*
*கடனே*
*வேல் வடித்துக் கொடுத்தல்*
*கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்*
*களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்*
*கடனே"*

– என்று ஒரு குழந்தையை வீரனாக்கி வளர்ப்பதில், சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை எது என்பதனை உணர்த்தி, இளைஞர்களை வீரர்களை உருவாக்கி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

*உன் மகன் எங்கே என்று*
*கேட்டவர்க்குத்*
*தன் வயிற்றையே சுட்டிக் காட்டி, இது*
*வயிறல்ல;*
*இது புலிக்குகை; இக்குகையிலிருந்து*
*புறப்பட்ட புலிதான் என் மகன்! அவன்*
*எங்கே இருப்பான் ?*
*போர்க்களத்தில்தான் இருப்பான் என்று*
*பெருமிதம் தோன்ற மகனுடைய*
*வீரத்தை மற்றவர் முன் பாராட்டி*
*மகிழும் மறக்குல மகளிராகப்*
*பெண்களெல்லாம்*
*விளங்கிய சமுதாயம் தமிழ்ச்*
*சமுதாயம்!*

## திருமதி சோனியா காந்தி அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு



முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து பேசுவதற்காக டெல்லி சென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை, 29.11.2006 அன்று அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார். அப்போது, மாண்புமிகு மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களும் உடன் இருந்தார். இலங்கையிலிருந்து அகதிகள் வருவது குறித்தும், இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்தும், சென்னையில் அண்மையில் சந்தித்த பிரதமரின் தூதுவர் திரு. எம்.கே. நாராயணன் மற்றும் வெளியுறவுத் துறை செயலாளர் திரு. சிவசங்கர மேனன் ஆகிய இருவரும் தெரிவித்த விவரங்களைப் பற்றியும் திருமதி சோனியா காந்தி அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் கலந்துரையாடினார்கள்.

## சென்னையில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம்

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து கேரள மாநில முதலமைச்சருடன் மத்திய அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒருநாள் பயணமாக டெல்லி சென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் அவர்களை அவரது இல்லத்தில் 29.11.2006 அன்று சந்தித்து உரையாடினார். அப்போது, தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்ததைத் தொடர்ந்து, தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயரால் இரண்டு விருதுகளை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும், சென்னையில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம் ஒன்றினை அமைப்பது பற்றியும் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அமைச்சர் அவர்களிடம் 27 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினையில் இனியும் தாமதம் செய்யாமல், விரைவில் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட நடவடிக்கைகள் எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே அதற்கான முயற்சிகளில் உடனடியாக ஈடுபடுவதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன் சிங், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன் அவர்கள் உடன் இருந்தார்.





நாடாளுமன்றத்தில்

திராவிட இயக்கச் சிந்தனையாளர்

## முரசொலி மாறன் சிலை திறப்பு

நாடாளுமன்றத்தில் நீண்ட காலம் உறுப்பினராகப் பணியாற்றி, தமிழ்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுத்தவரும், "தோஹா" மாநாட்டில் இந்தியாவின் குரலைப் பிரதிபலித்தவரும், திராவிட இயக்கச் சிந்தனையாளருமான **முரசொலி மாறன்** அவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளை நினைவுகூறும் வகையில் முரசொலி மாறன் அவர்களது திருவுருவச் சிலை புதுடெல்லி, நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இச்சிறப்பான விழாவில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், முரசொலி மாறன் அவர்களது திருவுருவச் சிலையை 8.12.2006 அன்று திறந்து வைத்தார்.

இவ்விழாவில், மாநிலங்களவைத் தலைவரும் மேதகு குடியரசு துணைத் தலைவருமான திரு. பைரான் சிங் செகாவத் அவர்கள், மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு.சோம் நாத் சட்டர்ஜி அவர்கள், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மற்றும் முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே.அத்வானி, காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வர் திரு. பருக் அப்துல்லா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலாளர் திரு. டி. ராஜா, மார்க்சிஸ்ட் கட்சி தலைவர் திரு. வாசுதேவாச்சாரி, சமாஜ்வாடி பொதுச் செயலாளர் திரு. அமர்சிங், தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம்.கிருஷ்ணசாமி, மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் திரு. பி.சி. அலெக்சாண்டர், தெலுங்குதேசம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எர்ரான் நாயுடு உள்ளிட்டோரும், மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன், தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் மற்றும் நாடாளுமன்ற, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ■



②

முதல் நாள் போரிலே தன் தமையன் யானையோடு போரிட்டு, அதனை வீழ்த்தித் தானும் மடிந்தான்; அடுத்தநாள் போரில் அவளுடைய ஆசைக் கணவனும் போர்க்களம் சென்று வீழ்ந்துபட்டான் ;

அடுத்த நாளும் போர்ப்பறை முழங்கக் கேட்கிறாள் ஒரு வீரமங்கை! உள்ளம் பதறுகிறது அவளுக்கு! அவளுக்கு இருப்பதோ ஒரே மகன்! அவனும் சிறுவன்! ஒரு கணமும் வீணாக்காமல் அழைத்தால் அவனை! பரந்துகிடந்த அச்சிறுவனின் தலைமுடியில் எண்ணெய் தடவி, வாரி முடித்து, வெள்ளாடை உடுத்தி, வேல் கைகொடுத்து, செல்க மகனே! சீறிவரும் பகைவர்களைக் கொன்று வெற்றியோடு மீண்டுவா என் செல்வ மகனே! என்று கூறி அவனைப் போருக்கு அனுப்பினாள் அவள்!

அந்த வீரமங்கையின் தீரத்தை – மன எழுச்சியை – இந்த நாட்டின் மீது அவள் கொண்ட பற்றைக் கண்டோரெல்லாம் சிந்தை மறந்து செய்வதறியாது வியந்து நின்றார்கள் என்று புறநானூறு புகல்கிறது.

இப்படி வீரத்திலும் நாட்டுப் பற்றிலும் ஆணுக்குப் பெண் இளைப்பின்றி, ஆணும் பெண்ணும் சிறந்து விளங்கிய வீர சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

வீரத்தைப் போற்றி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!



*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7-12-2006 அன்று அவரது இல்லத்தில் கொடிநாள் நிதி அளித்தார்.*

அந்த உணர்வோடு இன்றைய நிலையிலும் தமிழக அரசு வீரத்தை மதிக்கிறது. வீரர்களைப் போற்றுகிறது.

நமது முப்படை வீரர்களும் போர்க் காலங்களில் மட்டுமல்லாமல், எல்லைப் புறங்களைக் காத்திடும் பணிகளிலும், புயல், பெருமழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவோரை மீட்டுக் காப்பதிலும் ஈடுபட்டு எல்லையில்லா இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அந்த மாவீரர்கள் கொட்டும் மழை, கொடுங்குளிர், கடும்பனி, என எதுவாயினும் கலங்காது நின்று கடமையாற்றுகிறார்கள்.

அத்தகைய தியாகத் திருச்சுடர்கள் அனைவர்க்கும் ஊக்கம் தர, "உங்களைக் காக்க – உங்கள் குடும்பத்தைக் காக்க, நாங்கள் இருக்கிறோம் ; கலங்காது நின்று கடமையாற்றுங்கள்" என அந்த மாவீர மாமணிகளுக்கு மனவலிமையூட்டிட நாடு கடைப்பிடித்திடும் நல்ல திருநாளாகக் கொடி நாளைக் கருதுகிறோம்.

நமது வாழ்வு, நமது மகிழ்ச்சி, நமது சுதந்திரம், நமது நாட்டுரிமை, நமது பாதுகாப்பு அனைத்துக்கும் அந்த வீரர்களே பொறுப்பேற்றுள்ளார்கள். நம் குடிகாக்கப் போரிட்டவருக்கு இந்தக் கொடி நாளில் நன்றி செலுத்துதலே முறையாகும்.

கொடிய போர்க்களத்தில் தாம் இருந்தாலும் தம்மை நம்பி இருக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற நாடு இருக்கிறது,



நாமெல்லாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில்தானே அந்த வீரர்கள் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்தம் நம்பிக்கையை நாசம் அடைய விடமாட்டோம். மாசுமருவற்ற அந்த மாணிக்கங்களின் குடும்பத்தில் வறுமை எனும் தூசுபடர விடமாட்டோம் என்னும் உணர்வோடு இந்தக் கொடிநாளில் நிதி வழங்கிடுவோம்.

நாடு காக்கும் திருப்பணிகளுக்கு நிதி வழங்குவதில் தமிழகம் என்றும் முன்னணியிலே நிற்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளது.

1962 இல் *சீனப்* போரின் போது ஆட்சியில் நாம் இல்லாதபோதும், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, சேலத்திலே மாநாடு நடத்தி, போர் நிதி திரட்டி அந்நிதியை அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் சேர்ப்பித்தோம்.

1971 இல் பாகிஸ்தான் நம்நாட்டின் மீது போர் தொடுத்தது. 7.12.1971 அன்று வானொலியில் ஆற்றிய "கொடிநாள்" உரையில் நான் அறிவித்ததற்கு ஏற்ப, இந்திய – பாகிஸ்தான் போரிலே உயிர்நீத்த தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழக அரசின், சார்பில் நிதி வழங்கியதோடு அவர்கள் குடும்பம் நன்றாக இருந்தால்தான், அவர்கள் வாழ்வு நன்றாக இருந்தால்தான், நமக்கு வாழ்வு என்பதால் அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கர் நிலமும், புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர் நிலமும் இலவசமாக அளித்தோம்.

1972ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள்; இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சென்னைக்கு அழைத்து அவருடைய கையில் 6 கோடி ரூபாயைப் போர்நிதியாக வழங்கினோம்.

அதேபோல, 1999 இல் நிகழ்ந்த கார்கில் போராட்டத்தின் போதும், தமிழக மக்கள் வழங்கிய 59 கோடி ரூபாயில், 50 கோடி ரூபாயை அந்நாளைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களிடம் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக வழங்கினோம்.

கார்கில் போரில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 19 வீரர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியதோடு, உயர்வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்றும், அவ்வீரர்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பும் அளித்தோம்.

எஞ்சிய தொகை,'கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதி' என இருப்பு வைக்கப்பட்டு, அந்நிதியிலேயிருந்து எல்லைப் புறங்களில் பாதிக்கப்படும் தீரர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி இயன்ற வழிகளில் எல்லாம் முன்னாள் படைவீரர் நலம் காப்பதில் நாம் முனைப்போடு செயல்பட்டு, இந்திய அளவில் தமிழகத்திற்குப் பெருமைகள் சேர்த்துள்ளோம். இந்தப் பெருமைகள் தொடர, இந்த ஆண்டின் கொடிநாள் நிதி வழங்குவதிலும் அதிக நிதி அளித்துச் சாதனைகள் படைத்திடுவோம்.

*நாடு காக்கும் வீரர்களின்*
*நலம் காப்போம் !*
*அவர்தம் குடும்பங்கள் உளம் மகிழ*
*வளம் சேர்ப்போம் !*
*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!*
*விதியினை எதிர்த்து வீரம் விளைத்த*
*தீரர் குடும்பம் கதியில்லை யெனக்*
*கதறி அழவிடாது கை கொடுப்பீரே !"*

என்று என்னருமைத் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

போக்குவரத்துக் கழகங்களின் வாரியாக புதிய பேருந்துகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | புதியப் பேருந்துகள் |
|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை | 100 |
| 2. | விரைவுப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) | 3 |
| 3. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) | 19 |
| 4. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) | 20 |
| 5. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) | 50 |
| 6. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) | 40 |
| 7. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) | 10 |
| | மொத்தம் | 242 |

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில், மாநகரப் போக்குவரத்துக் கழகம், நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள மேற்படி புதிய சொகுசு பேருந்துகளில் முதல் கட்டமாக 30 பேருந்துகளை கீழ்க்கண்ட முறையில் இயக்க உள்ளது.

**1. "எல்லோ லைன்" பேருந்துகள் :**

(ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சொகுசு பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லும்)

**2. "ப்ளூ லைன்" பேருந்துகள் :**

(குறிப்பிட்ட விரைவுப் பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லும்)

மேற்படி பேருந்துகளில் பயணிகள் இருக்கைகள் பிளாஸ்டிக் வார்ப்படத்தால் செய்யப்பட்டு, போதிய விளக்கு வெளிச்சமும், ரயிலில் உள்ளது போன்ற ஏற்றி இறக்கக்கூடிய கண்ணாடியினால் ஆன ஜன்னல்களும், ரெயான் மற்றும் பைபர் பூச்சு செய்யப்பட்ட மேற்கூரை மற்றும் சுற்றுப்புற மாசு ஏற்படாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

600 ரூபாய்க்கு வழங்கப்படும் " மாதாந்திர விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு" (Monthly Travel as You Please Ticket Holders) வைத்துள்ள பயணிகள் மேற்படி எல்லோ லைன் மற்றும் ப்ளூ லைன் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

### அதிநவீன சொகுசுப் பேருந்துகளின் சிறப்பு அம்சங்கள்

* ஒவ்வொரு இருக்கையிலும் படிப்பதற்கு வசதியாக மின்விளக்கும், காற்றோட்டத்திற்காக மின்விசிறியும் பொருத்தப்பட்டுள்ளன.
* பயணிகள் சொகுசாக சாய்ந்து தூங்குவதற்கு இலகுவாக சாய்ப்பதற்கு நவீன தொழில்நுட்ப இருக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
* 36 சாய்மான இருக்கைகள் கொண்ட சொகுசுப் பேருந்தாக வடிமைக்கப்பட்டுள்ளது. அவ்விருக்கைகள் கால் வைப்பதற்கு வசதியாக அதிக இடைவெளியுடன் அமைக்கப்பட்டுள்ளன.
* ஒவ்வொரு இருக்கையின் பக்கவாட்டு ஜன்னல்களில் உயர்தர லினன் துணிகள் பொருத்தப்பட்டுள்ளன.
* பயணிகள் தங்களது அதிக உடைமைகளை கொண்டு செல்லும்போது, தங்கள் உடைமைகளை வைப்பதற்கு விசாலமான வைப்பிருக்கை வசதி பேருந்தின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ளது.
* தட்பவெட்ப நிலையை சீராக வைப்பதற்கு இப்பேருந்தின் மேற்கூரை புதிய தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.
* உயர்தரமான பாலியுரோத்தின் வகையைச் சார்ந்த வர்ணங்கள் பேருந்துகளுக்கு பூசப்பட்டுள்ளன.
* பேருந்தின் முன்பக்க கண்ணாடி 96"X 64" என்ற அளவில் பொலிவுடன் பொருத்தப்பட்டுள்ளது.
* அதிர்வில்லாமல், பயணிகள் இதமாகச் செல்ல காற்றடைக்கப்பட்ட பலூன்களைப் பயன்படுத்தி மிதவைப் பேருந்துகளாக இயக்கப்படுகிறது.
* பேருந்துகளில் டிஜிட்டல் வீடியோ காட்சி ஒளிபரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
* இந்திய அளவில், தனியார்களின் அதிநவீன பேருந்துகளுக்கு இணையாக அதிநவீன தொழில் நுட்பத்துடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ■



# உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில்
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
6–12–2006 அன்று தீர்மானத்தை முன்மொழிந்து
ஆற்றிய உரை

உணர்ச்சிமயமான, எழுச்சி நிறைந்த நம்முடைய இதயத்தை எல்லாம் நனையச் செய்கின்ற அளவுக்கு பெருமிதம் கொள்ளக் கூடிய ஒரு தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

இங்கே எல்லா தலைவர்களும் பேசிய பிறகு, எனக்கு முன் பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் அவராகவே அமைச்சர் பெருமக்களுக்கு வக்காலத்து வாங்கி என்னை வாழ்த்தியிருக்கிறார். நான், நானாக இல்லாமல் வேறொரு முதலமைச்சராக இருந்தால், அவர் என்னைப் பற்றிப் பாராட்டிய பெருமைகள் அனைத்தையும் நானே சொல்லிக் கொண்டிருப்பேன். அவர் சொல்லியதிலிருந்து நான் சொல்லித்தான் பாராட்டினாரோ என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. என்னோடு பல்லாண்டு காலம் பழகிய அந்தப் பாச உணர்வு, இந்த ஆட்சி நடத்துகின்ற இயக்கத்தில் இளமைப் பருவம் முதல் அவர் கொண்டுள்ள உறவு, அதன் காரணமாக தன்னுடைய உள்ளத்தில் பொங்கி எழுந்த கருத்துகளையெல்லாம், உணர்வுகளையெல்லாம் இங்கே வெளிப்படுத்த வேண்டுமென்று வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒன்று சொன்னார், இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் நான் இந்த அவையிலே இருந்தேன், இந்தப் பெருமையை எதிர்காலம் பேசும் என்றார். என்னுடைய தாத்தா, பாட்டன் இந்த அவையில் இருந்தபோதுதான், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்று எதிர்காலத்திலே பேரப் பிள்ளைகள் பேசுவார்கள் என்று சொன்னார். இந்தப் பெருமை எல்லாம் இந்த அவையிலே இருந்த சில பேருக்குத் தேவைப்படாத காரணத்தால் இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் அவர்கள் இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு!

இந்தத் தீர்மானம் இன்றைய வரிசைக் குறிப்பில் (அஜண்டா) கடைசியாகத்தான் இடம் பெற்றிருந்தது. நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும், வீராசாமி அவர்களும் கலந்து பேசி, இந்தத் தீர்மானம் வருகிற நேரத்தில் பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள் டெல்லிக்கு தனி விமானத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். சிலை திறக்கின்ற விழாவிற்குச் செல்லவிருக்கிறார்கள், அவர்கள் தனி விமானத்திலே செல்லவிருக்கின்ற காரணத்தால், பிற்பகல் சட்டமன்ற நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள மாட்டார்கள், பிற்பகல் அவர்கள் விமானத்தில் செல்ல வேண்டும், அவர்கள் கலந்து கொள்வது முற்பகலிலேதான் இருக்கும்



# சென்னையில் நவீன ரக சிறப்புப் பேருந்துகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இயக்கிவைத்தார்

தமிழக சட்டப்பேரவையில் 2006 – 2007 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகங்களால் இயக்கப்பட்டுவரும் பேருந்துகளில், பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக 2,230 புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்றும், சென்னை மாநகரில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எங்கும் நிற்காமல் துரிதமாகப் பயணிகள் செல்லும் வகையில் ''எல்லோ லைன்'' (Yellow Line) எனப் பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும்,





குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக் கூடிய ''புளூ லைன்'' (Blue Line) என்ற பெயருடைய புதிய பேருந்துகளும் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை நிறைவேற்றும் வகையில் முதற்கட்டமாக 1,000 புதிய பேருந்துகளை வாங்கிட அரசு மானியமாக 100 கோடி ரூபாயை 23.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தற்போது தயார் நிலையில் உள்ள 242 பேருந்துகளில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 100 பேருந்துகளையும், இதர போக்குவரத்துக் கழகங்களுக்கு 142 பேருந்துகளையும் 3.12.2006 அன்று சென்னைத் தீவுத் திடலில், அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களிடம் ஒப்படைத்து, சென்னை மாநகரில் ''எல்லோ லைன்'' ''புளூ லைன்'' பேருந்துகளின் வெள்ளோட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.12.2006 அன்று கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் பொழுது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஆ.ராசா, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப, மற்றும் போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 3.12.2006 அன்று, மாநகர் போக்குவரத்து கழகம் மற்றும் இதர தமிழக அரசு போக்குவரத்து கழகங்களின் 242 புதிய பேருந்துகளை துவக்கி வைத்தார்கள்.



சென்னை மாநகர் பகுதியில், மாநகரப் போக்குவரத்துக்கழகம் (சென்னை) தனிப்பெரும் போக்குவரத்து நிறுவனமாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இக்கழகத்தில் தற்போது நாளொன்றுக்கு 2,554 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தினந்தோறும் இக்கழக பேருந்துகளின் இயக்கத்தின் வாயிலாக சுமார் 40 இலட்சம் பயணிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும் இக்கழகத்தின் மூலம் நாளொன்றுக்கு 6.6 இலட்சம் கிலோ மீட்டர்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

என்பதால், அவர்கள் இருக்கும்போதே இந்தத் தீர்மனத்தை எடுத்து நிறைவேற்றினால், அவையிலே உள்ள அனைவரும் இந்த தீர்மானத்தை ஆதரித்தோம் என்ற பெருமை தீர்மானத்திற்கும் கிடைக்கும், இருந்தவர்களுக்கும் கிடைக்கும் என்று சொன்னதன் பேரில், அவையின் முன்னவர் எழுந்து இந்த வரிசையை மாற்றி, இந்தத் தீர்மானத்தை முன்னதாக எடுத்துக் கொள்கின்ற வழி வகைகளை தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன் கண்டார்கள்.

அப்படி வாய்ப்பை அளித்திருந்தும் கூட, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று கருதியோ, கலந்து கொள்ளத் தேவையில்லை என்று கருதியோ பிரதான எதிர்க்கட்சி, அதிலே மாத்திரம் எனக்கு வருத்தமில்லை, எதிர்க்கட்சியின் தோழமைக் கட்சியான ம.தி.மு.க உட்பட அவர்கள் அவையிலே இல்லாதது எனக்குப் பெரும் குறை. இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு கட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. இந்த மிக முக்கியமான, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தீர்மானம் என்றெல்லாம் குறிப்பிட்டார்களே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் எல்லோரும் இதற்குக் கூட ஒன்றாக இருந்தோம் என்ற நிலையை தமிழகத்திலே ஏற்படுத்த முடியவில்லையே, நாமா முல்லைப் பெரியாறில் ஒன்றாக இருக்கப்போகிறோம் என்ற சந்தேகத்தை நமக்கு ஏற்படுத்துகின்றது. இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தத் தீர்மானத்திலே அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதற்கு உதாரணமே இருக்கின்றது. இதை இந்தக் கருத்தை, தி.மு.கழகம் மாத்திரமல்ல, நம்முடைய நண்பர் மணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் எத்தனையோ கூட்டங்களில் கூறியிருக்கிறார்.

புலவர் பெருமக்கள், வழக்கறிஞர் பெருமக்கள் பலர் எத்தனையோமுறை இந்தக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தான் இது அரசு சார்பிலே அவையிலே ஒரு தீர்மானமாக முன் மொழியப்பட்டு, உங்கள் ஆதரவோடு நிறைவேற இருக்கின்றது.

இதற்கு முன்பே 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் அமைத்திருக்கின்ற தமிழ் மன்றத்தின் சார்பாக டபிள்யூ. பி. எண். 16939/2001 என்ற ஒரு ரிட் மனு சென்னை உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது. ரிட் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. அது என்ன ரிட் மனு என்றால், அரசு உயர் நீதிமன்றங்களில் தமிழை வழக்கு மொழியாக உருவாக்க வேண்டும் என்பது அந்த ரிட் மனுவின் பொழிப்புரை. அதை உயர் நீதி மன்றம் உத்தரவின் மூலமாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ரிட் மனுவை உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டு, தள்ளுபடி செய்யும்போது என்ன காரணம் சொன்னதென்றால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 348 (2) இன் கீழ் ஆணை பிறப்பிக்கக் கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மட்டும்தான் உண்டு, எனவே அவர் ஆணை பிறப்பிக்க வேண்டுமே தவிர, இங்கே நீதி மன்றத்தில் வந்து வாதாடிப் பயன் இல்லை என்று தள்ளி விட்டார்கள்.

நீங்கள் இந்தத் தாத்பரியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், அதற்கு என்ன அர்த்தம்? நீதிமன்றத்திலே வழக்காடினால் எங்களால் ஒன்றும் உத்தரவிட முடியாது. ஆளுநர்தான் அதற்கு உத்தரவிட வேண்டும். ஆளுநர் உத்தரவு என்றால், அரசாங்கத்தின் உத்தரவு. அரசாங்கத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டு போனால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தால், பின்னர் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து, பிறகு நீதி மன்றத்திலே தமிழ் வழக்கு மொழியாகலாம் என்று சொல்லி, உயர் நீதி மன்றம் 2001இல் வழக்கறிஞர்கள் கொடுத்த அந்த மனுவை தள்ளுபடி செய்தது.

அப்போது நாம் ஆட்சியிலே இருந்திருந்தால், அப்படியா உயர் நீதிமன்றமே வழி காட்டியிருக்கிறது, அவர்களால் முடியாதாம், ஆளுநர்தான் செய்ய வேண்டுமாம் என்று உடனே தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரிடத்திலே கொடுத்து நிறைவேற்றியிருப்போம். அப்போதே தமிழ் உயர்நீதி மன்ற வழக்கு மொழியாக ஆகியிருக்கும். ஆனால் முன்பிருந்த அரசு இதைச் செய்யவில்லை. இது தானா அவர்களுக்கு வேலை? இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே கூட அவர்களால் இருந்து நிறைவேற்றித் தர, ஒப்புதல் அளிக்க முடியவில்லை என்கிறபோது, நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன், தமிழர்கள் எல்லோரும் ஒரு சேர அமர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் இன்னும் பெருமைதான். அந்தப் பெருமையை அளிக்க அவர்கள் வேண்டுமென்றோ அல்லது விவகாரம் செய்ய வேண்டுமென்றோ, தீர்மானம் நிறைவேறுகின்ற நாளில் ஒரு பெரிய கலவரத்தைச் செய்ய வேண்டுமென்றோ திட்டமிட்டு வந்தவர்களை நாம் எப்படித் திருத்த முடியும்? எனவே எத்தனை புயல் வீசினாலும், எத்தனை சூறாவளி வீசினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழ் நின்று



நிலைக்கும், வாழும் என்பதற்கு அடையாளமாக இன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் முன்னால் மீண்டும் ஒரு முறை படித்து நிறைவேற்ற விரும்புகிறேன்.

"சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1)–ஆவது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருந்திட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி, உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப்பிரிவு 348 உட்பிரிவு –(2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயல்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதென இந்த சட்டமன்றப் பேரவையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது."

இதிலே நம்முடைய நண்பர் கோவிந்தசாமி அவர்களும், நண்பர் குணசேகரன் அவர்களும் ஒரு அய்யப்பாட்டை எடுத்துச் சொன்னார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் வருவதற்கு முன்பு பத்திரிகைகளிலும் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் அவர்கள் பேசியது வெளி வந்திருக்கின்றது.

இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அவருடைய விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளையும் அவரே தெரிவித்திருக்கிறார். இதை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆதரிப்பது மாத்திரமல்ல, நமக்கு ஆக்கப் பூர்வமான உதவிகளையும் செய்வதற்கு ஒப்பாகும் என்ற முறையில் நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**அவர்கள் குறிப்பிட்டிருப்பது,**

1. நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து தமிழில் மொழியாக்கம் செய்வதற்கு திறமைவாய்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் – அதாவது தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்ப்பதற்கு புலமை வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
2. தீர்ப்பு வழங்கும்போது அதனை உடனடியாகக் குறிப்பெடுக்க தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்றாகப் பயிற்சி பெற்ற சுருக்கெழுத்தாளர்கள் அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
3. தற்போது உயர் நீதிமன்றத்தை நவீனப் படுத்துவதன்கீழ் கணினி பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், தமிழில் தீர்ப்புகளைச் செயற்படுத்த அதற்கான மென்பொருள் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
4. தீர்ப்புத் திரட்டு என்ற தமிழ்ச் சட்ட இதழில் குறைவான அளவே சட்ட மொழிப் பெயர்ப்புகள் வெளியாவதால், முழுமையான அளவில் மொழியாக்கம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இந்த இதழினை அதிக அளவில் அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் வகையில் செயற்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.
5. தமிழ்ச் சட்டப் புத்தகங்கள் மற்றும் குறிப்புகள் வாங்கி வைத்திடும் வகையில், தனியாக நூலகம் ஒன்றை ஏற்படுத்தவும், அதற்கான இட வசதியையும் செய்து தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
6. அந்த நூலகத்திற்கு பெருமளவில் சட்ட மொழிப் பெயர்ப்புகள் மற்றும் சொல்லகராதிகள் வாங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நான் தலைமை நீதிபதி அவர்களுக்கு எழுதிய பதிலில் தங்களுடைய யோசனைகள் அனைத்தும் இந்த அரசால் பின்பற்றப்படும், உடனடியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். எனவே இந்த வசதி, வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, நீதிமன்ற வழக்கு மொழியாக தமிழ் ஒளி விட ஒல்லும் வகையெலாம் இந்த அரசு உழைத்திடும், பாடுபடும், பணியாற்றும், உங்களுடை வாழ்த்துக்களோடு என்று குறிப்பிட்டு இந்த அளவோடு அமைகிறேன். ●



## உயர் நீதிமன்றத்தில் வழக்குமொழியாக தமிழ்

**மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு**

நாடாளுமன்ற வளாகத்தில் சிந்தனையாளர் முரசொலி மாறன் அவர்களின் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ளவும், 9.12.2006 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் டெல்லி வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 8.12.2006 அன்று, பகல் 1 மணி அளவில், மேதகு இந்தியக் குடியரசு தலைவர் திரு.ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்தார்.

அரை மணி நேரத்திற்கு மேல் இருவரும் உரையாடினார்கள், உடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ. ராஜா அவர்கள் இருந்தார்.

சந்திப்புக்குப் பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, செய்தியாளர்கள் குடியரசு தலைவர் அவர்களைச் சந்தித்தது பற்றி கேட்டபோது, தமிழகத்தில் உயர் நீதி மன்றத்தில் தமிழ் மொழியை வழக்கு மொழியாக கொண்டு வருவதற்காக தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதாகவும், அரசியல் சாசனப்படி, விதி 348 (2) இன்படி அந்தத் தீர்மானத்திற்கு குடியரசு தலைவர் அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டும். எனவே அந்தத் தீர்மானத்தின் நகலையும் இணைத்து குடியரசுத் தலைவர் அவர்களிடம் கடிதம் கொடுத்திருப்பதாகவும், குடியரசுத் தலைவர் நிச்சயம் அதனைக் கவனிப்பதாக உறுதி கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். ■



# முதல் துணை மதிப்பீடுகள் 2006-2007

**மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை**



மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவையில் வழங்கி, 2006–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6–ஆம் நாளன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. 2006 – 2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,157.95 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 495.15 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 662.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2006 –ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22–ஆம் நாளன்று 2006 – 2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்டம் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2006 – 2007 ஆம் ஆண்டு திருத்த வரவு –செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. மீன்பிடித் தொழில் அதிகம் இல்லாத மாதங்களில் 1,02,993 மீனவ மகளிருக்கு உதவித்தொகை வழங்குவதற்காக அரசு ரூபாய் 12.36 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 12.36 கோடி வழங்கப்பட்டுள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை – மீன்வளம்' என்பதன் கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ் திரைப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் உள்ளாட்சியமைப்பு களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு முடிவு செய்துள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 10– வணிகவரி மற்றும் பதிவுத்துறை – வணிக வரிகள்' என்பதன் கீழ் ரூபாய் 30 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 60 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 60 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

# தமிழில் பெயர் சூட்டப்பட்ட பழைய திரைப்படங்களுக்கும் வரிவிலக்கு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு**

2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழிலே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து 22.7.2006 அன்று அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தமிழிலே பெயர் சூட்டப்பட்ட பழைய திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை திரைப்படத் துறையினரிடமிருந்து வந்து கொண்டேயிருந்தது.

அதனையேற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இனி தமிழ்த் திரைப்படங்கள், புதிய படம், பழைய படம் எதுவானலும், படத்தின் தலைப்பு தமிழ்த் தலைப்பாக இருக்குமேயானால் அதற்கு கேளிக்கை வரி முழுமையாக விலக்களிக்கப்படும் என்றும், படத்தின் தலைப்பு தமிழ்த் தலைப்பா என்பதற்கான அனுமதியை படத்தின் தயாரிப்பாளர், அரசின் வணிகவரித் துறை ஆணையரிடம் பெற்றால்தான் வரிவிலக்கு அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

6. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கடனாக ரூ. 200 கோடி வழங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 200 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
7. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூபாய் 150 கோடி 'மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.
8. கரும்புக்கான உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூபாய் 89.02 கோடி நிதி உதவி வழங்குவதற்காக 'மானியக் கோரிக்கை எண் 27 – தொழில்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.
9. அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தன்விருப்ப மானியமாக அரசு ரூபாய் 56.51 கோடி அனுமதியளித் துள்ளது. மேலும் சட்டமன்றப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கான ஒதுக்கீட்டை ரூபாய் 1 கோடியிலிருந்து ரூபாய் 1.20 கோடியாக அரசு உயர்த்தியுள்ளது. 'கோரிக்கை எண். 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளின் ரூபாய் 103.51 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
10. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக, மானியக் 'கோரிக்கை எண். 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 10 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
11. மாணவர்களுக்கான பயண அனுமதிக்குரிய பேருந்துக் கட்டணத்தை மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அளிப்பதற்காக, மானியக் 'கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத்துறை' என்பதன் கீழ் ரூபாய் 100 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
12. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். ■



# 4,500 துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 25.11.2006 அன்று, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்



துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

**ஆய்வின் முடிவில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன :**

1. அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் சமீபத்தில் பெய்த மழையில், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்படுத்தி செப்பனிட வேண்டுமென்றும், இதற்காக இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து ரூ.25 கோடி வழங்கப்படும்.
2. தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப் படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க தமிழக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தமிழக அரசு ஈடுகட்டும்.
3. நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சி துறைகளில் தற்போது காலியாக உள்ள 4,500 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
4. விளம்பரப் பலகைகளினால் வரும் விளம்பர வரி கடந்த ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பிலிருந்து அரசுக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது. ஆகவே, முன்பு இருந்தபடியே விளம்பர வரி விதித்து வசூலிக்கும் உரிமையை உள்ளாட்சி அமைப்புகளுக்கே திரும்ப வழங்கப்படும். ■

## மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் ஆய்வு மையம் தொடங்கிட ரூ.1 கோடி அனுமதி



'கல்வி வளர்ச்சி நாள்' என இந்த அரசு அறிவித்து 15.7.2006 அன்று தமிழகம் முழுவதும் கொண்டாடிய பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் விழாவிலும், தமிழக சட்டப் பேரவையில் 22.7.2006 அன்று அளிக்கப்பட்ட இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தவாறு, கல்வித்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள உதவும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'கல்வியியல் ஆய்வு மையம்' (Centre for Educational Research) ஒன்று உடனடியாகத் தொடங்கப்படும் என்றும், அதற்காக ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். □

## வருவாய்த் துறையில், 3,674 கிராம உதவியாளர்கள் விரைவில் நியமனம்

முந்தைய அதிமுக அரசு வருவாய்த் துறையின் கீழ் கிராம உதவியாளர்களை நியமிப்பதற்குத் தடை விதித்து 6.7.1995 அன்று அரசாணை பிறப்பித்தது. அதன் காரணமாக, தற்போது 3,674 வருவாய் கிராமங்களில் ஒரு கிராம உதவியாளர் கூட இல்லாத நிலை ஏற்பட்டு, பணியிடங்கள் காலியாக இருப்பதால் அரசுத் திட்டங்கள் கிராம மக்களைச் சென்றடைவதில் முடக்கநிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலை, தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து அரசுத் திட்டங்களின் பயன்கள் கிராம மக்களுக்கு உடனுக்குடன் கிடைப்பதற்கு உதவிடும் வகையில், முந்தைய அரசு விதித்த கிராம உதவியாளர் நியமனத் தடையை ரத்து செய்து, காலிப் பணியிடங்கள் உள்ள வருவாய் கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கிராம உதவியாளர் வீதம் மொத்தம் 3,674 கிராம உதவியாளர்களை வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகங்கள் மூலம் நியமனம் செய்திட அனுமதி அளித்து 1.12.2006 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

□





## தமிழ்நாட்டில் கரும்புக்கு விலை நிர்ணயம்



2006 – 2007 சர்க்கரை ஆண்டில் 9 சதவிகிதம் பிழி திறனுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 802.50 என்று மத்திய அரசு குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது. தமிழக கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச விலையை விடக் கூடுதலாக ரூபாய் 222.50 உயர்த்தி, 9 சதவிகிதம் பிழி திறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1,025 என்று நிர்ணயம் செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த விலை உயர்வு, இந்த நடப்புக் கரும்பாண்டில் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேலும் 9 சதவிகிதம் பிழிதிறனுக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித பிழிதிறனுக்கும் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் ஊக்கத் தொகை (incentive) யாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## டாஸ்மாக் ஊழியர்களுக்கு மேலும் 5 சதவிகிதம் கூடுதல் கருணைத்தொகை

கடந்த 2005–2006 ஆம் ஆண்டிற்காக டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதம் போனசும், 1.67 சதவிகிதம் கருணைத்தொகையும் 17.10.2006 அன்று வழங்கப்பட்டன. இப்பணியாளர்கள் தங்களுக்குக் கூடுதல் போனஸ் வழங்க வேண்டுமென அரசிடம் கோரிக்கை வைத்ததையடுத்து, அவர்களது கோரிக்கையினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, டாஸ்மாக் ஊழியர்களுக்கு ஏற்கெனவே போனசாகவும் கருணைத் தொகையாகவும் வழங்கப்பட்ட 10 சதவிகித தொகை தவிர, மேலும் 5 சதவிகித கூடுதல் கருணைத்தொகை வழங்கிட அரசு அனுமதித்துள்ளது என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதனால் டாஸ்மாக் நிறுவனத்தைச் சேர்ந்த ஒப்பந்த, தற்காலிகப் பணியாளர்கள் உட்பட சி மற்றும் டி பிரிவைச் சேர்ந்த 30,945 ஊழியர்கள் பயன் பெறுவார்கள்; அரசுக்கு 3 கோடியே 84 இலட்சத்து 14 ஆயிரத்து 700 ரூபாய் கூடுதல் செலவாகும்.

# ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு விடுதிகளில் கூடுதலாக 1,000 இடங்கள்

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ், மாவட்டங்களில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்கு மாணவ மாணவியர் அதிக அளவில் விரும்பி விண்ணப்பம் அளித்துள்ள விவரம் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் 300 இடங்களும், பள்ளி விடுதிகளில் 700 இடங்களும் ஆக மொத்தம் 1,000 கூடுதல் இடங்களை அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேலும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு சோப்பு, எண்ணெய் முதலியவைகள் வாங்கவும், மாணவர்களின் முடிவெட்டும் செலவுகளுக்காகவும், மாதந்தோறும் சில்லரைச் செலவினமாக உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் உதவித் தொகை பள்ளி மாணவர்களுக்கு மாதம் 15 ரூபாய் என்பது 25 ரூபாய் எனவும், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 25 ரூபாய் என்பது 35 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## புதிய தமிழ்ச் சொற்கள்

30.10.2006 அன்று நடைபெற்ற 40ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்கள் வருமாறு

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Point to Point | முனைக்கு முனை |
| Ward | குடும்பு |
| Unopposed candidate | போட்டியில்லா வேட்பாளர் |
| Breakdown squad | சீர்குலைவு நிலைப்படை / தடங்கல் நீக்கப்படை |
| Peak hour | நெரிசல் நேரம் / உச்ச நேரம் |
| Satellite City | துணை மாநகர் |
| Pay and use | கட்டணப் பயன்பாடு |
| Wilful violation | வேண்டி விதி மீறல் |
| Untoward | விரும்பத்தகாத |
| Bilateral | இருபுலம் |
| Book mark | நூலறிகுறி |
| Urban Poverty Alleviation | நகர்ப்புற வறுமைத் துயர்தணிப்பு |

– தமிழ் வளர்ச்சித்துறை



# 2006 - 2007ஆம் ஆண்டில் 3 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு



இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கும் திட்டம் குறித்து 11.12.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் விவாதிக்கப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- ✦ எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2006 –07) மூன்று இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.
- ✦ அடுத்த நிதியாண்டிலிருந்து நான்கு ஆண்டுகளில் எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✦ எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் குடும்ப அட்டைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும்.
- ✦ இத்திட்டம் பொங்கல் திருநாளையொட்டி "போகி" தினத்தன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். தொடர்ந்து அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர் பெருமக்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும். துவக்க விழாவன்று முப்பதாயிரம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்படும்.
- ✦ 2007 ஜனவரி மாத இறுதிக்குள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும், மார்ச் 2007க்குள் மீதமுள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள்.
- ✦ தற்போது இயங்கி வருகின்ற எரிவாயு விநியோகஸ்தர்கள் மூலமாக நகர்ப் பகுதிகளிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் சுற்றளவு பகுதியில் உள்ள கிராமங்கள் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்படும்.
- ✦ அடுத்த நிதியாண்டு (2007 –08) முதல் தற்போது எரிவாயு விநியோகஸ்தர்கள் இல்லாத பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே முகவராக செயல்பட்டு தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✦ 200 குடும்ப அட்டை உள்ள நியாய விலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தகைய நியாய விலைக் கடைகள் இல்லாத மாவட்டங்களில் 500 குடும்ப அட்டை வரை உள்ள நியாய விலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- ✦ இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் ஊராட்சித் தலைவரின் தலைமையில், கிராம நிருவாக அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர், மக்கள் நலப் பணியாளர் மற்றும் சமூகநலத் தொண்டர் அடங்கிய குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும். நகர்ப்புறப் பகுதிகளில் வார்டு உறுப்பினர் தலைமையில் வரித் தண்டலர் (Bill Collector) வருவாய்த்துறை அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர் மற்றும் சமூகநலத் தொண்டர் கொண்ட குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.
- ✦ இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு. கோ. சி.மணி, திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. துரை முருகன், திரு. கே.என்.நேரு, திரு ஐ. பெரியசாமி, திரு எ.வ.வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ✦

# உயர்வு நோக்கிடும் பாதையிலே ஒவ்வொரு நாளும் சாதனைகள்



### மண்ணுக்கு மருதாணியிட



- ரூ. 7,000 கோடி கூட்டுறவுக் கடன்கள் அறவே தள்ளுபடி.
- நடப்பு ஆண்டு பயிர்க் கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு
- விவசாயக் கடன்களுக்கு ஒதுக்கீடு ரூ. 1,000 கோடி; விடுவிப்பு ரூ. 400 கோடி.
- விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம்.
- நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்.

### மகளிர் மனம் குளிர



- தரமான அரிசி, கிலோ இரண்டு ரூபாய்.
- இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்.
- பொங்கல் முதல் 3 இலட்சம் குடும்பங்களுக்கு நடப்பாண்டில், இலவச எல்.பி.ஜி. இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு.



### பெண்கள் நலம் பேண



- மீண்டும் மூவலூர் மூதாட்டியார் திட்டம் – நிதி உதவி ரூ. 15,000 ஆக உயர்வு.
- கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு கால உதவி மாதம் 1,000 ரூபாய் – ஆறு மாதங்களுக்கு.

### நெசவாளர் நெஞ்சம் நிறைய

- இலவச மின்சாரம் – கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்.

### மீனவர் வாழ்வு மீண்டும் தழைக்க



- சுனாமியால் வீடிழந்தவர்களுக்கு, வீடுகள் கட்ட தீவிர நடவடிக்கை.
- 23.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளுக்கு முதற்கட்டமாக 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் விடுவிப்பு.

### மாணவர் மகிழ



- கல்லூரிக் கட்டணம் ரூ.7,550 ஆகக் குறைப்பு.
- பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புக்கான நுழைவுத்தேர்வு ரத்து.
- சத்துணவோடு வாரம் இரண்டு முறை முட்டை.

**ஆசிரியர் அகம் மகிழ**

- கலந்தாய்வு முறையில் ஆசிரியர்
  பணியிட மாறுதல் –
  மருத்துவத்துறைக்கும்,
  கிராம நிருவாக அலுவலர்களுக்கும் நீட்டிப்பு.
- ஒப்பந்தமுறை நியமனம் ரத்து

**வணிகர் நலம் பேண**

- மதிப்புக் கூட்டு வரி அமல்.

**அரசு ஊழியர் ஆர்வத்துடன் பணியாற்ற**

- வேலை நிறுத்தப் போராட்ட நாட்களை ஊதியத்துடன் கூடிய பணிக்காலமாக அறிவிப்பு.
- உரிமைப் போராட்டத்தில், உயிர்நீத்த அரசு ஊழியர் – சாலைப் பணியாளர் குடும்பங்களுக்கு நிதியுதவி, வாரிசுகளுக்கு வேலை.



- காவலர் குறை தீர்க்க மூன்றாவது போலீஸ் கமிஷன்.
- 3 இலட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்ப விரைந்த நடவடிக்கை.
- மின்சார வாரியத்தின் 70,000 ஊழியர்களுக்கும், 62,000 ஓய்வூதியதாரர்களுக்கும் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைப்பு.

**கல்வித்துறை ஒளிர**

- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து சட்டம்.
- அரசு உதவிப் பள்ளிகளுக்கும் இலவச பாட புத்தகங்கள் வழங்க நடவடிக்கை.
- +2 பாடத்திட்டத்தில் பாடச்சுமை குறைப்பு.



**கலைத்துறை செழிக்க**

- படப்பிடிப்புக் கட்டணங்கள் பல மடிகள் குறைப்பு.
- நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை.
- பெரியார் திரைப்படத்திற்கு ரூபாய் 95 இலட்சம் நிதி.
- அம்பேத்கர் திரைப்படத்திற்கு ரூபாய் 10 இலட்சம் நிதி. காலவரையறையின்றி வரிவிலக்கு.

**இளைஞர் ஏற்றம் பெற**



- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை.
- கடந்த ஆட்சியின் பணி நியமனத் தடை ஆணையால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வயது உச்சவரம்பில் ஐந்து ஆண்டுகள் தளர்வு.

**ஆதரவற்றோர் ஒளி பெற**

- முதியோர், விதவை உதவித்தொகை மாதம் ரூ.400 ஆக உயர்வு.
- ஊனமுற்றோர் உதவித் தொகை மாதம் ரூ.500 ஆக உயர்வு.

**சமூக நீதி வலுப்பெற**

- சுயநிதிக் கல்லூரிகளில் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு சட்டம்.
- அரசு மற்றும் சுயநிதி தொழில் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு 65 விழுக்காடு; சிறுபான்மையினர் கல்லூரிகளில் 50 விழுக்காடு.
- அனைத்து சமூகத்தினரும் ஆலயங்களில் ஆராதனை செய்ய தனிச் சட்டம் நிறைவேற்றம்.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக பயிற்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்னாள் நீதிபதி ஏ. கே. ராஜன் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பு.

**தமிழும், தமிழரும் வளம் பெற**

- அகற்றப்பட்ட கண்ணகி சிலை, அதே இடத்தில் நாட்டல்.
- தமிழ் கட்டாய பாடம் – 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை.
- தமிழில் தலைப்பிடப்படும் திரைப்படங்களுக்கு வரி விலக்கு. இவ்வரிவிலக்கு பழைய படங்களுக்கும் பொருந்தும்.
- பரிதிமாற்கலைஞர் நூல்கள் நாட்டுடைமை.
- உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி.

() () ()



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின்

# உலக எய்ட்ஸ் நாள் செய்தி

ஆண்டுதோறும் டிசம்பர்த் திங்கள் முதல் நாள் 'உலக எய்ட்ஸ் நாள்' எனக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாள், நம்முன் உள்ள எச்.ஐ.வி./ எய்ட்ஸ் என்ற மிகப் பெரிய சமூக, பொருளாதாரச் சவாலை நமக்கு நினைவூட்டுகிறது. தமிழகத்தில் எச்.ஐ.வி. தொற்று கண்டறிப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அரசு எச்.ஐ.வி. தொற்று பரவுவதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தி வருகிறது. இந்நாளில், எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோருக்குப் பாதுகாப்பு, ஆதரவு மற்றும் மருத்துவச் சேவைகள் மிகவும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோரை ஒதுக்கி வேறுபடுத்தாமல் அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதை மக்கள் அனைவரும் குறிப்பாகக் களப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் தமது கடமைகளில் ஒன்றாகக் கருதிட வேண்டும். எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட நிலையில் சமுதாயத்தில் சம உரிமையுடனும், மதிப்புடனும் வாழ்வதற்காகப் போராடி வருவோரின் மன உறுதியினையும் தன்னம்பிக்கையினையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு அனைத்துத் துறைகளின் ஒத்துழைப்போடு எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் தகுந்த பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளை எவ்வித வேறுபாடுமின்றி உடனுக்குடன் அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை பெற்று வரும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோர் அனைவருக்கும் இந்த நிதியாண்டில் ஊட்டச்சத்து வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் 15 எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்திடவும் அரசு ஆவன செய்து வருகிறது. எனவே, எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணும் வகையில் அவர்களும் மற்றவர்களுடன் இணக்கமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழும் வகையில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் தகுந்த ஒத்துழைப்பினை நல்குமாறு தமிழக மக்கள் அனைவரையும் இந்நாளில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

***எய்ட்ஸைத் தடுப்போம்!***
***மக்கள் நலம் காப்போம்!***





# உபரி நீரை பகிர்ந்து கொள்வதே இயற்கை நியதி

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர்
**மு.கருணாநிதி**
அவர்கள்
புதுடெல்லியில்
29.11.2006 அன்று
நடைபெற்ற
முல்லைப் பெரியாறு அணை
குறித்த
பேச்சுவார்த்தையில்
பங்கேற்று
ஆற்றிய உரை

மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பேராசிரியர் சைப்புதீன் அவர்களே,

மத்திய அரசின் நீர்ப்பாசனத்துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜெய் பிரகாஷ் நாராயண் யாதவ் அவர்களே,

கேரள மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. அச்சுதானந்தன் அவர்களே,

கேரள, தமிழ்நாடு மாநில அமைச்சர்களே,

மத்திய, மாநில அரசு அதிகாரிகளே, நண்பர்களே,

இன்றைய கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து உதவிய மத்திய அரசின் நீர் வளத்துறை அமைச்சர் சைப்புதீன் சோஸ் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு இரு மாநில மக்களுக்கும் ஏற்ற முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வண்ணம் வருகை தந்துள்ள கேரள முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களுக்கும், கேரள மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேம சந்திரன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் இன்று நேற்றல்ல, சரித்திரக் காலந்தொட்டு உறுதியான, வலிமையான, உண்மையான உறவுகள் உண்டு.

மூவேந்தர்கள் எனப்படும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் சேர வம்ச மன்னர்கள் ஆண்ட பூமி கேரள பூமி.

சரித்திரக் காலத்திற்குப் பிறகும் கூட, சமுதாய எழுச்சிக்காக வித்திட்ட சீரிய சிந்தனையாளர் பலர் கேரளத்தில் தோன்றியவர்கள். தமிழகத்திலும், தமிழகத்தில் தோன்றியவர்கள் கேரளாவிலும் மக்களின் போற்றுதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

சாதி மத பேதமற்ற சமுதாயம் காண்பதிலும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதிலும் அழுத்தமான கருத்துடைய நாராயண குருவை தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கம் இன்றைக்கும் பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

சாதியை ஒழிப்பதற்கு உச்சக் கட்டமாக நடைபெற்ற வைக்கம் போராட்டம் கேரளாவிற்கே உரிய ஒன்று என்பதும், அந்தப் போராட்டத்தின் தலைவராக தமிழகத்தின் தலைவர் தந்தை பெரியார்தான் விளங்கினார் என்பதும், அதனால் அவர் "வைக்கம் வீரர்" என்று பாராட்டப்பட்டார் என்பதும் வரலாறு.

வகுப்புவாரி இடஒதுக்கீடு உரிமைக்கு வித்திட்ட திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும் – இன்றைக்கும் லண்டன் மாநகரில் நினைவுக் கல்லறையில் இருப்பவருமான டி.எம். நாயர் என்ற மாபெரும் தலைவரின் உருவம் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்த ஒன்றாகும்.

இலக்கிய வழியில் நோக்கினாலும், தஞ்சை சோழ மண்டலத்தில் பிறந்த கண்ணகி, மதுரை பாண்டியனிடம் நீதி கேட்டு, கணவன் கோவலனை கள்வன் என்ற குற்றச்சாட்டிலிருந்து மீட்டு; அவளுக்குச் சிலை வடிக்க இமயத்தில் கல் எடுத்து வந்த சேரன் செங்குட்டுவன் நம் இருவருக்கும் சொந்தமானவன். அந்தக் கண்ணகி கோயில் இருக்குமிடம்தான் "மங்கல தேவி கோவில்" என்கிற போது நமக்குப் புல்லரிக்கின்றது.

இப்படி பல நூற்றாண்டு காலமாக சரித்திர தொடர்பும் – கலை, கலச்சார தொடர்பும் – ஆன்மீகத் தொடர்பும் – பகுத்தறிவுத் தலைவர்கள் – அரசியல் தலைவர்கள் தொடர்பும் கொண்ட இரு மாநிலங்கள்தான் கேரளமும், தமிழகமும் ஆகும். இதை எண்ணும்போது; நமக்குள்ளே அரும்பி மலர வேண்டிய உறவுக்குப் பதிலாக – கசப்பும் காழ்ப்பும் அதன் காரணமாக வேற்றுமை உணர்வுகளும்





வளரலாமா என்ற கேள்வி எழாமல் இல்லை. அந்த உணர்வுக்கும் நட்புக்கும் இந்திய ஒருமைப் பாட்டுக்கும் இம்மியளவு சேதாரம் வரக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன்தான் சில செய்திகளை இன்றைய பிரச்சினைக்குரிய முல்லைப் பெரியாறு தொடர்பாக கூற விரும்புகிறேன்.

பல நூற்றாண்டு
காலமாக
சரித்திர தொடர்பும் –
கலை, கலச்சார தொடர்பும் –
ஆன்மிகத் தொடர்பும் –
பகுத்தறிவுத் தலைவர்கள் –
அரசியல் தலைவர்கள்
தொடர்பும் கொண்ட
இரு மாநிலங்கள்தான்
கேரளமும், தமிழகமும்
ஆகும்.

உச்ச நீதிமன்றம் விசாரித்து 27.2.2006இல் ஆணை வழங்கிய முல்லைப் பெரியாறுபிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தின் கருத்தை ஏற்று ஒரு தீர்வு காண்பதற்காக நாம் திறந்த மனதுடன் இங்கு கூடியுள்ளோம்.

உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசு 142 அடி வரை நீர் மட்டத்தை முதல் கட்டமாக உயர்த்தவும், மற்றும், எஞ்சிய பலப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் அதன் உச்ச நீர் மட்ட அளவான 152 அடி வரை நீரை உயர்த்தவும் உத்தரவு வழங்கிய பின்னர், கேரள அரசு மார்ச் – 2006இல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது.

கேரள அரசின் இசைவோடு எல்லா முக்கிய பலப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு அரசு செய்து முடித்துள்ளது. வல்லுநர்களின் கருத்துப்படி அணை பாதுகாப்பாக உள்ளது. அதுகுறித்து எந்தவிதமான அய்யப்பாடும் கொள்ளத் தேவையில்லை. சில எதிர்பாராத நிகழ்வுகளினால், சிற்றணையை பலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.

தமிழகத்திலே உள்ள வறட்சி மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிக்க முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை முதற்கட்டமாக 142 அடி வரையில் உயர்த்துவது மிகவும் அவசியமாகிறது.

இந்த மாவட்டங்களில் பெரியாறு திட்டத்தினால் இதுவரை பயனடைந்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாசன மற்றும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக கடந்த 27 ஆண்டுகாலமாக சிரமப்படுகிறார்கள். மேலும் விவசாய வருமான இழப்பையும் அனுபவித்து வருகிறார்கள். இந்த மாவட்டங்களில் அடிக்கடி ஏற்பட்டு வந்த பஞ்சத்தைத் தவிர்க்கவே முல்லைப் பெரியாறு அணைத் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

கடந்த பல்லாண்டு காலமாக பெரியாறு பாசனத் திட்டத்தினால் விவசாயிகள் அனுபவித்து வந்த பயன்களை இன்று எந்தவித விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விவரங்களின் அடிப்படை இல்லாமல் மறுக்கக் கூடாது.

உச்ச நீதிமன்றம் தெளிவான ஒரு தீர்ப்பினை அளித்த பிறகும், கேரள அரசு எடுத்த நிலையினால் தமிழ்நாடு விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ள நிலையில் இருக்கிறார்கள். ஆகையால், பெரியாறு அணையின் நீரையே ஜீவாதாரமாக நம்பியுள்ள விவசாயப் பெருமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தப் பிரச்சினையை மிகுந்த மனிதாபிமானத்துடன் அணுக வேண்டுமென இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகின்றேன். கேரள மாநிலம் மிகுந்த நீர் வளம் நிறைந்த மாநிலம். இதற்கு மாறாக, தமிழ்நாடு மிகுந்த நீர்ப் பற்றாக்குறை மாநிலமாகும். இந்தியா போன்ற சம உரிமை பெற்ற, சமத்துவ ஜனநாயக நாட்டில், உபரி நீரை தேவைப்பட்டோருடன் பகிர்ந்து கொள்வதென்பது இயற்கை நியதியாகும். இந்தக் கருத்தின் அடிப்படையில், மக்களின் நலனுக்காகப் பல காலங்களுக்கு முன்பே அணைகள் கட்டப்பட்டன. இத்தகைய இயற்கை நியதியை நிறைவேற்றத் தவறினால், அந்த இயற்கையே நம்மை நிச்சயமாக மன்னிக்காது.



மத்திய நீர் வள குழுமமும், வல்லுநர் குழுவும் கள சோதனைகளை மேற்கொண்டும், ஆராய்ந்தும் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடி வரை முதற்கட்டமாக உயர்த்துவதற்கு தகுதியானது என்று உறுதிப்படுத்தியுள்ளதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே ஏற்பட்ட பூகம்பங்கள், அணையின் கட்டுமானத்திற்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மேலும், வருங்காலத்தில் பூகம்பமே ஏற்பட்டாலும் இந்த அணை அதனைத் தாங்கக் கூடிய சக்தி உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்க, அணையின் நீர் மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தினால் அணை உடைந்து விடும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, பீதியை உண்டாக்குவது எந்தவிதத்திலும் நியாயமாகாது. புவியீர்ப்பு அடிப்படையில் கட்டப்பட்ட எந்தவொரு அணையும் இதுவரையில் உடைந்ததாக செய்தி எதுவும் கிடையாது. மேலும் புது அணையைப்போல உறுதியாக உள்ள பெரியாறு அணையின் மீது இவ்வாறு சந்தேகப்படுவதற்கு எந்தச் சாத்தியக் கூறும் இல்லை. வல்லுநர்களின் கருத்துப்படி பெரியாறு அணை இப்போது புதிய அணைக்கு ஒப்பானதாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களையும் கருத்திலே கொள்ளும் போது, அணையின் பாதுகாப்பு குறித்து பீதியோ அல்லது குழப்பமோ அடைய எத்தகைய முகாந்திரமும் இல்லை. பெரியாறு அணையின் கீழ் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பைக் காக்க தமிழ்நாடு அரசு எப்போதும் தவறாது. அணையின் கீழ் வசிக்கும் மக்களைப் பற்றி எங்களுக்கும் பொறுப்பு உள்ளது.

கேரள அரசு நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2003, சட்டத்திற்கு 18.3.2006இல் நிறைவேற்றிய திருத்தங்களை வல்லுநர்கள் குழு அளித்த அறிக்கையையும், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் கருத்தில் கொண்டு, மறுபரிசீலனை செய்து, அந்தத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யுமென்று நம்புகிறோம்.

இரு மாநிலங்களின் சமூக மற்றும் பொருளாதார நலனுக்காக ஒருவரையொருவர் நாம் சார்ந்துள்ளோம். இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள இணக்கம் மற்றும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது, இரு மாநிலங்கள் மற்றும் அதன் மக்கள் பயன் அடையும் வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சமூகத் தீர்வு காணப்பட வேண்டும்.

அண்டைய மாநில நட்புணர்வின் அடிப்படையில் கேரள அரசு இந்தப் பிரச்சினையை அணுகி உச்ச நீதிமன்ற ஆணையைச் செயற்படுத்த முழு மனதுடன் ஒத்துழைக்கும் என நான் நம்புகிறேன்.

நன்றி! □





# பண்புகளைக் கற்பிக்கின்ற இடமாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும்

சிறைச்சாலையில் நீண்ட நேரம் இருக்கக் கூடாது. நீண்ட நாட்களும் இருக்கக்கூடாது. நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் குற்றம் இழைக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். இழைக்கப்படுகின்ற குற்றத்திற்கேற்றவாறு, தண்டனை பெறுகின்ற இடம், தண்டனைக்குத் தக்கவாறு, தக்க பாடம் பெறுகின்ற இடம் இந்த இடம். அதைத்தான் எனக்கு முன்னால் இங்கே பேசிய அரசு அதிகாரிகளும், நண்பர்களும், விழாத் தலைவர் தம்பி பெரியசாமி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

பொதுவாக சிறைச்சாலைகள் எப்படி இருக்க வேண்டும் என்ற இந்தக் கேள்விக்கு விடை காணுகின்ற கட்டத்தில் நாமெல்லாம் இருக்கிறோம். சிறைச்சாலை என்பது குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற இடம், கொடுமைப் படுத்துகின்ற இடம், சித்ரவதை செய்கின்ற இடம் என்கிற ஒரு நிலை ஒரு காலத்திலே இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி, பயிற்சி அளிக்கின்ற இடமாக, பண்படுத்துகின்ற இடமாக, பண்புகளைக் கற்பிக்கின்ற இடமாக, வாழ்க்கையை எப்படி வாழவேண்டுமென்று சொல்லித் தருகின்ற கூடமாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும். அப்போதுதான் சிறைச்சாலை அமைத்ததின் நோக்கம் நிறைவேற முடியுமென்பது ஆன்றோர் வாக்கு, சான்றோர் வாக்கு.

**புழல் மத்திய சிறைச்சாலையைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (26.11.2006)**



அதனை நிரூபிக்கின்ற வகையிலேதான் ஒரு அரசு சிறைச்சாலைகளை நடத்த வேண்டும். சிறைச் சாலைகளிலே போட்டு வதைத்து, அடித்துத் துவைத்து அவர்களை உயிர் இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்குறியாக ஆக்கி கொடுமைப்படுத்துவதால் இனியும் அந்தக் குற்றத்தைச் செய்ய மாட்டான் என்று எண்ணுவது கொடுமையினும் கொடுமை. அந்தக் கொடுமை தவிர்க்கப்பட வேண்டுமென்பதுதான் நல்லோர், நடுநிலையாளர்கள் அனைவரின் வேண்டுகோள். அந்த வேண்டுகோளைச் செயற்படுத்துகின்ற வகையில் சிறைச்சாலைகள் அமைதல் வேண்டும் என்ற கருத்தை இந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏறத்தாழ இருபதாண்டு காலமாக இந்தச் சிறைச்சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே "ஆவுடையார்கோவில்" திருப்பணி என்று சொல்வார்கள். அது ஆரம்பித்து இன்னும் முடியவில்லை. ஒரு காலத்தில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எல்லாம் வாழ்ந்த அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆவுடையார்கோவில் திருப்பணி. இன்னும் அந்தக் கோவில் திருப்பணிகள் முடிவடையவில்லை. அங்கே மிச்சமிருக்கிறது, இங்கே பாக்கியிருக்கிறது என்று சொல்கின்ற அளவிற்குத்தான் அந்தத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதைப்போல, இந்தப் பக்கம் நான் செல்லும்போதெல்லாம், புழல் சிறைச்சாலை முடிவடைந்து விட்டதா, திறப்பு விழா எப்போது என்று கேட்பது தான் எனக்கு வேலை. முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்வது அதிகாரிகளுடைய வேலை என்று இருந்த நிலை மாறி, அப்பாடா, முடிவடைந்து விட்டது, இனி திறக்கப் படவேண்டியதுதான் பாக்கி என்று என்னிடம் சொல்லி, இன்று திறந்தும் வைக்கப்பட்டிருக்கின்றது.

3,000 பேர் இந்தச் சிறைச்சாலையிலே இனிமேல் தங்குவதற்கேற்ற வகையில் அவர்களை இங்கே தண்டிக்கின்ற வகையில் அடைக்கப்பட்டாலுங்கூட, நல்ல சுவாசக் காற்றைப் பெறுகின்ற நிலையிலும், நல்ல சுகாதாரத்தை அடைகின்ற நிலையிலும் இந்த வளாகம் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். சிறைச்சாலை என்று சொல்லி, அவனை மூச்சு விட முடியாமல் அடைத்து வைப்பது, அடைத்தவர்களுக்கும் கொடுமை, அடைபட்டவர்களுக்கும் கொடுமை. அந்தக் கொடுமை இனி சிறைகளிலே இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு உதாரணமாக இங்கே அமைச்சர் சாமி குறிப்பிட்டதைப்போல, ஆசியா கண்டத்திலேயே இந்தச் சிறைச்சாலை, மற்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம் வழி காட்டக் கூடியது என்ற அளவில் இன்றைக்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலையிலே ஓராண்டு, ஈராண்டல்ல, இருபதாண்டுகள், முப்பதாண்டுகள் என்று தண்டனை அனுபவித்தவர்கள் எல்லாம் உண்டு. ஆனால் அப்படி தண்டனை அனுபவித்தவர்கள் இந்த உலகத்தால் எப்படி வரவேற்கப்பட்டார்கள், எப்படி போற்றப்பட்டார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், திருச்சியில் தி.மு.கழகத்தின் மாநில மாநாடு சில






ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றபோது, மாநாட்டை நான் தொடங்குகின்ற நேரத்தில் வந்த செய்தி தான், ஏறத்தாழ 25 ஆண்டு காலமாக சிறைச்சாலையிலே இருந்த நெல்சன் மண்டேலா அன்றைக்கு விடுதலையாகிறார் என்ற செய்தி கிடைத்தது. அந்தச் செய்தியை மாநாட்டிலே கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு நான் எடுத்துச் சொன்னவுடன், அத்தனை பேரும் எழுந்து நின்று கையொலி செய்தார்கள். நான் தொடர்ந்து கை தட்டிக் கொண்டேயிருந்தேன், ஏனென்றால் மாவீரரின் புகழை நினைவு கூர்கிறோம் என்று சொன்னபோது, தொடர்ந்து அந்த மாநாட்டுப் பந்தலில் கை தட்டிக் கொண்டேயிருந்தார்கள் இலட்சக்கணக்கான மக்கள் என்று சொன்னால், தென்னாப்பிரிக்கா எங்கே இருக்கிறது ? நெல்சன் மண்டேலாவுக்கும் நமக்கும் என்ன தொடர்பு ? எதுவும் இல்லை. அவனுடைய கொள்கை உறுதி என்ற அந்த ஒரு தொடர்பைத் தவிர, மக்களுக்காகப் பாடுபட்டான், சாதனை செய்தான் என்ற ஒரு தொடர்பைத் தவிர, இருபதாண்டு காலம் தன்னுடைய பொன்னான வாழ்க்கையை சிறைச் சாலையிலே கழித்தான் என்கிற அந்தத் தியாக வரலாற்றுத் தொடர்பைத் தவிர வேறு எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தாலும் அவன் போற்றப்பட்டான், இன்றைக்கும் போற்றப் படுகிறான் என்பதற்குக் காரணம், சிறைச் சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக அவன் கருதியதுதான்.

சிறைச்சாலையிலே நாம் பலரும் இருந்திருக்கிறோம். நாங்கள் இப்போது இங்கே இல்லை என்றால், சிறைச்சாலையிலேதான் ஒருவேளை இருந்திருப்போம். சிறைச்சாலை எத்தனை கொடுமைகளை இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற எங்கள் இயக்கத்திற்கு இழைத்திருக்கிறது, இழைக்கப் பட்டிருக்கிறது என்பதெல்லாம் நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

இன்றைக்குக் கூட நான் இந்த நிகழ்ச்சிக்குப் புறப்படுகிறபோது, என்ன உடையெல்லாம் அழுக்காக இருக்கிறதே, வேறு வேட்டி சட்டை மாற்றிக் கொண்டு போகக் கூடாதா என்று வீட்டிலே கேட்டார்கள். "சிறைக்குத் தானே போகிறேன், இந்த உடையே போதும்" என்று சொல்லி விட்டு வந்தேன். ஏனென்றால் சிறைச்சாலைக்குச்

செல்வதென்பது பொது வாழ்க்கையில், மக்களுக்காக உழைக்கின்ற வாழ்க்கையில், தியாகம் செய்கின்ற வாழ்க்கையில் இதுவும் ஒரு பொழுது போக்காகவே பொது நல வாதிகளுக்கு ஆகிவிட்ட ஒன்றாகும். இந்தச் சிறைச்சாலையிலே **3,000** பேர் தங்கலாம், வசதியாகத் தங்கலாம், காற்றோட்டமான இடத்திலே வாழலாம், உலாவலாம் என்ற அளவிற்கு சகல வசதிகளோடு இந்தச் சிறைச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. சிறையிலே அடைக்கப்படுகின்றவர்களுக்கு ஒரே குறை, நினைத்த நேரத்திலும் தங்களுடைய பெற்றோரைப் பார்க்க முடியாது, உற்றார் உறவினரைப் பார்க்க முடியாது, நண்பர்களோடு அளவளாவிட முடியாது, தனிமையிலே வாடிட வேண்டும் என்ற ஒன்றைத் தவிர, சிறைச்சாலையிலே வேறு வசதிகள் குறையக்கூடாது, உலகத் தொடர்பு அவர்களுக்கு இருக்கக் கூடாது என்ற அந்த ஒன்றைத் தவிர வேறு எந்த கஷ்டமும் சிறையிலே இருப்பவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசின் எண்ணம். நம்முடைய பழைய சிறைச்சாலையில் சென்னை மாநகரத்திலே இருக்கின்ற சிறைச்சாலையில் ஆயிரத்து ஐநூறு பேர் இருக்கிறார்கள், இடம் போதவில்லை, ஆகவே, இங்கே ஒரு புதிய சிறைச்சாலை நமக்குத் தேவைப்பட்டது. பழைய சிறைச்சாலையே எதிர்காலத்திலே வேறு ஒரு காரியத்திற்குப் பயன்படக் கூடிய அளவிற்கு ஆக்கத் திட்டமிட்டிருக்கிறோம். பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே என்ன செய்யலாம், அங்கே இருக்கின்ற பொது மருத்துவமனையை விஸ்தரித்து, அங்கே சில பகுதிகளை பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே அமைக்கலாமா என்ற யோசனையும் இன்றைய சர்க்காருக்கு இருக்கின்றது. அதையும் அங்கே செய்யலாம், அப்படி செய்யும் போது இந்தச் சிறைச்சாலையில் இருக்கின்ற வசதி, வாய்ப்பு மேலும் பெருக நல்ல முறையிலே, இங்கேயிருப்பவர்கள் ஆரோக்கியத்தோடு தங்களுடைய தண்டனைக் காலத்தைக் கழிக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் இந்த அரசு செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இப்பொழுது பொது வாழ்க்கையிலே இருக்கின்ற அரசியல் கட்சிக்காரர்களுக்கே ஒரு சங்கடம். மறியல் என்கிறார்கள், போராட்டம் என்கிறார்கள், ஆர்ப்பாட்டம் என்கிறார்கள். எங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். மறியல் என்கிறோம், போராட்டம் என்கிறோம். காலையிலே கைது செய்யப்படுகின்றோம், மாலையிலே விட்டு விடுகின்றார்கள். எங்களுக்கே அதில் சங்கடம். என்ன கைது செய்து விட்டார்கள், சிறைக்குப் போவதாக நண்பர்கள் எல்லாம் கருதிக் கொண்டிருந்தார்கள், வீட்டிலே கூட போகும்போது போய் வாருங்கள், ஏதோ யுத்தத்திற்கு கட்டபொம்மன் காலத்திலே சென்றது மாதிரி, போய் வா, போய் வா என்று வழியனுப்பி வைத்தார்கள். மாலையிலே வீட்டிற்குப் போக நமக்கே வெட்கமாக இருக்கிறதே என்று போராட்டத்திற்கு வருகிறவர்கள் கருதுவதும் உண்டு. அப்படி வருகின்றவர்களை போலீசார் உடனடியாக அனுப்பி விடுவதற்குக் காரணம், சிறையிலே போதுமான அளவிற்கு இடம் இல்லாததுதான். இனிமேல் அந்தக்குறை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

வீட்டிற்குச் செல்லும்போது, கொஞ்சம் வீரத்தோடு, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு செல்லலாம். இந்தத் தேதியில் போய் இன்றைக்குத்தான் வருகிறேன் என்று சொல்லலாம். இல்லாவிட்டால் காலையிலே போனீங்க, இப்போ வந்திட்டீங்க என்று வீட்டிலே இருப்பவர்களுக்கே ஒரு அலுப்பாகி விடுகிறது. அவர்களுக்கே நம்மைப் பற்றி ஒரு நல்ல கௌரவமான எண்ணம் இல்லாமல், போகும்போதே, ஆம், போகப் போகிறார். மத்தியானம் வந்து விடப்போகிறார், இதற்கென்ன வந்து விட்டது என்று சொல்கிறவர்களும் இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் போக்கி, நம்மை வீரர்களாக, வீட்டிற்குச் செல்கிற நேரத்திலே ஏ அப்பா, நான்கு நாட்கள் கழித்து வருகிறார், பாவம், என்ன சாப்பிட்டாரோ என்று தெரியவில்லை என்று வீட்டிலேயிருக்கின்ற மனைவி மக்கள் எல்லாம் நம்மை பரிந்து உபசாரம் செய்கின்ற அளவிற்கு நிலைமை அப்போது இருக்கும். ஆகவே இந்தச் சிறைச்சாலை **3,000** பேர் கொள்ளத்தக்க அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நானும் வரவேற்கிறேன். அனைவருக்கும் இது பயன்படக்கூடிய வகையிலே இது இருக்கும் என்ற அந்த மகிழ்ச்சியை நான் வெளிப்படுத்தி, இந்தச் சிறைச் சாலையை மிக அற்புதமாக எல்லா வசதிகளோடும் இங்கே உருவாக்கியிருக்கின்ற இந்த அரசு அதிகாரிகளுக்கும், இந்தத் துறையினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதை நல்ல வகையிலே பயன்படுத்திக் கொண்டு, சிறைச்சாலை ஒரு பள்ளிக்கூடம் என்ற வகையிலே, புத்தகசாலை என்ற முறையிலே இதைப் பயன்படுத்திக் கொண்டு, உள்ளே குற்றவாளியாக தண்டிக்கப்பட்டவராக வந்தாலும்கூட, வெளியிலே வரும்போது பல குற்றங்களை இழைக்கின்றவர்களையெல்லாம் திருத்தக் கூடிய ஆசிரியர்களாக வரக் கூடிய அளவிற்கு இங்கே வரக் கூடிய கைதிகள் இருக்க வேண்டுமென்ற வாழ்த்துக்களையும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ●

ஆவின்®

புதியது, தூயது & சுகாதாரமானது

ISO 9001-2000 & HACCP CERTIFIED

# Green மேஜிக்

## 4.5% பால்

எக்ஸ்ட்ரா பவர்




எக்ஸ்ட்ரா சக்தி

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

1800 425 3300 (Toll Free) போன் : 24358033 / 24332383

www.aavin.net e-mail : aavinnodal@hotmai.com



# தமிழரசு

## நாட்காட்டி - 2007

## திருவள்ளுவர் ஆண்டு 2037-38

### ஜனவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள்ளி | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |

### பிப்ரவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | |
| சனி | 3 | 10 | 17 | 24 | |

### மார்ச்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | 30 |
| சனி | 3 | 10 | 17 | 24 | 31 |

### ஏப்ரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | |
| புதன் | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |

### மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 6 | 13 | 20 | 27 |
| திங்கள் | | 7 | 14 | 21 | 28 |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 |
| புதன் | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியா | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெள்ளி | 4 | 11 | 18 | 25 | |
| சனி | 5 | 12 | 19 | 26 | |

### ஜூன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 3 | 10 | 17 | 24 |
| திங்கள் | | 4 | 11 | 18 | 25 |
| செவ் | | 5 | 12 | 19 | 26 |
| புதன் | | 6 | 13 | 20 | 27 |
| வியா | | 7 | 14 | 21 | 28 |
| வெள்ளி | 1 | 8 | 15 | 22 | 29 |
| சனி | 2 | 9 | 16 | 23 | 30 |

### 2007ஆம் ஆண்டின் அரசு பொது விடுமுறை நாட்கள்

| வ.எண். | | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 1. 1. 2007 | திங்கள் |
| 2. | பொங்கல் திருநாள் | 15. 1. 2007 | திங்கள் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16. 1. 2007 | செவ்வாய் |
| 4. | உழவர் திருநாள் | 17. 1. 2007 | புதன் |
| 5. | குடியரசு தினம் | 26. 1. 2007 | வெள்ளி |
| 6. | முகரம் | 30. 1. 2007 | செவ்வாய் |
| 7. | தெலுங்குப் புத்தாண்டு | 19. 3. 2007 | திங்கள் |
| 8. | மகாவீர் ஜெயந்தி | 31. 3. 2007 | சனி |
| 9. | மீலாதுன் நபி | 01. 4. 2007 | ஞாயிறு |
| 10. | புனித வெள்ளி | 06. 4. 2007 | வெள்ளி |
| 11. | தமிழ்ப் புத்தாண்டு | 14. 4. 2007 | சனி |
| 12. | மே தினம் | 1. 5. 2007 | செவ்வாய் |
| 13. | சுதந்திர தினம் | 15. 8. 2007 | புதன் |
| 14. | கிருஷ்ண ஜெயந்தி | 4. 9. 2007 | செவ்வாய் |
| 15. | விநாயகர் சதுர்த்தி | 15. 9 2007 | சனி |
| 16. | மகாத்மாகாந்திபிறந்தநாள் | 2. 10. 2007 | செவ்வாய் |
| 17. | ரம்ஜான் | 14. 10. 2007 | ஞாயிறு |
| 18. | ஆயுதபூஜை | 20. 10. 2007 | சனி |
| 19. | விஜயதசமி | 21. 10. 2007 | ஞாயிறு |
| 20. | தீபாவளி | 8. 11. 2007 | வியாழன் |
| 21. | பக்ரீத் | 21. 12. 2007 | வெள்ளி |
| 22. | கிறிஸ்துமஸ் | 25. 12. 2007 | செவ்வாய் |

### ஜூலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 | 8 | 15 | 22 | 29 |
| | 2 | 9 | 16 | 23 | 30 |
| | 3 | 10 | 17 | 24 | 31 |
| | 4 | 11 | 18 | 25 | |
| | 5 | 12 | 19 | 26 | |
| | 6 | 13 | 20 | 27 | |
| | 7 | 14 | 21 | 28 | |

### ஆகஸ்ட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5 | 12 | 19 | 26 |
| | | 6 | 13 | 20 | 27 |
| | | 7 | 14 | 21 | 28 |
| | 1 | 8 | 15 | 22 | 29 |
| | 2 | 9 | 16 | 23 | 30 |
| | 3 | 10 | 17 | 24 | 31 |
| | 4 | 11 | 18 | 25 | |

### செப்டம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 30 | 2 | 9 | 16 | 23 |
| | | 3 | 10 | 17 | 24 |
| | | 4 | 11 | 18 | 25 |
| | | 5 | 12 | 19 | 26 |
| | | 6 | 13 | 20 | 27 |
| | | 7 | 14 | 21 | 28 |
| | 1 | 8 | 15 | 22 | 29 |

### அக்டோபர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 7 | 14 | 21 | 28 |
| | 1 | 8 | 15 | 22 | 29 |
| | 2 | 9 | 16 | 23 | 30 |
| | 3 | 10 | 17 | 24 | 31 |
| | 4 | 11 | 18 | 25 | |
| | 5 | 12 | 19 | 26 | |
| | 6 | 13 | 20 | 27 | |

### நவம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 11 | 18 | 25 |
| | | 5 | 12 | 19 | 26 |
| | | 6 | 13 | 20 | 27 |
| | | 7 | 14 | 21 | 28 |
| | 1 | 8 | 15 | 22 | 29 |
| | 2 | 9 | 16 | 23 | 30 |
| | 3 | 10 | 17 | 24 | |

### டிசம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 30 | 2 | 9 | 16 | 23 |
| | 31 | 3 | 10 | 17 | 24 |
| | | 4 | 11 | 18 | 25 |
| | | 5 | 12 | 19 | 26 |
| | | 6 | 13 | 20 | 27 |
| | | 7 | 14 | 21 | 28 |
| | 1 | 8 | 15 | 22 | 29 |

# தமிழ்



யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும் ;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.



மகாகவி சுப்ரமணிய பாரதியார்







# மூதறிஞர் இராஜாஜி



மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, அரிஜனங்கள் ஆலயப்பிரவேசம் ஆகியவற்றிற்காக அரும்பாடுபட்டு, விடுதலைப் போராட்டங்களில் சிறப்பான பங்கேற்று இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த முதல் இந்தியர் மூதறிஞர் இராஜாஜி. சேலம் மாவட்டம் (இன்றைய தருமபுரி மாவட்டம்) தொரப்பள்ளி கிராமத்தில் சக்ரவர்த்தி அய்யங்கார் – சிங்காரம்மாள் தம்பதியினரின் மகனாக 10.12.1878 அன்று இராஜாஜி பிறந்தார்.

1918ஆம் ஆண்டு மதுரை – இராமநாதபுரம் அரசியல் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி அனைவருக்கும் ஆலயப் பிரவேச உரிமைகோரும் தீர்மானத்தை நிறைவேற்றினார். சமபந்தி விருந்தும் நடத்தினார். 1917 ஆம் ஆண்டு சென்னை வந்த மகாத்மா காந்தியை சந்தித்த இராஜாஜி தமது வழக்கறிஞர் தொழிலைத் தூக்கி எறிந்துவிட்டு தீவிர ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். தான் வகித்து வந்த சேலம் நகர் மன்றத் தலைவர் பதவியையும் ராஜினாமா செய்தார். பின்னர் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து விலகி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர் இயக்கம் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தினார். திருச்செங்கோடு அருகில் புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தை நிறுவி கிராம மக்களுக்கு கல்வி, மருத்துவ சேவை ஆகியவற்றில் ஈடுபட்டார். காந்தியடிகளின் தண்டி உப்பு சத்யாகிரகப் போராட்டத்தின்போது, இராஜாஜி திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்கு நடை பயணமாக சென்று உப்புக் காய்ச்சினார். (இந்த நடைப் பயணத்தின் வழிநடைப் பாடலாகத் தான், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுதே" என்னும் பாடலைப் பாடினார்). இராஜாஜிக்கு 9 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அரிஜனங்கள் ஆலயப் பிரவேசம், மதுவிலக்கு, கடன் நிவாரணச் சட்டங்கள், கைத்தொழில் பாதுகாப்பு போன்ற முக்கிய சட்டங்களைக் கொண்டு வந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிட ஆணையிட்டார். சேலம் முனிசிபல் கல்லூரியில் அரிஜன மாணவர்களை சேர்த்தார். நாடு விடுதலையான பின் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவருடைய இலக்கியம் மற்றும் சமுதாயப் பணிகளைப் பாராட்டி இவருக்கு "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டது. இந்திய மக்கள் அனைவருக்கும் முன் மாதிரியாக திகழ்ந்த மூதறிஞர் இராஜாஜி, 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் இயற்கை எய்தினார்.




**1957** ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நெடுஞ்சாலைத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஒரு பிரிவாக செயல்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு ஒரு சிறிய மண் ஆய்வகமாக செயல்பட ஆரம்பித்து இன்று ஒரு தன்னிறைவு பெற்ற ஆராய்ச்சி நிலையமாக வளர்ந்துள்ளது. மண் ஆய்வகமாக ஆரம்பித்தபோது அப்போதைய தேவைக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் சாலைகளின் வளர்ச்சிக்காக கற்கலவை, நிலக்கீல் மற்றும் கட்டுமானப் பகுதியிலும் ஆய்வு மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டபோது இந்த ஆராய்ச்சி நிலையம் உருவாக அடித்தளம் இடப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம் நிறுவ மத்திய சாலை நிதி ஒதுக்கீட்டில் அனுமதி பெறப்பட்டு நிறுவப்பட்டது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு இதற்கு ஒத்த நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியின் அருகிலேயே சுமார் 35 ஏக்கர் நிலப்பரப்பில் வருங்கால விரிவாக்கத்தையும் கருத்தில் கொண்டு நிறுவப்பட்டது.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3ஆம் நாள் அன்றைய மேதகு ஆளுநர் ஸ்ரீ பிரகாசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டுமானப் பணிகள் ஓராண்டில் நிறைவு பெற்று இவ்வாராய்ச்சி நிலையம் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் அவர்களால் 1957 நவம்பர் 14ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டது.

கற்கலவை ஆய்வகத்தின் ஓர் அங்கமாக பாலக் கட்டுமானத்தின் தாங்கு திறனைப் பரிசோதிக்கும் கனரக சோதனைத் தளம், நிலக்கீல், சரளைக் கற்கள், மண் ஆகியவற்றை சாலை தளத்திற்கு உபயோகப்படுத்த அதன் தன்மைகளை ஆய்வு செய்ய ஆசியாவிலேயே முதலாவதாக நிறுவப்பட்ட வட்ட சோதனைத் தளம் அமையப் பெற்றது இந்த ஆராய்ச்சி நிலையத்தின் சிறப்புத் தன்மையாகும்.

ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கலந்தாய்வு ஆகியன நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய மூன்று குறிக்கோள்கள் ஆகும்.

## நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாடுகள்

1. சாலை மற்றும் பாலங்களுக்கான தரம் மற்றும் தனி குறியீட்டுகளை நிர்ணயிக்க ஆய்வுகள் மேற்கொள்வது.
2. சாலைப் போக்குவரத்துத் தொடர்பாக போக்குவரத்து நிலை, விபத்துகள், வேகம், கால தாமதம், நெரிசல், விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் அதற்கான தீர்வுகளை கண்டறிதல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்வது.



3. சாலைகள் மற்றும் பாலப் பணிகளுக்குத் தேவையான நிலக்கீல் கலவை, மேல்தளக் கலவை, கற்கலவை விகிதங்களை வடிவமைப்புச் செய்தல்.
4. சாலை மற்றும் பாலங்களுக்கான கட்டுமானப் பொருட்களான மண், கருங்கல், கற்கலவை, நிலக்கீல் போன்றவைகளை சோதனை செய்தல்.
5. பாலங்கள் மற்றும் கட்டடங்களின் அடித்தளத்தை சோதனை செய்து அவற்றின் வலிமையை ஆய்வு செய்தல்.
6. பொறியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
7. கலந்தாய்வு நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உதவி செய்தல்.

மேற்கண்ட குறிக்கோள்களை அடைய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பின்வரும் பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

1. மண் மற்றும் அடித்தள பொறியியல்.
2. கற்கலவை மற்றும் கட்டுமானம்.
3. நிலக்கீல் மற்றும் கற்கள்
4. போக்குவரவு மற்றும் போக்குவரத்து

### நூலகம்

மேற்கண்டவை தவிர நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஒரு சிறப்பு ஆராய்ச்சி நூலகத்தையும் தன்னத்தே கொண்டுள்ளது. இங்கு சுமார் 25,000 புத்தகங்கள் மற்றும் நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளன. மேலும் ஆண்டு முழுவதும் சுமார் 60 நடவடிக்கைக் குறிப்பேடுகள் சேர்க்கப்படுகின்றன. இந்நூலகம் இந்திய தேசிய அறிவியல் மாநகர் மற்றும் கொல்கத்தாவைச் சேர்ந்த இந்திய சிறப்பு நூலகக் கழகம் மற்றும் தகவல் நிலையத்தின் உறுப்பினராகவும் செயல்படுகின்றது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் தயாரித்த 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆய்வறிக்கை I.R.C. யால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் 1989 ஆம் ஆண்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் PC-AT (386) PC-XT (8088) கணினிகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கணினிகள் தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து பராமரிக்கப் பயன்படுத்தப்பட்டது. தற்போது 1,800 சதுர அடி பரப்பில் தனி கணினிப் பிரிவு ஒன்று நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அனைத்து ஆய்வகங்கள் மற்றும் நிருவாகப் பிரிவு கணினிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

### ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் :

### மண் ஆய்வகம்

சுதந்திரம் அடைந்த பின்னர் ஏராளமான நகரங்களும் கிராமங்களும் இணைக்கப்பட்டன. எனவே, புதிய சாலைகள் அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. அப்பொழுது கிராமப்புறங்களுக்கு பொருந்தக் கூடிய மலிவான பொருட்களையும், செலவைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்களையும் கண்டறிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நாட்டிற்கு ஏற்ற சாலைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வகை ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாடு தொழில் மயமாக்கப்பட்டு வந்ததால், பொருட்கள் மற்றும் மக்கள் போக்குவரத்து அதிகரிக்கலாயிற்று. ஏற்கெனவே அபிவிருத்தி யடைந்திருந்த சாலைகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

புதிய சாலைகள் அமைப்பதில் ஏற்படும் சில சிரமங்களும், ஏராளமான செலவுகளும் நெடுஞ்சாலைப் பொறியாளர்களுக்கு நவீன கட்டுமானப் பொருட்களையும், கட்டுமான வழிமுறைகளையும் கண்டறிய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தற்கால உலகமயமாக்கல் கொள்கைகளுக்கேற்ப ஆய்வுப் பணிகளை இத்துறையிலும் செய்வது அவசியமாகியுள்ளது.

## ஆய்வுப் பணிகள்

மலைப் பகுதிகளில் நிலச் சரிவுகளைத் தடுக்கவும் மண் அரிப்புகளைக் கட்டுப்படுத்தவும், வடிகால்களை அமைத்தல் மற்றும் கயிறு வலைகளைப் பயன்படுத்தல் ஆகியவற்றை செய்து நீலகிரி மலைகளில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

களிமண் பகுதிச் சாலைகளில் சாலையின் தாங்கும் தன்மையை அபிவிருத்தி செய்ய சுண்ணாம்பு மற்றும் மணலைப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் சோதனை செய்து பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வுகள் சாலைகளில் தோன்றும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உதவிகரமாக உள்ளன.

## கற்கலவை ஆய்வகம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வகத்தில் சிமெண்ட், மணல், கற்கள், கம்பி, செங்கல், பாவும் கற்கள் ஆகியவற்றுக்கான பல்வேறு ஆய்வுகளும், கற்கலவை தாங்கும் திறன் வளைவு திறன் ஆய்வுகளும் அன்றாடப் பணிகளாக செயல்படுத்தப் படுகின்றன.

மேலும் அனைத்து பெரிய மற்றும் சிறிய பாலங்களுக்கும் கற்கலவை விகித வடிவமைப்பு மிக நேர்த்தியான முறையில் செய்யப்படுகிறது.

பால வேலைகள் நடக்கும் போது அடிக்கடி ஆய்வு மேற்கொண்டதன் பலனாக செயலாக்கும் பொறியாளர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் அறிவுரை வழங்கியதன் மூலம் உயர்தர கட்டுமானங்களைப் பெற முடிந்துள்ளது.

முறுக்குக் கம்பிகளை முதல் முதலாக உபயோகித்து கெடிலம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்த பெருமை இந்த ஆய்வகத்திற்கு உண்டு.

அனல்மின் நிலைய கழிவான நிலக்கரி சாம்பலை தக்க விகிதாசாரத்தில் கற்கலவையில் கலந்து, அதே திறனை பெறும் ஆய்வு செய்ததன் மூலம் பண சேமிப்பும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு வகையிலும் இந்த ஆய்வகம் பங்கேற்றுள்ளது.

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் பழைய பாலங்கள் மற்றும் கோவில் கோபுர அடித்தளங்களின் தாங்கும் திறன் அறியும் மிக மேலான பணியினை கட்டுமான ஆய்வகம் செய்துள்ளது. அவைகளில் அருள்மிகு இரங்கநாதஸ்வாமி திருக்கோவில் (திருவரங்கம்) கோபுர நிலையைப் பற்றிய ஆய்வு குறிப்பிடத்தக்கது.



தற்போது தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பாலங்களின் விவரங்களை கணினி மூலம் அறியத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிக திறன் ஆய்வு தளம் ஒன்று பாலத்தின் உத்திரங்களை ஆய்வு செய்யும் வகையில் கட்டப்பட்டு செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கீல் ஆய்வகம்

சாலைப் பராமரிப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் தரமாகவும் மற்றும் சிக்கன முறையிலும் நடைபெறுவதற்கான ஆராய்ச்சிப் பணிகள் நிலக்கீல் ஆய்வகத்தில் நடைபெற்று வருகின்றன. நிலக்கீல் கட்டுமானத்திற்கான பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டு வேலைக்கு உகந்தன என்று பரிந்துரைக்கப்படுகின்றன. நெடுஞ்சாலை மற்றும் விமான ஓடுதளத்திற்கு உகந்த நிலக்கீல் கற்கலவை, தர நிர்ணயத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்படுகிறது. தரக்கட்டுப்பாடு முறைகளும் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கற்கள் பரிசோதனை செய்யப்பட்டு சோதனை முடிவுகள் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றை தேவை ஏற்படும் சமயம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

பற்பல ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன. ஆற்று மணலுக்கு பதிலாக கடல் மணலும், சிமெண்டுக்கு பதிலாக சுண்ணாம்புத் தூளும் நிலக்கீல் கலவைகளில் பயன்படுத்தலாம். அனல்மின் நிலையங்களில் இருந்து கிடைக்கப்பெறும் கழிவுப் பொருளான சாம்பலை நிலக்கீல் கலவையில் பயன்படுத்துவதன் மூலம் பண சேமிப்பு ஏற்படுகிறது. அடி பூச்சிற்கு தேவையான நீர்த்த நிலக்கீல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம். சாலைகளின் வழுக்குத் திறனை உகந்த உபகரணத்தின் மூலம் கண்டறிந்து தேவையான நிவர்த்திக்கான ஆலோசனை வழங்கப் படுகிறது. ரப்பர் கலந்த நிலக்கீல் தயாரிக்கப்பட்டு சோதனைகள் செய்யப்பட்டன. சாலைகளின் செயல் திறனை அதிகரிக்க ரப்பர் நிலக்கீல் கலவை பெரிதும் பயன்படுகிறது.

## போக்குவரத்து ஆய்வகம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள போக்குவரத்து ஆய்வகம், போக்குவரத்து மற்றும் போக்குவரத்து பொறியியல் தொடர்பான ஆராய்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வகம் போக்குவரத்துத் திட்டமிடல், மேற்பார்வையிடல், மாநிலத்திலுள்ள பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப துரித நெரிசலற்ற போக்குவரத்து ஏற்பட போக்குவரத்துடன் தொடர்புடைய பல்வேறு துறைகளுடன் இணைத்து செயல்பட்டு வருகிறது.

இந்த ஆய்வகம், தானியங்கி வாகனங்களைப் பிரித்து கணக்கெடுக்கும் கருவி, வாகன வேகத்தைக் கணக்கெடுக்கும் கருவி, சாலை திருப்பங்களில் பாதுகாப்பான திருப்பு வேகத்தைக் கண்டுபிடிக்கும் கருவி, கையில் எடுத்துச் செல்லும் வாகன எடை போடும் கருவி, வாகனங்களின் வேகத்தை கணக்கெடுக்கும் கருவி, சாலையில் உள்ள போக்குவரத்து குறிகளின் இரவு நேர ஒளி பிரதிபலிப்பை அளக்கும் கருவி, சாலை மேல்தளத்தின் தரத்தை ஆராயும் கருவி, சாலைகளின் மேடு பள்ளங்களை அளவெடுக்கும் கருவி, சாலைகளில் ஒலி அளவைக் கணக்கிடும் கருவி, ஓடும் வாகனத்தின் எடையை வாகனத்தை நிறுத்தாமல் எடைபோடும் கருவி, சாலை விளக்குகளின் ஒளி அளவைக் கணக்கிடும் கருவி மற்றும் பல நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது.

சாலை விபத்துகளைக் கணக்கெடுத்து, அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து அந்த இடத்தில் விபத்துகளைத் தவிர்க்க எடுக்க

வேண்டிய வழிமுறைகளைக் கண்டறிந்து அதனை செயல்படுத்துகிறது. பெரிய விபத்துகள் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து அந்த விபத்துகளைத் தவிர்க்க தேவையான விரிவான பொறியியல் தொடர்புடைய வழிமுறைகளைக் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் ஏற்படும், போக்குவரத்து நெரிசல், தாமதம் மற்றும் விபத்துகளைக் குறைக்க, தடையற்ற வசதியான போக்குவரத்துக்கு, போக்குவரத்துக் கட்டுப்பாடு அதிகாரிகளுடன் கலந்து தேவையான போக்குவரத்து வழிமுறைகளைக் கண்டறிந்து திட்டமிடப்படுகிறது.

மேலும் இந்த ஆய்வகம், எதிர்கால போக்குவரத்து வளர்ச்சிகளை அனுமானித்து தேவையான சாலை வசதிகள் ஏற்படுத்துவதற்கு பல்வேறு போக்குவரத்து கணக்கெடுப்புகள் நடத்தி வருகின்றது.

**பயிற்சி**

பணியில் ஈடுபடும் பொறியாளர்களின் மனதில் தோன்றும் ஐயங்களையும், பணியில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தொழில்நுட்பப் பயிற்சி அவசியமாகிறது. புத்தகங்களில் சொல்லப்படாத நடைமுறைகளையும் இப்பயிற்சியின் மூலம் அறிய உதவுகிறது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்படும் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம், களப்பொறியாளர்களின், (கட்டுமானம், திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல் ஆகியவற்றில்) அறிவுத் திறனை மேம்படுத்துகிறது.

நெடுஞ்சாலைத் துறையில் உள்ள அனைத்துப் பொறியாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் மண், நிலக்கீல் கற்கலவை மற்றும் போக்குவரத்து ஆகிய பிரிவுகளில் தரக்கட்டுப்பாடு சோதனைகளும் பயிற்சியாளர்களுக்கு செய்து காட்டப்படுகின்றது.

**தரக்கட்டுப்பாடு**

நெடுஞ்சாலைத்துறையில் உள்ள அனைத்துப் பணிகளையும் தரத்துடன் செயல்படுத்தும் பொறுப்பு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**கலந்தாய்வுப் பணிகள்**

கட்டட மற்றும் சாலைப் பொறியியல் பிரிவில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஒரு சிறப்பு நிறுவனமாக செயல்படுவதால், இவ்வாராய்ச்சி நிலையத்தில் பல கலந்தாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மண் மற்றும் அடித்தள பொறியியல் பிரிவில், மண், சரள் அல்லது சுண்ணாம்பு மற்றும் சிமெண்ட் சேர்ந்த மண் கலவை விகிதம் ஆய்வக சோதனைகளுக்குப் பின்னர் இறுதியாக்கம் அல்லது வடிவமைப்பு செய்யப்படுகின்றது. இதே போன்று, பெரிய மற்றும் சிறிய பாலப் பணிகளுக்குத் தேவைப்படும், கற்கலவை கலவை விகிதம் சிக்கனமாகவும், நீடித்து உழைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றது. பழுதடைந்த பாலங்களின் சீரமைப்புப் பணிக்காக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது. நிலக்கீல் ஆய்வகத்தில், தார்ச்சாலை கட்டுமானத்திற்கான மூலப் பொருட்களும், பல்வேறு பணிக்கான மூலப் பொருட்களின் பொருந்தும் தன்மைக்காகவும் ஆய்வு செய்யப்படுகின்றது. நெடுஞ்சாலை மற்றும் விமான ஓடு தளத்திற்கு தேவைப்படும் நிலக்கீல் கலவை, நிலக்கீல் ஆய்வகத்தில் வடிவமைப்பு செய்யப்படுகிறது. கல்சுரங்களிலிருந்து பெறப்படும் கற்களின் தன்மையும் ஆய்வு செய்யப்படுகிறது. ■



# தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு மற்றும் தடுப்புப் பணிகள்

## உயிர்காக்கும் தடுப்புப் பணிகள்

- நாட்டிலேயே எச்.ஐ.வி./எய்ட்ஸ் திட்டத்திற்காக முதன்முதலாக அமைக்கப்பட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்.
- நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான – 730 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களைக் கொண்ட மாநிலம் தமிழகம்.
- ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் மூலம் ஒவ்வொரு வருடமும் 5 இலட்சம் நபர்கள் ஆற்றுப் படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகளைப் பெறுகின்றனர்.
- தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுவதைத் தடுக்கும் திட்டத்தின்கீழ் 3 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் ஒவ்வொரு வருடமும் பரிசோதனை செய்யப்பட்டு பிறக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவுவது தடுக்கப்படுகிறது.
- பால்வினை நோய் சிகிச்சையை அளிப்பதற்கென 100 இலவச மருத்துவச் சிகிச்சை மையங்கள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- தமிழகத்தில் உள்ள 9,400 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 18 இலட்சம் மாணவர்களுக்கு "பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித்திட்டம்" மூலம் "வாழ்வியல் திறன் கல்வி" அளிக்கப்படுகின்றது.
- "பள்ளி சாரா இளைஞர்களுக்கான விழிப்புணர்வு கல்வித் திட்டம்" மூலம் 4.2 இலட்சம் பள்ளி சாரா இளைஞர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப் படுகின்றது.
- அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக கல்லூரிகளில் பயிலும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் தமிழகத்தில் உள்ள 700 கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 35,000 இளைஞர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப்படுகின்றது.
- எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம், பாதுகாப்பான இரத்தம் அனைவருக்கும் கிடைக்கும்படியாக 84 இரத்த வங்கிகளும், 28 இரத்த சேமிப்பு மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தன்னார்வ இரத்த தானம் மூலம் 73 சதவிகிதம் இரத்தம் பெறப்பட்டு, நாட்டிலேயே தன்னார்வ இரத்த தானத்தில் தமிழகம் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

## எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோருக்கான பாதுகாப்பு மற்றும் ஆதரவுப் பணிகள்

- தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள 15 எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலம் சுமார் 12,000 எச்.ஐ,வி./எய்ட்ஸ் உள்ளோர் எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிசிச்சையை இலவசமாகப் பெறுகின்றனர்.
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்வோருக்கு தங்கும் வசதியுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் 100 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றது.
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்வோருக்கு உள்நோயாளி மருத்துவச் சிகிச்சையையும் உளரீதியான மற்றும் சமூக ரீதியான ஆதரவையும் வழங்க 30 சமூக நல மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

ஓ ஓ ஓ

# 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவி




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

சென்னை மாநகராட்சி சார்பில் கலைவாணர் அரங்கில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் விழா 27.11.2006 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர் திரு. வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., முன்னிலை உரையாற்றினார். சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித் தலைவர் சைதை திரு. பி. ரவி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) திரு. அ.மணிவேலன், 6ஆவது வார்டு குழுத் தலைவர் திரு. மு. தனசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியம் தமது தலைமையுரையில், "சென்னை மாநகராட்சியில் உள்ள 155 வார்டு அலுவலகங்களிலும் அரசின் திட்டங்கள் குறித்த விவரங்கள் வைக்கப்படும். சென்னை மாநகராட்சிக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் 1,024 மகளிர் பயனடயவுள்ளார்கள். அடுத்த மாதம் வடசென்னையில் 750 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது" என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றும்போது, "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 இலட்சத்து 11 ஆயிரம் பேர் பயனடையவார்கள். தற்போது 1 இலட்சத்து 40 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது "ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச் சத்தான உணவு உண்ணவும், எடை குறைவு இல்லாத குழந்தை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை நோய் ஏற்படுவதை தடுக்க ஏதுவாகவும், பிரசவ காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யும் வகையிலும், மகப்பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதத்திற்கும், பின்னர் 3 மாதத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6,000 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அறிவிப்பால் இன்று நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 19 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். பயனாளி வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். அவரது குடும்ப வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தலுக்கு முன்னரே வாக்குறுதி அளித்தபடி, இத்திட்டத்தின் மூலம் நிதியுதவியினை அண்ணா பிறந்த நாளான 15.9.2006 அன்று வழங்கி துவக்கி வைத்தார்கள். இந்தத் திட்டம் 1989ஆம் ஆண்டில் ரூ.200 எனவும், பின்னர் 1996ஆம் ஆண்டில் ரூ.300 எனவும், அதன்பின்னர் தற்போழுது 2006ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 என உயர்த்தி ஆறு மாதத்திற்கு ரூ.6,000 என வழங்க தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்கள். பெண்கள் முன்னேற்றம் காண பல சிறப்பான திட்டங்களை தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, வகுத்து தந்துள்ளார்கள். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை சட்டம் வேண்டும் என்று தந்தை பெரியார் 1929ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் அதனை நிறைவேற்றினார்கள். அதேபோன்று எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பெண்களுக்கு திருமண நிதியுதவித் திட்டம் அமல்படுத்தி நிறைவேற்றியவர்தான் தலைவர் கலைஞர் ஆவார்கள். 1989ஆம் ஆண்டில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், பயனாளி ஒருவருக்கு ரூ.5,000 எனவும் 1996ஆம் ஆண்டில் ரூ.10,000 எனவும் தற்பொழுது 2006ஆம் ஆண்டில் ரூ.15,000 என உயர்த்தி வழங்கியுள்ளார்கள். ஆனால் சென்ற ஆட்சியாளர்கள் இந்தத் திட்டங்களை அறவே நிறுத்திவிட்டார்கள். சென்ற ஆட்சியாளருக்கு திருமணம் என்றால் பிடிக்காது என்ற காரணத்தினால் இந்த திருமண உதவி திட்டத்தினை நிறுத்தி இருப்பார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டையும், சென்னை மாநகராட்சி துணை மேயராக பெண் ஒருவரையும், சேலம், மதுரை மாநகராட்சிக்கு பெண் மேயர்களையும் அமர்த்தியுள்ளார்கள். அதேபோன்று அடுப்பு ஊதும் பெண்கள் நிலை மாற கேஸ் அடுப்பு வரும் பொங்கல் திருநாள் முதல் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்டதாகும். சென்ற ஆட்சியாளர்கள் ஏதோ தாங்கள்தான் சுயஉதவி குழுக்களை உருவாக்கியதாக தம்பட்டம் அடித்து கொண்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறுத்தி விடுவதாகவும் பொய் பிரசாரம் செய்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டு முதல்வர் ஆன பின்பு சமூக நலத்துறையில் இருந்த சுய உதவிக் குழுக்களை உள்ளாட்சித்துறையின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள். தற்பொழுது சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இந்த சிறப்பான விழா உங்களை அழைத்து பயனடைவதற்காக நடத்தப்பட்டது மட்டுமன்றி, மற்றவர்களும் இந்த பயனை அறிந்து பயன்பெற வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்டதாகும்".

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.எஸ்.பாபு, நிலைக்குழு தலைவர் (பணிகள்) திரு. சுரேஷ்குமார், மண்டல குழுத் தலைவர்கள் டன்லப் திரு. பிரவி, திரு.வி.சண்முகம், திரு.மா.நெடுமாறன், திரு.ஜெ. சீனிவாசன், திரு. எல்.சுரேஷ்பாபு, திரு.மா.பா.அன்புதுரை, திரு.கே.ஏழுமலை, திரு.க.தனசேகரன், திரு.எம். ஜெயராமன், மன்ற உறுப்பினர்கள் மற்றும் திரு.எல். பலராமன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்டக் குடும்ப நலத்துறை மருத்துவ அலுவலர் திருமதி. சாந்தகுமாரி நன்றியுரை ஆற்றினார்.

– ச. செல்வராஜ்
செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி

* * *



# ரூ.45.67 கோடி மதிப்பீட்டில் பெரம்பூர் மேம்பாலப் பணி

சென்னை பெரம்பூர் மேம்பாலப் பணியினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் முன்னிலையில் 25.11.2006 அன்று குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்து செய்தியாளர்களிடம் பேசுகையில், "கடந்த 1999ஆம் ஆண்டு நான் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது ஒன்பது மேம்பாலங்கள் கட்டி முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. பெரம்பூர் மேம்பாலப் பணி மண் பரிசோதனைக்காக சிறிது காலம் தேவைப்பட்டது. அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்களால் தொடர்ந்து இந்த பெரம்பூர் மேம்பாலப் பணியினை மேற்கொண்டு இருந்தால் ஏறக்குறைய எட்டு மாதத்திற்குள் இந்தப் பணியினை முடித்திருக்கலாம். கடந்த ஆட்சியாளர்கள் இந்த பாலம் கட்டுவதில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு, முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றஞ்சாட்டி, இந்தப் பாலம் கட்டும் பணியினை அறவே நிறுத்திவிட்டார்கள். அப்போது இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிக்கு ரூ.34.84 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டது. அப்போது ஆட்சியாளர்களால்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்கள் துவக்கி வைத்தார்.

ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகம் தலைமையிலே விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. ஏறத்தாழ 2 ஆண்டு காலம் விசாரணை நடைபெற்றது. ஆனால் எந்தவித குற்றச்சாட்டும் அந்த விசாரணைக் கமிஷனால் குறிப்பிடப்படவில்லை. இப்போது மீண்டும் கலைஞர் தலைமையில் ஆட்சி ஏற்பட்ட பிறகு மீண்டும் இந்த பெரம்பூர் மேம்பால கட்டுமானப் பணி நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு, இன்று முதல் துவக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியாளர்கள் இந்தப் பணியினை அரசியல் நோக்கத்தோடு நிறுத்தப்பட்டதன் காரணமாக அரசுக்கு ஏறத்தாழ ரூ.8 கோடி



இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பாலத்தின் மூலம் பெரம்பூர், கொளத்தூர், பெரியார்நகர், அயனாவரம் மற்றும் மாதவரம் ஆகிய பகுதியினை சேர்ந்த மக்களும், குறிப்பாக வடசென்னையை சேர்ந்த மக்கள் பயனடைவார்கள். இந்த பெரம்பூர் மேம்பால நீளம் 991 மீட்டர் ஆகும். அகலம் 16,13 மற்றும் 5.5 ஆகும். தற்பொழுது இப்பாலப்பணி மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு ரூ. 45.67 கோடியாகும். பெரம்பூர் மேம்பாலப் பணியை 8 மாதத்திற்குள் முடிப்பதாக ஒப்பந்ததாரரான திருவாளர்கள் நேஷனல் பில்டிங் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் தெரிவித்துள்ளார்கள். அதற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று அரசும், சென்னை மாநகராட்சியும் கேட்டுக் கொண்டுள்ளது. அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் பசும் பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை – டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பு, கோபதி நாராயணா சாலை – திருமலை சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு ஆகிய நான்கு மேம்பாலங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

இந்த நான்கு மேம்பாலங்களுக்கும் மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.58.52 கோடிக்கு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகளை திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களின் ஒப்பந்தத் தொகையான ரூ.40.80 கோடிக்கு அரசின் ஆணை வேண்டி அனுப்பப்பட்டுள்ளது" என்றார்.

அதன் பின்னர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஜே.சி.பி வாகனத்தை இயக்கி பணியைத் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி ஆர். சத்தியபாமா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு. அ. நெடுஞ்செழியன், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.செங்கை சிவம், மண்டல குழு தலைவர்கள் திரு. மா. நெடுமாறன், திரு. எஸ். சுரேஷ்பாபு, டன்லப் திரு. பி.ரவி, திரு. ஜே. சீனிவாசன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். *



# முதன்முறையாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பங்கேற்ற மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம்



முதல் முறையாக சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பங்கேற்ற, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சேலம் மண்டல அளவில் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம் 28.11.2006 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்து பேசியதாவது:-

அரசின் திட்டங்களை பொதுமக்கள் எளிதாக அறிந்து பயன்பெறும் வகையில், அனைத்துத் துறையின் திட்டங்களையும், தொகுத்து "மக்கள் சாசனம்" புத்தகத்தைத் தயாரித்து பிப்ரவரி மாதத்திற்குள் வெளியிட்டு விநியோகம் செய்திட வேண்டும். செய்தித் துறையில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

இதை நல்லமுறையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பயன்படுத்தி அரசின் திட்டங்கள் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குச் சென்றடையும் பணியினை சிறப்பாக ஆற்றிட வேண்டும். புதிய சிந்தனையுடன் பணியாற்றி செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்ற துறைகளை விட தலைசிறந்து விளங்க செயல்பட வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலகங்களில் காலியாகவுள்ள அனைத்துப் பணியிடங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று நிரப்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோருக்கு கணினிப் பயிற்சி வழங்கப்படும். பின்னர், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நிறைவுரை ஆற்றி பேசியபோது, "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நல்லாட்சியில் செய்தித்துறை சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இதற்கு மக்கள் தொடர்பு அலுவலர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும்தான் காரணம். மண்டல அளவில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும், அவர்களின் செயல்பாடுகளை நேரில் அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த ஆய்வுக் கூட்டம் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது. எல்லாத் துறைகளையும் ஒருங்கிணைத்து அனைத்துத் துறைகளின் சாதனைகளையும், சிறப்பு அம்சங்களையும் மக்களுக்கு எடுத்துச் சென்று நமது பணிகளை அனைவரும் போற்றும் வகையில் செயல்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாதாந்திர அறிக்கையினை குறித்த காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சிறப்பாக செயல்படுகின்ற மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூன்று பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் விருது பெறும் திட்டத்தை அறிவித்துள்ளோம். அந்தப் பரிசினை பெறுவதற்கு போட்டிபோட்டு நீங்கள் பணி ஆற்றுவீர்கள். உங்கள் பணிகளில் போட்டி இருந்தால்தான் அரசுக்கு நல்ல பெயர் ஈட்டித் தர முடியும். மற்ற துறைகளைக் காட்டிலும், செய்தித்துறை சிறப்பாக செயல்படுகிறது என்ற பெருமையை மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஏற்படுத்தித்தர வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் அரசின் சாதனைகளை தெருக்கூத்துக் கலைஞர்கள் மூலம் பூலாவரி கிராமத்தில் முதல் முறையாக நடத்தப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கதாகும். அழிந்து வரும் கிராமியக் கலைகளை இதன்மூலம் பாதுகாக்கப் படுவதை தனிப்பட்ட முறையில் பாராட்டுகிறேன்.

ஊதியத்திற்கு ஊழியம் செய்கிறோம் என்பதைவிட உள்ளத்திற்கு மன நிறைவோடு பணியாற்றுகிறோம் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். மீண்டும் அடிக்கடி இதுபோன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டு, கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு மேலும் முன்னேற்றம் பெறுவதற்கு சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என்று குறிப்பிட்டார்.

செய்தி – மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப.,

"தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் வரவு செலவு திட்டத்தில் செலவினத்திற்காக ஒதுக்குகிறது. இந்த தொகையின் முழுப்பலனும் மக்களைச் சென்றடைய மக்கள் தொடர்பு அலுவலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி விளம்பரப் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் இதன் முழுப் பலன் கிடைக்கும்" என்று கூறினார்.

இச்சீராய்வுக் கூட்டத்தில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ந. மதிவாணன், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. சுந்தரமூர்த்தி இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திரு. ஆர். நாகராஜன் ஆகியோர் பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர் திரு. டி. தாமரைச்செல்வன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு. தா.மனோகரன் (சேலம்), திரு. கி. கண்ணதாசன் (நாமக்கல்), திரு. மு. பழனிச்சாமி, (தருமபுரி), திரு. எஸ். ஆர். சாரதி (கிருஷ்ணகிரி), திரு. கு. தாணப்பா (சேலம் மாநகராட்சி) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * *

# மறைமலையடிகளார் பெயர்த்திக்கு நிதியுதவி





மறைமலையடிகளாரின் பெயர்த்தியும் தமிழறிஞர் புலியூர்க் கேசிகனின் மனைவியும் ஆகிய திருமதி. சுந்தரத்தம்மை அவர்கள் வயது முதிர்ந்த நிலையில் சிரமப்பட்டு வருவதாகவும், திரு. புலியூர்க்கேசிகன் சேமித்து வைத்திருக்கும் அரிய தமிழ் நூல்களைப் பராமரிக்க இயலாததால் அவற்றைப் பயனுள்ள விதத்தில் வழங்க இசைவளிப்பதாகவும் அந்நூல்களைப் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாகத் திருமதி. சுந்தரத்தம்மை அவர்களின் மருத்துவச் செலவிற்கு நிதியுதவி செய்திட வேண்டுமென்றும் திருமதி. சுந்தரத்தம்மையின் மகள் செல்வி கலைச்செல்வி அவர்கள் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோளினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பரிவுடன் ஆய்வு செய்து திருமதி. சுந்தரத்தம்மை அவர்கள் பாதுகாத்து வைத்துள்ள அரிய பழைய தமிழ் நூல்களையும், ஆங்கில நூல்களையும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாகத் திருமதி. சுந்தரத்தம்மை அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், அவரது மருத்துவச் செலவிற்காக 50 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கிடவும், மறைமலையடிகளாரின் கொள்ளுப் பெயர்த்தி செல்வி கலைச்செல்விக்கு தமிழ் வளர்ச்சித் துறையில் முதுநிலை ஒப்பச்சர் பணி நியமனம் வழங்கிடவும் அனுமதி அளித்தார்.

அதன்படி, மறைமலையடிகளின் பெயர்த்தி திருமதி. சுந்தரத்தம்மை அவர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் நிதியுதவியையும், மறைமலையடிகளாரின் கொள்ளுப் பெயர்த்தி செல்வி கலைச்செல்வி அவர்களுக்கு பணி நியமன ஆணையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.12.2006 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

★



# பரிதிமாற் கலைஞர் நூல்கள் நாட்டுடைமை





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிதிமாற் கலைஞரின் நூல்களை நாட்டுடை மையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு பதினைந்து இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையை சென்னை – தலைமைச் செயலகத்தில் 2.12.06 அன்று வழங்கினார்.

தமிழை உயர்தனிச் செம்மொழியென்று முதல் குரல் கொடுத்தவர் பரிதிமாற் கலைஞர். இவர் சூரியநாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று அழைத்துக் கொண்டவர்.

மிகுந்த தமிழ்ப் பற்றுடனும் ஈடுபாட்டுடனும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். கலாவதி, மதிவாணன், நாடகவியல், தமிழ் மொழியின் வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம், சித்திரக் கவி விளக்கம் முதலிய 13 நூல்களை எழுதித் தமிழுக்குப் பெரும் வளம் சேர்த்துள்ளவர்.

இப்பெருமகனாரது பணியினைப் போற்றும் வகையில் பரிதிமாற் கலைஞர் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவரது வழித்தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படும் எனக் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் தம் மரபுரிமையர் 19 பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிவுத்தொகை பதினைந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை 2.12.2006 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். பரிதிமாற் கலைஞரின் வழித்தோன்றல்களாகிய 19 பேர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் இப்பரிவுத் தொகையைப் பெற்றுக் கொண்டனர்.

★ ★ ★

# பொலிவுடன்
## புதுப்பிக்கப்பட்ட
# கன்னிமாரா பொது நூலகம்

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ளது போல் சென்னையிலும் பல கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கன்னிமாரா பொது நூலகக் கட்டடம். சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையை நீங்கள் கடந்து செல்லும்போது பிரம்மாண்டமான பரப்பளவில் ஓர் அழகான அசர வைக்கும் கட்டடம் உங்கள் பார்வையை சுண்டி இழுக்கும். நீங்களாகவே விரும்பினால் கூட உங்கள் கண்கள் அந்தக் கட்டடத்தை விட்டு அகலாது. புகழ்வாய்ந்த புத்தக ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சியாளர் களுக்கும் பல அரிய புத்தகங்களை வழங்கி மக்களின் அறிவுப் பசியை தீர்க்கும். கன்னிமாரா பொது நூலகத்தின் பழைய ஆரம்ப காலக் கட்டடம் இப்போது பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

உலகத் தரம் வாய்ந்த கன்னிமாரா பொது நூலகக் கட்டடம் ஆங்கிலோ–சொரசனிக் கட்டடக் கலை பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டதாகும். இக்கட்டடத்தை







வடிவமைத்தவர் அப்போதைய சென்னை மாகாண அரசு கட்டடக்கலை வல்லுநரான பொறியாளர் ஹென்றி இர்வின் என்பவராவார். அரை வட்ட வடிவில் வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் அமைந்துள்ள அரிய வகை அமைப்பைக் கொண்ட நீளமான அறை, சொரசனிக் பாணியை பின்பற்றிக் கட்டப் பெற்றதாகும். இவ்வகை அரிய கட்டடக் கலையை இந்நாளில் காண்பது அரிது.

அரை வட்ட வடிவில் அமைந்த நீண்ட பெரிய வாயில் மண்டபம், அழகும் நளினமும் வாய்ந்த படிப்பறை, அழகிய தேக்கு மரத்தாலான நூல் அடுக்குகள், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மேற்கூரை, அகாந்தஸ் இலைகளும், பூக்களும் கொண்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள், சன்னல்கள் மற்றும் புத்தக அலமாரிகள், பக்கிங்காம் கால்வாய் வழி படகுகளில் ஆந்திரப் பிரதேச கிருஷ்ணா மாவட்டத்தில் இருந்து ஏற்றி வரப்பட்ட சலவைக் கற்கள் பதிக்கப் பெற்ற தரைத்தளம் என எங்கு நோக்கினும் நம்மைப் பரவசப்படுத்தும் அழகுத் தோற்றம் கொண்டது இக்கட்டடம். இத்தகு எழில் வாய்ந்த இக்கட்டடத்தின் அன்றைய கட்டுமானச் செலவு ரூ.5,75,000 என்பது நமக்கு வியப்பூட்டும் மற்றொரு செய்தியாகும்.

பழைமை வாய்ந்த நம் நாட்டின் பெருமை படக்கூடிய புராதனமான கட்டடங்களுள் ஒன்று – சென்னை பாந்தியன் சாலையில் அமைந்திருக்கும் கன்னிமாரா பொது நூலகக் கட்டடம். நூறு ஆண்டுகள் கழித்தும் இன்னும் புகழோடும் பொலிவோடும் திகழும் இக்கட்டடம், இந்தோ – சொரசனிக் முறையிலான கட்டட அமைப்பிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சென்னைக்குப் புகழ் சேர்க்கும் இக் கன்னிமாரா பொது நூலகம் 1890 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி அப்போதைய சென்னை மாநில ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபுவினால் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டடம் முடிந்து 1896–ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த ஆர்த்தர் எலிபேங்க் ஹேவ் லாக் (Sir Arthur Eli Bunk Haw Lock) என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. சென்னை நகரில் முதல் பொது நூலகம் அமைய காரணமாக இருந்த கன்னிமாரா பிரபுவின் நினைவாக இந்நூலகத்திற்கு கன்னிமாரா பொது நூலகம் எனப் பெயரிடப்பட்டது. இந்த கட்டடத்தைப் பார்ப்போரை பிரமிக்க வைக்கும்



**“வேலைப்பாடுகள் நிறைந்த மேற்கூரையின் இருபுறங்களிலும் உள்ள கண்ணாடிகள் புதுப்பிக்கப்பட்டு அவ்வறையின் ஜன்னல்கள் சீரமைக்கப்பட்டதோடு அங்குள்ள தூண்களிலும் ஸ்தகோ முறையில் ஒட்டப்பட்ட ஓவியங்களையும் சீர்செய்துள்ளனர்.”**

பிரம்மாண்டமான அறையின் இருபுறங்களிலும் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அந்த அறையின் பிரம்மாண்டமும், அதன் மேல் கூரையில் செய்யப்பட்டுள்ள வண்ணமயமான அலங்காரமும் பார்ப்போரை அப்படியே அசர வைக்கின்றன.

நூற்றாண்டுகளை கடந்துவிட்ட இந்தச் சரித்திரப் புகழ்வாய்ந்த கட்டடத்தின், நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த மங்களூர் ஓடுகள் மற்றும் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய கண்ணாடிகளும் சீர்குலைந்ததால் மழைக் காலங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து கூரையின் மேல் பகுதியில் உள்ள அழகான வேலைப்பாடுகளும் பிரிந்து வரத் தொடங்கின. அதே நேரம் புத்தகங்களை வைக்கும் அலமாரிகள் சுவற்றில் ஒட்டி வைக்கப் பட்டிருந்த அழகான ஓவியங்கள், தூண்களில் உள்ள சிறப்பான நுணுக்கமான வேலைப்பாடுகள் காலப் போக்கில் சிதையத் தொடங்கின. அதோடு அந்த பிரம்மாண்டமான அறையின் இருபுறங்களிலும் உள்ள வேலைப் பாடுகளுடன் கூடிய கண்ணாடிகளும் அங்குள்ள தூண்களில் உள்ள அரிய வேலைப்பாடுகளும் உரிந்து வரத் தொடங்கின.

இந்திய தொல்லியல்துறை சென்னை வட்ட தொல்லியல் கண்காணிப்பாளர் திருமதி சத்தியபாமா பத்ரிநாத் மற்றும் அதே துறையைச் சார்ந்த கட்டட பாதுகாப்பு அலுவலர் திரு. பகவான் சாரதி ஆகிய இருவரும் நீர்க் கசியும் கூரையை சீர்செய்வதே மிகக் கடினமான வேலையாக இருந்ததாகக் குறிப்பிட்டனர்.

தொல்லியல் துறையினர் புதிதாக மங்களூர் கண்ணாடிகளைப் பதித்துள்ளனர். எளிதில் உடைக்க முடியாத பாலி கார்பனேட் ஷீட்களும் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதிலிருந்த விரிசல்களையும் அகற்றிப் புதுப்பித்துள்ளனர். கூரையில் உள்ள பலகைகளில் இருந்த பூ வேலைப்பாடுகள் மீண்டும் செய்யப்பட்டுள்ளது. கூடவே அவைகளை சரியான அளவிற்கு ஏற்றாற்போல் வெட்டியும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூரையின் மற்ற ஓவியங்கள் அனைத்தையும் மீண்டும் சீர்செய்து அதன் இழந்த பொலிவை மீட்டுக் கொடுத் துள்ளனர். வேலைப்பாடுகள் நிறைந்த மேற்கூரையின் இருபுறங்களிலும் உள்ள கண்ணாடிகள் புதுப்பிக்கப் பட்டு அவ்வறையின் சன்னல்கள் சீரமைக்கப் பட்டதோடு அங்குள்ள தூண்களிலும் ஸ்தகோ முறையில் ஒட்டப்பட்ட ஓவியங்களையும் சீர் செய்துள்ளனர். உயர்ந்த ரக பர்மா தேக்கினால் செய்யப்பட்ட தூண்களும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.





**“அங்குள்ள வளைந்து செல்லும் மரப்படிகள் அந்தப் படிகளின் கைப்பிடிகளில் உள்ள ழகான நுணுக்கமான வேலைப்பாடுகள் ஆகியவற்றை க்கும்போது நாமே நூறு ஆண்டுகள் கடந்து பின்னோக்கி சென்று விட்டது போன்ற ஓர் எண்ணத்தை நம்முன் உருவாக்குகிறது.”**

இந்தக் கட்டடத்தின் புராதனச் சிறப்பை மனதில் கொண்டு இந்திய தொல்லியல் துறை மத்திய–மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.1.21 கோடியில் அதன் பழைய பொலிவை அப்படியே மீட்டுக் கொண்டு வந்துள்ளது. அந்தப் பழைய கட்டடத்தின் பிரம்மாண்டமான வாசகர்கள் படிக்கும் அறையை பார்த்தாலே மனதில் ஒரு பிரமிப்பும் வியப்பும் உண்டாகிறது. மிக அதிக உயரத்தில் உள்ள மேற்கூரையில் அழகான வண்ண மயமான பூ வேலைப்பாடுகள் நம் நெஞ்சை கொள்ளை கொள்கின்றன. அதேபோல் அந்தக் கூரையின் இருபுறங்களிலும் கண்ணாடிகள் மீண்டும் ஒட்டப்பட்டு அப்படியே நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகிறது. அந்த அறையின் இருபுறங்களிலும் காலத்தால் வீணாகிவிட்ட கண்ணாடிகள் நீக்கப்பட்டு அதே இடத்தில் புதிய கண்ணாடிகள் ஒட்டப்பட்டுள்ளன. சில கண்ணாடிகள் இதற்கென்று தனியாக ஜெர்மனியிலிருந்தும், சில கண்ணாடிகள் கேரளாவிலிருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளன. அந்தக் கண்ணாடிகளில் அன்று கட்டப்பட்டபோது எந்த ஓவியம் இருந்ததோ அவற்றை அப்படியே மீண்டும் ஓவியர்கள் வரைந்துள்ளனர். பகல் நேரங்களில் சூரிய ஒளி அந்தக் கண்ணாடியில் படும்போது அவை பல வண்ணங்களில் ஒளிர்கின்றன.

அங்குள்ள வளைந்து செல்லும் மரப்படிகள் அந்தப் படிகளின் கைப்பிடிகளில் உள்ள அழகான நுணுக்கமான வேலைப்பாடுகள் ஆகியவற்றை பார்க்கும்போது நாமே நூறு ஆண்டுகள் கடந்து பின்னோக்கி சென்று விட்டது போன்ற ஓர் எண்ணத்தை நம்முன் உருவாக்குகிறது.

அந்த பிரம்மாண்டமான அறையின் இரு புறங்களிலும் விலை உயர்ந்த அழகான மர அடுக்குகள் உள்ளன. அந்த அடுக்குகளில் பத்திரிகைகளின் பழைய படிகளையும் பார்க்கக் கிடைக்காத பல அரிய புத்தகங்களையும் வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கன்னிமாரா பொது நூலக அலுவலர்கள் கூறினார்கள். அந்த அறையின் இருபுறங்களிலும் சின்னச்சின்ன



தடுப்புகளோடு அழகான அறைகள் உள்ளன. இதைப் பற்றி இன்னும் ஒரு சுவையான செய்தியையும் கூறினார்கள். 1928–ஆம் ஆண்டு வரை இந்த கட்டடத்தின் ஒரு பகுதி சென்னை பல்கலைக் கழகத்தின் நூலகமாகவும் மற்றொரு பகுதி கன்னிமாரா பொது நூலகமாகவும் இயங்கி வந்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட இந்தக் கட்டடம் 2006ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22ஆம் தேதி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖



# விரைந்து நடந்த சுனாமி நிவாரணப் பணிகள் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் பாராட்டு

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு 648 நபர்களும், 214 குழந்தைகளும் உயிரிழக்க நேரிட்டது. இந்த ஆழிப்பேரலையால் 2,323 வீடுகளும், 619 எக்டேர் நிலமும், 949 கால்நடைகளும் மற்றும் 5,000 மீன்பிடி படகுகள் பாதிக்கப்பட்டு முற்றிலும் சேதமடைந்தன. கடலூர் மாவட்டம் 57.5 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. 51 கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளான தாழங்குடா, தேவனாம்பட்டினம், சிங்காரப்பேட்டை, தொத்திக்குப்பம், ராசாப்பேட்டை, திருச்சோபுரம், புதுக்குப்பம், புதுப்பேட்டை, பரங்கிப்பேட்டை, கிள்ளை, எம்.ஜி.ஆர். திட்டு போன்ற பகுதிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் வீடுகள், படகுகள், சாலை வசதி, மின் வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. அப்பகுதி மக்களின் குடிநீர் ஆதாரம், சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதிகள், மறுவாழ்வு, பொருளாதார மேம்பாடு, சுயஉதவிக் குழுக்களான சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தியதுடன் இனிமேல் சுனாமியால் பாதிக்கப்படக்கூடும் என கணக்கிடப்படும் கடற்கரையிலிருந்து ஒரு கி. மீ தூரம் வரையுள்ள இடங்களில் உள்ள குடிசைகள் மற்றும் மண் வீடுகளையும் அகற்றி புதியதாக வீடுகள் கட்டித்தரவும் தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி மற்றும் மறுவாழ்வு பணிகளுக்கு சிறப்புத் தலைவராக (Special Envoy) நியமிக்கப் பட்டுள்ள அமெரிக்க முன்னாள் அதிபர் திரு.பில் கிளிண்டன் 1.12.06 அன்று கடலூர் மாவட்டம், தாழங்குடா பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள சுனாமி நிவாரணப் பணிகளை பார்வையிட வருகை தந்தார். திரு.பில் கிளிண்டன் அவர்களை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும் அண்ணா விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் இறங்கும் தளத்தில் வரவேற்றனர். பின்னர் பில் கிளிண்டன் நேராக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் செய்துள்ள நிவாரணப் பணிகள் மற்றும் வீடுகளைப் பார்வையிட்டார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களுடன் அப்பகுதியில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா, குடிநீர் வசதிக்காக கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டி, நிகழ்ச்சி அரங்கு ஆகியவற்றை பார்வையிட்டதுடன், அங்கு புதியதாகக் கட்டப்பட்டு முருகுமலை என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டிற்குச் சென்றும் பார்வை யிட்டார். அவரை வீட்டின் உரிமையாளர் தமிழக கலாச்சாரப்படி ஆரத்தி எடுத்து வரவேற்றார். தாழங்குடா பஞ்சாயத்து தலைவர் திரு. குப்புசாமி என்பவரிடம் வீடுகள் எவ்வாறு கட்டப்பட்டுள்ளது என்பது பற்றியும் கேட்டறிந்தார். பின்னர் தாழங்குடாவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள



ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியைப் பார்வையிட்டு பள்ளிக் குழந்தைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆழி நாடகக் குழுவினரின் நிகழ்ச்சியைக் கண்டுகளித்தார். இந்தப் பள்ளி தற்போது 8 ஆசிரியர்கள் 327 குழந்தைகளுடன் இயங்கி வருகின்றது. இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் கல்வித் தரம் வெகுவாக மேம்படுத்தப் பட்டுள்ளது. சுனாமியால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளையும், அவர்கள் வரைந்த ஓவியத்தினையும் திரு. பில் கிளிண்டன் பார்வையிட்டார். அப்பள்ளி குழந்தைகளால் வரையப்பட்ட ஓவியம் அவருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

பின்னர் புயல் பாதுகாப்பு மையத்தில் பேரிடர் எச்சரிக்கை கருவியினைப் பார்வையிட்டு அக்கருவியை இயக்கி வைத்தார். அக்கருவி ஒலிக்கும் எச்சரிக்கையால் கிராமத்தில் புயல் மற்றும் வெள்ள அபாயம் குறித்த முன்னெச்சரிக்கை மற்றும் பொதுமக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்த ஒத்திகையினையும் பார்வையிட்டுப் பாராட்டினார். அப்போது திரு.பில் கிளிண்டன் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சுனாமி பாதித்த 2 ஆண்டுகளில் கடலூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு அளவில் நிவாரணப் பணிகள் மேற்கொண்டு புனர்வாழ்வு செய்து வீடுகள் வழங்கிடவும், அவர்களின் மேம்பாட்டிற்கு விரைவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உலகிற்கே கடலூர் மாவட்டம் முன்னுதாரணமாக (Roll Modal) தெரிகிறது. 70 சதவிகிதம் பணிகள் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தோனேஷியா, தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் 30 சதவிகிதம் பணிகளே இதுவரை முடிவுற்றுள்ளது. இங்கு நடத்தி முடிக்கப்பட்ட பணிகள் மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இதுவரை 4 ஆயிரம் வீடுகள் புதியதாக கட்டி அப்பகுதி மக்களை குடியமர்த்தியுள்ளது. இந்தியாவில் மாநில அரசு ஒத்துழைப்புடன் சுனாமி பாதித்த பகுதிகளையும், அங்குள்ள மக்களையும் புனர்வாழ்வு மேற்கொண்டு உயரிய நிலைக்கு கொண்டு வந்தது, உலகிற்கே ஒரு எடுத்தக்காட்டாக இந்தியா, குறிப்பாகத் தமிழகம் திகழ்கிறது. தகவல் தொடர்பில் இந்தியா நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும் கணினி உற்பத்தியில் 50 சதவிகிதம் தயாராகிறது. 30 சதவிகிதம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலமாக நல்ல விற்பனை சூழல் ஏற்படுத்தலாம். சுனாமியின் போது இங்குள்ள குழந்தைகள் மூலம் வரைந்த ஓவியங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் விற்பனையானது. மாவட்ட நிருவாகம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் நிவாரணப் பணிகள் மேற்கொண்டமைக்கு மாவட்ட நிருவாகத்திற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் கூறினார்.

தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரு.பில் கிளிண்டன் ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டார். 2 மணி நேரமே கடலூர் தாழங்குடா பகுதிக்கு வந்திருந்தாலும் தமிழக மக்களின் சார்பாக பொதுமக்கள் சிறப்பான வரவேற்பை அளித்ததும், நாதஸ்வரம், ஆழி நாடகங்கள், பேரிடர் முன்னெச்சரிக்கை ஒத்திகைகள், ஆரத்தி எடுத்தல், பேரிடர் கருவி எச்சரிக்கை செயல்பாடு, அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட நவீன கட்டடங்கள் ஆகியவை திரு.பில் கிளிண்டன் அவர்களை, மகிழ்ச்சியுரச் செய்தது என்றே சொல்ல வேண்டும்.

**எம். ஆர். லிங்கம்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**கடலூர் மாவட்டம்.**

★ ★ ★

ஆசிரியர்கள் இடமாற்றம், கிராம நிருவாக அலுவலர்கள் இடமாற்றம் தற்போது தமிழக அரசினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலந்தாய்வு முறை (கவுன்சலிங்) இனி மருத்துவத்துறை சார்ந்த மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர் உட்பட அனைவருக்கும் கடைப்பிடிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.11.2006 அன்று அறிவித்துள்ளார்.

## மருத்துவர்கள் இடமாற்றத்திலும் கலந்தாய்வு



# 2ஆவது கட்டமாக 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்



இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஆறாவது கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 24.11.2006 அன்று காலை 11.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு. கோ.க. மணி (பா.ம.க), திரு.சி. கோவிந்தசாமி (இ.கம்யூ. (மா), திரு. வை.சிவ புண்ணியம் (இ. கம்யூ.), திரு. எச். அப்துல் பாசித் (இ. யூ. மு. லீக்), திரு.கு. செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் திரு.மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

22.11.2006 அன்று, நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் முடிவு செய்தவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள டிக்சன் நிறுவனத்தினரிடம் தொழில்நுட்ப வல்லுநர் குழு பேச்சுவார்த்தை நடத்தியது. டிக்சன் நிறுவனம் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு, ஏற்கெனவே விலைப் புள்ளியில் கொடுத்திருந்த விலையினைக் குறைத்து, ரூ. 2,740 என ஒப்புக்கொண்டு, ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளது. இதன் அடிப்படையில் மற்ற ஒப்பந்தக்காரர்களை அழைத்து இதே விலைக்கு அவர்களும் தர முடியுமா என்று கேட்டபோது நான்கு நிறுவனத்தினர் மறுத்துவிட்ட காரணத்தால், எஞ்சிய நான்கு நிறுவனங்களான ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட், வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் ஆகியோரை மட்டும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அந்த நான்கு நிறுவனங்களும், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ரூ.2,740 என விலை நிர்ணயம் செய்ய ஒப்புக் கொண்டு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளன.

கொள்முதல் குழு பேச்சுவார்த்தை நடத்தி இறுதி செய்துள்ள ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூபாய் 2,740 என்பதை ஏற்றுக் கொள்வதென அன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

குறைந்தபட்ச விலையான ரூ.2,740 என்று தெரிவித்த டிக்சன் டெக்னாலஜீஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஒன்பது இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், ஏர்விஷன் இந்தியா பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், அந்த நிறுவனம் மூன்று மாத காலத்திற்குள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும்; எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திடமிருந்தும் ஆறு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை அந்தந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மற்றும் அவர்கள் வழங்க ஒப்புக்கொண்ட எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அன்றைய கூட்டத்தில் ஒருமனதாகப் பேசி முடிவெடுக்கப்பட்டது. ■

சிறுகதை



# திருட்டு

ம. இராஜேந்திரன்

"யாரு புடிச்சிருந்தாலும் விட்ருங்க ஆமா. நான் பொல்லாதவ. என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது. ஆனா ஒண்ணு. எனக்குத் தெரியாமப் போயிடும்னு மட்டும் நெனக்காதீய... சொல்லிப்புட்டேன்."

வீட்டு வாசலில் நின்று உச்ச குரலில் சிலம்பாயி ஊருக்கே அறை கூவல் விட்டாள்.

சிலம்பாயி இன்றைக்கு வயலிலிருந்து வர நேரமாகிவிட்டது. விளக்கை எடுத்துக்கொண்டு மறுபடியும் தேடினாள். திண்ணையில் கிடந்த நெல்மூட்டைச் சந்துகளில் தாய்க்கோழி இறக்கைக்குள்ளிருந்து குஞ்சுகள் தலைகாட்டின.

கூடைக்குள் அவற்றை மூடினாள். அந்தக் கருப்புப் பெட்டைக் கோழியைக் காணவில்லை. வீட்டைச் சுற்றித் தேடினாள். மீண்டும் மீண்டும் தேடினாள்.

இந்நேரம் அது வந்து அடைஞ்சிருக்கணும், யாரோ பிடிச்சிட்டாங்க. இல்லேன்னா 'குக்குக்' கொஞ்சலோடு அது நெல் மூட்டையில் ஏறிக் குதிக்கும். எளிதில் பிடி கொடுக்காது. கூடையில் மூடும் வரை பயங்கரமாய்க் கூச்சலிடும். சிலம்பாயிக்குத் தாங்க முடியவில்லை. எங்கிருந்தாவது வாசம் வருகிறதா என்று வரும் காற்றில் எல்லாம் தேடினாள். வாசலில் நின்றாள். தெருவில் அலைந்தாள்.

"ஏக்கா சின்னமக்கா என் கருப்புக் கோளியைக் காணும்க்கா"

சந்தேகப்படுவதைக் காட்டிக்கொள்ளாமல் தேடினாள், வீடு வீடாகச் சமையல் வாசம் பிடித்தாள். துப்பு கிடைக்கவில்லை. சிலம்பாயிக்கு இருப்பு கொடுக்கவில்லை.



'திருட்டுக் கோளி சமையல் நடுராத்திரியில்தான் நடக்கும். இன்னும் கோளி செத்திருக்காது.

நினைத்துக்கொண்டே நடந்தவள் அடுத்த வீட்டில் நின்றாள்.

"ஏண்டி கண்ணம்மா! ஒங்கக் கோளியோட கோளியா வந்து அடைஞ்சிருக்கான்னு பாருடி."

கண்ணம்மா வீட்டில்தான் சிலம்பாயிக்குச் சந்தேகம்.

"நீயே வந்து பாருக்கா. அப்புறம் நான் பார்த்தாலும் ஒனக்கு நம்பிக்கை இருக்காது."

சொல்லிக்கொண்டே விளக்கெடுத்து வந்து மூடிக்கிடக்கும் கோழிக்கூடைகளைத் திறந்து காட்டினாள்.

'புடிச்சிருந்தா இப்படி வெளியிலயா கவுத்திருப்பா'

சிலம்பாயிக்குச் சந்தேகம் போகலில்லை. ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை.

"இல்லடி கண்ணம்மா ஆனையக் காணுமின்னு பானையிலத்தேடுனாங்குற கதை தாண்டி... பறி கொடுத்தவ மனசு பதறுது. ஒங்களுக்குக் கேலியா இருக்கு."

சிலம்பாயி பொய்யாக் கோபித்து அங்கிருந்து நடந்தாள்.

"இது என்னா ? அந்தக்கா என்ன சொன்னாலும் கோவிச்சுக்குது."

பேசிக் கொண்டே கண்ணம்மா வீட்டிற்குள் சென்றாள். சிலம்பாயி தனக்குத்தானே பேசிக்கொண்டு வீடு வந்தாள். அப்போதுதான் குருநாதன் வயலிலிருந்து வந்து மண்வெட்டியை மாட்டுத் தொழுவத்தில் மாட்டிவிட்டு வியர்வையைத் துடைத்தவாறு வாசலில் நின்றான்.

"கருப்புப் பொட்டைக் கோளியைக் காணும். நானும் தேடாத எடமில்லை. எவளோ புடிச்சிட்டாளுவ".

சிலம்பாயிக்கு மெதுவாகப் பேசவராது. சத்தத்தில் இரவு அதிர்ந்தது.

"சரி சரி விடு. காலையில் பார்த்துக்கலாம்."



குருநாதன் எப்போதாவதுதான் பொண்டாட்டியை அடக்கிப் பேச முடியும். இது போன்ற சந்தர்ப்பங்கள் ரொம்பக் குறைவு.

"ஆமா நீ ஒரு மனுசன். ஒன்னைக் கட்டிக்கிட்டதுக்கு எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்."

சிலம்பாயின் ஏமாற்றம் குருநாதன் மீது வெடித்தது. இதற்குக் குருநாதன் பேசாமல் இருக்க முடியாது.

"ஏண்டி, கோளி திருட்டு போனதுக்கும் என்னைக் கட்டிக்கிட்டதுக்கும் என்னாடி சம்மந்தம்..."

குருநாதனின் குரலில் சமரசம் வழிந்தது "ஆமா, ஒம்மேல ஒரு அத்து இருந்தா கோளியப் புடிப்பாளுவளா ?"

"சரி சரி காலையிலே பார்ப்போம். விடு. ஊரே அசமடங்கிப் போச்சு."

சொல்லிக்கொண்டே குருநாதன் குனிந்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான்.

"காலையிலே என்னாத்தப் பார்ப்பே. கோளி மசுரைப் கூட குப்பையிலே பொதச்சிடுவாளுவ. அப்புறம் என்னாத்தப் பாக்குறது. இப்பவே எதுனாச்சும் பண்ணனும்."

சிலம்பாயிக்குத் தொண்டை அடைத்தது. முந்தானையால் கண்ணையும் மூக்கையும் துடைத்துக் கொண்டாள்.

முறை வைத்துக் கொண்டதுபோல் எப்போதும் குறைந்தது இரண்டு கோழிகளாவது வீட்டில் முட்டையிட்டுக் கொண்டிருக்கும். சிலம்பாயிக்கு வீட்டுக் கைச் செலவு கவலையில்லாமல் போகும். கோழி என்றால் சிலம்பாயிக்கு உயிர். சீக்கு வந்தால் தவிர அவள் கோழி சாப்பிட்டதில்லை. வாசல் கூட்டிச் சாணி தெளித்ததும் பொழுது விடியும். கோழிக் கூடைகளைச் சிலம்பாயி ஒவ்வொன்றாய்த் திறப்பாள். திறந்ததும் வெப்பம் கலந்த கோழி வீச்சம் முகத்தில் அடிக்கும். சிலம்பாயி முகம் சுளிக்க மாட்டாள். முட்டையிடும் கோழியை விரல் விட்டுப் பார்த்து உறுதி செய்து கொள்வாள். பதினோரு மணி வாக்கில் முட்டையிட இடம் தேடி கோழிகள் வீடு வரும். கூடைகளை ஒருக்கணித்து வைத்து, உள்ளே சென்று கோழி உட்கார்ந்ததும் ஓசைப்படாமல் கூடையைக் கவிழ்ப்பாள்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தாலும் சில நேரங்களில் 'டபக்' கென்று வெளியில் ஓடி கோழி விளையாட்டு காட்டும். ஒரு வழியாய்க் கூடையை மூடி, சாணிக் குவியலில் தண்ணீர் தெளித்து வைக்கோல் கூளங்களையும் உமியையும் போட்டுக் கால்களால் மிதித்து, சாம்பல் தூவிய தரையில் ராட்டி தட்ட உருண்டைகளைத் தயார் செய்வாள். அவள் ராட்டி தட்டி முடிக்கவும், " கோளி முட்டை இருக்கா கோளி முட்டை" என்று சைக்கிள் தாத்தா வரவும் சரியாக இருக்கும்.

சிலம்பாயி கூடையைத் திறக்க விருட்டென்று வெளிவரும் கோழி, தன் முட்டையைத் திரும்பிப் பார்த்து, 'கொக் – கொக் – கொக்–' என்று கூச்சலிடும். முட்டையிட்ட எரிச்சல் இன்னொருத்தர் வீட்டிலோ குப்பை மேட்டிலோ கூட சமயத்தில் முட்டையிட்டுக் கோழி இப்படிக் கூச்சலிடுவதும் உண்டு. சத்தத்தை வைத்து சிலம்பாயி கண்டுபிடித்து விடுவாள். ஒருநாள் மாட்டுக்கு வைக்கோல் பிடுங்கும்போது வரிசையாய் முட்டைகள் விழுந்தபோதுதான் அவளுக்கே தெரியாத இடத்திலும் கோழி முட்டையிடுவது தெரிய வந்தது.

நாளைக்கும் சைக்கிள் தாத்தா 'முட்டையிருக்கா முட்டை' என்று வருவார்.

சிலம்பாயிக்கு அழுகை அழுகையாக வந்தது.

"பாவியளா ; நல்லா இருப்பியளா ?"

திருட்டுத்தனமாக் கோளியைப் புடிச்சிக் கழுத்தைத் திருகுன ஓங்களுக்குப் புள்ளைக்குட்டி ஒட்டுமா ?

என் கோளியைத் திருடுன ஓங்களக் காளியாயி சும்மா விடமாட்டா. மாரியம்மா வருவா... நான் கருப்புக் கோளின்னு பேச்சியாயிக்கு வேண்டி உட்ருந்த கோளி. புடிச்சி வச்சிருந்தா உட்ருங்க. அப்புறம் சாமிக்கொறை சும்மா வுடாது. நான் பட்டாணியன் கோவிலுக்குப் போயி சூடனைக் கொளுத்தி மண்ணைவாரி எறைக்கப் போறேன்... சொல்லிப்புட்டேன்.

தெருவின் அமைதி கிழிந்தது. சிலம்பாயிக்குத் தொண்டை கட்டியது. வீட்டிற்குள் போய்த் தண்ணீர் மொண்டு குடித்தாள். சிலம்பாயி விடமாட்டாள் காணாமல் போன கோளி வேண்டும். வேறு ஆறுதல் இல்லை. வானத்தில் நிலா எட்டிப் பார்த்தது. தூரத்தில் ஆந்தை திக்கியது. சிலம்பாயி முடிவுக்கு வந்தாள்.

"ஒன்னைத்தான் – தூங்கிட்டியா ?"

அரைத் தூக்கத்திலிருந்த குருநாதனைத் தட்டி எழுப்பினாள். குருநாதன் எழுந்து வேட்டியை உதறிக் கட்டிக் கொண்டு சிலம்பாயி பின்னே நடந்தான். சிலம்பாயி பேசிக்கொண்டே நடந்தாள். சின்னமக்கா வீடு வந்தது. "எக்கா சின்னமக்கா... எங்க போச்சின்னே தெரியலியே என்னாக்கா பண்ணலாம். எனக்கு ஒரு ரோசனையும் வராமப் புத்தியப் பேதலிக்க வச்சிட்டாளுவளே."

வாசலில் படுத்திருந்த சின்னமக்கா வாரி சுருட்டி எழுந்தது. சிலம்பாயி ஏதோ தீர்மானமாய் வந்திருந்தாள். அதைச் சின்னமக்கா வாயிலிருந்து வரவழைக்கப் பார்க்கிறாள்.

"என்னா பண்றது சிலம்பாயி. பொளுது விடியட்டும். இப்போ என்னா பண்ண முடியும் ?"

"இல்லக்கா... இப்போ விட்டுட்டா கோளியை அடிச்சிக் கொளம்பு வச்சிடுவாளுவ. பொளுது விடிஞ்சா ஏப்பம் விட்டுடுவாளுவ. இப்பவே ஏதுனாச்சும் பண்ணனும்க்கா."

"ஒம்புருசன் என்னா சொல்லுது ?"

சின்னமக்கா குருநாதனைப் பார்த்துக் கேட்டாள்.

"அது வீட்ட மொறத்தை எடுத்துப் பட்டாணியன் கோயில்ல போடுவோம்னு சொல்லுதுக்கா. நானும் சரின்னு சொல்லிட்டேன்க்கா."

சிலம்பாயி சின்னம்மக்காவின் கருத்துக்கே விடவில்லை.

"அப்படியா"

"ஆமாக்கா – இப்பவே மொறம் எடுத்துட்டா – ஒரு பயம் வந்திடுமில்லே."

"அது சரி"

சின்னமக்கா, வீட்டுக்குள் போய் முறத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். சிலம்பாயி ஒவ்வொரு வீடாகத் தெரு முழுவதையும் எழுப்பினாள். சாணி மெழுகியமுறம், புதுமுறம், சிறியது, பெரியது என்று முறங்களைச் சுமந்துகொண்டு குருநாதனும் சிலம்பாயியும் பட்டாணியன் கோயிலுக்கு நடந்தார்கள்.

"நான் இஞ்சயே நிக்கிறேன். நீ போயிப் போட்டுட்டு வா".

பட்டாணியன் காவல் தெய்வம். குதிரையும், யானைகளும் பொம்மைகளாய் நின்றன. கையில் வீச்சரிவாளுடன் பார்ப்பவர்களை மிரட்டும் சாமி அது. பெண்கள் அந்தப் பக்கம் போகமாட்டார்கள்.

குருநாதன் முறங்களைக் கொண்டு போய்க் கோயிலுக்கு முன்னே போட்டான். பனை மட்டைகள் சலசலத்தன. குருநாதனுக்குப் பயம் வந்தது. வேகமாகத் திரும்பி நடந்தான்.

"நாளைக்குத் தெரிஞ்சிடும்".

பேசிக்கொண்டே சிலம்பாயி நடந்தாள். இதெல்லாம் ரொம்ப என்பது போல் குருநாதன் அவளைப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

அந்த ஊரில் இப்படி ஒரு கட்டுப்பாடு. காலம் காலமாய் சின்னத் திருட்டு என்றால் தெரிவிலுள்ள வீட்டின் முறங்களை எடுப்பார்கள். பெரிய திருட்டு என்றால் ஊர் முறங்களே பட்டாணியன் கோயிலுக்கு வரும். வீடென்றால் முறம் இருக்கும். நெல், அரிசி, உளுந்து புடைக்க, சமைக்க தினசரி வாழ்க்கைக்கு முறம் தேவை. முறத்தை எடுத்துப் போய்க் கோயிலில் போட்டுவிட்டால் வீட்டிற்கு ஒருவர் போய்க் குளத்தில் குளித்துவிட்டு, கோயில் முன் நின்று 'நாங்க திருடலை' என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டு முறத்தை எடுத்துக் கொண்டு வருவார்கள். பட்டாணியின் கோயில் முன் பொய் சொல்லும் துணிச்சல் யாருக்கும் கிடையாது. திருடியவர்கள் முறம் எடுக்கமாட்டார்கள். யார் வீட்டு முறம் கோயிலிலேயே கிடக்கிறதோ அவர்கள்தான் திருடர்கள் என்று ஊரறிந்து தண்டம் விதிக்கும். ஆனாலும் இதுவரை யாரும் கோழித் திருட்டுக்கு முறம் எடுத்ததில்லை.



சிலம்பாயியும் குருநாதனும் பேசிக் கொள்ளாமலே வீடு வந்து படுத்தனர். "நாளைக்குத் தெரிஞ்சிடும்" சிலம்பாயிக்குத் தூக்கம் வரவில்லை. நேரம் நள்ளிரவை நெருங்கியது. நிலா வெளிச்சத்தில் ஊரே தூங்கியது. சிலம்பாயி வாசலில் வந்து உட்கார்ந்தாள். சிறிது நேரத்தில் நிலாவை மறைத்துக் கொண்டு கருமேகம் சூழ்ந்தது. அரிக்கேன் விளக்கை எடுத்துக் கொண்டு மாடுகளைத் தொழுவத்தில் கட்ட குருநாதனை எழுப்பினாள். குருநாதனுக்கு அசதியாக இருந்தது. எழுந்துபோய் மாடுகளைக் கட்டிவிட்டு வந்தான். வானம் இருட்டிக் கொண்டு வந்தது.



"மொறமெல்லாம் நனையப் போவுது"

குருநாதன் தனக்குத்தானே பேசிக் கொண்டான் சிலம்பாயிக்கு மனசு கஷ்டமாகியது.

"ஒரு கோளிதானே, போவுதுன்னு உட்ருக்கலாம். எல்லார் வீட்டு மொறமும் நனைஞ்சு போச்சுன்னா... என்ன பண்ணுவாங்க... காளியா மாரியாத்தா மளை பெய்யப்படாது- இந்த ஒரு தபா எனக்கு மாப்பு குடு தாயே"

சிலம்பாயின் வேண்டுதல்களை எல்லாம் மீறி மழை தூறத் தொடங்கியது. விளக்கு வெளிச்சம் தேடி பூச்சிகள் பறந்து வந்தன. விளக்கைச் சிறிதாக்கினாள். இருந்தாலும் பூச்சிகள் விடவில்லை. சிலம்பாயி இப்போது முறங்களைப் பற்றி கவலை கொண்டாள். குருநாதன் வேட்டியைப் போத்திக்கொண்டு சிலம்பாயி பக்கத்தில் உட்கார்ந்தான். காற்றடித்தது. கூடவே சடபட சத்தம். சிலம்பாயி மடியில் தொப்பென்று விழுந்தது. சிலம்பாயி பயந்து குதித்துப் புடவையை உதறினாள். அதற்கு முன்பே அது கீழே விழுந்திருந்தது. காணாமல் போன கருப்புக்கோழி. அதிர்ச்சியிலிருந்து விடுபடாமலே அதைப் பிடித்துப் பார்த்தாள். அவளுடைய கோழியே, வீட்டு முன் நின்ற வேப்ப மரத்திலிருந்து கோழி மழைத் தூறல் பட்டுக் கீழிறங்கியிருக்கிறது.

'நாளைக்கு ஊருக்கே தெரிஞ்சிடும். முறம் எடுத்த வீட்டுக்கு எல்லாம் பதில் என்ன சொல்றது.'

குருநாதன் குழம்பிக் கிடந்தான். சிலம்பாயி அவசரம் அவசரமாக அடுப்பை மூட்டி வெந்நீர் சுடவைத்து கருப்புக் கோழியைத் தலையழுத்தினான். சத்தமில்லாமல் கோழித்துடிப்பு அடங்கியது. பிடுங்கிய இறக்கையை நாய் தோண்டிக் காட்டிக் கொடுத்துவிடாதபடி ஆழமாய்க் குழிவெட்டி குருநாதன் புதைத்தான். உரித்த கோழியில் மஞ்சள் தடவி மசாலா அரைத்து அவசரம் அவசரமாகக் குழம்பு கொதித்தது குருநாதனுக்குத் தூக்கம் வரவில்லை. மழைத் தூறல் வலுக்கவும் இல்லை. நிற்கவும் இல்லை.

திண்ணையில் கிடந்த கோணியை எடுத்துத் தலையில் கொங்காணி போட்டுக் கொண்டு பட்டாணியின் கோயில் நோக்கி விரைந்தான். பொழுது விடிந்து கொண்டிருந்தது. தூறல் நிற்கவில்லை.

(சாகித்ய அக்காதெமி வெளியிட்ட
"நவீன தமிழ்ச் சிறுகதைகள்"
என்ற நூலிருந்து...)

* * *



## சமூகநீதி காத்த சான்றோர் – 1

மனித நாகரீகம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது வேத மதம். வேதங்களும், உபநிடதங்களும், கீதையும், இதிகாசப் புராணங்களும், மானுடத்தை நல்வழிப்படுத்தத் தோன்றலாயின. இவைகளுடன் இணைந்தே பிறந்தன வர்ணாசரமமும், சாதிவெறியும். மானுடத்தை நல்வழிப்படுத்த படைக்கப்பட்ட நூல்களின் மகத்துவத்தை மழுங்கச் செய்த சாதிவெறி என்னும் விஷ விருட்சம் விஸ்வரூபமெடுத்தது. ஆண்டான் – அடிமை, மேலோர் – கீழோர், பிறப்பால் உயர்ந்தவன் – தாழ்ந்தவன், சாதி சமய வேறுபாடுகள் ஆயிரம் ஆயிரமாண்டுகளாக வளர்ந்தோங்கி வேத மதம் முழுமைக்கும் வியாபித்திருந்தது. இந்தக் கொடிய நோயை முற்றிலும் ஒழித்திட, இந்து மதம் என அழைக்கப்படும் வேத மதத்தில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட, புரட்சி சிந்தனையாளர்கள் – சமூகநீதிக் காவலர்கள், அவ்வப்போது தோன்றத்தான் செய்தார்கள். அத்தகைய வரலாற்று மகான்களின் சரிதைகளை இந்த இதழிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் காண்போம்.

சமூகநீதி காத்த சான்றோர் வரிசையில் முதலாவதாக இடம் பெறுபவர் புத்தபிரான்.

# புத்தர் (கி.மு.563 – 483)

கி.மு. ஆறாம் நூற்றாண்டை, இந்து மதமே மறைக்கப்பட்ட ஒரு இருண்ட காலம் எனலாம். வேதங்களின் உன்னத போதனைகள் உதாசீனப்படுத்தப்பட்ட காலம். கடவுள்கள் குடிகொண்ட கோவில்கள், கொடியவர்களின் கூடாரமாக மாறிவிட்ட காலம் – பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்ட இந்து மதத்தினை, சுயநலவாதிகள் திட்டமிட்டு சுரண்டிய காலம் – சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்களுக்கென தனிப்பிரிவு உருவாகிவிட்ட காலம். கோயில்களில் ஆடுகள் பலிகடாவாக ஆகிய காலம். நோய்வாய்ப்பட்ட இந்து மதம் அறுவை சிகிச்சைக்காக ஏங்கியக் காலக்கட்டம். அப்போது இந்து மதத்தைப் பிடித்திருந்த நோய் அகல – இந்துக்களின் பிணி மறைய அவதரித்தார் புத்த மகான்.

சாக்கிய அரசன் சுத்தோதனுக்கும் மாயாவிற்கும் மகனாக கி.மு.563இல் நேபாளத்தில் லும்பினி கிராமத்தில் (கபிலவஸ்து நகர் அருகில்) பிறந்தவர்தான் சித்தார்த்தர். "கௌதம்" என்பது

அவரது குடும்பப் பெயர். அவர் பிறந்த ஏழு நாட்களில் தாயார் மாயா மறைந்தார். மாயாவின் தமக்கை மகாபிரஜாபதியால் வளர்க்கப்பட்டார். சித்தார்த்தர், இல்வாழ்க்கையைத் துறந்து, துறவறம் பூண்டு, மனித குலம் மேன்மையடைய – உலகத்தை உய்விக்க வந்த மாமுனியாகத் திகழ்வான் என சோதிடர்கள் கூறியதைக் கேட்டு வருத்தமுற்ற மன்னர், சித்தார்த்தனுக்கு சந்நியாசம் மேற்கொள்ளும் எண்ணம் துளியும் வந்துவிடக் கூடாது என்பதற்காக மகனுக்கு சகல சௌகரியங்களையும் வழங்கி செல்வத்தில் திளைக்கச் செய்தார். ஏழ்மை என்றால் என்ன என்று கூட சித்தார்த்தர் அறியக்கூடாதென மன்னர் கருதினார். அரச வாழ்வை சித்தார்த்தர் துறந்துவிடக் கூடாதெனக் கருதி சித்தார்த்தரின் 16ஆவது வயதில் அவருக்கு யாசோதாவை மணமுடித்து வைத்தார். புத்தருக்கு ராகுலன் என்ற அழகிய மகன் பிறந்தான்.



ஒருநாள் சித்தார்த்தர், தனது பணியாள் சின்னா என்பவருடன் நகருக்குள் சென்றபோது, ஒரு வயதானவர், ஒரு நோயாளி, ஒரு பிணம், ஒரு முனிவர் ஆகியோரைக் கண்டார். அவர்களுடைய துயரம் அவருக்கு விநோதமாகப்பட்டது மட்டுமின்றி அவருடைய வாழ்வின் போக்கையே மாற்றிவிட்டது.

ஆம்! மனித குலத்தின் இந்த அவலக் காட்சிகளைக் கண்டு திடுக்கிட்டார் சித்தார்த்தர். முனிவரின் புனிதமும், வசீகரமும் அவரை பெரிதும் கவர்ந்திழுந்தன. மனித அவலங்களைக் களைய தனது ஆடம்பர அரச குல இல்வாழ்க்கையைத் துறந்து சந்நியாசமேற்கத் தீர்மானித்தார்.

சித்தார்த்தர் தமது 29ஆம் வயதில் (கி.மு. 534இல்) வீட்டைவிட்டு வெளியேறினார். துறவற கோலம்பூண்டு மகத நாட்டுத் தலைநகரான ராஜ்கிரஹா சென்று, அங்கு ஆளாரகாலாம என்ற முனிவரைச் சந்தித்து அவரிடம் சீடராகச் சேர்ந்தார். ஆனால் அவருடைய போதனைகளில் திருப்தியடையாத சித்தார்த்தர், உத்தரராமபுத்திரரைச் சந்தித்தார். அவருடைய போதனையிலும் திருப்தி அடையாத சித்தார்த்தர் தானே போதகயாவுக்கு அருகில் தொடர்ந்து ஆறாண்டுகள் தவத்தில் ஈடுபட்டார். சித்தார்த்தர் மிகவும் பலவீனமடைந்தபோதும் அவருக்கு தவத்தில் முழு திருப்தி ஏற்படவில்லை. அப்போது அவ்வழியாகச் சென்ற சில நடனமங்கைகள் பாடிய குதூகலமான பாட்டு அவரை மிகவும் ஈர்த்தது. அன்று முதல் பட்டினியால் உடலை வருத்திக் கொள்வதில் பலனில்லை என்று தீர்மானித்து, மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்காமலும், சோகத்தில் துவண்டு விழாமலும் ஒரு நடுநிலைக் கொள்கையை பின்பற்றுவதென முடிவெடுத்தார். பலவீனமான உடலால் தியான சுகம் காண்பது கடினம், என உணர்ந்து திட உணவு உட்கொள்ள



ஆரம்பித்தார். அவருடன் இருந்த 5 சந்நியாசிகள் இவர் திட உணவு அருந்துவது கண்டு இவரை விட்டு ஓடிவிட்டனர். இறுதியில் ஒரு போதி மரத்தடியில் சித்தார்த்தர் தவமிருக்கத் தொடங்கினார். "நான் இறக்க நேரிட்டாலும், என் உடல் அழிய நேரிட்டாலும், என் உடல் முழுதும் உதிர்ந்து போனாலும், முழு ஞானம் பெறும்வரை இந்த மரத்தடியிலிருந்து எழுந்திருக்கமாட்டேன்" எனச் சபதமேற்று, தவமிருக்கத் தொடங்கினார். அன்றிரவு முழு ஞானம் பெற்று ஒளி வெள்ளம் சூழ தோற்றமளித்தார். ஆம். அவர் அன்று நிர்வாண (முக்தி) நிலையை எய்தினார். "இணையில்லா நிர்வாணத்தை (முக்தியை) அடைந்தேன். என் ஞானக்கண் திறந்து கொண்டுவிட்டது. என் மனம் முக்தி நிலைப்பெற்று விட்டது. இதுவே என் கடைசிப் பிறவி. இனி பிறவியில்லை" என ஆனந்தத்தில் மிதக்கலானார். அவர் உடல் முழுவதிலுமிருந்து தெய்வீக ஒளி வீசியது. தன் 36ஆவது வயதில் (கி.மு.528) ஞானம் பெற்றார். சித்தார்த்தர் புத்தர் ஆனார். அந்த போதி மரத்தடியில் தொடர்ந்து ஏழு பகல் – இரவு மகிழ்ச்சி வெள்ளத்தில் நடனமாடினார். பிறகு தன்னுடைய தெய்வீக அனுபவத்தை பிற மனிதர்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்பினார். அதற்கென புத்த மதத்தைத் தோற்றுவித்தார். இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டார்.

**ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம். எனவே, ஆசைகளைத் துறக்க வேண்டும் என்று கூறிய புத்தர், துன்பங்களைத் தவிர்க்க 8 வழிகளை போதித்தார். அவை *சரியான பார்வை, சரியான சங்கற்பம், சரியான சொல், சரியான செயல், சரியான வாழ்க்கை முறை, சரியான முயற்சி, சரியான நினைவு மற்றும் சரியான மோனநிலை* ஆகும். சடங்குகளையும், பக்தியையும் விட ஞானத்தையும், பகுத்தறிவையுமே முக்கியமாகக் கருதினார். புத்தர் சாதியை அங்கீகரிக்கவில்லை. சாதியை விட்டு ஒதுக்கப்பட்டவர் களையும், ஏழைகளையும், தீண்டத்தகாதவர்களையும் தன்னுடைய சீடர்களாக ஏற்றுக்கொண்டார். இந்து மதத்தில் சொல்லொண்ணா சாதிக் கொடுமைகளுக் கானான ஆயிரக்கணக்கானோர் இந்து மதத்தைத் துறந்து, புத்த மதத்தைத் தழுவினர். அவமானப்பட்டு, சித்ரவதைப்பட்ட சமுதாயத்தில் அடித்தட்டு மக்களுக்கு விடுதலை வழங்கிய புரட்சி சிந்தனையாளர்தான் புத்தர். இந்து மதத்தைப் பீடித்திருந்த சாதி வெறி என்னும் பேயை வெளிச்சம் போட்டுக் காட்டியவர் புத்தர். அவர் புத்த மதத்தைத் தோற்றுவித்ததன் மூலம் இந்து மதம் உடைந்துபோவதிலிருந்து காப்பாற்றினார். புத்தர் தன் வாழ்நாள் முழுவதும் அகிம்சையைக் கடைபிடித்தார். பல மன்னர்கள் அகிம்சையைக் கடைபிடிக்கக் காரணமாகத் திகழ்ந்தார். மனித நேயத்தின் சின்னமாக விளங்கினார்.**

தன்னை ஆராதித்த 60 சீடர்களை தன் கொள்கைகளைப் பரப்புவதற்கென நாடு முழுவதும் அனுப்பி வைத்தார். இந்து மதத்தின் அனைத்துத் தரப்பினரும் இவரது சீடர்களானார்கள். உருவில்லா காட்டில் வசித்த மூன்று முனிவர்கள் புத்த மதத்தைத் தழுவியது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மகத நாட்டுத் தலைநகரான ராஜகிரஹாவில் புத்தருடைய பிரசங்கத்தைக் கேட்ட மகத நாட்டு மன்னான பிம்பிசாரா, தன்னுடன் இருந்த 1,20,000 பிராமணர்கள் மற்றும் 10,000 பணியாளர்களுடன் புத்த மதத்தைத் தழுவினார். புத்த மதம் இலங்கை, சீனம், திபெத் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் வேகமாகப் பரவி இன்று வரை தழைத்தோங்கி விளங்குகிறது.

பின்னர் புத்தர் தன் தந்தையையும், மகனையும், மனைவியையும் சந்தித்தார். அவருடைய மனைவி யசோதா முதல் பெண் புத்த மதத் துறவி ஆனார். மகன் ராகுலனும் புத்த மதத் துறவியானார். புத்தர் 45 ஆண்டுகள் இந்தியா முழுவதும் சென்று தீவிரப் பிராச்சாரத்தில் ஈடுபட்டார். இறுதியில் ஒருநாள் ஆரோக்கியமற்ற உணவைச் சாப்பிட்டதால் உடல் நலம் குன்றி தனது 80ஆவது வயதில் (கி.மு.483) குஷீ நகரில் இயற்கை எய்தினார்.

– ந. இளங்கோ
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழரசு

# கல்லடி

ராஜா ஒருவர் வேட்டையாடி வந்த களைப்பால் மாமரத்தடியில் களைப்பு நீங்கப் படுத்தார்.

சிறிது நேரம் சென்றது.

ஒரு மரத்தின் மீது யாரோ கல்லெறிய அது மன்னர் தலையில் விழுந்து ரத்தம் சிந்த வைத்தது.

அரசர் அரண்மனைக்கு வந்தார். வைத்தியர் வந்து வைத்தியம் செய்தார்.

அரண்மனைச் சேவர்களுக்கு கல்லானது அரசர் தலையில் விழுந்த சேதி தெரிய வந்தது. அவர்கள் கல்லெறிந்தவனை தேடினார்கள்.

யாரோ ஒரு கிராமத்தான் காட்டிலே மாடு மேய்த்துக் கொண்டிருந்தவன், தான் கல்லெறிந்து இரண்டு மாங்கனிகள் தின்றதாக ஒப்புக் கொண்டான்.



மாலை நேரத்தில் அரசன் முன் அந்த கிராமத்தானை, அரண்மனைச் சேவகர்கள் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"இவனை எதற்காக, இங்கு கொண்டு வந்தீர்கள்!"

"தங்கள் தலையில் கல்வீசி, காயப்படுத்தியவன் இவன்; இவன் தண்டனைக்கு உரியவன்" என்றார்கள்.

ராஜா, "பெரியவரே! கல்வீசிய உமக்கு என்ன கிடைத்தது!" என்று கேட்டார்.

"அரச தண்டனை கிடைத்தது" என்றார்.

"மரம் தங்களுக்கு என்ன தந்தது!"

"இரண்டு கனிகள் தந்தன; எனக்குப் பசி நேரம்; என் பசியைத் தணித்தது, அது எவருக்கும் சொந்தம் இலாதமரம், மன்னர் பிரானே!" என்றார்.

ராஜா சிந்தனையில் ஆழ்ந்தார்.

"இந்தக் கிராமவாசியை விடுதலை செய்யுங்கள். இவருக்குப் பசி ஏற்படாத வண்ணம் மாதா மாதம் பணமும் அனுப்பிவையுங்கள்" என்றார்.

கிராமவாசி அழுதார்! "அரசே தங்கள் தலையில் கல் விழ காரணமாகியது என் பெருங்குற்றம்" என்று சொல்லி அழுதார்.

"அன்பனே! அறிவே இல்லாத மரம் உன் கல்லடிப்பட்டு அப்போதுள்ள உன் பசியைப் போக்கக் கனிகள் தந்தன; கல்லடிப்பட்ட அறிவுள்ள அரசனாகிய நான், உனக்குள்ள பசி எப்போதும் போவதற்கு வழி செய்ய வேண்டும்; அறிவே இல்லாதமரம் எனக்கு அறிவுறுத்திய பாடம் இது" என்றார் அரசர்.

தனக்கு ஆயுள் தண்டனை கிடைக்குமென்று பயந்தவனுக்கு ஆயுள் முழுவதும் உண்பதற்கு வழி கிடைத்ததை எண்ணி அரசனை வணங்கிப்போனான்!

– **"அறிவுக் கதைகள்"**
என்ற நூலிருந்து...



## பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேர நுழைவுத் தேர்வு இனி இல்லை

பொறியியல், மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கைக்கு நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வை நீக்க வேண்டும் என்று மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரிடம் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்தன.

அதன் அடிப்படையில், 2006 ஜூலை 7ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை நவம்பர் 13ஆம் தேதி தமிழக அரசிடம் தாக்கல் செய்தது. இந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று, தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்கள் 6.12.2006 அன்று 'தமிழ்நாடு தொழிற் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டம் 2006' என்ற சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்தார்.

தொழிற்கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை, மாணவர்கள் தகுதி தேர்வில் உரிய பாடங்களில் பெற்றுள்ள மதிப்பெண்கள் அடிப்படையில் இருக்க வேண்டும். அரசு உதவி பெறாத தொழில் கல்வி நிறுவனங்களில், மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீடு இடங்கள் தவிர மற்ற இடங்களுக்கான மாணவர் சேர்க்கை, அரசால் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட, அதிகார அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட, அரசு உதவி பெறாத தொழில்கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பால் மேற் கொள்ளப்பட வேண்டும். மாணவர் சேர்க்கை அவர்களின் தகுதித் தேர்வில் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு வெவ்வேறு பாடத்திட்டங்களில் படித்த மாணவர்களின் மதிப்பெண்களை சராசரிக்கு கொண்டு வந்த பின்பு, பொதுத் தரப்பட்டியல் தயாரிக்க வேண்டும். பொதுத் தரப்பட்டியலில் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே மதிப்பெண்களை பெற்றிருந்தால், அம்மாணவர் களுக்கான தர வரிசை, அதற்காக வரையறுக்கப்பட்ட முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் பிறகு ஒருமுகமான கலந்தாய்வு மூலம் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு இந்த சட்டமுன்வடிவில் கூறப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் சட்டம் நிறைவேறியது.

## 2007 ஜனவரி 1ஆம் தேதி முதல் அமலாகிறது மதிப்புக் கூட்டு வரி

1999ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த மாநில முதல்வர்கள் மாநாட்டில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் மதிப்புக் கூட்டு வரியை செயல்பாட்டுக்கு கொண்டு வரலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மேற்சொன்ன முடிவை செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மாநில நிதியமைச்சர்களை கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஒன்று, மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. அக்குழுவானது, மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் பரந்த அமைப்பையும், முக்கியப் பண்புகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. 2004 ஜூன் 18ஆம் தேதி நடந்த இந்தக் குழுவின் கூட்டத்தில், 2005 ஏப்ரல் முதல் தேதியில் இருந்து செயல்வடிவம் கொள்ளும் வகையில், அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று ஒருமனதாக முடிவு செய்துள்ளது.

2006 – 2007 ஆண்டுக்கான தமிழக வரவு – செலவு திட்ட உரையில், 2007 ஜனவரி முதல் தேதியில் இருந்து இம்மாநிலத்தில் மதிப்பு கூட்டுவரி அறிமுகப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை நீக்கம் செய்வதெனவும், இம்மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரியை விதிப்பதற்காக உரிய சட்டம் ஒன்றை இயற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சட்ட முன்வடிவை மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள் 5.12.2006 அன்று சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தினார். குரல் வாக்கெடுப்பு மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## அம்பேத்கர் திரைப்படத்திற்கு வரிவிலக்கு

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட "டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்" திரைப்படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு திரையரங்குகளில் வெளியிடப்படும் நாளன்று அப்படத்தைத் தயாரித்த தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்கு பத்து இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டு அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இப்படம் அகில இந்திய அளவில் அனைத்து மொழிகளிலும் டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட விருப்பதால் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட "டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்" திரைப்படத்திற்கு பத்து இலட்ச ரூபாய் நிதி உதவியுடன் கால வரம்பின்றி கேளிக்கை வரி விலக்களித்திட அனுமதித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களை 1.12.2006 அன்று மலேசிய நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள் சந்தித்துப்பேசினார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களை 3.12.2006 அன்று, உலக ஊனமுற்றோர் தினத்தையொட்டி காதுகேளாதோர், கண் பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை குன்றியோருக்கான அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்தனர்.





மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 128ஆவது பிறந்தநாளையொட்டி 10.12.2006 அன்று, சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பேரன் திரு. சி. ஆர். கேசவன் உள்ளார்.



மகாகவி பாரதியார் அவர்களின் 125ஆவது பிறந்தநாளையொட்டி, 11.12.2006 அன்று சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் பனைத் தொழிலாளர் வாரியத் தலைவர் திரு. குமரி அனந்தன் ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.616 கோடி அனுமதி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பல ஆண்டுகளாக நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை இந்த ஆண்டிலேயே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.

அதற்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களுக்குட்பட்ட ஐந்து நகராட்சிகள் (இராமநாதபுரம், கீழக்கரை, பரமக்குடி, இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை), 11 பேரூராட்சிகள் (இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, அபிராமம், தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய 7 பேரூராட்சிகள், சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், இளையான்குடி, நெற்குப்பை ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி பேரூராட்சி) மற்றும் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 30.11.2006இல் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ரூபாய் 616 கோடி அமைப்புச் செலவிலும், ரூபாய் 18.37 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவிலும் அமல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 8,234 இளைஞர்களுக்கு உதவித்தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து தொடங்கி வைத்துள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் 8,234 நபர்கள் உதவித்தொகை பெற்று பயனடைந்து உள்ளனர். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். இத்திட்டத்தின்படி 10ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.150யும், +2 முடித்தவர்களுக்கு ரூ.200ம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.300ம் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை 8,234 இளைஞர்கள் வேலைவாய்ப்பற்றோர்கான உதவித்தொகை வழங்க கோரி விண்ணப்பித்துள்ளனர். இதில் 4,685 ஆண்களும், 3,549 பெண்களும் அடங்குவர். இதுவரை மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவர்களில் 1,399 ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்களுக்கும், 1,514 இதர இனத்தவர்களுக்கும், +2 முடித்தவர்களில் 1398 ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்களுக்கும், 1,844 இதர இனத்தவர்களுக்கும் பட்டப்படிப்பு முடித்தவர்களில் 643 ஆதிதிராவிட இனத்தவர்களுக்கும், 750 இதர இனத்தவர்களுக்கும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாதாந்திர உதவித்தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் அனைவருக்கும் மாதாந்திர உதவித் தொகை வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசின் மாதாந்திர உதவித்தொகை மூலம் எதிர்காலத்தில் நிரந்திர வேலைவாய்ப்பினைப் பெற்றிட தங்களுக்கான ஊக்கத் தொகையாக தமிழக அரசின் உதவித் தொகை திட்டம் பயன் உள்ளதாக உள்ளது என தெரிவித்துள்ளனர்.

பெரம்பலூரில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா அவர்கள், வேலைவாய்ப்பற்றோர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அனில் மேஷராம், இ.ஆ.ப., தலைமை வகித்தார்.

**த. மருதபிள்ளை**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்*



## திருநெல்வேலி மாவட்டத்தில்

# வாழ்ந்துகாட்டுவோம் திட்டம்

தமிழகத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் 15 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 432 பஞ்சாயத்துக்கள் பயன்பெறும் வகையில் ரூ.717 கோடி செலவில் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு ஆற்றளிப்பு மற்றும் வறுமைக் குறைப்பு திட்டம் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஆந்திரா, ராஜஸ்தான், சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. தமிழகத்தில் இத்திட்டம் குறித்து உலக வங்கியுடன் கடந்த ஆண்டு மே மாதம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. உலக வங்கி வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இத்திட்டம் துவங்கப்பட்டு அடிப்படை பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏழை—எளிய மக்களுக்கு பயன்தரும் மக்கள் அமைப்புகள், குழுக்கள் உருவாக்குதல், ஏழைகளின் திறன்களை பல்வேறு பயிற்சிகள் மூலம் மேம்படுத்துதல், ஏழை மக்களை தொழிலின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள நிதி உதவி அளித்தல் ஆகியவற்றை குறிக்கோள்களாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் ஏழை பெண்கள் மட்டுமின்றி இளைஞர்கள், நலிந்தோர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோரை கொண்ட சுயஉதவி குழுக்கள் அமைக்கப்படும். தொழில் திறன்களை வளர்த்து வியாபார தொடர்பை ஏற்படுத்தி ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்தலாம். மக்களே தங்களுக்குத் தேவையான திட்டங்களை முடிவு செய்து திட்டங்களை பணியாளர்களின் உதவியுடன் செயல்படுத்துவது மற்றும் கண்காணிக்கவும் செய்யலாம். கிராம பஞ்சாயத்துக்களுடன் இணைந்து செயல்பட்டு திட்டத்தை திறமையாக செயல்படுத்தும் பஞ்சாயத்துக்களுக்கு ஊக்க நிதி வழங்கப்படும். சுயஉதவி குழுக்கள் தொழில் தொடங்குவதற்கு 50 சதவிகிதம் மானியமாக சுயஉதவி குழுக்கள் தொழில் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. பெருவாரியான திட்ட நிதியை நேரடியாக கிராம மக்களே கையாளும் நிலை இத்திட்டத்தில் ஏற்படுகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்களின் வரிசை அடிப்படையில் 15 மாவட்டங்களில் உள்ள 70 பஞ்சாயத்து யூனியன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி 541 கோடி ரூபாயாகும். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு 122 கோடியும், மக்கள் பங்கு 54 கோடியும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி 717 கோடியாகும். திட்ட காலம் வரும் 2011ஆம் ஆண்டு வரையாகும். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் நிருவாக அமைப்பானது மாநிலம், மாவட்டம், பகுதி மற்றும் கிராம அளவில் என்ற நான்கு நிலைகளை கொண்டு செயல்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் சங்கம் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், 12 பொதுக்குழு உறுப்பினர்களோடும் செயல்படும். இச்சங்கத்தின் உறுப்பினர் செயலாளராக மாவட்ட திட்ட மேலாளர் செயல்படுவார். மாவட்ட அளவிலான திட்ட செயலாக்கத்திற்கு உதவித் திட்ட மேலாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏழு நபர்கள் வீதம் நியமிக்கப்பட்டு செயல்படுவார்கள்.

கிராம அளவில் இத்திட்டத்தை செயல்படுத்த கிராம வறுமை ஒழிப்பு சங்கம் என்ற அமைப்பு அமைக்கப்படும். பஞ்சாயத்து தலைவரை, தலைவராக கொண்டு ஒவ்வொரு குக்கிராமத்தின் சார்பில் இலக்கு மக்களைக் கொண்ட சுயஉதவி குழுக்களில் இருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கத்தின் உறுப்பினர்களாக



# தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/ARD/48/06-08
TN/PMG(CCR)/WPP-318/06-08









செயல்படுவர். இவர்களை தவிர ஒரு ஊனமுற்றோர் பிரதிநிதி, சுயஉதவி குழுக்களின் கூட்டமைப்பு செயலாளர், கிராம அளவில் உள்ள கமிட்டிகளில் இருந்து 2 உறுப்பினர்களை கொண்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் செயல்படும்.

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பணி கரிசல்குளத்தில் 14.11.2006 அன்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தெரிவித்ததாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் முதற்கட்டமாக மானூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பணிக்கரிசல் குளத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சி தலைவி திருமதி. ச. பொற்கொடி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தங்கராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் வாழ்ந்துகாட்டுவோம் திட்ட ஒப்பந்த கையெழுத்திட்டனர். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஒப்பந்த பத்திரத்தை ஊராட்சித் தலைவியிடம் ஒப்படைத்தார். இதனால் மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 41 கிராமங்களில் 90,199 நபர்கள் பயன்பெறுவார்கள். மேலும், பாளையங்கோட்டை, கடையம், கடையநல்லூர், குருவிகுளம், சங்கரன்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 4,57,295 பேர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

**உல. ரவீந்திரன்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருநெல்வேலி*

---

## சிவகங்கை மாவட்ட
# மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மகளிர் நல மேம்பாட்டுக்கு நல்ல பல திட்டங்களை வழங்கியுள்ளார். மகளிர் இடையே சமூக கல்வி பொருளாதார மேம்பாடு அடையும் நோக்குடனும் அவர்களுக்கு அதிகார பகிர்வு வழங்கிடவும் மகளிர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதில் வெற்றியும் பெற்று வருகிறது.

மாவட்டத்தில் புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மகளிர் முன்னேற்றத்திற்கு குழுக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களில் மொத்தம் உள்ள உறுப்பினர்களில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பவர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி எஸ்.ஜி.எஸ்.ஒய்.திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மகளிர் குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட மானியத் தொகை மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினை சேர்ந்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பினை சேர்ந்தவராக இருப்பவர்களுக்கு தாட்கோ திட்டத்தின் மூலம் மானியக்கடன் வழங்கப்படுகிறது. தாட்கோ திட்டத்தின் கீழ் மகளிர் குழுக்களுக்கு பொருளாதார கடன் வழங்கப்படுகிறது. சுழற்சி நிதி மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர நேரடி வங்கி கடன் உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மகளிர் சுயஉதவிக் குழுவில் அனைத்து உறுப்பினர்களும் பயிற்சிப் பெற்று சிறப்பாக செயல்படுகின்றனர். தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மகளிர் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் கடனை, நல்லவிதத்தில் பயன்படுத்தி அவர்கள் சிறந்த தொழில் முனைவோராக உருவாக வேண்டும் என்ற நோக்குடன் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

வாழ்க்கை தொழில் கல்வி மகளிர் சுயஉதவிக் குழுவினர் தாங்களாக ஏதாவது ஒரு தொழிலை செய்து குடும்ப வருமானத்தை பெருக்கும் நோக்குடன் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதன் மூலம் பனை ஓலை, தையல், கயிறு திரித்தல், பூஜைப் பொருட்கள் தயாரித்தல், மெழுகுவர்த்தி, உணவு வகைகள், வீட்டு அழகு சாதனப் பொருட்கள் தயார் செய்தல் போன்ற பலவகையான பயிற்சியைப் பெற்று பயன் அடைகின்றனர். இலவச எரிவாயு இணைப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் மகளிர் குழுக்கள் கல்வி, சமூக பொருளாதார மேம்பாடு அமையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களையும் நிதி உதவிகளையும் வழங்கியுள்ளார். மகளிர் குழுக்கள் அனைவரும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**எஸ். நடராஜன்**
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சிவகங்கை*

228657



